உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இயற்றிய

மேலைச் சிதம்பரம் என்கிற

# திருப்பேரூர்ப் புராணம்

[வசனச் சுருக்கம்]

ஆசிரியர் வரலாறு, படங்கள், ஆராய்ச்சியுரை,
பண்டைய சரித வரலாறு.

★

நிர்வாகக்குழு :

C. R. சதாசிவ முதலியார், தலைவர்

G. R. வெங்கடேசலு நாயுடு    S. A. K. சின்னத்தம்பி செட்டியார்

R. நஞ்சம நாயுடு    K. R. இராமச்சந்திரராஜ்

N. இராமசாமி, M. A., நிர்வாக அதிகாரி

★

தேவஸ்தான வெளியீடு
மூன்றாம் பதிப்பு
1963

★

அச்சிட்டோர்:
மாடர்ன் பிரஸ், திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

6
3-64
MADRAS

Q23:38.2118·P
N63
109957



திருச்சிற்றம்பலம்

ஆரூரத்தா ஐயாற்றமுதே யளப்பூரம்மனே
காரூர்பொழில்கள் புடைசூழ்புறவிற் கருகாவூரானே
பேரூருறைவாய் பட்டிப்பெருமான் பிறவாநெறியானே
பாரூர்பலரும் பரவப்படுவாய் பாசூரம்மானே.

## திருப்பேரூர்த் தலபுராணத்தின் மூன்றாம் பதிப்பு

# வெளியீட்டுரை.

மெய்யன்பர்களே !

திருப்பேரூர்த் தல வரலாற்றையறிய விரும்பும் அன்பர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு இந்நூல் வெளிவருகின்றது. இதற்கு முன் வெளியிட்ட நூல்கள் செலவாகிவிட்டன. மூன்றாவது முறையாக வெளிவரும் இந்த நூலை அன்பர்கள் பெற்று இதில் காணப்பெறும் குற்றங்களை விடுத்துக் குணத்தைக்கொண்டு படித்துப் பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

இந்நூல் வெளிவர ஊக்குவித்த திரு. S. பீமைய செட்டியார் அவர்கட்கும், புகைப்படங்களை எடுத்துத் தந்த கோவை, புகைப்படக் கலைக் குழுவினர்க்கும், நூலை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த கோவை மாடர்ன் அச்சகத்தாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

ஞாலம் நின்புகழே மிகவேண்டுந்தென்
ஆலவாயி லுறையுமெம் மாதியே.

**பட்டீசர் பதமலர் வாழ்க !**

இங்ஙனம்,

**N. இராமசாமி, M. A.,**
நிர்வாக அதிகாரி.

C. R. சதாசிவ முதலியார் (தலைவர்)
G. R. வெங்கடேசலு நாயுடு,
S. A. K. சின்னத்தம்பி செட்டியார்,
R. நஞ்சம நாயுடு,
K. R. இராமச்சந்திர ராஜு,
அறங்காவற்குழு.

பேரூர் தேவஸ்தானம்,
சோபகிருது, வைகாசித் திங்கள்

சிவமயம்.

# பதிப்பாளர் முன்னுரை.

திருப்பேரூர் என்கின்ற இத்திருத்தலத்தின் புராணத்தைப் பேரூர் தேவஸ்தானத்தார் இன்றைக்குச் சுமார் 45 ஆண்டுகளின் முன் தாருண ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டார்கள். பிரதிகள் முழுதும் செலவாய் விட்டன. தேவஸ்தானத்தின் உபயோகத்திற்கு வைக்கப்பெற்ற சில பிரதிகளே மிகுந்தன. அநேக அன்பர்கள் பிரதிகள் வேண்டிக்கேட்கவும் கொடுக்க முடியாதிருக்கிறது. அதனால் இதனைத் திருத்தி இரண்டாம் பதிப்பு அச்சிட எண்ணி இவ்வாண்டு தேவஸ்தான வரவு செலவுத் திட்டத்தில் புராணம் இரண்டாம் பதிப்பு அச்சிடப் பணம் அனுமதிக்குமாறு கேட்டபடி கோயமுத்தூர் வட்டம் தேவஸ்தான சபையார் மிக அன்புடன் அனுமதித்தார்கள். அச்சபைத் தலைவரும் கோயமுத்தூர் வழக்கறிஞரும் சென்னைச் சர்வகலா சங்கத்தின் அங்கத்தினரும், சைவத் திருவாளருமான தமிழ் வித்துவான் C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள் இதனை அச்சிட்டு வெளியிடுவதில் எங்களுக்குச் செய்த பேருதவி என்றும் மறக்கக் கூடியதல்ல. சபையிலிருந்து பணம் அனுமதித்த தல்லாமல் சென்னையில் இதனை அச்சிடச் சகல உதவியும் செய்துள்ளார்கள். நமது ஆசாரிய புத்திரராகிய வித்வான் உயர்திரு. ந. சிவப்பிரகாச தேசிகரைக் கொண்டு பழய பிரதியை வசனத்துடன் செப்பனிட்டு அச்சுச் சோதனை புரிந்து விரைவில் பதிக்கச் செய்தனர். நமது அரிய நண்பராகிய கோவை திரு. வழக்கறிஞரும் சரித ஆராய்ச்சி வல்லவருமாகிய C. M. இராமச்சந்திர செட்டியார், B. A., B. L., அவர்களைக்கொண்டு கொங்கு நாட்டின் பண்டைச்சரிதமும் பேரூர்ப் பண்டைச் சரிதமும் கூடிய வரலாறுகளை எழுதச்செய்து இப்பதிப்பின் இறுதியில் பண்டைச் சரித வரலாறு எனச் சேர்க்கச்செய்தனர். தமது அரிய தமிழ் நூல் சைவ நூல் ஆராய்ச்சியின் பயனும் பேரூரிடத்தே வைத்த பேரன்பின் பயனுமாக ஒரு முன்னுரை எழுதி உபகரித்ததுமன்றி அருஞ்சொற் பொருட் குறிப்புகளும் எழுதி உபகரித்தனர். நமது நண்பராகிய சென்னை அரசாங்கச் சாசன ஆராய்ச்சிச் சாலையை சார்ந்த ஸ்ரீ P. V. ஜெகதீச ஐயர் அவர்கள் அன்பான அனுமதிப்படி பேரூர்ப் படங்கள் பல பெற்று இதிற் சேர்க்க உதவினர். எல்லாவற்றினும் மேலாய்த் தமது ஆப்தராகிய சாது அச்சுச்சாலை அதிபர் திரு. வி. உலகநாத முதலியார் அவர்

களது அன்புதவி கொண்டு இதனை மிக விரைவில் மிக அழகாக அச்சியற்றி இந்த ஆண்டு பங்குனித் திங்கள் இந்த உத்திர நன்னாளிலேயே வெளியிடும்படி உதவி புரிந்தனர். இந்த நன்மக்களுக்கும் இன்னும் இப் பதிப்பினை வெளியிட மனத்தாலும் வாக்காலும் செய்கையாலும் பலவிதத்திலும் உதவி புரிந்த எல்லா அன்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலான வந்தனஞ் செலுத்துகின்றோம். திருவாளர் முதலியார் அவர்களுடைய தந்தையும் தேவஸ்தான கமிட்டித் தலைவரும் வழக்கறிஞரும் ஆயிருந்த மகா வித்வான் கந்தசாமி முதலியார் அவர்கள் இந்தப் புராணத்தின் முதற்பதிப்பைப் பேரூர் தேவஸ்தானத்தாரால் அச்சிடத் தூண்டுவித்து ஏட்டுப் பிரதிகளை மதுரை இ. இராமசாமிப் பிள்ளை என்று வழங்குகிற ஞானசம்பந்தப் பிள்ளை அவர்களைக்கொண்டு பரிசோதிப்பித்துச் சுருக்க வசனமும் எழுதுவித்து அச்சியற்றினர். அதன் பின் 45 ஆண்டுகளின் பின் அவர் போலவே எல்லா வகைகளிலும் தலைசிறந்து விளங்கும் அவர் மகனாராகிய திருவாளர் முதலியாரவர்களும் இப்புராணம் இரண்டாம் பதிப்பு அச்சியற்றி உதவினர். இவ்விரு பெருமக்களும் கூடித் தம் வாழ்நாளில் சற்றேறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் பேரூர் ஸ்ரீ பட்டீசருக்குப் பெரும்பணி செய்துள்ள பெருமை சைவ உலகம் போற்றத் தகுந்தது. இவருக்கு எல்லா நலன்களையும் அருளுமாறு பட்டிப்பெருமானது பொன்னார்ந்த திருவடிகளைப் போற்றுகின்றோம். இப்பதிப்பிற்குப் பணச் செலவு அதிகமாக ஆயிருந்த போதிலும் எல்லாரும் வாங்கி வாசித்து இவ்வரிய புராணப் பயனை அடையும்படி அடக்க விலையாக ரூபா 2 மட்டும் விலை நியமித்திருக்கிறோம்.

இவ்வரிய பெரும் பணியில் எங்களைச் சம்பந்தம் பெறும்படி சேர்த்து இதனை எளியேங்களைக்கொண்டு முற்றுவித்த ஸ்ரீ பச்சை நாயகி அம்மையார் பங்குடையாராகிய திருவான் பட்டியுடையார் பெருங் கருணையைப் போற்றி வணங்குகின்றோம்.

| | |
|---|---|
| கோயிற் காரியாலயம் திருப்பேரூர் | தென்னமநல்லூர் |
| சுக்கில ஆண்டு | பெ. இராமசாமிக் கவுண்டர் |
| பங்குனித் திங்கள் 29-ம் நாள் | எட்டிமடை நா. வேலப்ப கவுண்டர் |
| 11—4—1930 | |
| பங்குனி உத்திரத் திருவிழா | தர்மகர்த்தாக்கள். |

S. பவானி லாலா, மானேஜர்.

உ

# பதிப்பாசிரியர் முன்னுரை.

**[ C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., F. M. U. அவர்கள் எழுதியது ]**

திருப்பேரூர்ப் புராணத்தின் இரண்டாம் பதிப்பாகிய இதற்கு ஒரு முன்னுரை எழுதித்தர வேண்டுமென்று அந்த ஆலயத் தரும கர்த்தர்கள் என்னைப் பணித்தனர். இவ்வரிய நூலுக்கு முன்னுரை எழுதப் போதிய தகுதி என்னிடம் இல்லை என்பதுணர்ந்தேனாயினும் அறத்தலைவர்கள் பணித்த அப்பணியை மறுத்தற்கஞ்சிய அச்சத்தாலும் திருப்பேரூரிலே நல்லூழ் வசத்தாற் பன்னாட்பழகிப் பயின்றவைகளைக் கூறிமகிழ வேண்டுமென்ற ஆசையாலும் இதனை எழுதத் துணிந்தேன்.

**திருப்பேரூர்ப் புராணப் பெயர் விளக்கம்**

திரு-பேரூர்-புராணம் என்னும் மூன்று சொற்கள் சேர்ந்த **திருப்பேரூர்ப் புராணம்** என்னும் சொற்றொடர் இந்நூலுக்குப் பெயராயிற்று. **திரு** என்பதற்குக் கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்; அதாவது அழகு என்று பொருள் கண்டார் பேராசிரியர். அதாவது யாவனொருவன் யாதொரு பொருளைக் கண்டானோ அக்கண்டவற்கு அப்பொருள்மேற் சென்ற விருப்பத்தோடே கூடிய அழகு. **பேரூர்** என்பது பெரிய ஊர் எனப்பொருள் பெற்று உருவாலும் வளத்தாலும் பயனாலும் பெரிய ஊராகிய காரணத்தால் அப்பேர்பெற்ற சிவத்தலத்திற்குக் காரணப் பெயராயிற்று. **புராணம்** என்பது பழஞ்சரிதையாம். ஆகவே அழகிய பேரூர்த் தலத்தின் பழஞ்சரிதைகளின் தொகுதி என்பது திருப்பேரூர்ப் புராணம் என்ற பெயரின் பொருளாயிற்று.

பேரூர் என்னுந் தலம் என்னென்ன காரணங்களால் அப்பெயர் பெற்றதென்பதையும், அது இவ்வுலக நிலையிலும் ஆன்ம நிலையாகிய அவ்வுலக நிலையிலும் பயன் தரும் வகையிலே எவ்வாறு அழகுடையதாகிக் கண்டவரால் விரும்பப்படுவதாயிற்று என்பதையும் விளக்கும் பொருட்டு உள்ள பல பழஞ்சரிதைகளை இந்நூல் தன்னகத்துட்கொண்டு விளங்குகின்றதொன்றும் என்ற உண்மை இப்பெயராலேயே தெரியக்கிடப்பதைக் காணலாம்.

வேகமாய் ஓடுகின்ற, அல்லது பறக்கின்ற, அல்லது நீந்துகின்ற ஊர்திகளையும், நவீன வழிகளும் கண்கவரும் மின்சார விளக்குகளும் பல நிலை மாடங்களும் போக போக்கியங்களும் கொண்டு விளங்கும் தற்காலப் புது நகரங்களின் அழகையும், புதிய அனுபவங்களையும், கண்ணாரக்கண்டு எண்ணார நுகரும் இக்காலத்து மாக்களுக்கு இப்பேரூரினைக் கண்டால் அழகாயிருக்குமா? இதன் பழங் கூரைமுகடுச் சிற்றில்களையும், இடிந்த பழங்கட்டடங்களையும், தார் பூசிமெருகிடப்பெறாத புழுதி நிறைந்த தெருக்களையும், படிகட்டப்பெறாத நீர் பெருகும் ஆறுகுளங்களையும், இவற்றில் நாகரிக மனிதர்களால் அசுத்தப் படுத்தப்பட்ட கரைகளையும், மனிதன் கைபடாது தன் வளப்பமேமிக்குந் தடையின்றி நாற்புறமும் மனம்போல் வளரும் காட்டுக் கொடி செடி மரங்களையும், கண்டால் இந்நாண்மக்களுக்கு அழகாயிராதுதான்! ஆனால் நாகரிகமென்ற பேரால் செய்யப்படும் கோரங்களை நீக்கி ஆண்டவனுடைய இயற்கை யமைப்புக்களையும் ஆடம்பர மற்ற அமைதியான சுத்த உண்மை வாழ்க்கைப் பொருள்களையும் அழகாகக் காணுதற்கு வேறு உண்மைக் கண்தான் வேண்டும். நமது புதிய நாட்டுப் பொய்க்கண்கள் பேரூரின் அருநிறைந்த அழகுகளைக்கண்டு களிக்கும்படி பழம் பண்பைப் பெற்றிடுக.

**பேரூர்** என்பது பெரிய ஊர் எனப்பொருள்படும் என மேலே கூறினோம். ஆனால் இந்நாளில் அது ஒரு சிற்றூராகக் காணப்படுவதன்றிப் பெரிய ஊராக இல்லையே என்றால், ஆம், அது சரியே. நாம் காணும் ஊர் இது. ஆனால் முற்கால சரிதங் காண்போர் காணும் உண்மை வேறு. பேரூரானது பண்டைக் காலத்தே ஒரு பெரிய சிறந்த நகரமாகத்தானிருந்தது. ஊர் என்பது நகரம். ஒரூரிலே குடிகள் மிக நெருங்கி இனிமேலும் குடியேற வசதியற்றுப் போனால் அவ்வூர்ப் புறத்தில் பக்கத்துப் புதிதாக வேறு ஒரு சிறு ஊர் ஒருவனைத் தலைமையாய்க்கொண்டு கட்டுவித்துக் குடிபுகுதல் இந்நாட்டு இயல்பு. இவ்வாறு பழம் நகரின் பக்கத்துப் புதிதாக உண்டாகும் சிறு ஊர் புத்தூர் என்று அழைக்கப்பெறும். அதுபோலவே பழைய பெரிய ஊராயிருந்தமையால் பேரூர் என்று அழைக்கப் பெற்ற பேரூரின் பக்கத்திலே குடிநெருக்கம் முதலிய காரணங்களாலே கோவன் என்ற தலைவனால் புதிதாய் அமைக்கப் பெற்றது கோவன் புத்தூராம். இதுதான் இப்போது நாம் காணும் கோயமுத்தூர் என்ற பெரிய நகரம்.

“அயலிடை வேறடி நெருங்கக் குடிநெருங்கி யுய்த்தவ்வூர்” என்ற முன்னோர் வாக்கும் காண்க. நாள் செல்லச் செல்ல ‘செல்வம் சகடக்கால் போல வரும்” என்றபடி உண்மையிலே பெரிய பேரூராயிருந்தது இப்போது நாம் காணும் சிற்றில் பலவுடைய சிற்றூ



ராகவும் சிற்றூராய்ப் புத்தூராய் முளைத்த கோவன் புத்தூர் பேரூராகவும் (பெரிய ஊர்) மாறிவிட்டமை காலத்தின் வலிமை. ஆதலின் முற்காலத்துப் பேரூர் இருந்த பெரிய நகரின் நிலையிலே வைத்து இப்புராணத்திலே கூறப்படும் நகரச் சிறப்பு முதலியவற்றைப் பொய்யென்று சிலர் ஆராயாது கூறுதல் தவறு என்பது வெளிப்படை.

இனிப் **புராணம்** என்பது பழஞ்சரிதங்களின் தொகுதி எனக் கண்டோம். இப்போது பொதுப்படவே புராணங்கள் என்றால் பொய்யாகிய கட்டுக் கதைகள் என்று சிலர் எள்ளி உரைக்கின்றனர். அன்னார் அவ்வாறு எல்லாவற்றையும் ஒருங்கே தள்ளிவிட முயலுதல் அறிவீனமாம். எல்லாப் புராணங்களையும் ஒரே விதமாகப் பாராட்ட இயலாது. அன்றியும் ஒரு புராணத்துள்ள எல்லா வரலாறுகளையும் ஒன்று போலே பாராட்டலும் தவறாகும். சில புராணங்களும் ஒரு புராணத்துட் சில சரிதங்களும் உண்மைச் சரித்திர நிகழ்ச்சி பற்றி உரைக்கப்படும். வேறு சில, உவமை முதலிய அணிகளின் முகத்தால் குறித்த ஒரு நற்பொருளை விளக்குதற் பொருட்டுக் கதைகளாய் உரைக்கப்படும். இன்னும் சில, குறித்த ஒரு கற்பனையை விளக்கும் அர்த்தவாத வாக்கியங்களாகப் பொருள்செய்து கொள்ளுமாறு கதை உருவமாய் உரைக்கப்படும். மற்றும் சில, தத்துவார்த்த வாக்கியங்களாய் உரைக்கப்படும். மேலும் பல, கவிநயம்பெறவும் பொருளின் மேன்மை தெரிக்கவும் இலக்கிய நயம்பற்றிப் புனைந்துரையாக உரைக்கப்பெறும். இவ்வாறே பற்பல உரைகள் உண்டு. இவற்றின் கருத்தும்போக்கும் தாமே அறிந்தும் அல்லது புராணங்களின் பொருள்கோளையும் உள்ளீடுகளையும் உணர்ந்தும் அவற்றை நூல் நெறியிலேயும் ஆன்றோர் வழக்கிலேயும் கற்றும் கேட்டும் தெரிந்தும் பொருள் கொண்டும் பயனடைய அறியாதார் பலர் எல்லாந்தெரிந்தவர்போல அகங்கரித்து வீண் வசை பேசி அபசாரத்திற்கும் அறிவுடையார்களின் எள்ளனத்திற்குமாளாகின்றார்கள். அந்தோ! இவர்களின் மடமையும் ஆணவமும் பாபவலிமையும் இருந்தவாறென்னே! கடவுள் இவர்களைப் பணிவிலும் நன்னெறியிலும் செல்ல அருள்வாராக. மேலே குறித்த வகைகளில் வைத்து இப்புராண சரிதங்களில் ஒரு சிலவற்றைப் பார்ப்போம்:—

சுந்தரமூர்த்திகள் இக்கொங்கு நாட்டுக்கு எழுந்தருளியதும், திருப்பேரூரை அடைந்து பாடியதும் பெரிய புராணத்தாலும் பிற சரித ஆதாரங்களாலும் வலியுறுத்தப்படுகின்றன. இச்சரித உண்மையை பள்ளுப்படலம், அழகிய திருச்சிற்றம்பலப் படலம் என்ற இவைகளிற் காண்கின்றோம். ஆனால் அச்சரித உண்மையுடன் இத்தலத்தில் நடைபெற்ற விசேட வரலாறுகளும் அவற்றிற் காணலாம்.

அவ்வத்தலங்களில் கர்ண பரம்பரையாக வந்த வரலாறுகளைப் புரா ணங்களில் சேமித்து வைத்தல் நமது முன்னோர் கையாண்ட முறை யாயிருந்தது. அழகிய திருச்சிற்றம்பலப் படலத்திற்கண்ட சரித உண்மைக்கு ஆதாரமாக, அப்பெயர் கொண்ட கருங்கற் கட்டட மாகிய பழங்கோயில் ஒன்று மிகக்கிலமாய் இப்போது திருப்பணி செய்யப்பெறும் நிலையில் இன்றைக்கும் விளங்குவதனைக் காணலாம். அதிற் கிடைக்கும் கல்வெட்டுகளையும் அவற்றிற்கிட்டிய பழஞ்சரித ஆதரவுகளையும்பற்றிஎன் நண்பர் திரு C.M. இராமச்சந்திரசெட்டியார் எழுதி, இதனோடு அனுபந்தமாகச் சேர்த்துள்ள சரித வரலாற்றில் விளங்கக் காண்க. இந்தக் கோயிலைத் திருப்பணியின் பொருட்டுப் பிரித்துப் பார்க்கும்போது அதன் கீழே உள்ள அடையாளங்களால் இதற்குமுன் பூர்வத்தில், இந்த இடத்தில் இது ஒரு செங்கற் கட்ட மாக இருந்ததென்றும் அதனையே பின்னிட்டு இப்போது நாம் காணும் கருங்கற் கட்டடமாகக் கட்டினரென்றும் ஊகிக்க இடமிருக்கிறது. சுமதி கதிபெறு படலம், அங்கிரன் கதிபெறு படலம் என்பவை களிலே சுமதி என்ற பிராமணனும் அங்கிரன் என்ற வேடனும் கொலை களவு வியபிசாரம் முதலிய கொடும் பாவங்களைச்செய்து திரிந்தனரேனும் இறுதியில் திருப்பேரூர் எல்லையில் இறக்க நேர்ந்து அவர்களுடம்பு, தம்முட்பட்ட எல்லாவற்றையும் தூயதாக்கும் திரு நீற்று மேட்டிலும் காஞ்சி நதியிலும் தோய்ந்த வகையாலும் பிற வாற்றாலும் நற்கதி பெற்றனர் என்ற வரலாறுகள் கேட்கப்பெறும். இவைபோன்ற கதைகளையே நவீனர்கள் சுட்டி இகழ்ந்துரைக்கி றார்கள். ஆயின் இது தல விசேடத்தையும் தீர்த்த விசேட முதலிய வற்றையும் விளக்க வந்த அர்த்தவாத சரித வாக்கியங்களாகப் பொருள் கொள்ளுதலில் யாதொரு இழுக்குமின்றாம். ஆனால் இவற்றை உண்மை நிகழ்ச்சிகளாகவே கொள்வதற்கும் தடையில்லை. அடைந்தவர்களது தீமைகளைப் போக்கி உடலையும் உயிரையும் தூயன வாக்கும் தன்மை பேரூர்த் தலத்துக்கும் அதில் உள்ள காஞ்சிநதி முதலிய தீர்த்தங்களுக்கும் ஆங்கே எழுந்தருளிய பட்டி நாயக ராகிய மூர்த்திக்கும் உண்டு என்பது இன்றைக்கும் பற்பல உதார ணங்களால் கண்கூடாகக் காணக் கிடக்கின்றது. அதைப்பற்றி மேலே சில விவரிப்பேன்.

பல தேவர்களும் பல அரசர்களும் பல முனிவர்களும் வழி பட்டு உய்தி பெற்றார்கள் என்று இப்புராணத்துள் கூறும் பிற படலங்களின் உண்மையையும் உள்ளுறையையும் ஐயப்பட எவ் வகை நியாயமுமில்லை. பற்பல தேவர் முனிவர் அரசர் முதலாயினோர் இத்தலத்தை யடைந்து வழிபட்டார்கள் என்பது இப்புராண சரிதத்



**பேரூர்ச் சிறப்பும் சான்றுகளும்**

தின் மூலமாக அன்றி வேறு அகச்சான்றுகளாலும் விளங்கும். இத்தலத்து மூர்த்தியின் பேராகிய பட்டி நாதர்-பட்டீசர்-என்ற பெயரே பசுவாகிய காமதேனுவி னாற் பட்டியிட்டுப் பூசிக்கப்பெற்ற வரலாற்றை விளக் கும். குழகன் குளப்புச் சுவடுற்ற படலத்திற் கூறிய அடையாளங்களாகிய கன்றினது காற்குளம்பின் சுவடுகள் மூன் றும் சுவடு ஒன்றும் அடையாளமாகச் சுவாமி திருமேனியில் இன் றைக்கும் காண்கிறோம். சமீபத்தில் நடைபெற்ற கும்பாபிடேக காலத்தில் இவற்றை அநேக அன்பர்கள் கண்டார்கள். இன்னும், தானேதோன்றி (சுயம்பு) முளைத்தெழுந்த இவ்விறைவன் திருமேனி யில் அமைந்த ஐந்தலைப் பாம்பின் படம், பாம்புப் பூணூல், திருமுடி யிற் சுற்றிய சடைக்கற்றை, அதைக் கரைபோல அமைத்து நிற்ப தாகிய கங்கைக்கு ஏற்ற நீர் நிலை, பிரம விட்டுணுக்கள் அன்னமும் பன்றியுமாகத் தேடிய அடையாளங்கள் என்பன வாதிய மெய்ய டையாளங்களை அநேக ஆயிரம் மக்கள் நேரே கண்டு தொழுது களித்தார்கள். தென் கைலாயப்படலம், வட கைலாயப் படலம் என்பவற்றிற் கண்ட சரிதங்களுக்கு அவ்வப்பேரால் இப்போது நாம் காண்கின்ற தென் கைலாயம், வட கைலாயம், சக்கர தீர்த்தம், பிரம தீர்த்தம், முதலிய பழைய அடையாளங்களும் பெயர்களும் சாட்சி கூறுகின்றன. கரிகாற் சோழன் கொலைப்பழி தீர்த்த படல வரலாற்றுக்குச் சோழன் துறை என வழங்கும் நதித்துறை வெளிப் பட உணரச் சாட்சியாகும். சோழன்துறை என்பது காஞ்சி நதி யின் துறைகளில் ஒன்று. இதில்தான் காயஸ்து மரபினர்களாகிய லாலாக்கள் மண்டபம் உள்ளது. கால்வேசுவர சுவாமி உற்சவத் தில் தீர்த்தோத்சவமும் வசந்தக்காட்சியும் பிற விசேட காலங்களில் தீர்த்தமும் இந்தத் துறையில்தான் நடைபெறுகின்றன. குட்ட நோய்-பிரம கத்தி-முயலகனோய்-சித்தப்பிரமை, பைத்தியம் முதலிய பெரு நோய்களைக் காஞ்சி நதியிலும் பிரம தீர்த்தத்திலும் குளித்தும், திரு நீற்று மேட்டு விபூதி பூசியும் சனங்கள் இன்றைக்கும் தீர்த்துக் கொள்ளக் காண்கின்றோமென்றால், குலசேகரன் குட்டநோய் தீர்த்த படலம், முசுகுந்தன் முகம்பெறு படலம், திருநீற்றுமேட்டுப் படலம் முதலியவற்றின் வரலாறுகளில் ஐயப்படவும் கூடுமோ? இச்சரித வரலாறுகளைத் **தமிழ் தேர்ந்த**வர்க்கேயன்றி மற்றைச் சாமானியரும் தெரிந்துகொள்ளும் பொருட்டு இப்புத்தகத்தில் வச னச் சுருக்கமாக எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. விவரங்கள் அங்கே படித்துத் தெரிந்துகொள்ள வைத்துப் படலப்பேர்களை மட்டும் மேலே குறித்தேன். பண்டைச் சரித வரலாறும் இதனுடன் தனி யாகச் சேர்க்கப்பெற்றுள்ளதின் காரணம், இத்தல சரிதப்பெரு மைகளை யாவரும் மிகச்சுலபமாக அறிந்துகொள்ளுதற்கேயாம்.

இத்தலத்தின் வழிபாட்டினாலே உயிர்கள் இவ்வுலகிலே நன்மனம் நன்மக்கள் செல்வம் முதலிய விருப்பங்களை எல்லாம் கைவரப்பெறுவர் எனவும் மறுமையிலே தேவபோகங்களையும் அடைந்து அனுபவிப்பர் எனவும் இறுதியில் அழிவில்லாத நிலைத்த இன்பமாகிய முத்தியையும் பெற்று இறைவன் திருவடிக்கீழ் நீங்காது இருப்பர் எனவும் இப்புராணம் பற்பல சரித ஏதுக்களால் எடுத்துக் கூறுகின்றது. இதனுட் குசத்துவசன் வரம்பெறு படலத்திலும் மருதவரைப் படலத்திலும் கூறியபடி வழிபட்டுப் பயனையடைந்தோரே இதற்குச் சாட்சியாவர்.

**எலும்பு கல்லாதல்**

இனி, இத்தலம் தன்னையடைந்தோருக்கு அழியா நிலைமையைத்தரும் என்பதற்கு இத்தலத்தே காஞ்சிமா நதியில் இடப்பட்ட மனிதர் எலும்புகள் நாளடைவிற் கல்லாக மாற்றப் பெற்று நிலைபெறுதல் இன்றைக்கும் காணக்கூடிய உண்மையாகிய மெய்ச்சான்றாகும். இது காரணம்பற்றியே கோவை மலையாளம் என்ற பிரதேசங்களில் இறந்தார்களது எலும்புகளை, அவர்களது உற்றார்கள் இந்நதியிலே இட்டுச் சடங்கு செய்யும் வழக்கம் மிகுதியாகக் காணப்பெறுகிறது.

**இறவாப் பனை, பிறவாப்புளி**

பிறப்பும் இறப்பும் ஆகிய உபாதிகள் இத்தலத்தை யடைந்தோர்க்கு நீக்கம்பெறும் என்பதற்குச் சான்றாகப் பிறவாப்புளி இறவாப்பனை என்ற இரண்டு சாட்சிமரங்கள் இத்தலத்தே உள்ளன என்று புராணங்கள்கூறுகின்றது. நமது நல்வினைப் பயனாலே அந்த மரங்கள் இன்றைக்கும் உயிருடன் இருக்கக் காண்கின்றோம். அவை படம் எடுக்கப்பட்டு இப்பதிப்பிலே சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இவற்றுட் பிறவாப் புளியானது பட்டீசர் திருக் கோயிலுக்கு எதிரில் தென்கிழக்காக ஒரு மேடையில் உள்ளது. அதன் கனிகளிற் பெறப்படும் விதைகளை, வித்தினால் அவைகள் அனேகமாக முளைக்கின்றதே இல்லை. சில முளையாக வந்தாலும் விரைவிற்கருகித் தீய்ந்து விடுகின்றன. இது இன்றைக்கும் கண்கூடு. இறவாப்பனையோ என்றால் நீண்ட காலமாக இறவாத்தன்மை பெற்று உள்ளதாம். இது இத்தலம் என்றும் அழியா திருத்தலையும் காட்டுவதாகும்.

**சாணம் புழுக்காமலிருத்தல்**

இத்தலத்தை யடைந்தோர்க்கு மேலும் பிறப்பு இல்லை என்பதற்கு அத்தாட்சியாக இத்தலத்து எல்லையில் இட்ட கோமயம் (சாணம்) புழுக்காமலேயிருப்பதாகிய மற்றொரு வெளிப்படையான சாட்சியும் காணலாம்.



**உயிர்கள் வலது செவியை மேலே வைத்து இறத்தல்**

இத்தலத்தே மரிக்கும் உயிர்களுக்கெல்லாம் இறக்கும் காலத்தில் இறைவன் அவைகட்குத் திருவைந்தெழுத்தை உபதேசஞ்செய்து தன்னடியிற் சேர்த்துக் கொள்கின்றானாதலின் பிறவாப் பெருமை காசியைப் போல இத்தலத்திற்கும் உரிமையாகின்றது என்று புராணங்கூறும். இதனை உண்மை என நாம் உணர்வதற்கு ஒரு பொருள் என்றும் நிகழ்வதாகும். அதாவது இத்தலத்தே இறக்கும் உயிர்கள் எவையாயினும் அவை எல்லாம் அதற்குமுன் எவ்வாறு கிடப்பினும் உயிர்விடுஞ்சமயம் தம் வலது காதை மேலே வைத்தே உயிர் துறக்கின்றன. இவ்வுண்மை அவ்வக்காலத்தே உடனிருந்து உற்று நோக்கினார் நேரிற் கண்டதும் காண்கின்றதுமாம்.

**பிர்மதீர்த்தம்-செம்பிற் களிம்பு போதல், செம்பு பொன்னாதல்**

இத்தலத்தே வடகைலாயம் என்கின்ற கோயிலினுள் பிரமதீர்த்தம் அல்லது குண்டிகை தீர்த்தம் என்னும் கிணறு ஒன்று உண்டு. அந்தக் கோயில் நந்தனவனத்தில் வடக்கிலே அந்தத் தீர்த்தத்தினருகே ஒற்றையாக நிற்கக்காண்பதே (**வடகைலாயம் படத்திற் காண்க**) **இறவாப்பனையாம்** இந்தத் தீர்த்தத்திற்குளித்தலால் இந்நாளிலும் பலர் பைத்தியம் முதலிய பல பெருநோய்களையும் நீக்கிக் கொண்டு சுகம்பெறும் உண்மை மேலே குறித்தேன். இத்தீர்த்தத்திலே குளிப்போர் அதிலே செப்புக்காசுகளைப் போட்டு அதன்பின் நீர் மொண்டு குளித்தல் வழக்கம். இந்தச் செம்புக்காசுகள் சிலகாலம் சென்றால் அந்நீரிற் கிடக்கக்கிடக்கக் களிம்பு நீங்கித்தங்கசாலையினின்றும் அன்று வெளிவந்த பொற்காசுபோல ஒளியுடன் விளங்குவதுடன் மிக உயர்ந்த பொன் வரைகளும் படரப் பெற்றிருக்கின்றன. அந்தப் பொன்போன்ற உயர்ந்த பொன்னை நாம் காணமுடியாது. "ஆயிரத்தெட்டு மாற்றாக **ஒளிவிடும் பொன்னாக்குவீர்**" என்று ஸ்ரீதாயுமானார் கூறிய பொன்னே இதற்கு உவமையாம். ஒளிவிடும் பொன் என்பது இக்காலத்து ஆங்கிலத்தில் **(Radium)** ரேடியம் என்று பேசப்படும் ஒருவகை ஒளி வீசும்பொன் என்று ஊகிக்கப்பெறுகின்றது. இவ்வுண்மையை 1918-ம் ஆண்டில் இந்தத் தீர்த்தக் கிணற்றைச் சேறு வாரிச் சுத்தம் செய்தபோது நான் முதலில் நேரிற்கண்டேன். அதிலிருந்து சேற்றுடன் வாரி வெளியில் போடப் பெற்ற தூர்வையிலே செம்புக் காசுகள் மின்னித்தவழ்ந்தன. அதனால் அவற்றை அதிகாரிகள் பொறுக்கிச் சேர்ப்பது வெகு இலகுவாயிற்று. ஆகவே செம்பினிற் களிம்பு போக்கும் குணம் இத்தீர்த்தத்திற்கு உண்டு என்பது வெளிப்படை. செம்பிற் களிம்புபோல உயிர்களுடன் உடன்

பிறந்ததாகிய திணிந்த ஆணவம் என்ற இருள் மலமும் இவ்வாறே இத்தீர்த்தத்தாலும், இத்தலத்தாலும் அகலும் என்பது இதன் சாட்சியினால் விளக்கம் பெறும் உண்மை. இதனை யாரும் மறுக்க இயலாது. செம்பு பொன்னாயிடும் என்று முன்னோர் நூல்களிற் கூறும் இயல்பு இதுவேயாம். சுற்றுப்புறத்துள்ள பல நீர் நிலைகளிலுள்ள வேறு எந்த நீரிற்கும் இல்லாத தனியியல்பு இந்தத் தீர்த்தத்திற்கு அமைந்துள்ளது அறிஞர்கள் கூர்ந்து நோக்கத்தக்கதாம்.

மேலே கூறிய பற்பல சான்றுகளைப்பற்றிப் பற்பல ஆங்கில பௌதிக இரசாயன முதலிய சாஸ்திரங்களில் தேர்ந்த சாஸ்திரிகள் கூடிய சபையிலே நான் பேச நேர்ந்தது. அப்போது அவர்களை இப் பௌதிகப் பொருள்களின் தத்துவங்களை ஆராய்ச்சி செய்யுமாறு வேண்டிக் கொண்டேன். அவர்கள் ஆய்ந்து இதன் தத்துவம் மனித உணர்விற்கு மேற்பட்டுள்ள தென்று தெரிவித்தார்கள்.

பேரூர்த் தலத்தைப்பற்றி இந்நாட் புது நாகரிக மக்கள் இகழ்ந்துரைப்பார்களன்றிப் புகழ்ந்துரையார் என மேலே குறிப்பிட்டேன். புது நாகரிகம் என்ற பேராற் கையாளப்படும் அநாகரிகக் **கோரங்களுக்கு** அத்தல மிடந்தராமையே இதன் காரணமாம். இயற்கை வளங்களாகிய ஆறு சோலை குளம் கோயில் முதலிய காட்சிகளில் ஈடுபடுவோர் **பற்பலர்** இத்தலத்தை விரும்புவர். அஃதன்றித் தரும முதலிய உண்மைப் பயன்களை விரும்புவோர் **பலரும்** இதனைக் கொண்டாடுவார். முத்தி என்கின்ற முழு இறுதிப்பயனை விரும்பும் **சிலர்** இதனை மிக மேலாகக் கொண்டாடியடைந்து வழிபடுவர். ஆனால் இவர்கள் அதாவது முத்தி விருப்பமுடையோர் தொகை இந்நாளிலே அருகி வருகின்றது. இவ்வுண்மை பற்றியே இந்நகரின் (தலத்தின்) குடியமைப்பும் சனத்தொகையும் நாளுக்கு நாள் மலினமடைந்து வரக் காண்கின்றோம். இத்தலத்தே யடைந்தோர் நன்னெறி புகுவர் எனவும், இதில் இறந்தோர் முத்தி யடைவர் எனவும் இப்புராணம் கூறுவது உண்மையாம். இந்நியதி பிழைபடாமைப் பொருட்டே முத்தி விருப்பமுடையோர் அருகி வரும் இக்காலத்து இத்தலத்து வசித்து வழிபட்டு வருபவரும் இதில் இறப்போரும் தொகையில் அருகி வருகின்றனர் என்று சொல்லலாம். இதன் வரலாறு அந்தகனரசுபெறு படலத்தே விரித்தோதப் பெற்றுள்ளது. இவ்வுண்மையைப் புராண ஆசிரியர் கச்சியப்ப முனிவர் மிக அழகாகத் திருநகரப் படலத்தில்,

“உரைத்தநாற் பயனுட் பெரும்பய னாய தொள்ளிய **வீடஃ துறலால்**
தரைத்தலைப்பேரூர் என்பர்கள் **சிலர்**;எத் தலத்தினுஞ் சாற்றுநாற் பயனும்
நிறைத்தலிற் பேரூர் என்பர்கள் பலரே; நீடிய வாதிமா நகரை
இரைத்தெழு கடல்போல் வளத்தினும் பேரூர் என்பர்கள் **பற்பலர் பிரரே**”



என்று பேரூர் என்னும் பெயர்க்குக் காரணம் அறிவித்தல் போல நயம்பெறக் கூறியுள்ளார்.

இப்பேரூரின் வளமும் புண்ணியமும் பெருமையுமேயன்றி இதனைச் சூழ்ந்துள்ள மலைகளின் பெருமையும் மிக மேம்பட்டது.

**ஐம் பெரு மலைகள்**

ஐந்து பெருந் தேவர்களுக்கு இடமாகிய ஐந்து மலைகள் இதனைச் சுற்றி விளங்குகின்றன. அவை சிவமயமாகிய வெள்ளிமலை; (இப்போது நீலிமலை என வழங்கும்) உமாதேவியார் மலை; (ஐயாசாமி மலை என வழங்கும்) பிரமன் மலை;(பெருமாள்முடி என்று வழங்கும்) விட்டுணுமலை; முருகக் கடவுள் மலையாகிய மருதமலை என்பனவாம். இவை இவ்வைம்பெருங் கடவுளர்களின் உருவாய் ஆதிமா நகரமாகிய திருப்பேரூரைச் சூழ்ந்து இதனைக் கோட்டைபோல வளைந்து சுற்றி நிற்கின்றன. இவற்றின் வளங்களையும் பெருமைகளையும் இவற்றை அடைந்தார் பெறும் பேறுகளையும் மற்றைய வரலாறுகளையும் இப்புராணத்திலே அபயப்படலம், மருதவரைப்படலம், விம்மிதப் படலம், நாரதப் படலம் என்பனவாதி சரிதங்கள் விரித்துக் கூறுகின்றன. வெள்ளி மலையின் கண்ணுக்கினிய காட்சியின் இனிமையை நாரதன் வழிபடு படலத்தில் நாரத முனிவர் கண்டபடி அருமை பெருமையாகவும் உருசியாகவும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. (நாரதன் வழிபடு படலம் 5 முதல் 22 வரை காண்க.) மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மிக உயர்ந்ததாய்ச் சிவபெருமானுக்குகந்த இருப்பிடமாய் விளங்கும் இம்மலையின் பச்சைப் பசேலென்ற சோலைகள், தம்மிச்சையாய் வானுற வளர்ந்து மந்தியும் அறியா மரம் பல செறிந்த காடுகள், அவற்றில் வசிப்பனவும் ஆனால் ஆங்குச் சுவாமி கும்பிடச் செல்வோர்க்கு ஒரு தீமையும் செய்யாதனவுமாகிய யானை புலி கரடி மலைப்பாம்பு முதலிய பெருவிலங்குகள், அந்த மலையின் சாரலில் அணிகள் போல இழுமென் ஓசையுடன் ஒழுகி ஓடும் அருவிகள், நீண்ட மலையினை மிக்க வருத்தத்துடன் ஏறிச்சென்றால் சிகரத்தினை யடுத்துக் கீழே இளைப்பாற இருக்கும் ஆண்டிகளை என்னும் திட்டு, அதில் ஓடும் பனிநீர் போன்ற தட்பமிக்க அருவி, வந்த இளைப்பும் பிறவி இளைப்பும் நீங்கும் வண்ணம் அங்கு வீசும் காற்று, அங்கு நின்று நீங்கி மீண்டும் மலையேறிச் சென்றால் காணும் பெருமான் விரும்பி வீற்றிருக்கும் சிகரக் கோயில், அங்கிருந்து கீழே நோக்கினால் உமை மலை—பிள்ளையார் மலை—பிரமன் மலை—பெருமாள் மலை— மருத மலை—என்பவற்றைத் தனது அடிவரைகள் எனக்கொண்டு பெருமானது உயர்ந்த சிம்மாசனமென்ன மேக மண்டலங்களுக்குள்ளே நீண்டு விளங்கும் சிகரம், அங்கு இயல்பாய்த் தானாகவே அமைந்த ஆனைமுகவன், ஆறுமுகவன், பஞ்சலிங்க மகாமூர்த்திகளின் திருவுருவங்கள், இவர்கள்

விற்றிருக்கும் பெரு விமானம் போன்ற இயற்கைக் கோபுரம், அடுத்துள்ள அம்மையார் கோயிலின் இயல்பு, இவற்றிற்குள் புக அமைந்த இயற்கைக் கோபுர வாயில் (இதைத் தோரணக்கல் என்பார்கள்) முதலிய இவற்றின் அற்புதங்களை இந்நாளிலும் ஆண்டு தோறும் மாசி பங்குனி சித்திரை வைகாசி மாதங்களில் அங்குச் சென்றுவரும் பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் நேரிற் கண்டு அனுபவித்து உய்கின்றார்கள். மருத மலையின் அற்புதக் காட்சியும் வேற்படையாகிய மருத மரத்தின் மூலத்திலிருந்து சுரக்கும் அருஞ் சுனையும் அங்கு நிற்கும் குமரப்பெருமான் வேண்டுவார் வேண்டுவனவற்றையெல்லாம் வேண்டியபடி தந்து அருளும் அருட் பார்வையும் பிறவும் நேரிற்கண்டு அனுபவித்தறிவனவன்றி ஏனையோர்க்கு எழுதிக்காட்ட ஒண்ணாதனவாம். மனம் ஒடுங்கிய யோகக்காட்சியிலே பரமசிவனது ஆடுகாற் சிலம்பொலி கேட்பது போலப் பரமசிவனது வெள்ளி மலையை அடுத்தலும் தேவ துந்துபி ஒலியும் அடியார்கள் அன்புடன் எழுப்பும் சிவமுழக்கமும் இன்றைக்கும் கேட்பனவாம். எனது நண்பரும் இப்பதிப்புக்கு மிகுந்த துணைசெய்தவரும் திருப்பேரூர்க் கோயிற் றருமகர்த்தர்களிலொருவரும் ஆகிய திருவாளர் பெ. இராமசாமிக் கவுண்டர் அவர்கள் பல ஆண்டுகளின் முன்னே தமது சிறு வயதில் ஒரு பெரியார் தம்மை வெள்ளிமலைக்கு அழைத்துச் சென்றதாகவும் அப்போது மலையுச்சியில் அவர் ஆணை வழியே நின்று அவ்விரவில் அவர் யோக சமாதியிலிருந்து பூசித்த போது அமைதியாய்க் கூர்ந்து நோக்கியபோது நள்ளிரவில் அதி விசித்திரமான கீதவாத்திய ஓசைகளும் சோதிகளும் புலப்பட்டதாகவும் தமது சொந்த அனுபவத்தைச் சொல்லக் கேட்டிருக்கிறேன். இப்பொருளையே இப்புராணத்தில்,

"கருத்த டங்கியோ கத்தினுற் சோதியைக் காண்பவர்க் கவணெந்தை
நிருத்த வண்சிலம் பொலியெழு வித்தென நெடுகிவிண் இழித்தோங்கு
திருத்தன் வைகிய சிலம்பினை யடுத்தலுந் தேவதுந் துபியோடும்
அருத்தி மெய்யடி யார்சிவ முழக்கமு மடர்ந்தெழ மகிழ்கூர்ந்தான்"

— **நாரதன் வழிபடு படலம் 19.**

என்று ஆசிரியர் விதந்து எடுத்துக் கூறுகிறார். சோதி மரங்கள் இம் மலையிலே உள்ளன என்பதும் தேவபூசைகள் இன்றைக்கும் நடைபெறுகின்றன என்பதும் பலரும் அனுபவத்தில் அறிந்த பொருளாம்.

"செந்தழல் ஒளியிற் றோன்றும் தீபமா மரங்க ளாலும்
ஐந்து மாறடக்கி யுள்ளார் அரும்பெருஞ் சோதி யாலும்
எந்தையார் திருக்கா ளத்தி மலையினி லிரவொன் றில்லை"



என்று திருக்காளத்திக்குச் சொல்லிய பொருள் இந்த வெள்ளி மலைக்கும் பொருந்தும். இரண்டும் கைலாய மாதலின் இந்த ஒப்புமையும் உள்ளதுபோலும், யோகியர்-சித்தர்கள் முதலிய பெரியோர்களது இருக்கைகளும் இன்னும், பற்பல அற்புதங்களும் காணத்தக்கன, மனிதன் கையாற் கட்டி அழகென்ற பேராற் பின்னஞ் செய்து அசுசிப்படுத்திய மண்டபம் கட்டிடம் முதலிய யாதொன்றும் இல்லாமலே காடும் மலையும், மண்ணும் கல்லும், புல்லும் பூடும், செடியும் கொடியும், மாமும் நதியுமாகிய தூய இயற்கைப் பொருள்களே கடவுள் ஞானத்தை உலகுக்கு ஊட்டி ஓங்கி நிற்கும் இம்மலையின் பெருமையே பெருமை!

**புராண வரலாறு**

இத்தல மகிமையை ஆதியில் திருக்கைலாச மலையிலே சிவபெருமான் திருநந்தி தேவருக்கு உபதேசிக்க, அவர் முருகக் கடவுளுக்கும் அவர் நாரத முனிவருக்கும் அவர் வியாச முனிவருக்கும் அவர் சூத முனிவருக்கும் அவர் நைமிச வனத்திலே தவஞ் செய்து மனத் தூய்மையடைந்திருந்த சௌனகர் முதலிய முனிவர்களுக்கும் திருவாய் மலர்ந்தருளினார்கள் என்பது பிரமாண்ட புராணத்திலே கௌமார சங்கிதையிற் குமார கண்டத்தில் பேசப்பெற்ற பேரூர் மான்மியத்தால் அறியலாகும்.

இதனை வடமொழியிலே புராணமாக இயற்றிவைத்தனர் பெரியோர். அதனைத் தமிழகத்திற்குப் பயன் செய்யுமாறு திருவாவடுதுறை ஆதினத்து மகா வித்துவானும் அவ்வாதீனத்து மாதவச் சிவஞான முனிவர்களின் மாணாக்கர்களில் முதன்மை பெற்றவரும் ஆகிய ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இன்றைக்குச் சற்றேறக்குறைய 140 ஆண்டுகளின் முன்னர் 2220 தமிழ் விருத்தங்களால் 36 படலங்களில் விரித்து மொழி பெயர்த்தருளினார்கள். இவரது சரிதச் சுருக்கத்தை முதற் பதிப்பாசிரியாகிய திரு. மதுரை இ. இராமசாமிப் பிள்ளை என்று வழங்கிய ஞான சம்பந்தப் பிள்ளையவர்கள் எழுதி அச்சிட்டவாறே இதன் பின் சேர்க்கப்பெற்று அச்சிடப்பெற்றிருக்கிறது. இவ்வாசிரியர் பேரூரிற் பல ஆண்டுகள் இப்போது அங்கு விளங்கும் திருவாவடுதுறை ஆதீன மடாலயத்தில் வசித்து வந்தார். அந்த மடாலயத்திலேயே இவரது தீட்சாகுருவாகிய சின்னபட்டம் பின் வேலப்ப தேசிக மூர்த்திகளும் எழுந்தருளியிருந்தனர். அவரது சமாதி நிலையானது சிறு கோயிலாக இந்த மடாலயத்தின் பின்புறம் மடத்து நிலத்தில் அமைந்து இன்றைக்கும் பூசிக்கப்பெற்று வருகின்றது. கச்சியப்ப முனிவர் தமது ஆசாரிய மூர்த்திகளுடன் உடனுறைந்தே இத்தலத்தே வசித்தாராதல் வேண்டும் என்று ஊகிக்கலாம், இத்தலத்தின் மீது அவர் இப்புராணமேயன்றிப் பல பிரபந்தங்களும்

இயற்றியதாகக் கேள்விப்படுகிறோம். அவற்றுள் ஒன்றும் கிடைக்கவில்லை.

**புராண மேன்மை**

இந்தப் புராணம் இவ்வாசிரியர் இயற்றிய தணிகைப்புராணம், திருவானைக்காப் புராணங்களோடு ஒப்பத் தமிழ்ப் பேரிலக்கியமாகவும் சைவ சாத்திரமாகவும் தமிழ்ப் புலவர்களாற் போற்றப்பெற்று வருவதாம். இதிற் பற்பல நீதிகள் அங்கங்கே தெரிக்கப்பெற்றுள்ளன. சைவ சித்தாந்த நூற் கருத்துக்களும் உண்மைகளும் ஆங்காங்கே கதைப் போக்கில் உவமானங்களாக வைத்து உதகரிக்கப் பெற்றுள்ளன. இப்பெருமை இவ்வாசிரியருக்கும் இவராசிரியராகிய மாதவச் சிவஞான யோகிகளுக்குமே பெரிதும் உரித்தாம். அதுமட்டுமேயன்றி இவ்வுவமானங்கள் எடுத்துக்கொண்ட பொருள் வர்ணனையோடு தொடர்ந்து செல்லப் பற்பல செய்யுட்கள் வரைத் தொடர் நிலையுவமமாகத் தொடர்ச்சியாய்க் கூறிக்கொண்டு போகும் அரிய புலமை இவ்விருவர்க்கும் உளதாம்.

காஞ்சிப் புராணத்துத் திருநாட்டுப் படலத்துப் பாட்டுகளையும் இப்புராணத்திலே உதாரணமாக நாரதன் வழிபடு படலம் 16 முதல் 19 வரை தொடர்ந்து உவமானமும் உவமேயமுமாக வரும் பாடல்களையும் பிறவற்றையும் காண்க. இவையே யன்றி அருகி வழங்கும் இலக்கண இலக்கிய ஆட்சிகளை இந்நூலில் ஆங்காங்கே காண்பது தமிழ் கற்பார்க்குப் பேருதவி புரிவதாகும். சைவ சாத்திரக் கருத்துக்களும் உண்மைகளுமே யன்றிச் சமய நூற் கருத்துக்களும் இதனுட் பொதிந்து செறிந்துள்ளன. இந்நூற் பாடல்களின் தமிழ் மிக வளமும் தெளிவும் உருசியும் உடையதாம். ஒரு சில உதாரணங்களாவன :—

“பரவிய வரைவளம் பார்த்தனன்
அரகர கரவென வார்த்தனன்
விரவிய புளகமெய் போர்த்தனன்
சிரமிரு கைத்தலஞ் சேர்த்தனன்”

— **தென்கைலாயப் படலம் 56.**

“நாடக மகளிர்கள் நடிக்கப் புக்கனர்
பாடகத் தளிரடிப் பாவை மார்களுள்
ஆடகச் சிலம்பணி யரம்பை நோக்கினள்
பீடக மன்னவன் வதனப் பெற்றியே”

— **முசுகுந்தன் முகம்பெறு படலம் 38.**

இத்தகைய பாடல்களின் இயல்பான ஆற்றொழுக்கிலே செல்லும் செந்நடை கவனிக்கற்பாலது. எடுத்த பொருளுக்கேற்பச் சொல்லுஞ்சந்தமும் அமையப்பாடுவதும் இவரது பெற்றியாம்.



“வேல்வ ழங்கினர் ஈட்டி விட்டனர் வெய்ய கப்பண முந்தினார்
கோல்வ ழங்கினர் பிண்டி பாலமுங் குந்த முஞ்சில ரேவினார்
பால்வ லைந்தொளிர் நாந்த கம்பரு வச்சி ரத்தடி யோச்சினார்
கால்வ ழக்க மறக்க னன்றுகைப் பாசம் வீசினர் கண்ணிலார்”

— **கரிகாற்சோழன் கொலைப்பழி தீர்ந்த படலம் 12.**

என வேட்டமாடும் பொருளை அதற்கேற்ப, முடுகிய சந்தத்திற் கூறும் முறை காணத் தக்கது.

“மறையவ னரசன் செட்டிதன் றூதை வயங்குநூற் சூத்திரன் புவனம்
பறைதரு நல்ல சங்கரன் வேடன் பணிசிவன் விளங்குமுக் கணக்கன்
அறைசெயம் பட்டன் அகமது புறத்தே காலியாட் டரவமா ரிடையன்
பறையனு முன்ன ரானநீ யின்று பள்ளனா னமைதெரிந் தேன்யான்.

— **பள்ளுப் படலம் 35.**

இப்பாட்டிலே பற்பல சாதிகளின் பேரையும் மிக இலகுவாக ஒன்று சேர்த்து அடுக்கி இரட்டுற மொழிதல் வகையாலே வேறு பொருளும் பெறவைத்துச் சுந்தரமூர்த்திகள் தோழமைத் திறத்தாலே பெருமானிடம் அசதியாடுவதாகச் சொல்லிய அழகு குறிக்கற்பாலதாம். இன்னும் இவ்வாறே சொற்பின் வருநிலையில் அடுக்காகவும் இரட்டுற மொழிதலாகவும் பல இடங்களில் அழகுபெறப்பாடியிருத்தல் காணலாம். இவ்வாசிரியர் தாம் விரும்பிய விருப்பின்படி சரிதப்போக்கை வசனம் போலே இலகுவில் பாடுவர்; அல்லது வேண்டினால் மிகக் கடினமாகவும் பாடுவர்.

“அற்றை யிரவு புலர்காலை யணிநீர்க் காஞ்சி நதியாடி
முற்று மருளுஞ் சிவலிங்க முறையி னிறுவிப் பூசித்துப்
பற்றும் பொறிகள் அகத்தடக்கிப் பயிலும் யோகத் திருக்குநாட்
பெற்ற முயர்த்த பெருமானார் பெருவா னிடையே வெளிநின்றார்.”

— **விசுவாமித்திரன் வரம் பெறு படலம் 12.**

இனிப் பல பொருள்களின் பெயர்களைப் பெரும்பான்மை யாதொரு அடைமொழிகளும் இல்லாமலே அடுக்கி எதுகைமோனையாநி அழகுபெறச் செய்யுள் செய்யும் ஆற்றல் இவ்வாசிரியர்பாற் பொருந்தி நின்றமை பாராட்டத் தக்கதோ ரியல்பாம்.

கழுக்கடை பிண்டி பாலங் கப்பண முசல ஞாங்கர்
மழுக்கதை தண்டு நேமி வச்சிரஞ் சுரிகை சூலம்
எழுக்குயஞ் சிலைவாள் பாச மின்ன பல் படை...

— **நாரதன் வழிபடு படலம் 32.**

*மாராமலர் கரியசெம்பைவெண் டிலோத்தம் வழுதுணை கண்டங்கத் திரிமா*
*குராமலர் தாளி கூத்தனற்குதம்பை கோட்டம்பூ கஞ்சத குப்பை*
*அராவணைக் கடவுள் காந்திசே வகன்பூ வாத்திகூ விளம்வன்னி யறுகு*
*பராவுசெவ் வந்தி நாவல்பூந் துளசி பச்சைவெண் காக்கணம் பூளை.*

— முசு 9.

ஷை 7, 8, 10, 11, 12, பாடல்களும் பிறவுங் காண்க.

எனைப் புலவர்க்கு அரிதின் அமையும் பல இயல்புகள் இவ்வாசிரியர் வாக்கிலே மிக எளிதின் அமைந்து உள்ளன. ஊன்றிப் பார்க்கின் எவ்வகையான பாட்டினைப் பாடுவதும் இவர்க்கு ஒரு விளையாட்டுப்போல அமைந்திருந்தது என்று சொல்லுதல் மிகையாகாது. இதனுல் இவர்க்குக் கவிராட்சசன் என்றொரு பெயரும் வழங்கினதென்று தெரிகின்றோம்.

**புராணத்தின்பொருள் அடக்கம்**

சைவத்திறமும், சைவ சாதனங்களும், சைவ சாத்திர உண்மைகளும், சிவபெருமானது முழுமுதற் றன்மையும், அவரது பெருங் கருணைத் திறனும், உயிர்கள் எளிதில் அறிந்து அடைந்து வழிபட்டு உய்ய அவர் வைத்த மூர்த்தி தலம் தீர்த்தங்களின் வரலாறுகளும், அவ்வாறு வழிபட்டோர் உய்ந்த திறமும், ஆகிய இவைகளைச் சொல்வதே இப் புராணத்தின் முக்கிய நோக்கமாம். இந்திரன், பிரமன், விட்டுணு, அந்தகன் முதலிய தேவர்கள் வழிபட்டுப் பேறு பெற்றமை இந்திரன் சாபந்தீர்ந்த படலம், வடகைலாயப் படலம், தென்கைலாயப் படலம், நிருத்தப் படலம், அந்தகனரசு செய் படலம், அபயப் படலம், மருதவரைப் படலம் என்ற படலங்களிற் கூறப்பட்டன.

தெய்வலோக வாசியாகிய காமதேனுவுக்கும் அதன் கன்றுக்கும் பெருமான் அருளிய திறத்தைக் காமதேனு வழிபடு படலம், குழகன் குளப்புச் சுவடுற்ற படலங்கள் பேசுகின்றன. நாரதன் வழிபடு படலம், காலவன் வழிபடு படலம், விசுவாமித்திரன் வரம்பெறு படலம், வியாதன் கழுவாய்ப் படலம் இவைகள் அவ்வப் பெயருடைய முனிவர்களும் இருடிகளும் பூசித்துப் பேறுபெற்ற வரலாறுகளைக் கூறுவன. பள்ளுப்படலம் அடியார் பொருட்டு இறைவன் வெளிவந்து செய்யும் அருட் டிருவிளையாடல்களையும், உயர்ந்தனவும் தாமே இழிந்தனவும் தாமே என்ற உண்மையையும் விளக்கும். அழகிய சிற்றம்பலப் படலம் தில்லை மூவாயிரவர் வழி பட்டமை கூறும். கரிகாற்சோழன், திரிலோகசோழன், குசத்துவசன், குலசேகரன், முசுகுந்தன் முதலிய முடிமன்னர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற வரலாறுகள் அவ்வவர் பேராற் சுட்டப்பெற்ற படலங்களி



ஞல் அறியலாம். திருநீற்று மேட்டின் பெருமை தெரிகின்ற வகை
யிலே **தான்மிக பாண்டியன்** வந்து அடைந்து அருள்பெற்றமை அப்
பெயர்ப் படலத்திற் காண்கின்றோம். இவர்கள் வரம்பெற்ற
வரலாறுகள் எனை உலகத்தார்களும் வந்தடைந்து வரம்பெறுமாறு
வகுக்கப் பெற்றுள்ளன. கௌரி தவம்புரி படலம், கௌரி
திருமணப் படலம், தெய்வயானை திருமணப் படலம் ஆகிய இவை
கள் உலக முய்யும் பொருட்டு இறைவன் அருட்டிருமேனிகொண்டு
சத்தியொடுகூடி நிற்கும் நிலைகளை உணர்த்துவனவாம்.

*“மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்*
*கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட”*

— **பெரிய புராணம் திருஞானசம்பந்தர்.**

**மிக இழிந்தோரும்** கொடியவர்களும் மாபாவிகளும் இத்
என்றபடி தலத்தே வந்து அடைந்தார்களானுல் மூர்த்தி தலம் தீர்த்தங்களாற்
புனிதமடைவர் என்னு முண்மையைச் சுமதிகதிபெறு படலம், அங்
கிரன்கதி பெறு படலம் என்ற இவைகள் எடுத்துக் காட்டுவனவாம்.
நாட்டுப்படலம் கொங்கு நாட்டின் பெருமையையும், நகரப் படலம்
திருப்பேரூர்த் தலத்தின் சிறப்பையும், தீர்த்தப் படலம் இத்தலத்
துள்ள பற்பல தீர்த்தங்களையும், அவற்றின் இயல்பையும், சிறப்பை
யும், விம்மிதப் படலம் வெள்ளி மலையிற் காணும் அற்புதங்களையும்,
தல விசேடப் படலம் இத்தலம் உண்டான வரலாற்றையும் அது
தன்னை அடைந்தோர்க்குச் செய்யும் உபகாரங்களையும் அது காரண
மாக அதற்கு வழங்கும் பெயர்களையும், உபதேசப் படலம் அம்மை
யார்க்குச் சிவபெருமான் உபதேசிக்கின்ற முறையிலே விபூதி,
உருத்திராக்கம், உபசாரம் என்பவற்றின் விரிவான வரலாறுகளையும்
முறைகளையும், விசேட பூசைப் படலம் ஒவ்வோராண்டிலும் ஒவ்
வொரு மதியிலும் மற்றும் வருடப்பிறப்பு மாதப்பிறப்பு அயனம்
குறித்த திதிகள் வாரங்கள் ஆகிய இவற்றிற் சிவபெருமானுக்கு இத்
தலத்தே செய்யப்பெற வேண்டுவனவாகிய விசேட பூசைகளின்
விவரங்களையும் அவை செய்தார் அடையும் பயன்களையும் கூறுவன
வாம். இத்தலமான்மியமானது திருக்கைலாயத்தில் பரமசிவனிடத்
திலிருந்து நமக்கு எட்டிய வழிவழி வரலாற்றை நைமிசப் படலத்
தும் புராண வரலாற்றுப் படலத்திலும் காண்கிறோம். காலவன்
வழிபடு படலத்திலே சிவஞானபோத முதலிய நூல்களிற் கண்ட
சைவசித்தாந்த சாத்திர உண்மைகள் முறைப்பட ஒருங்கு சேரத்
தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன. நிருத்தப்படலத்திலே பரமசிவ
ஞர் ஆனந்தக்கூத்தின் அற்புதத் தத்துவங்கள் விளக்கப்பெற்றுள்
ளன. சாத்திரங்கற்போர் இதனைப் படித்துப் பயன்பெறுவர். இன்

மாராமலர் கரியசெம்பைவெண் டிலோத்தம் வழுதுணை கண்டங்கத் திரிமா
குராமலர் தாளி கூத்தனற் குதம்பை கோட்டம்பூ கஞ்சத குப்பை
அராவணைக் கடவுள் காந்திசே வகன்பூ வாத்திகூ விளம்வன்னி யறுகு
பராவுசெய் வந்தி நாவல்பூந் துளசி பச்சைவெண் காக்கணம் பூளை.

— **மூசு 9.**

ஷை 7, 8, 10, 11, 12, பாடல்களும் பிறவுங் காண்க.

ஏனைப் புலவர்க்கு அரிதின் அமையும் பல இயல்புகள் இவ்வாசிரியர் வாக்கிலே மிக எளிதின் அமைந்து உள்ளன. ஊன்றிப் பார்க்கின் எவ்வகையான பாட்டினைப் பாடுவதும் இவர்க்கு ஒரு விளையாட்டுப்போல அமைந்திருந்தது என்று சொல்லுதல் மிகையாகாது. இதனால் இவர்க்குக் கவிராட்சசன் என்றொரு பெயரும் வழங்கினதென்று தெரிகின்றோம்.

**புராணத்தின்பொருள் அடக்கம்**

சைவத்திறமும், சைவ சாதனங்களும், சைவ சாத்திர உண்மைகளும், சிவபெருமானது முழுமுதற் றன்மையும், அவரது பெருங்கருணைத் திறனும், உயிர்கள் எளிதில் அறிந்து அடைந்து வழிபட்டு உய்ய அவர் வைத்த மூர்த்தி தலம் தீர்த்தங்களின் வரலாறுகளும், அவ்வாறு வழிபட்டோர் உய்ந்த திறமும், ஆகிய இவைகளைச் சொல்வதே இப்புராணத்தின் முக்கிய நோக்கமாம். இந்திரன், பிரமன், விட்டுணு, அந்தகன் முதலிய தேவர்கள் வழிபட்டுப் பேறு பெற்றமை இந்திரன் சாபந்தீர்ந்த படலம், வடகைலாயப் படலம், தென்கைலாயப் படலம், நிருத்தப் படலம், அந்தகனரசு செய் படலம், அபயப் படலம், மருதவரைப் படலம் என்ற படலங்களிற் கூறப்பட்டன.

தெய்வலோக வாசியாகிய காமதேனுவுக்கும் அதன் கன்றுக்கும் பெருமான் அருளிய திறத்தைக் காமதேனு வழிபடு படலம், குழகன் குளப்புச் சுவடுற்ற படலங்கள் பேசுகின்றன. நாரதன் வழிபடு படலம், காலவன் வழிபடு படலம், விசுவாமித்திரன் வரம்பெறு படலம், வியாதன் கழுவாய்ப் படலம் இவைகள் அவ்வப் பெயருடைய முனிவர்களும் இருடிகளும் பூசித்துப் பேறுபெற்ற வரலாறுகளைக் கூறுவன. பள்ளுப்படலம் அடியார் பொருட்டு இறைவன் வெளிவந்து செய்யும் அருட் டிருவிளையாடல்களையும், உயர்ந்தனவும் தாமே இழிந்தனவும் தாமே என்ற உண்மையையும் விளக்கும். அழகிய சிற்றம்பலப் படலம் தில்லை மூவாயிரவர் வழி பட்டமை கூறும். கரிகாற் சோழன், திரிலோக சோழன், குசத்துவசன், குலசேகரன், முசுகுந்தன் முதலிய முடிமன்னர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற வரலாறுகள் அவ்வவர் பேராற் சுட்டப்பெற்ற படலங்களி



னால் அறியலாம். திருநீற்று மேட்டின் பெருமை தெரிகின்ற வகையிலே **தூன்மிக பாண்டியன்** வந்து அடைந்து அருள்பெற்றமை அப்பெயர்ப் படலத்திற் காண்கின்றோம். இவர்கள் வரம்பெற்ற வரலாறுகள் ஏனை உலகத்தார்களும் வந்தடைந்து வரம்பெறுமாறு வகுக்கப் பெற்றுள்ளன. கௌரி தவம்புரி படலம், கௌரி திருமணப் படலம், தெய்வயானை திருமணப் படலம் ஆகிய இவைகள் உலக முய்யும் பொருட்டு இறைவன் அருட்டிருமேனிகொண்டு சத்தியொடுகூடி நிற்கும் நிலைகளை உணர்த்துவனவாம்.

"மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட"

— **பெரிய புராணம் திருஞானசம்பந்தர்.**

என்றபடி **மிக இழிந்தோரும்** கொடியவர்களும் மாபாவிகளும் இத்தலத்தே வந்து அடைந்தார்களானால் மூர்த்தி தலம் தீர்த்தங்களாற் புனிதமடைவர் என்னு முண்மையைச் சுமதிகதிபெறு படலம், அங்கிரன்கதி பெறு படலம் என்ற இவைகள் எடுத்துக் காட்டுவனவாம். நாட்டுப்படலம் கொங்கு நாட்டின் பெருமையையும், நகரப் படலம் திருப்பேரூர்த் தலத்தின் சிறப்பையும், தீர்த்தப் படலம் இத்தலத்துள்ள பற்பல தீர்த்தங்களையும், அவற்றின் இயல்பையும், சிறப்பையும், விம்மிதப் படலம் வெள்ளி மலையிற் காணும் அற்புதங்களையும், தல விசேடப் படலம் இத்தலம் உண்டான வரலாற்றையும் அது தன்னை அடைந்தோர்க்குச் செய்யும் உபகாரங்களையும் அது காரணமாக அதற்கு வழங்கும் பெயர்களையும், உபதேசப் படலம் அம்மையார்க்குச் சிவபெருமான் உபதேசிக்கின்ற முறையிலே விபூதி, உருத்திராக்கம், உபசாரம் என்பவற்றின் விரிவான வரலாறுகளையும் முறைகளையும், விசேட பூசைப் படலம் ஒவ்வோராண்டிலும் ஒவ்வொரு மதியிலும் மற்றும் வருடப்பிறப்பு மாதப்பிறப்பு அயனம் குறித்த திதிகள் வாரங்கள் ஆகிய இவற்றிற் சிவபெருமானுக்கு இத்தலத்தே செய்யப்பெற வேண்டுவனவாகிய விசேட பூசைகளின் விவரங்களையும் அவை செய்தார் அடையும் பயன்களையும் கூறுவனவாம். இத்தலமான்மியமானது திருக்கைலாயத்தில் பரமசிவனிடத்திலிருந்து நமக்கு எட்டிய வழிவழி வரலாற்றை நைமிசப் படலத்தும் புராண வரலாற்றுப் படலத்திலும் காண்கிறோம். காலவன் வழிபடு படலத்திலே சிவஞானபோத முதலிய நூல்களிற் கண்ட சைவசித்தாந்த சாத்திர உண்மைகள் முறைப்பட ஒருங்கு சேரத் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன. நிருத்தப்படலத்திலே பரமசிவனார் ஆனந்தக்கூத்தின் அற்புதத் தத்துவங்கள் விளக்கப்பெற்றுள்ளன. சாத்திரங்கற்போர் இதனைப் படித்துப் பயன்பெறுவர். இன்

னும் இப்புராணத்தின் பெருமையையும் தமிழ் வளத்தையும் பிற ஏற்
றங்களையும் விரிக்கிற் பெருகும். ஆதலின் ஆர்வமுள்ளார் இதனை
வெறும் புராணமென்று இகழ்ந் தொதுக்காமல் அறிந்தோர் வாய்க்
கேட்டு உணர்ந்து பயன் பெறுவார்களாக.

**இரண்டாம் பதிப்பு**

இப்புராணம் முதற்பதிப்பு இன்றைக்கு 45 ஆண்டுகளின் முன்
னர்ப் பேரூர் தேவஸ்தானத்தவர்களால் அச்சிடப்பெற்றது. அப்
போது அதனை எனது தந்தையாரும் மகாவித்துவானும்
பேரூர்க் கோயிலிற் பற்பல திருப்பணி புரிந்தவரும் ஷை
தேவஸ்தானக் கமிட்டி காரியதரிசியும் கொங்கு நாட்டுப்
பல தல புராணங்களையும் பரிசோதித்து வெளியிட்டவரும்
ஆகிய **திரு. கந்தசாமி முதலியார்** அவர்கள் முயற்சித்துச் சைவப்பெரி
யாராகிய வித்துவான் மதுரை **திரு. ஞானசம்பந்தம் பிள்ளை** அவர்கள்
துணைகொண்டு பரிசோதனை செய்து அச்சியற்றினார்கள். இப்போது
அப் பிரதிகள் கிடைப்பது அரிதாயினமையின் இந்த இரண்டாம்
பதிப்பை ஷை தேவஸ்தானத்தார்கள் அன்புடன் அச்சிட்டுதவியிருக்
கிறார்கள். எனது தந்தையார்க்குக் கிடைத்த பேறுபோலவே இது
போழ்து அடியேனும் ஷை தேவஸ்தான கமிட்டியில் இடமும், தலை
மையும் கிடைக்கப் பெற்றேன். கமிட்டி அங்கத்தினர்களான என்
நண்பர்களுடைய ஆதரவினாலும், தர்மகர்த்தர்களின் அன்பு நிறைந்த
உதவியினாலும் இப் பதிப்பில் ஊழியம் செய்யும் பேறும் பெற்றேன்.
இது பேரூருறையும் பட்டிப் பெருமானது பெருங் கருணைத்திறமே
யாகும். கற்வியிற் பெரியோர்கள் செய்யத்தக்க இப்பணியில் எளி
யேன் துணிந்தது பேதைமையேயாம். சென்ற முப்பதாண்டுகளாக
தேவஸ்தானப் பணிகள் பார்த்துவந்ததேயன்றிச் சென்ற எட்டு
ஆண்டுகளாக ஸ்ரீ பட்டிநாயகரை ஆன்மார்த்தத்தில் பூசித்துவந்ததும்
ஆகிய நல்வினைப் பயன் ஒன்றுகூடி ஆசை கொடுத்தலால் இதில்
முயன்றேன். புராணம் விரைவில் அச்சிட்டுக் குறித்த நாளாகிய
சுக்கில ஆண்டு பங்குனி உத்திர நாளில் வெளியேற உதவிய சென்னை
சாது அச்சுச்சாலை அதிபரும் எனது நண்பருமான **திரு. வி. உலகநாத
முதலியார்** அவர்களுக்கும், புராண முழுதும் செப்பனிட்டும் அச்சுச்
சரிபார்த்தும் மற்றும் பற்பல திருத்தங்கள் செய்தும் உதவிய எனது
தீக்ஷா குருவின் குமாரராகிய வித்வான் **ஸ்ரீ ந. சிவப்பிரகாச தேசிகர்**
அவர்களுக்கும் என் நன்றி உரியது. இப் பதிப்பிற் சேர்க்க என்
வேண்டுகோட்கிணங்கிப் பண்டைய சரித வரலாறு எழுதியுதவிய
எனது நண்பர் வழக்கறிஞர் திரு. **C. M. இராமசந்திரஞ் செட்டி
யார், B. A. B. L.** அவர்களுக்கு நானும் தமிழுலகமும் கடமைப்பட்
டுள்ளோம். சுருக்க வசனமும் ஆசிரியர் சரிதச் சுருக்கமும் சிற்சில
திருத்தங்களுடன் முற்பதிப்பில் இருந்தவாறே பதிக்கப் பெற்றன.



படலங்களுக்கு எண் கொடுத்தும், பாட்டுகளைச் சீர்பிரித்து அலகிட்
டும் இன்னும் சில வகையிலும் மூலப்பிரதி இப் பதிப்பில் திருத்தம்
பெற்றுள்ளது. பதிப்பின் முகப்பில் தலத்தைப்பற்றிய தேவாரமாதி
அருட் பாக்களும் திருப்புகழும் சேர்க்கப்பெற்றுள்ளன. மற்றும்
இதுவரை அச்சில் வெளி வந்தனவும் வாராதனவுமாய்ப் பல வித்வான்
கள் பாடியனவாகிய பற்பல பிரபந்தங்களிலிருந்தும் ஒவ்வொன்றி
லும் சிற்சில பாடல்கள் திரட்டித் தொகுத்துச் சேர்க்கப் பெற்றுள்
ளன. இப் பிரபந்தங்களைத் தொகுத்துத் திருப்பேரூர்ப் பிரபந்தத்
திரட்டு என்ற பெயரால் தனி வெளியீடாக வெளியிட்டால் உபகார
மாகும். அதுவரை அவற்றின் பேரும் பிறவரலாறும் மறைந்து
போகாமல் நிலவும் பொருட்டு இதில் தொகுத்து சேர்க்கப்பெற்றன.
தலத்திலும் கோயில்களிலும் முக்கியமான பாகங்களின் படங்களும்
இதிற் சேர்க்கப்பெற்றுள்ளன.

இப் புராணத்திலும் பண்டைச் சரித வரலாற்றிலும் தெரியும்
பற்பல பழஞ்சரித அடையாளங்களுள்ளே இதுவரை மறைந்தன
பல. மறைத்து ஒதுக்கிச் சிதைக்கப்பட்டன பல. மறந்தன பல.
இவை எல்லாம் போக எஞ்சியுள்ள ஒரு சில கல்வெட்டுகளும்
கோயில்களின் அமைப்புகள் முதலியனவும் இனி மேலும் சிதை
வுண்டு ஒழியாதபடி அன்பர்கள் பாதுகாப்பார்களாக. அவற்றுள்
சில இங்கே குறிப்பது மிகையாகாது.

(1) **ஆதி அரசமரம்:—** இந்த அரசமரம் இத்தலத்தில் தலவிருட்ச
மாம். இது காலவேசுவரத்தில் உள்ளது. இதனடியிலே சித்தமூர்த்தி
களாக வந்த சிவபெருமான் சபையை உண்டாக்கி அதில் கூத்தாடு
தேவர் திருவுருவமும் வரும் வண்ணம் உண்டாக்கினார்.

“ஆதி லிங்கந் தனக்குவட கிழக்கி னெல்லை யடர்வினைகள்
காதி யிருந்த காலவனீச் சரத்துண் மூவ ருருவான
போதி நிழலிற் புக்கருளிப் பொருந்த மன்ற மெழுகவெனச்
சோதி மலர்ந்த திருவாயாற் சொன்னார் மன்ற மெழுந்ததே”

**—திருத்தப் படலம் 22**

இதன்கீழ், பிரமா விட்டுணு காலவர் துர்க்கை ஏனைத் தேவர்கள்
முதலியோர் காணப் பங்குனி உத்திர நாளில் நடராசர் திருநடனம்
செய்தருளினார். ஏனைப் பல தலங்களின் தல விருட்சங்கள் இறந்து
பட்டமை போலல்லாது நமது பேரூரிலே தல விருட்சத்தை இது
வரை உயிருடன் பார்க்கும் பேறு நமக்கு கிடைத்துள்ளது. கிடைத்
தும் அதனைப் பயன்பெறச் செய்யாமல் வீணே கழிக்கின்றோம்.

இதனைச் சுற்றிச் செப்பனிட்டு அவ்விடத்தை அகலப்படுத்தல் வேண்டும். இது முன்னர் மூன்று பெருங் கிளைகளுடன் இருந்தது. இப்போது அவற்றுள் இரண்டு போய்விட ஒரே கிளையுள்ளது. இதனை இன்னும் பல்லாண்டு வாழும் வண்ணம் பாதுகாப்பது நமது முதற்பெருங் கடமையாம். இதனடியில் ஸ்ரீ நடேசப் பெருமானைப் பங்குனி உத்திரத்தில் எழுந்தருளுவித்துத் திருநடனங் காணுதல் மிகப் பெரும் பயனைத் தரும் சிவ புண்ணியமாம். இங்கு பெருமானை எழுந்தருளுவிக்கும் சிரமங் கருதிப் பிற்காலத்தவர் திருக் கோயிலுக் கெதிரில் வேறு ஒரு அரசமரம் வைத்து உண்டாக்கிக்கொண்டு திருவிழாவை அங்கேயே இப்போது நடத்திவருகிறார்கள்.

(2) **வசிட்டலிங்கம்:—** காஞ்சி நதிக்கு வடபுறம் தனியாலயத்தில் வசிட்டமுனிவராற்றாபித்துப் பூசிக்கப்பெற்ற இந்த மகாலிங்கமூர்த்தி ஷை ஆலயம் பழுதுபட்டமையால் ஆற்றுக்கு இப்புறம் கொண்டு வரப்பெற்று இப்போது அங்குள்ள அரசமரத்தடியில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ளது. இதற்கு முன்னிருந்த இடத்திலாதல் அது இயலாதபோது பிரமகுண்டத்தின் (திருநீற்று மேட்டின்) அருகில் வேறிடத்திலாதல் தனியாலயம் அமைத்துத் தாபித்தல் பெரும் சிவபுண்ணியமாகும்.

(3) **திருநீற்று மேடு:—** இதன் பெருமை பலவாறாக இப் புராணத்திலே எடுத்துக் கூறப்பட்டிருந்தும் இதனை அன்பர்களாவது அதிகாரிகளாவது பாதுகாவல் செய்து தனியிடமாக்கிச் சுற்றிலும் அடைப்பு முதலிய செய்து சுத்தமாக வைத்திருப்பதாகத் தெரியவில்லை. அதனை அவ்வாறு செப்பனிட்டுத் தூய இடமாய் யாவரும் தரிசித்து வணங்கும் வண்ணம் நன்னிலைமையில் வைப்பது பெரும் புண்ணியமாம். இதில் வெட்டி எடுக்கும் வெண்ணிறமான மண்ணே இப்போது திருக்கோயிலில் விபூதியாக வழங்கப்படுகிறது. இதனைத் தரித்தவர் பிரமராட்சசம், மலடு, நோய், பாவம் முதலிய நீங்கிப் பரிசுத்தராவர் என்பது புராணமும் அனுபவமுமாம்.

(4) நாரதர், விசுவாமித்திரர், முசுகுந்தன், கரிகாற்சோழன் முதலியோர் ஸ்தாபித்து ஆன்மார்த்தமாகப் பூசித்தனவாகப் புராணத்திற்கூறப்படும் மகாலிங்க மூர்த்திகள் யாவை என்று இப்போது விளக்கம் பெறவில்லை. அவற்றைக்கண்டு புராணத்திற் கண்டபடி அவ்வவ்விடங்களில் தாபித்துப் பூசித்தல் உத்தம சிவப்பிரதிட்டையாகிய பெரும் புண்ணியமாய் அவை செய்தோர்க்கு எண்ணிய வரங்களைத் தருவனவாம். பட்டிவிநாயகர் கோயிலின் முன்புறம் கேட்பாரற்று ஒரு அரசமரத்தடியில் நடப்பட்டிருக்கும் இரண்டு மகாலிங்கமூர்த்திகள் இவைகளிற்சேர்ந்த மூர்த்திகள் என்று ஊகிக்க



இடமிருக்கின்றது. இவற்றை புனர் உத்தாரணம் செய்து உரியவாறு தாபித்துப் பூசை நடத்துவித்தல் பெருஞ் சிவபுண்ணியமாம்.

(5) **விசேட** பூசைகளிலே இப்போது நடைபெறுவன நிற்க நடைபெறாத ஏனை நாட்களிலே குறித்த விசேட பூசைகளைப் பட்டிநாதருக்கும் பச்சைநாயகியார்க்கும் இயற்றுவித்தல் பெருஞ் சிவபுண்ணியமாம். அவைகள் குறித்த பயனைத் தந்து அழிவில்லாத வீட்டின்பத்தையும் தருவனவாம்.

(6) இப் புராணத்தையும் ஏனைத் திருவாக்குக்களையும் எங்கும் பரப்பி யாவரும் வாசித்துப் பயனடையுமாறு செய்தல் புண்ணியமாகும்.

(7) இத்தலம் அரசவனம் எனக் கூறப்பெற்றிருத்தலால் பெருமானார் வலம் வரும் திருவீதிகளிலும் மற்றும் வசதியான பிற இடங்களிலும் அரசமரங்களை வைத்து உண்டாக்குதலும் பெரும் சிவபுண்ணியமாம்.

(8) இத்தலத்து வழிபட்டுத் திருநடங் கண்டு உயர்ந்த பெருமுனிவர்களாகிய நாரதர், காலவர் முதலியோர்க்குத் திருவுருவங்களைத் தாபித்துத் திருவிழாச் செய்தல் உயர்ந்த புண்ணியமாம்.

(9) **பன்னீர் மரம்:—** பட்டி நாயகராகிய மூலலிங்கப் பெருமானார் இந்த யுகத்திலே பன்னீர் மரத்தடியில் வீற்றிருப்பதாகத் தெரிகின்றோம். ஆதலின் ஆதிலிங்க மூர்த்திக்கு பின்புறம் பன்னீர் மரம் வளர்த்தி நிழல்தரச் செய்து தரிசிப்பது பெரும் புண்ணியமாகும்.

இங்கே குறித்தவை ஒரு சிலவேயாகும். அன்பர்கள் இப்புராணத்தை முற்றும் பயின்று அதிற்குறித்த பிற தருமங்களையும் செய்தல் சிறப்பைத் தரும்.

இந்தத் தேவத்தானத்தார் செய்ததுபோலவே ஏனைத் தலங்களின் கோயிலதிகாரிகளும் அவ்வத் தலங்களின் வரலாறுகள், புராணங்கள், பெருமைகள் முதலியவற்றை யாவர்க்கும் தெரியுமாறு தேவத்தானப் பொருளிலிருந்து வெளியிட்டு அன்பர்களுக்கு உதவுவார்களாயின் பெரும் புண்ணியமாம். தேவத்தானங்களின் வருவாயிலிருந்து செய்யப்பெறும் செலவுகளில் இதைவிட அவசியமானதும் பயனுடையதும் புண்ணியமானதும் ஆகிய செலவு வேறொன்றில்லை.

ஒன்றுக்கும் பற்றுதவனுய் எவ்விதத் தகுதியுமில்லாதவனுயுள்ள எளியேனையும் இச் சிவபுராண ஊழியத்திற் கூட்டிவைத்து ஆட்கொண்ட எனது ஆன்ம நாயகாாகிய ஸ்ரீ பச்சைநாயகியார் பங்குடைய பட்டிநாயகரின் பெருங்கருணையை வாழ்த்திவணங்குகிறேன்.

"படைக்கல மாகநின் ஞமத் தெழத்தஞ்சென் நாவிற்கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப் பும்உனக் காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தானே"

என்பதே எனது இடைவிடாத பிரார்த்தனையாம்.

**பட்டி நாயகர் பதமலர் வாழ்க !!!**

கோவை: 'சேக்கிழார் நிலயம்'
சுக்கில; பங்குனி; உத்திர நாள்
11—4—1930

அடியார்க்கடியேன்,
**C. K. சுப்பிரமணியன்**

உ
சிவமயம்

# ஸ்ரீ கச்சியப்ப முனிவரர் சரித்திரச் சுருக்கம்

இந்நூலாசரியராகிய **கச்சியப்ப முனிவரர்**, சற்றேறக்குறையை நூற்று ற்பது வருஷத்திற்கு முன், தொண்டை மண்டலத்திலே, தணிகைத் ருப்பதியிலே, காஞ்சீபுரத்துப் பரம்பரை சைவவேளாளர் குலத்திலே, பிஷிக்தர் மரபிலே அவதரித்து, ஒழுக்கம், அன்பு, அருள் முதலிய நற்குணங்களோடு வளருவாராயினர்.

தந்தை தாயர்களாலே தக்க பிராயத்திலே வித்தியரரம்பஞ் செய்விக்கப்பெற்றுச், சிறிது கல்வி கற்ற வளவிலே, அக் கச்சியப்ப முனிவர் சிவக்ஷேத்திர யாத்திரை செய்யத் தொடங்கித், தொண்டை நாட்டிலுள்ள சிவஸ்தலங்களெல்லாம் தரிசித்துக்கொண்டு, சோழநாட்டிலே ஸ்ரீ சிதம்பர முதலிய திருப்பதிகளைத் தரிசித்தார். பின்னர் ஸ்ரீ ஞானக்கோமுத்தியாகிய திருவாவடுதுறையை அடைந்து, மடாலயத்தினுள்ளே புகுந்து திருக்கைலாச பரம்பரைச் சித்தாந்த சைவபானுவாகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளைத் தரிசித்துத், திருவருளாணைக்கஞ் சித்திக்கப்பெற்று, அப்பொழுது அத்திருமரபிற் சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஞானசாரியராகிய **பின்வேலப்ப தேசிகரை** ஒடுக்கத்திலே போய் தரிசித்து பேரன்போடு வணங்கினர். வணங்கிய பின் அந்த ஞானதேசிகரிடத்தே, சமய தீக்ஷையும், விசேஷ தீக்ஷையும் பெற்று, சிவாச்சிரமத்திற்குரிய துறவறத்தை அடைந்து நிருவாண தீக்ஷையும் பெற்றுக்கொண்டனர்.


அங்ஙனந் தீக்ஷை பெற்ற கச்சியப்ப முனிவரர் அகத்திய மகாமுனிவர் வரத்தினுற் பாண்டிவளநாட்டிலே அவதரித்து, எளிதிலே வடமொழிக் கடலுந், தென்மொழிக் கடலுங் கரைகண்டுணர்ந்து, அவ் வேலப்ப தேசிகராகிய ஞானசாரியரிடத்தே அநுக்கிரகம் பெற்று, மெய்யுணர்வின் முற்றுபேறுடையராய்ச் சித்தாந்த சைவ சிவஞானபோத திராவிட மகா பாஷ்ய கர்த்தராய் எழுந்தருளியிருந்த சிவஞான யோகிகளை வித்தியாகுரவாராகக் கொண்டு, அம்மெய்ஞ்ஞான முனிவரிடத்தே, தென்மொழியிலே, பல இலக்கணங்களும், இலக்கியங்களுந், தருக்கமுஞ், சிவஞான நூல்களாகிய மெய்கண்ட சாஸ்திரம் பதினன்கும், பண்டார சாஸ்திரம் பதினன்கும் மற்றும் பல நூல்களும் ஓதியுணர்ந்து கல்வி கேள்விகளில் வல்ல மகா வித்துவானெனப் பெயர்பெற்று, அச் சிவஞான யோகிகள் மாணுக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்தவராய் வீற்றிருந்தார்.

இவரது வாக்கு வல்லபத்தையும், பிரசங்க சாதுரியத்தையும் புகழாதார் இல்லை. இவர் செய்யுளியற்றும் விரைவு நெட்டுருப்பண்ணிய பழம் பாடம் ஒப்பித்தல்போல் இருந்ததென்று சொல்லுவர். இதனுல் இவருக்கு


கவிராட்சசன் என்றொரு பெயரும் வழங்கிய தென்பர். இதுமட்டோ! காலம் இடங்கட்கேற்பப் புதிது புதிதாக யுக்திகள் வேண்டியவண்ணம் அவரது திருவாயினின்று தோன்றிக்கொண்டிருக்குமானால் அவர் பெருமை இத்துணைத்தெனச் சொல்லற்பாலதா? தமிழ்மொழி தழைத் தோங்கும்வண்ணம் அவதரித்த பெரியோர்களில் ஒருவர் என்று கூறல் மிகையாகாது.

பின்பு கச்சியப்ப முனிவர், சிவபெருமான் அப்புலிங்க மூர்த்தியாக எழுந்தருளியிருக்கப்பெற்ற திருவானைக்காவில் அமர்ந்திருந்தபொழுது, திருவானைக்காப் புராணமும், பூவாளூர்ப் புராணமும் மொழிபெயர்த்தருளினர்.

பின்னர்க் கொங்கநாட்டிலே விராட்புருடனுக்கு விந்துஸ்தானமாய்ச் சிவபிரானாலே படைக்கப்பட்டதாய் தக்ஷிண கைலாசம், பிப்பிலாரணியம், மேலைச் சிதம்பரம், ஆதிபுரி, தவசித்திபுரம், பத்திபுரம், ஞானபுரம், வன்மீகபுரம், மேருபுரம், தேனுபுரம், பசுபதிபுரம், குருக்ஷேத்திரம், பிறவாநெறித்தலம் முதலிய பல தெய்வீகமான காரணப் பெயர்களையுடையதாய், தேவர், அசுரர், முனிவர் முதலிய அநேகராலே பூசிக்கப்பட்ட அளவில்லாத சிவலிங்கங்களை யுடையதாய். காஞ்சிநதி, கந்ததீர்த்தம், பிரமதீர்த்தம் காலவ தீர்த்தம் முதலிய பல திவ்ய தீர்த்தங்களை யுடையதாய் விளங்குந் திருப் பேரூருக்குக் கச்சியப்ப முனிவரர் சென்று, அங்கே சிலகாலம் வசித்தனர். அத்தலம் மூர்த்தி தல தீர்த்தங்களாகிய மும்மைச் சிறப்பும் பெற்று, இம்மை, மறுமை, வீடுபேறென்னும் மும்மைப் பயனும் தரத் தக்கது. மற்றெந்தத் தலத்திலும் இயற்றும் பாவம் திருவிடைமருதூரிலும், அத் திருவிடை மருதூரில் இயற்றும் பாவம், இப் பேரூரிலும் தீரும். பிரமகுண்டமாகிய திருநீற்றுமேட்டிலுள்ள விபூதியை அணிவோர்க்குப் பிரமராக்கதமும், மலடும், நோய்களும், இடர்களும், பாவங்களுந் தீர்ந்து இகமும், பரமும், வீடுங் கூடும். இது பிறவாப்புளி. இறவாப்பனை முதலிய பல ஸ்தல விம்மிதங்களையும், சோதி விருக்ஷம், சிலாநதி முதலிய பல பருவத விம்மிதங்களையும் உடையது. சிவபெருமான் இப் பேரூரின் கண்ணே இரசத சபையிலே அரிபிரமாதியோர்க்கு ஆனந்த தாண்டவஞ் செய்துகாட்டியருளினர். விராட்புருடனுக்கு இருதயஸ்தானமாய் விளங்கும் ஸ்ரீ சிதம்பரத்தின் கண்ணதாகிய கனகசபையிலே பஞ்சகிருத்திய திருநிருத்தஞ் செய்தருளுந் திருக்கோலத்தை இவ் வெள்ளியம்பலத்திலே சிவபெருமான் பரமாசாரியாகிய சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் காட்டக் கண்டு வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கி, மீண்டு, ஸ்ரீ சிதம்பரத்தை அடைந்து, சபாநாயகரை நமஸ்கரித்து, "மடித்தாடு மடிமைக் கணன்றியே" என்னுந் திருப்பதிகம் பாடி அதிலே "பாரூரு மரவல்குலுமைநங்கை யவள்பங்கன் பைங்கணேற்ற, னூரூரன் றருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வா, னாரூரன் றம்பிரானாரூரன் மீகொங்கி லணிகாஞ்சிவாய்ப், பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றா மன்றே" என்று சபாநாதரைத் திருப் பேரூரிலே கண்ட



காலவேசுரர் கோவில் முன்தோற்றமும், அரசம்பலமும்



திருக்கோவில், திருக்குளம் முன்தோற்றம்

நிலைமையைச் சிறப்பித்தருளினர். இவையாதி பற்பல பெருமைகளையும் கச்சியப்ப முனிவரர் பற்பல முறை உற்று நோக்கி ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்திக் காலந்தோறும் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு திருவருட் செல்வராய்ப் பல ஆண்டுகள் இத்தலத்தே வீற்றிருந்தார்.

அப்போது சிலகாலம் மழையில்லாமையால் வெப்பமிகுதிநீக்கம்பற்றிச் சனங்கள் தாகசோகங்களுற்று வருந்துவதை நோக்கித் தெள்ளியோர் உள்ளமே போல வெள்ளியம்பலத்திலே ஆனந்த தாண்டவஞ் செய்தருளிய காலத்து ஆடலின் வேகத்தால் அருமைத் திருமேனியில் ஆபரணமாக அணிந்துள்ள அரவங்கள் விடத்தை யுமிழ்ந்ததனாற் றேவாதியோர்க்கு உண்டாகிய தாக சோகங்களைத் திருமுடிக்கண்ணதாகிய கங்கையைக் காஞ்சிநதியாகச் செல்லும் வண்ணம் ஆஞ்ஞாபித்து மாற்றியருளிய பொருண் முதலியவற்றை அடக்கி அரசம்பலவாணர்மீது பெரிதும் அருமையாகிய ஒரு பிரபந்தம் பாடி மழை பெய்யச் செய்து, ஜனங்களுடைய தாக சோகங்களை மாற்றினார். பின்னும் பட்டீசர்மீது பல பதிகங்கள் பாடிப், பலருக்குக் குட்டநோய் முதலியவற்றைப் போக்கி, மற்றும் பல அற்புதங்களையுஞ் செய்தருளினார்.

இந்தத் தலத்தின் மகிமைகளை உலகத்தார் பலரும் உணர்ந்துய்யும்படி திருவுளங்கொண்டு, சொற்சுவையும் பொருட்சுவையும் இனிது விளங்கும் வண்ணம் காலம் இடங்களுக்கேற்ற அலங்கார அமைதியோடு இப் பேரூர்ப் புராணத்தை மொழிபெயர்த் தருளினார்.

அதன்பின் திருத்தணிகையை அடைந்து, அங்கே சில காலம் வீற்றிருந்து, இயற்றமிழ்ப் போதகாசிரியர் விசாகப்பெருமாளையர் வித்துவான் சரவணப் பெருமாளையர் இருவருக்கும் பிதாவாகிய கந்தப்பையர் முதலாயினோர்க்குக் கல்வி கற்பித்தருளினார். அப்போழ்து, பல வித்வான்களும் தமிழிற்குப் புறச்சமயியாற் செய்யப்பட்ட சீவக சிந்தாமணியைப் பேரிலக்கியமாகக் கொண்டாடுதலைச் சித்தத்திலே கொண்டு, அதினும் மாட்சிபெற திருத்தணிகைப் புராணத்தை மொழிபெயர்த் தருளிச்செய்தார். சொல் வளம்; செய்யுணடை, சந்தம்; பொருட்சுவை யென்னும் இவைகளிலே, தமிழ்மொழியிலுள்ள எந்த இலக்கியமும் இதற்கு மேம்பட்டிலதென்பது அப் புராணத்தை ஓதி யுணர்வோர்க்கு எளிதில் விளங்கும்.

தம்மாணாக்கரிற் சிறந்தவராகிய கந்தப்பையருக்கு வயிற்றிலே ஒரு குன்ம நோயிண்டாயபொழுது, தணிகையாற்றுப் படையைப் பாடி, அவர் நோயை மாற்றியருளினார். அதனான் அவர்சிவத்தியான வுறைப்பிற் சிறப்புடையரென்பது தெள்ளிதிற் புலப்படும். மற்றும் திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய பிரபந்தங்களும் அங்கே இருந்தபொழுது இயற்றினார்.

பின்பு சென்னை மாநகருக்குச் சென்று அங்கே சிறிது காலம் வசித்தார். அப்பொழுது அவ்விடத்துப் பக்தசனங்களும், பிரபுக்களும் வேண்

டிக்கொண்டபடி விநாயக புராணம், சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ் முதலியன இயற்றி, அவர்கள் அடியுறையாக இரண்டாயிரம் வராகனிட அதைக் கொண்டு திருவாவடுதுறையில் ஆதீன பரமாசாரியாகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் சந்நிதி மண்டபப் பணியை அணிபெறச் செய்வித்தருளினர்.

விநாயகபுராணம் அரங்கேற்றுஞ் சபைக்கு ஐயாப்பிள்ளை என்னும் ஒரு பெரிய பிரபு "நாம்வர இதென்ன இராமாயணமா" என்று சற்றே இகழ்ந்தனர். மற்றப் பிரபுக்கள் முனிவரர்க்கு அதனை மறைத்தும், அவர் தமது புராணத்தைத் தொடங்காது இராமாயணத்தை எடுத்துக்கொண்டு யாவரும் பிரமிக்கும்படி முதல் ஆறு செய்யுளில் நூறு குற்றம் ஏற்றினர். உடனே அப்பிரபு, நூறுவராகனும், பீதாம்பர முதலியவைகளுங்கொண்டு போய்ப் பாதகாணிக்கையாக வைத்துத் தீர்க்கதண்டஞ் சமர்ப்பித்து, சுவாமிகளது மகத்துவம் அறியாத ஏழையைத் தேவரீர் காத்தருளுக வென்று விண்ணப்பஞ் செய்ய, அதன் பின்பு தமது புராணத்தைத் தொடங்கி அரங்கேற்றினர்.

இம்முனிவர் சென்னைப் பட்டணத்திலிருக்கும்போது காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருந்த அவராசிரியராகிய சிவஞான யோகிகள்பால், அங்குள்ள தமிழ் வித்துவான்கள் ஒருங்குகூடி, நீவிர் காஞ்சிமான்மியஞ் செய்யப் புகுந்து, அதன் கண்ணே கடவுள் வாழ்த்தில் "சங்கேந்து மலர்க் குடங்கை" என்பதை முதலிலுடைய சபாநாயகர் துதியை முன்னர் அமைத்து, "தணந்தபெரும்" என்பதை முதலிலுடைய தல நாயகராகிய ஏகாம்பரநாதர் துதியைப் பின்னர் வைத்தது தவறென்று சாதித்தனர். அச் சிவஞான யோகிகள் தம்முடைய மாணாக்கரைக் கொண்டு அவர்களைத் தலைமடங்கச் செய்வதே தகுதியென்று திருவுளங்கொண்டு அதனைக் கச்சியப்ப முனிவருக்குத் தெரிவித்தார். உடனே முனிவரர் சென்னையினின்றும் புறப்பட்டு ஸ்ரீ காஞ்சி சேர்ந்து, அனைவரையும் ஏகாம்பரநாதர் சந்நிதி மண்டபத்திற் சேரச் செய்து பிரசங்கிக்கத் தொடங்குவாராகி, அந்தத் தலத்து ஓதுவாரை நோக்கி, இந்தத் தலத்துத் தேவாரப் பதிகங்களுள் ஒன்றனை முதலிலே ஓதும்படி சொல்ல, அவர் "திருச்சிற்றம்பலம்" என்று தொடங்கினர். அப்பொழுது கச்சியப்ப முனிவர், ஆக்ஷேபித்த வித்துவான்களை நோக்கி, இவர் திருச்சிற்றம்பலம் என்று தொடங்குகின்றாரே இது உங்கட்குப் பொருத்தந்தானோ? இதுவரை நீங்கள் சேர்ந்து இச்சந்நியில் இந்தத் தலத்துத் தேவாரப் பதிகங்களைப் பிருதிவியம்பலம் என்று சொல்லி ஆரம்பிக்குபடி செய்யக்கூடாதா வென்ற வளவிலே, அனைவரும் வாயெடாது ஊமர்களைப்போல தலை வணங்கி யிருந்தனர். அதன்மேல் விநாயகர் காப்புக்குப் பின், கடவுள் வாழ்த்தில், முதலாவது உயிர்களின் போகம் வீடுபேறுகட்குக் காரணமாகப் பஞ்ச கிருத்திய திருநிருத்தஞ் செய்தருளுஞ் சபாநாயகர் துதி கூறுதலே முறையென்று நியாயங்கள் காட்டி அவ் வித்துவான்களை அவமானம் அடையச் செய்தனர்.



பின்பு ஸ்ரீ காஞ்சியில் வீற்றிருக்கக் கருதி அங்கே அமர்ந்தபொழுது தம்முடைய ஆசிரியர் திருவாக்கைச் சிரமேற்கொண்டு காஞ்சிப்புராணத்து இரண்டாங் காண்டம் மொழிபெயர்ப்புச் செய்தருளிப், பின்னர்க் கச்சியானந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது, கச்சியானந்த ருத்திரேசர் பதிற்றுப் பத்தந்தாதி, பஞ்சாக்கரவந்தாதி முதலிய பல நூல்கள் இயற்றியருளினர்.

இங்ஙனம் உலகோபகாரமாகப் பல நூல்கள் இயற்றிப் பல நன்மாணாக்கர்களுக்குக் கற்பித்துத், தமிழ்மொழியை அபிவிர்த்தி செய்து, சிவப்பேற்றிற்குக் காரணமாகிய சிவத்தியானாதிகளின் உறைப்பில் வதிந்தருளிய கச்சியப்ப முனிவரர் ஸ்ரீ காஞ்சிபுரத்திலே, சாலிவாகன சகாப்தம் ௧௭௧௨-க்குச் சரியான சாதாரண ௵ சித்திரை ௴ ௧௧௨ (20—4—1790) செவ்வாய்க்கிழமை, புனர்பூச நக்ஷத்திரமும் பூர்வ பக்ஷத்துச் சத்தமியுங் கூடிய கும்ப லக்கினத்திற் பரிபூரண தசை யடைந்தனர்.

ஏர்தரு சாலி வாகன சகாத்தமாயிரத் தெழுசதத் தொருபத்
 திரண்டின்மேற்சாதா ரணவருடத்தி னியைதரு சித்திரைத் திங்கள்
சார்தரு தெய்தி பத்திரேறொன்று தகுசெவ்வாய் வாரம்பூ ருவத்திற்
 சத்தமி புனர்பூ சத்திரு நாளிற் றவலறு கும்பலக் கினத்திற்
சீர்தரு துறசை வாழ்சிவ ஞான தேவன்மா ணாக்கருண் முதன்மை
 திகழ்ந்துள கச்சியப்பமா முனிவன் றிருப்பெருங் காஞ்சியி னெய்திச்
சேர்தரு மடியார் தமதக விருளைத் தினகரன் முன்னிரு ளென்னத்
 திருந்துதன் னருளா லகற்றிவீ டுறுதிச் சிறந்தபூ ரணதசை-
 யடைந்தான்.

(இச் செய்யுள் முற்காலத்தது)

மெய்கண்டதேவர் மெல்லடி வாழ்க!

சிவஞானயோகிகள் சேவடி வாழ்க!

கச்சியப்ப முனிவரர் கழலடி வாழ்க!

**கச்சியப்ப முனிவரர் சரித்திரச் சுருக்கம் முற்றிற்று.**

[இது முதற் பதிப்பிற் கண்டவாறே சிற்சில மாறுதல்களுடன் பதிக்கப்பெற்றது]

உ
சிவமயம்

## மேலைச் சிதம்பரம் என்கிற

# திருப்பேரூர்.

## தேவாரமாதி அருட்பாசுரங்கள்

ஆரூர் மூலத்தான மானைக் காவும் ஆக்கூரிற் றான்றோறி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேராவூரும் பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் கொறுக்கைவீ ரட்டா னமும் கோட்டூர் குடமூக்குக் கோழம் பமும்
காரார் கழுக்குன் றுங் கானப் பேருங் கயிலாய நாதனையே காண லாமே.

**அப்பர் சுவாமிகள் தேவாரம் - க்ஷேத்திரக் கோவை.**

அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற் றுள்ளார் ஆரூரார் பேரூரார் அழுந்தூ
ருள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்களூரார் சாந்தை யயவந்தி தங்கி னார்தாம்
நஞ்சைத் தமக்கமுதா வுண்ட நம்பர் நாகேச் சுரத்துள்ளார் நாரை யூரார்
வெஞ்சொற் சமண்சிறையில் என்னை மீட்டார் வீழிமிழலையே மேவினாரே.

**அப்பர் சுவாமிகள் தேவாரம் - திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்.**

கூறுந டைக்குழி கட்பகு வாயன பேயுகந் தாடநின் றோரியிட
வேறுப டக்குட கத்திலை யம்பல வாணனின் றாடல் விரும்புமிடம்
ஏறுவி டைக்கொடி யெம்பெரு மானிமை யோர்பெரு மானுமை யாள்
கணவன்
ஆறுச டைக்குடை யப்ப னிடங்கலிக் கச்சி யனேகதங் காவதமே.

**சுந்தரமூர்த்திகள் தேவாரம் - திருக்கச்சியனேகதங்காவதம்—2**

பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்க ணேற்றன்
ஊரூரன் றருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் றம்பிரா னாரூரன் மீகொங்கி லணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றா மன்றே.

**சுந்தரமூர்த்திகள் தேவாரம் - கோயில் - குறிஞ்சி—10**

ஆரு ரத்தா ! ஐயாற் றமுதே ! அளப்பூர் அம்மானே !
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகா வூரானே !
பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே !
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாசூர் அம்மானே !

**சுந்தரமூர்த்திகள் தேவாரம் - ஊர்த்தொகை.**

உலகெ லாமுய்ய வுறுதியாம் பதிக முரைத்துமெய் யுணர்வரு வொருமை
நிலவிய சிந்தை யுடன்றிரு வருளா னீங்குவார் பாங்குநற் பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப் போந்துதண் பனிமலர்ப் படப்பை
குலவுமீ கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினார் முறுகுமா தரவால். 88

அத்திருப் பதியை யணைந்துமுன் றம்மை யாண்டவர் கோயிலுட் புகுந்து
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு திருமுன் மேவுவார் தம்மெதிர் விளங்க
நித்தனார் தில்லை மன்றுணின் றாட நீடிய கோலநேர் காட்டக்
கைத்தலங் குவித்துக் கண்களானந்தக் கலுழிநீர் பொழிதரக்கண்டார் 89

காண்டலுந் தொழுது வீழ்ந்துட னெழுந்து கரையிலன் பென்பினை யுருக்கப்
பூண்டவைம் புலனிற் புலப்படா வின்பம் புணர்ந்துமெய் யுணர்வினிற் பொங்கத்
தாண்டவம் புரியுந் தம்பிரா னாரைத் தலைப்படக் கிடைத்தபின் சைவ
வாண்டகை யாருக் கடுத்தவந் நிலைமை விளைவையா ரளவறிந் துரைப்பார். 90

அந்நிலை நிகழ்ந்த வாரருள் பெற்ற வன்பனா ரின்பவெள் ளத்து
மன்னிய பாடன் மகிழ்ந்துடன் பரவி வளம்பதி யதனிடை மருவிப்
பொன்மணி மன்று ளெடுத்தசே வடியார் புரிநடங் கும்பிடப் பெற்றா
லென்னினிப் புறம்போ யெய்துவ தென்று மீண்டெழுந் தருளுதற் கெழுவார்.

* * * *

மடித்தாடு மடிமைக்க ணன்றெடுத்து மன்னுயிர்கட் கருளு மாற்றா
லடுத்தாற்று நன்னெறிக்க ணின்றாலும் வழுவினர்க ளணையா வண்ணந்*
தடுப்பானைப் பேரூரிற் கண்டநிலை சிறப்பித்துத் தனிக்கூத் தென்று
நடிப்பானை நாமனனே பெற்றவா றெனுங்களிப்பா னயந்து பாடி. 115

ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம்—பெரிய புராணம்.

## திருக்கோவையார்

### மணமுரசு கூறல்

**வரைவு தோன்ற மகிழ்வுறுதோழி நிறைவளைக்கு நின்றுரைத்தது**

பிரசந் திகழும் வரைபுரை யானையின் பீடழித்தார்
முரசந் திகழு முருகிய நீங்குமெ வர்க்குமுன்னா
மரசம் பலத்து நின்றாடும் பிரானருள் பெற்றவரிற்
புரைசந்த மேகலையாய் துயர்தீர்ப் புகுந்து நின்றே.

* நின்றார்கள் வழுவிநர களையா வண்ணம்: என்பது பாடபேதம்.

## திருப்புகழ்

### பேரூர்

தானத் தனதான தானத் தனதான

தீராப் பிணிதீர—சீவாத் துமஞான
ஊராட் சியதான—ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே—பாலாக் கிரிராச
போராற் பெரியோனே—பேரூர்ப் பெருமாளே.

தத்த தானன தத்த தானன
தானா தானா தானா தானா தனதான.

மைச்ச ரோருக நச்சு வாள்விழி
மானா ரோடே நாணார் நீயார் எனுமாறு
வைத்த போதக சித்த யோகியர்
வானாள் கோனாள் வீணாள் காணார் அதுபோல
நிச்ச மாகவு மிச்சை யானவை
நேரே தீரா வூரே பேரே பிறவேயென்
நிட்க ராதிகண் முற்பு காதினி
நீயே தாயாய் நாயேன் மாயா தருள்வாயே
மிச்ச ரோருக வச்ர பாணியன்
வேதா வாழ்வே நாதா நீதா வயலூரா
வெற்பை யூடுரு வப்ப டாவரு
வேலா சீலா பாலா காலா யுதமாளி
பச்சை மாமயில் மெச்ச வேறிய
பாகா சூரா வாகா போகா தெனும்வீரா
பட்டி யாள்பவர் கொட்டி யாடினர்
பாரூ ராசூழ் பேரூ ராள்வாய் பெருமாளே.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருப்பேரூர் போற்றிக் கலிவெண்பா

இஃது இந்நூலாசிரியரின் மாணக்கர் வழிவழி வந்த

**கோயமுத்தூர், வித்வான், கந்தசாமி முதலியார்**

இயற்றியது.

## காப்பு

தேற்றமிகும் பேரைநகர்ச் செல்வர்பட்டி நாயகரைப்
போற்றிக் கலிவெண்பா போற்றுதற்குச்—சாற்றினடு
கட்டி யனைய கவியுதவிக் காப்பாகும்
பட்டிக் களிற்றின் பதம்.

## கலிவெண்பா

1. சீராருந் தெய்வ மகதியாழ்ச் செங்கரத்து
நாரதனூர் பூசை நடாத்துதலும்—நேராக
2. வந்தருளிச் செய்து மனதுக் கியந்தவரந்
தந்தருளிச் செய்திருத் தாள்போற்றி—வந்தித்துப்
3. பூக்கைகொ டர்ச்சித்துப் போற்றியென்ற காலவர்க்குத்
தீக்கை யளிக்குந் திறம்போற்றி—கோக்குலவான்
4. பட்டியிட்டுப் பூசித்துப் பாலருத்த வாங்கதற்குச்
சிட்டி யளித்தருளுஞ் சீர்போற்றி—குட்டியன்று
5. துள்ளிக் குளம்படிநெய்த் தோறுபட வீறுசெயக்
கொள்ளுதிரு மேனிக் குறிபோற்றி—யொள்ளியமால்
6. கோமுனியாய்த் தென்கயிலைக் கோவில்செய வாங்கதன்பால்
நேமமுடன் சென்ற நெறிபோற்றிப்—பூமிசையோன்
7. பட்டிமுனி யாகப் படர்ந்து வடகயிலை
கட்டிவழி பட்ட கழல்போற்றி—ஒட்டியர
8. சம்பலத்தி லாங்கவர்கட் காநந்த மாநடஞ்செய்
செம்பதுமப் பாதமலர்த் தேன்போற்றி—உம்பரெல்லாம்
9. வெந்தகுவர்க் காற்றாது வேண்ட வபயமது
தந்தருளிச் செய்த தயைபோற்றிக்—கந்தன்
10. நிருதர் தமையழிப்பான் நேர்ந்தமரர் நோற்க
மருதவரை தந்த வரம்போற்றி—ஒருதன்



ஆறுமுக சுப்பிரமணியர்



நிருத்த கணபதி

11. குமதியா லேமாங்கி கொங்கை முயங்கும்பாழ்ஞ்
சுமதிகதி யேறவருள் சூள்போற்றிச்—சுமுகமின்றி

12. வன்குரக்கு மாமுகஞ்சேர் மன்னன் மனிதமுகம்
நன்குபெற நல்கும் நயம்போற்றி—முன்பிருகு

13. விட்டகொடுஞ் சாபந்தீர்ந் திந்திரனை வானாள
விட்ட கருணை விதம்போற்றி—மட்டவிழ்தார்

14. மன்னன் கரிகால் வளவன் பழியொடெழு
கன்னியர்சா பந்தொலைத்த கால்போற்றி—மன்னரென்று

15. நாற்றிக்கும் போற்றுதமிழ் நாவலூர் நம்பிக்காய்
நாற்றுநடும் பள்ளநடை போற்றி—போற்றுதிருச்

16. சிற்றம் பலம்வாழ் சிவமறையோர் செய்யழகு
சிற்ற பலம்புகுந்த சீர்போற்றி—நற்றீர்த்த

17. மாஞ்சிவதீர்த் தங்க ளகத்தே சிறந்ததிருக்
காஞ்சிநதி நல்குங் கனம்போற்றி—வாஞ்சித்த

18. நல்கும் பிறவாப் புளியு நவைதீர்ந்த
பல்வளமுஞ் சாவாப் பனைபோற்றிச்—சொல்வலியாற்

19. பொய்யுரைத்த வியாசன் பொறுக்கவென்று தாழ்ந்திடலுங்
கையொடுநாத் தந்த கழல்போற்றித்—துய்யபுகழ்க்

20. காசியினும் பேரூர் கணிப்பரிய தானமெனக்
கோசிகர்க்குக் காட்டுங் குணம்போற்றி—மாசிகந்த

21. பத்தியில்லாப் பேர்மேற் படைத்தரசு செய்திருக்க
அத்தருமற் கீந்த வருள்போற்றிச்—சித்திமுத்தி

22. யாதியவை நல்குவதற் காதிநக ராந்தலமே
மீதுயர்ந்த தென்ற விதம்போற்றித்—தீதுபுரி

23. அங்கிரனும் வேடன் அவியுமுனங் காஞ்சியெனுங்
கங்கைநுகர்ந் தெய்துங் கதிபோற்றிப்—பங்கடைய

24. அம்மை கௌரி யரியதவம் புரியச்
செம்மைபெற முன்னிற்குஞ் சீர்போற்றி—யெம்மையெலா

25. மீன்றெடுத்தா டன்னை யியல்பாகத் தீவேட்டுத்
தோன்ற விருந்த துணைபோற்றித்—தோன்றியெதிர்

26. சென்ற முருகனுக்குத் தெய்வானை யம்மைதனை
மன்றல்செய் வித்த வளம்போற்றி—நின்றுதவம்

27. புத்திரரை வேண்டிப் புரிந்த குசத்துவசற்
கத்திருவு நல்கு மருள்போற்றி—நத்துங்

28. குலசே கரனென்னுங் குட்டுவற்குக் குட்டம்
விலகவருள் செய்த விறல்போற்றி—யுலகொருமூன்

29. றாண்ட திரிலோக சோழன் அருவினையைக்
கீண்டருளிச் செய்யுங் க்ருபைபோற்றிப்—பூண்டவர்தம்

30. பாவம் பறிக்குஞ் சிவசின்னப் பான்மையெல்லாந்
தேவிக்குத் தேற்றுஞ் செயல்போற்றி—யாவியினைப்

31. பற்றும் அரக்கநோய் பாண்டியன்றே விக்ககலச்
செற்றதிரு நீற்றின் றிடர்போற்றி—மற்றுள்ள

32. பூசை விசேடம் புரிவோர்கட் காறிரண்டு
மாசம் வகுத்த வகைபோற்றி—ஈசனுள்ள

33. சித்திபுரந் தேனுபுரந் தென்கயிலை ஞானக்கோ
முத்திபுரங் கல்லாத மூடருக்கும்—பத்திபுரம்

34. ஆதிபுரம் மேலைச் சிதம்பரமா வெள்ளிமன்றம்
போதிவனம் ஞானபுரம் போதபுரம்—ஏதுவினுன்

35. பேரூரெந் நாளும் பிறவா நெறியெனவும்
பேரூர்கொள் பற்பலவாம் பேர்போற்றிச்—சீரூரும்

36. நற்றலத்தின் சீரனைத்து நம்பனருள் செய்திடவே
கற்றறிந்த நந்தி கழல்போற்றி—மற்றதனை

37. நந்தி முருகற்கு நவிலவவர் நாரதற்குச்
சிந்தை தெருட்டுந் திடம்போற்றிப்—பிந்தவவர்

38. வேதவியா சர்க்கு விளம்பவவர் சூதருக்கு
மூதறிவிற் கூறு முறைபோற்றி—மாதவர்தம்

39. காசில் பிரமாண்டக் கௌமார சங்கிதையின்
பேசுகும ரக்கண்டப் பெற்றியிடை—வாசிக்க

40. உச்சிதமாய்ச் சொன்ன உரைபோற்றி செந்தமிழ்செய்
கச்சியப்ப மாமுனிவன் கால்போற்றி—நிச்சயமாய்

41. மூர்த்திதலந் தீர்த்தமிந்த மூன்றின் வழியடைந்தோர்
கீர்த்தி யனைத்துங் கிளர்காதை—நேர்த்திபெற

42. வாசிப்போர் கேட்போர் மலரா லனுதினமும்
பூசிப்போர் பெற்ற புகழ்போற்றி—நேசமுடன்

43. நற்றவத்தோர் கேட்டு நவைதீர வந்தருச்சித்
தெற்றுதிரைக் காஞ்சி யெழிற்புனல்தோய்ந்—துற்றவினை

44. பட்டழியப் பெற்ற பதம்போற்றி யாதிலிங்கம்
பட்டிப் பெருமான் பதம்போற்றி—நெட்டிலைவேற்

45. கையா னெடுமைந்து கையான் கழல்போற்றி
பையா ரரசம் பலம்போற்றி—மெய்யடியார்

46. பூங்கழல்கள் போற்றிநிதம் போற்றி யுயிர்க்கருளே
தாங்குபச்சை நாயகிபூந் தாள்.

திருச்சிற்றம்பலம்

**திருப்பேரூர்ப் போற்றிக் கலிவெண்பா முற்றிற்று.**

உ
சிவமயம்

# திருப்பேரூர்ப் பிரபந்தச் செய்யுட்டிரட்டு

## *1—திருப்பேரூர்க் கிள்ளைவிடு தூது*

இது
கோயமுத்தூர் வித்துவான் கந்தசாமி முதலியார்
[கி. பி. 1838—1890]
இயற்றியது.

(அச்சானது சுபானு வருடம்)

38 அன்பை யுடையாய் அறிவுடையாய் ஆய்ந்திடுஞ்சொல்
வன்மை யுடையாய் மகிதலத்தில்—இன்னபுகழ்

39 எய்தி யுயர்வா மிளங்கிளியே! எந்தனது
செய்தி சிலவெடுத்துச் செப்பக்கேள்—வையத்துள்

40 வீசு புகழ்சேர் வியன்பதியென் றிவ்வுலகம்
பேசுகரு வூரிற் பிறந்தேன்யான்—மூசுதிறை

41 வெள்ளப் புனன்மே வியசீர்க்கங் காகுலத்திற்
பிள்ளையென வந்து பிறந்தேன்யான்—வள்ளல்பேர்

42 பூவுலக நாதன் பொருந்தவரும் பார்ப்பதிபாற்
பேணுமக வாகப்பிறந்தேன்யான்—பூணற்

43 கரிய புகழ்சே ரரங்கசா மிக்குப்
பிரியமரு காகப் பிறந்தேன்—உரியபல

44 சீரிட்ட நாளினலஞ் சேர்கந்த சாமியெனப்
பேரிட் டழைக்கப் பிறந்தேன்யான்—வாரிட்ட

45 நற்றொட்டி லேற்றி நலம்பலபா ராட்டியெனைப்
பெற்றவர்கள் போற்றப் பிறந்தேன்யான்—உற்ற

46 களங்க முளவெல்லாம் காசினியிற் றோன்றி
வளர்வதே போல வளர்ந்தேன்—இளமையிலே

47 தந்தை யிறந்தொழியத் தாயார் பிறந்தகத்தில்
வந்து வளர்க்க வளர்ந்தேன்யான்—செந்தமிழும்

48 அல்லாமல் இந்நா ளரசுபுரி ஆங்கிலர்தம்
சொல்லதுவுங் கற்கத் தொடங்கினேன்—........

54 தெய்வச் சிறப்புஞ் சிவனடியார் தஞ்சிறப்புஞ்
சைவச் சிறப்புந் தரிக்ககிலேன்—பொய்யார்

55 புலைத்திரளின் சேர்க்கையாற் புத்திவரத் தக்க
கலைத்திரளை யேதொன்றுங் கல்லேன்—கொலைத்திரள்சேர்

56 விவிலிய நூற் கொள்கை மிகுத்தலா லான்றோர்
நவிலியநூ லொன்று நவிலேன்—அவமாகக்

57 காலங் கழித்தேன் கழித்தேன் குலவொழுக்கம்
சீலங் கழித்தே திரிதந்தேன்—ஞாலமுடன்

58 காசு பணத்திற்குங் கண்மயக்கும் வேசைகட்கும்
ஏசு மதத்திற்கு மிச்சைவைத்தேன்—சீசியென

59 நல்லாரைக் கண்டால் நடுங்குவேன் நல்லார்கள்
அல்லாரைக் கண்டா லகங்களிப்பேன்—பொல்லாத

60 துன்மார்க்க மென்றாற் சுகித்திடுவேன் சுத்தசைவ
சன்மார்க்க மென்றாற் சலித்திடுவேன்—..........

75 பன்னா ளவமாகப் பாழுக் கிறைத்துவிட்டுப்
பின்னாளிற் சேர்ந்தேன்யான் பேரூரை—அந்நாள்

76 திருநாளா யெங்கோன் றெருவிற் பவனி
வருநாளாய் நேர்ந்த வகையால்—அருவுருவச்

77 சோதியான் றோன்றாச் சுயம்புவான் செஞ்சடையிற்
பாதிமதி சூடும் பரமனார்—மாதினையோர்

78 கூறுடையான் எட்டுக் குணமுடையான் பால்வெள்ளை
நீறுடையான் கையில் நெருப்புடையான்—ஆறுடைய

79 சென்னியான் ஆறுடைய சென்னியான் றன்னையே
முன்ன மளித்த முதல்வன்—பன்னாகப்

80 பூணுடையா னோரிந்தப் பூமி முழு தஞ்சுமந்த
நாணுடையான் முப்புரிசேர் நாணுடையான்—காணுமவர்க்

81 கஞ்சக் கரத்தான் அருள்பெறுவோ ருச்சரிக்கும்
அஞ்சகக் கரத்தா னரியகருப்—பஞ்சிலையால்

82 ஐயம்பெய் யுங்காரத்தா னங்கமழ லூட்டினான்
ஐயம்பெய் யுங்கரத்தா னாதியான்—பொய்பாத

83 கக்கிரியை யோர்விலாக் கண்டகர்சாகக்கன
கக்கிரியை யோர்விலாக் கைக்கொண்டான்—மிக்கடியோ

84 முக்கண்ணா நல்லமிர்த மொப்பாவான் முச்சுடரும்
முக்கண்ணாய் வாழு முகமுடையான்—றக்கார்

85 மறந்தும் பிறவி வரநினையான் றானும்
மறந்தும் பிறவியிடை வாரான்—துறந்தோர்

86 தவந்திரண்ட தென்னத் தவளநிறம் வாய்ந்து
நிவந்துலக மூடுருவி நின்று—நவந்தரும்பல்



87 விம்மிதங்க ளோங்கி விமலமாம் வேதத்தின்
சம்மதமாம் வெள்ளித் தடவரையும்—தம்மதருட்

88 சத்தி யுறையுந் தடங்கிரியுஞ் சங்கேந்தும்
புத்தே ளயன்வாழ் பொருப்பிரண்டும்—நத்திக்

89 கருதமலை வில்லாமற் கந்த னருள்செய்யு
மருதமலை யென்னு மலையும்—ஒருபடித்தாய்ப்

90 பஞ்சப் பிரமமே பஞ்சவரையானதென
மஞ்சடரும் பஞ்ச வரையுடையான்—எஞ்சாது

91 நீர்த்தரங்கத் தாலே நெருங்கு மகன்கரையைப்
பேர்த்தெறிந்து வெள்ளப் பெருக்காகி—யார்த்தெழுந்தே

92 யந்நாட் பகீரதிக்கா யார்த்தெழுந்த கங்கையைப்போல்
இந்நாட் பலவுலக மீடேறப்—பொன்னாற்

93 பொலிந்த ரசிதப் பொருப்பிலுலாவி
மலிந்த பொருள் பற்பலவும் வாரிக்—கலந்து

94 தொடும் பொருளை யெல்லாம் சுவர்ணமய மாக்கி
விடும்பரிசாற் காரணப்பேர் மேவித்—கடும்பவநோய்

95 யாவு மகற்றி யறம்பொருளின் பாக்கியலை
வாவி வருங்காஞ்சி மாநதியான்—மேவுபுகழ்

96 எட்டி லடங்காமல் எவ்வுலகுந் தன்மணமே
நாட்டுவிக்குங் கொங்குவள நாட்டினான்—போட்டிவினைத்

97 தாரூரெல் லாஞ்சின்ன வூராய்ப் புறங்கொடுக்கப்
பேரூ ரெனத் திகழ்பே ரூரினான்—ஆரூரர்

98 பாமாலை சூடும் பணைத்தோளி லென்றன்புன்
பாமாலை சூட்டப் பணித்ததுபோற்—பூமாலை

99 நேசமாய் மாசகன்ற நின்மலமாய்ப் பொன்மயமாய்
வாசமார் கொன்றைமலர் மாலையான்—வாசிக்

100 கடும்பரியி லேறுவோ ரல்லாதார் காணப்
படும்பரிசொன் றில்லாப் பரியான்—இடும்பச்

101 சிலையின் பொருட்டுவெள்ளைச் சிந்துரமு நல்குங்
கொலைவல்ல கம்பமத குஞ்சரத்தான்—அலையாமல்

102 ஈண்டு மடியவர்கட் கெய்தும்பே ரின்பமென
மூண்டு முழங்கு முரசத்தான்—ஆண்டவன்றன்

103 சேவேறு சேவடியை யல்லைதில்லை யென்றசையுங்
கோவேறு கொற்றக் கொடியினான்—பூவேறும்

104 அந்தணனும் நாரணனு மண்டபகி ரண்டமொடு
வந்தடங்கு மாணை வலியுடையான் மைந்தர்களாம்

105 பட்டி விநாயகனும் பன்னிருகைப் பண்ணவனுங்
கிட்டி யருகே கிளர்ந்துவரத்—தொட்டானார்

106 உண்ட பரிகலமு மொண்மலரும் பெற்றவெங்கள்
சண்டிப் பெருமானுஞ் சார்ந்துவர—மண்டியபோர்

107 அன்பாற் றமிழ்பாடு மப்பருடன் சம்பந்தர்
வன்பா லடிமைகொண்ட வன்றொண்டர்—தென்பார்

108 விளங்கவரும் வாதவூர் வேந்தரிவ ரெல்லாம்
துளங்காது பக்கலிலே சூழ—வுளந்தனிலே

109 யிச்சை யறிந்துலக மெல்லாம் படியளக்கும்
பச்சைவல்லித் தாயாரும் பாங்கர்வர—வச்சுதனே

110 டிந்திரனே யாதி யிமையோர் குழாந்திரண்டே
யந்தரத்தின் கண்ணே யலர்தூவத்—துந்துமியே

111 யாதி முழவ மதிர முழங்கியெழ
வீதி நிரம்ப விருதடையக் கோதில்

112 குணவடியா ரெல்லாங் குழாங்கொண்டு கூடிப்
பணிவிடைகள் வேண்டியவா பண்ண—வணிகிளரும்

113 வேத மொருபாலும் விமலத் தமிழ்வேத
நாத மொருபாலு நவின்றிலங்கச்—சீதப்

114 பனிவெண் மதியங்கள் பார்க்கவந்த தென்னக்
கனிவெண் குடைகள் கவிப்ப—நனிவிரைந்து

115 கங்கைத் திரள்வந்த காட்சியென மேலோங்கித்
துங்கக் கவரிபுடை துள்ளவே—யெங்குமாம்

116 மூவர் பெருமான் முடியா முதற்பெருமான்
தேவர் பெருமான் சிவபெருமான்—காவலராஞ்

117 சிட்டிப் பெருமான் திதிப் பெருமான் காண்பரிய
பட்டிப் பெருமான் பவனிவந்தான்—சிட்டரெலா

118 மாடுவார் தித்தித் தமுதமெனக் கானவிசை
பாடுவார் நின்று பரவுவார்—நாடுவார்

119 கண்ணே கருத்தே கதியேவான் கற்பகமே
யெண்ணே யெழுத்தே யெனத் துதிப்பார்—நண்ணுப்

120 பதிதரெனி னும்பவனி பார்க்கக் கிடைத்தாற்
கதிதருங்கா ணென்றே களிப்பார்—துதிசெய்யும்

121 விண்ணோரு மண்ணோரும் வேட்ட துனதுகடைக்
கண்ணே யளித்தருளுங் காணென்பார்—விண்ணவர்க்காய்க்

122 கல்லைக் குழைவித்த கண்ணுதலே யெம்மனமாங்
கல்லைக் குழைத்தல் கடனென்பார்—அல்லைப்

123 பொருவு மிடற்றிலெங்கள் புன்மலமுஞ் சேர்த்தால்
இருமைக் கருப்பாகு மென்பார்—திருநுதலிற்

124 றீவைத்த தெங்கள்பெருந் தீவினையெல் லாமொருங்கே
வேவித்தற் கேயோ விளம்பென்பார்—சேவித்தோர்



125 தங்கண்மலம் போக்கவோ தண்புனலைச் சென்னிவைத்தாய்
திங்களையும்வைத்ததென்ன சேர்த்தென்பார்-எங்கள்பொருட்

126 டாயோர் நரவுருவ மானுய்க்கு வெங்கொடிய
பேயோடு மாடலென்ன பெற்றியென்பார்—தீயபவக்

127 காடெறிய வேயோ கணிச்சியினைக் கைக்கொண்டாய்
மாடா யொருமானேன் வைத்ததென்பார்—பீடாரும்

128 யோகத் திருந்து முமையாளைச் செம்பாதி
பாகத்தில் வைத்ததென்ன பற்றியென்பார்—ஆகத்திற்

129 கந்தபொடி பூசக் கருதாமல் வெண்ணிறமாய்
வெந்தபொடி பூசலென்ன விந்தையென்பார்—இந்தவகை

130 தத்த மனக்கிசைந்த சாற்றித் தொழுதுநிற்ப
வெத்தனையோ பேர்சூழ்ந் திரங்கிநிற்பப்—பித்தனேன்

131 கொஞ்சமுமுள் ளத்திலன்பு கொண்டிலைக் கல்லான
நெஞ்ச முருகநைந்து நின்றிலைத்—தஞ்சமெனக்

132 கண்ணருவி பாயவில்லை கைதலைமேற் கொள்ளவில்லை
மண்ணதனில் வீழ்ந்து வணங்கவில்லைத்—துண்ணெனவென்

133 னாகம் புளக மரும்பவில்லை யவ்விழவின்
மோகமொரு சற்று முயங்கவில்லை—வேகப்

134 பறவைவிலங் கோட்டிப் பயமுறுத்த நாட்டி
நிறுவுமொரு புல்லுருமை நேர்ந்தேன்—........

151 ..........................................
..........................................—வழுவிநீ

152 பேயின்கோட் பட்டாயோ பேதைமையோ வேற்றவர்தம்
வாயின்கோட் பட்ட வகைதானோ—வாயவிதம்

153 சொல்லென்றான் காட்டினில்வாழ் துட்ட விலங்கனையேன்
சொல்லன்று சொல்லத் தொடங்கினேன்—கல்லாத

154 மாந்தரென வென்னை மதித்தனிரோ விந்தப்பார்
வேந்தரெனைக் கொண்டாடி மெச்சிடுங்காற்—போந்தெனைநீர்

155 கல்லுக்கு மண்ணுக்குங் காசடிக்குஞ் செம்புக்கு
மெல்ல வணங்கவிலை யென்று—சொல்லுதரோ

156 அன்னத்தைப் பார்த்தொருகொக் கானதுவான் மேற்பொய்கை
யின்னத்தை மீனுதி யில்லையெனச்—சொன்னத்தை

157 யொப்பாகு நீவி ருயர்ச்சியெனுஞ் சைவமோ
தப்பாகு மேசுச் சமயமொன்றே—யிப்பாரை

158 நீதிமிக வோதி நிலைநிறுத்த லாலதுவே
யாதியென லாமென் றறைந்தேன்யான்—ஓதியவை

159 கேட்டும் பொறுத்துக் கிருபையா யென்மீது
மீட்டு மருட்கடைக்கண் வீட்சணியம்—நாட்டி

160 யழகழகுன் செய்கை யழகழகுன் கல்வி
யழகழகுன் சொற்பிறந்த வாற்றல்—அழகாகும்

161 சைவத்தைப் போலாஞ் சமயமொன்றுஞ் சங்கரனாந்
தெய்வத்தைப் போலான தெய்வமொன்றும்—வையகத்தில்

162 ஆதித்தன் போலா யனைத்திருளை யுந்துறக்குஞ்
சோதி தனியாஞ் சுடரொன்றும்—பூதலம்போல்

163 எற்றுநாஞ் செய்கின்ற வெப்பிழையை யும்பொறுத்துப்
போற்றி யுணவளிக்கும் பூமியொன்றும்—பாற்றுளிபோற்

164 சூற்கொண் டுலகிற்கு தோற்றுந் துணையாக
மேற்கொண்டு பெய்தளிக்க மேகமொன்றும்—எற்கனவே

165 யில்லையில்லை யில்லை யெனவே பறையறைந்து
தொல்லைமறை யாவுந் துணிந்துரைக்கும்—........

190 ..................................................
..............................................—மேனி

191 கருமையா யூற்றை கலக்கிநீ ருண்ணா
வெருமையையு மொத்தாய்நீ யென்றான்—உருவமொன்றும்

192 இல்லான் குணமொன்று மில்லான் குறியொன்று
மில்லான் இறையென்றே யெம்மனோர்—சொல்லிப்பின்

193 மாறுபடக் கோலம் வகுப்பரேன் மற்றதற்கு
வேறு குறிப்பிருக்க வேண்டாமோ—கூறுமவர்

194 சொல்லும் பொருளுணராத் தோடத்தால் மூர்த்திகளைக்
கல்லொடுசெம் பென்றி கழக் கற்றனையால்—........

406 ..................................................
..............................................—சரிதமெலாம்

407 வேதமா மென்று வெகுபேர் மதிப்பதால்
ஆதி மதமாமென் றறைந்தாய்நீ—பேதாய்

408 உலகின் மலிந்தவெலாம் உத்தமமோ செம்பொன்
நிலைகுறைந்துந் தாழ்வுபட்டோ நிற்கும்—அலைகடல்தான்

409 பொன்னம் பெரிதே யெனினுஞ்சிற் றூறலென
நன்னீர் மனிதர்க்கு நல்குமோ—இன்னும்

410 விரிவாய்ப் பலருலகின் மேவருண் ஞானி
யரிய னொருவனென வான்றோர்—தெரிய

411 வுரைத்தா ரதனா லுயர்வு குறைந்து
தரைப்பா லிழிவுளதோ சாற்றாய்—உரைப்பானேன்

412 நன்றெல்லாந் தீதாயுந் தீதெல்லா நன்றாயுங்
கன்றிவரத் தக்க கலிகாலம்—என்றென்றும்

413 பொல்லாதார் நல்லாராய்ப் பொங்கி யருமறைநூல்
கல்லாதார் வாழுங் கலிகாலம்—இல்லாளை



414 அன்னியர்தோள் சேர்த்தி யரும்பொருளை யீட்டியிழி
கன்னியர்தோள் சேருங் கலிகாலம்—மன்னரென்போர்

415 பாதகங்கள் செய்து பணம்பறிக்கு மாந்தரொத்துக்
காதகங்கள் செய்யுங் கலிகாலம்—தீததனால்

416 எள்ளுண்போர் தள்ளுண்போர் எசுண்போர் மாசுண்போர்
கள்ளுண்போர்க் கான கலிகாலம்—உள்ளுள்ளே

417 எக்குப் பெருத்துமத மேற்படுத்தித் தூஷணைத்தீ
கக்குங் கொடிய கலிகாலம்—மிக்குலகில்

418 ஈட்டுந் தவமாதி யின்மையாய்த் தெய்வநிலை
காட்டா தொழிக்குங் கலிகாலம்—........

437 ..................................................
..............................................—அந்தச்

438 சமையம் பெருகிடினுந் தாழ்காலம் வந்தால்
இமையிலழி வெய்தி யிறுதல்—அமையுமந்தத்

439 துப்பற்ற மார்க்கத்திற் றோயாதே மாயாதே
கைப்புற்று நெஞ்சிற் கவலாதே—யெய்ப்புற்றுய்

440 பேய்த்தேரை நீரென்று பின்றொடர்ந்து நீர்நசையாற்
போய்த்தேடல் போலப் புலம்பாதே—வாய்த்தவெளிப்

441 பட்டப் பகலிற்கண் பார்வையிலாக் கூகையைப்போற்
றட்டித் தடவித் தவியாதே—கிட்டி

442 யவசமயத் துள்ளாழ்ந் தலையாதே யுன்றன்
சுவசமயந் தேரென்று சொன்னான்—சிவசமயத்

443 துண்மையெலா நெஞ்சத் துறத்தினான் வேற்றுமதத்
திண்மையெலா நில்லாமற் செய்திட்டான்—அண்மைசெறி

444 பத்தி நெறியும் பழவடியார் தாள்பணியும்
புத்திநெறி யும்மெனக்குப் போதித்தான்—சித்திநெறி

445 காட்டினா னென்கட் கலந்துநின்ற தீக்குழுவை
யோட்டினான் வேறா ருருச்செய்தான்—வேட்டுவனோர்

446 மென்புழுவைத் தன்படிவ மெய்துவித்த வண்ணமெனைத்
தன்புதிய கோலஞ் சமைப்பித்தான்—முன்பு

447 பதைப்பற் றிறுமாந்து பாறையொத்த நெஞ்சைப்
பதைப்புற் றுருகப் பணித்தான்—புதைத்தவன்பால்

448 எங்குமிருப்பா னிறையெனினு மூர்த்தியிடைத்
தங்கும் விசேடமெனச் சார்வித்தான்—அங்கெனக்குக்

449 கண்ணிணைநீர் வார்க்கவுடல் கம்பிக்க மெய்ப்புளக
நண்ணவொரு சால நவிற்றினான்—........

514 ..................................................
..............................................—மெய்யை

515 விரிந்த பொருளால் விளம்பியவென்னையன்
பிரிந்தருளி னானென்னைப் பின்னர்—.........
................. ..............—பின்னரிவ்வூர்

574 நேயத்தா னீங்காம னீங்கிக் குணதிசைக்கட்
கோயம் பதியிற் குடிபுகுந்தேன் — ஓயாமே

575 யன்றுதொட்டு மார்கழியி லாதிரையு மீனமதி
யொன்றுந் திருநாளா முத்திரத்து—நன்றுசெறி

576 நாட்களினும் சென்றுசென்று நாயகனார் நாயகியார்
தாட்களிலே நாயேன் சரண்புகுந்தேன் — வேட்கையினாற்

577 சின்னாளி னாயைச் சிவிகைமிசை யேற்றவெனை
யென்னா லறியா வியல்பளித்தான் — ஒன்னார்போன்

578 மாறா யெதிர்த்தபல மாற்றலரை மாற்றிமகப்
பேறாதி பேறும் பெறுவித்தான்—வீறாக

579 வெண்ணிய வெண்ணங்க ளெல்லா மெனக்களித்தான்
மண்ணிலுள்ளோ ரென்னை மதிக்கவே—பண்ணுந்

580 திருப்பணியுங் கொண்டருளிச் செந்தமிழ்ப்பாப் பாடும்
விருப்பருளி யாண்டு கொண்டான் மேனாள் ........

• • • • •

[ இஃது இன்றைக்கு 50 ஆண்டுகளின் முன் அந்நாளில் பரவி வந்த கிறித்துவ மதச் சேர்க்கையிலிருந்து சைவ நன்மக்களைத் தப்புவித்தற் பொருட்டு சைவாபிமானமும் தமிழ் வல்லமையும் கொண்டு விளங்கிய இவ்வாசிரியரால் எழுதி அச்சிடப்பெற்றது. அதுபோலவே இந்நாளில் சுயமரியாதை என்றபேரால் அகங்காரமும் அறியாமையும் மேலிட்டுக் கொண்டு சைவ நன்மக்களை வெருட்டி வருகின்றமையால் இதனுட்கண்ட பொருள்கள் இந்நாளும் பயன் பெறுவனவாகும். அதுவேயன்றிச் சைவத்திறத்தைப் பெரிதும் பரப்புவனவாம். ஆதலின் இவை திரட்டி வெளியிடப்பெற்றன. இவ்வாசிரியர் விளம்பி ௵ புரட்டாசி ௴ 5 ௳ பிறந்தவர். ஐம்பத் தொன்றாம் வயதிற் கர ௵ சித்திரைமாதத்தில் சிவனடி சேர்ந்தனர். நீதிமன்ற வழக்கறிஞரா யிருந்ததன்றி தேவஸ்தானக் கமிட்டிக் காரியதரிசியாக நீண்ட காலம் இருந்து பேரூரில் பிரபல திருப் பணிகள் இயற்றியுள்ளார். கொங்குநாட்டுப் பாடல்பெற்ற தலங் களுள் அவிநாசி கருவூர் — பவானி — திருமுருகன் பூண்டி — இவைகளின் தல புராணங்களைப் பரிசோதித்து அச்சியற்றினர். பேரூர்ப் புராண முதற்பதிப்பு இவரது நன்முயற்சியாலேயே வெளி யாயிற்று. கொடுமுடிப் புராணத்துச் சில பாகம் இவர் இயற்றியது. இவர் தொண்டை மண்டலம் கொண்டைகட்டி வேளாள மரபினர்.]



## 2—பேரூர் மும்மணிக்கோவை

[இதுவும் ஷை ஆசிரியர் இயற்றியது. அச்சிட்டது விஷு வருடம்]

உரியபல வானவர்தம் மூரும்வேற் றூரும்
அரியயனார் தம்மூரு மர்தோ—பெரியதென
ஊரூரை யான்வேண்டே னென்னார் புரம்பொடித்த
பேரூரை யானடைந்த பின்

---

## 3—பேரூர் பச்சைநாயகியார் ஊசல்

[இதுவும் ஷை ஆசிரியர் இயற்றியது. இரண்டாம் பதிப்பு. நந்தன வருடம் அச்சானது.]

திருமருவு வேதாக மங்கள்வாழத் திருநீறு மைந்தெழுத்துஞ் சிறந்துவாழக்
குருமருவு மெய்யடியார் கூட்டம் வாழக் கோதிலாத் தமிழ்வேதங்
குலவி வாழ
உருமருவு மக்கமணி யுயர்ந்துவாழ வுலகனைத்துஞ் சிவசமயமோங்கிவாழத்
தெருமருவு பேரைநகர்ப் பட்டி நாதர் தேவிபச்சை நாயகியாராடீ ரூசல்.

---

## 4—திருப்பேரூர் மரகதவல்லியம்மன் மாலை

[இதுவும் ஷை ஆசிரியரால் இயற்றப் பெற்றது. பேரூர்ப் புராணம் ஒவ்வொரு படலக் கருத்துமுறையே கொண்ட ஒவ்வொரு பாட்டாக 31 கட்டளைக் கலித்துறைகளால் ஆயது. மூலமும் உரையுமாக ஆங்கீரச வருடம் அச்சானது.

### குசத்துவசன் வரம்பெறு படலம்

சகப்பேறு பெற்ற மதிகுல மன்னன் குசத்துவசன்
[illegible]கப்பே றருள்புத் திரப்பேறு வேண்டித் தொழுதிடலும்
இகப்பே றெலாந்தரும் மாமரு தாசலத் தெல்லையிலே
மகப்பேறும் நல்கினை யன்றோ மரகத வல்லியின்னே. 26

### விசேட பூசைப் படலம்

பழுத்த மனத்தொடு பங்குனி யுத்திர மாதியவாம்
விழுத்தகு நாட்களில் மாபூசை செய்து விழாவெடுத்தே
அழுத்தம தாகநின் சீர்த்திகள் பற்பல வாய்ந்துணர்ந்து
வழுத்து மடியவர் வாழ்வார் மரகத வல்லியின்னே. 31

## 5—பேரூர் பச்சைநாயகியம்மை

### ஆசிரிய விருத்தம்

[இதுவும் ஷை ஆசிரியர் இயற்றியது. 1878-ம் வருடத்தில் அச்சானது.]

கூடவோ நின்னடியார் குழுவுண்டு அவர்வயிற் கூடியன் பளவளாவிக்
கொண்டுநன் காராய்ச்சி செய்யவோ நூலுண்டு கோதெலாந் தீரநித்தம்
ஆடவோ காஞ்சிநன் னதியுண்டு நின்னடி யருச்சிக்க வோபச்சிலை
அங்கங்கு முண்டுநா டொறுமுச் சரிக்கவோ வைந்தெழுத் துண்டு
[தலையிற்
சூடவோ நின்னடித் தாமரைக ளுண்டுமெய் தோமற வணிந்துகொளவோ
சுண்ணவெண் ணீற்றொடுகண் மணியுண்டு நின்கோயில் சூழவோ
[கால்களுண்டு
பாடவோ நாவுண்டு கவலையுற் றடியனேன் பாழுக் கிறைத்தல் நன்றோ
பச்சிளஞ் சோலைநிக ழுச்சிதப் பேரைவளர் பச்சைமர கதவல்லியே. 2

---

## 6—ஸ்ரீ பேரூர் பச்சைநாயகியம்மை பிள்ளைத்தமிழ்

[கோயமுத்தூருக்கடுத்த ஓராட்டுக்குப்பை செட்டிபாளையத்திலிருந்த வித்துவசிகாமணி முத்துநைனுத்தை முதலியார் இயற்றியது. தொண்டைமண்டலம் கொண்டைகட்டி வேளாள மரபினராகிய இவர் சுமார் 120 ஆண்டுகளின் முன் வாழ்ந்தவர். இப்புத்தகம் சித்திரபானு வருடத்தில் அச்சானது.]

### வருகைப் பருவம்

பொன்னே வருக வேதாந்தப் பொருளே வருக பரசுதரன்
புகழே வருக வுயர்ந்தகுணப் பொருப்பே வருக புகுந்தகலா
மின்னே வருக வருணிறைந்த வெற்பே வருக நல்லறத்தின்
விளைவே வருக மேலவர்செய் வினையே வருக மெய்ப்பொருளின்
றன்னே தனக்கா யுலகாளுந் தாயே வருக சிவஞானத்
தவமே வருக திரிபுரசுந் தரியே வருக சகலபத
மன்னே வருக வெற்பரசன் மகளே வருக வருகவே
வளர்தென் பேரை மாகதப்பெண் வாழ்வே வருக வருகவே. 5

### பொன்னூசற் பருவம்

கொந்துலவு குழலிலணி கனகமணி யணிகளுந் கோலமலர்
[புனைதொடையலுங்
குலவுதிரு நுதலிலணி சுட்டியுங் கருணைகுடி கொண்டவிழி
[யஞ்சனமதுங்
கந்தர மதிற்புனைசெய் யொளிதழுவு மணிகளுங் கனிவாயு மினியநகையுங்
கருணைபூடணமுகைகள் கொண்டமணி யாரமுங் கையணிக
[ளானவவையுஞ்



சுந்தர விடைகொளி தழைந்தபட் டுடையினொடு சுடர்புனையு மேகலையதுஞ்
சொற்கமல மலரைநிகர் பதபரி புரங்களுந் தோன்றநின்
[றருளியடியார்
புந்திவிழை வருள்பெரிய பேரைநக ருக்கரசி பொன்னூச லாடியருளே
புனிதருட னனவரத நடனமா கதவனிதை பொன்னூச
[லாடியருளே. 10

---

## 7—பேரூர்ப்பட்டிப் புராணம்

## என்கிற பிறவா நெறிப் புராணம்.

[அச்சியற்றப் பெறவில்லை. ஆசிரியர் பேரும் விவரங்களும் தெரியவில்லை. இப்பாடல்கள் ஏட்டுப் பிரதியில் இருந்து எடுத்து எழுதப்பெற்றன. வனம் — நதி — தீர்த்தம் — மலை — நகரம் — விமானம் என்னும் ஆறுக்கும் ஆறு சருக்கங்களாக 342 திருவிருத்தங்களால் சற்றேறக்குறைய 320-ஆண்டுகளுக்குமுன் சகம் 1530ம் ஆண்டிலே இயற்றப்பெற்றுள்ளது. ஒரு பிரதி ஏடு மட்டும் உள்ளதால் இன்னும் பிரதிகள் வைத்திருக்கும் அன்பர்கள் பிரதிகளை உதவினர்களாகில் அச்சிட்டு வெளியிட உபகாரமாயிருக்கும்.]

### காப்பு

நலங்கொள் காஞ்சி நதிப்பிற வாநெறித்
தலங்கு லாவிய தண்டமிழ்க் கெண்டிசைக்
குலங்க டேவர் குழாம்பணி கோபுரத்
திலங்கு மானை முகன்கழ லேத்துவாம்

### துதிகள்

பரிதியங் கடவுள் சூழும் பஃறலைப் பாந்தளுச்சி
விரிதிரைப் புவன மூன்றும் விரைமல ரயனு மாலுஞ்
சுருதியு மறியா வின்பச் சொரூபஞா னந்த நேயத்
திருநடம் புரியு மேலைச் சிதம்பரம் போற்றி போற்றி. 1

### வேறு

கோமுனிக்குந் தொழுமுனிக்குங் குருமுனிக்குங் குவலயஞ்செய்
மாமுனிக்குந் தில்லையில்வாழ் மறைபவர்மூ வாயிரர்க்குந்
தாமுனிக்கும் படிவேதத் தமிழ்பாடத் தடுத்தாண்ட
பாமுனிக்குந் திருநடனம் பயிலரசம் பலம்போற்றி. 2

### வேறு

குங்குமவல் லியைப்புயத்துக் கோமளவல் லியைக்கரப்பொற் குவளை
யாளைப்
பங்கயவல் லியைச்சரண பரிமளவல் லியையளகம் படைத்தாளை
நங்கருவல் லியைக்களையும் நாற்கலைவல் லியையுலகம் நானு மீன்ற
மங்கலவல் லியைப்பேரூர் மரகதவல் லியைத்தினமும் வணங்குவாமே. 7

கார்போலு மேனியனுங் கஞ்சமலர் புங்கவனும்
பார்கீண்டும் விண்பறந்தும் பன்னெடுநாள்—ஆர்வமுடன்
தேடி வருந்தித் திரிந்துந் தெரியாமல்
நீடு சுடர்வடிவாய் நின்றருள்வோன்—பீடுடைய
தக்கன் சிரத்தைத் தகர்த்துத் தகர்ச்சிரத்தை
மிக்கத் திருத்தும் விறலாளன்—இக்குதனுக்
காமாரி சூலதரன் காரிலகு கந்தரத்தன்
தீமைப் புரத்தைச் சிரித்தெரித்த—கோமான்........
பேதை மரகதமாம் பெண்ணைத்தன் மெய்யிலொரு
பாதியிலே வைத்துவந்த பட்டீசன்—தீதணுகாப்
பேரை நகர்வாழும் பெருமான்றன் மெய்யழகோர்
காரணமா யுன்னிடத்தே காணுதலும்—சீரிலகு
சுந்தரங்க ளெல்லாந் தொகுப்பி லொருவடிவாய்ச்
சுந்தரரைக் காட்டுந் தொழிலாடி !—யந்தரத்தில்
அம்புவியி னுள்ளபொரு ளத்தனையு நீயாடிக்
கம்பிதஞ்செய் வித்திடுவாய் கஞ்சனமே !—...........
இரசமுடன் சேர்ந்திருப்ப தென்றறியா ருன்னை
நிரசமெனச் சொல்லுமது நேரோ—..........
சுத்த தருப்பணமே! தூயவொளி வட்டமே!
அத்தமே! கஞ்சனமே! யாடியே!—தித்துபடி
மக்கலமே! யாசை வழுத்து முகுரமே!
மிக்க வருத்தமெலாம் விள்ளுதற்குத்—தக்கவனே
நீயன்றி வேறுலகில் நேசத்தா ரில்லையெங்கள்
நாயகன்முன் நீசென்று நண்ணுவையேல்—ஆயிழையாள்
பாலையரன் பால்காட்டிப் பானுவிழித் தன்னைமதி
போலவே காட்டியதாற் போதியில்வாழ்—மேலவன்றான்
அன்றுசெயுஞ் சித்துவிளை யாடலைப்போ லேநீயும்
இன்றுசெய்தா யென்றுமிக வின்புறுவான்—சென்றதினல்
வெல்வாய் மருமாலை மேலவன்றான் றந்திடவே
சொல்வாய்கண் ணடியே தூது.

---

## 11 — திருப்பேரூர் விளக்கு விடுதூது

[மேற் பிரபந்தத்திற் கெழுதிய குறிப்புப் பார்க்க. இவ்வேட்டுப் பிரதி முற்றும் கிடைக்கவில்லை.]

உலகமெனு மாமடந்தை யொண்ணுதலிற் றீட்டுந்
திலகமெனும் பேரூர்வாழ் தேவன்—அலகையுடன்
ஆடும் பரம னரவுமதி சூகரத்தின்
கோடு கடுக்கைநதி கூவிளந்தார்—சூடுங்



கறைமிடற்றன் முப்புரத்தைக் காய்ந்தவன்மா தேவன்
மறலியைச்செற் றோனெழிற்கா மாரி—யிறைவன்
மலரயன்மால் காணு வடிவ னருணுதன்
மலையையொரு வில்லாய் வளைத்தோன்—கொலைமழுவு
மானுந் தமருகமும் வான்சிரமும் மூவிலைவேல்
தானுமெடுத் தேந்துகரன் றாழ்சடையன்—தேனுதரு
பாலின் விருப்புடையன் பச்சையுமை தன்னையொரு
பாலின் விருப்புடைய பட்டீசன்—.........

---

## 12 — திருப்பேரூர் மரகதமஞ்சரி

[இது சற்றேறக்குறைய 90 ஆண்டுகளின்முன் கோவைப் பதியை அடுத்த தொண்டாமுத்தூரில் வாழ்ந்த சிதம்பர தாண்டவ ராய முதலியார் என்ற புலவர் இயற்றியது. இவர் தொண்டை மண்டல கொண்டைகட்டி வேளாள மரபினர். இது 32 பாடல்கள் கொண்டது. அச்சா யுள்ளது.]

தாயொடிவை யென்குறை யெனக்குவேண் டுவதிஃது
 தாவெனச் சீராடவுந்
தனையர்க்கு முறைமையைத் தனையர்நினை வின்படித்
 தயாவைத்தல் தாயர் முறைமை
நாயொடுமொ ரொப்பிலே னெனினுநீ தாய்தனையன்
 நானென்று நின்றுசொன்ன
நாவினுக் கோருறுதி யுலகமா தாவெனும்
 ஞாயமொன் றுளதாகையால்
வாயொடு மனத்தொடுமென் னெண்ணத்தி னொடுநின்று
 வாழிநீ வாழியம்மா
மதிவைத்த சடையொடுங் கபாலசூ லத்தினொடு
 மன்னுகங் காளவுருவப்
பேயோடு நடிக்கும் பிரானோடு பங்கில்வளர்
 பேதையங் கனகவல்லி
பேரிமய வரைவல்லி சீதபரி மளவல்லி
 பேரைமர கதவல்லியே.

தன்னெஞ் சறிந்துபொய் சொல்லும் புரட்டரைத்
 தன்னெஞ்ச மேசுடாதோ
சத்திய மசத்திய மிரண்டுமிக் கலியுகந் தன்னிற் பலித்திடாதோ
கன்னெஞ்ச மோவலது பணமமதை யோகல்வி கற்றகவி நாவலோரைக்
கசட்டா லடாப்பழி யுரைத்தபேர் வீடுசுடு காடாக நாட்செல்லுமோ

அன்னஞ் செறிந்தமல ரயனெழுத் தன்கருணை யழியெனி லழிந்திடாதோ
யமனுக்கோ ரிச்சையோ நீயிது விசாரியா தார்விசா ரிப்பரம்மா
பின்னஞ்சு ராகுமதி முன்னஞ்சு திருமுகப் பேதையங் கனகவல்லி
பேரிமைய வரைவல்லி சீதபரி மளவல்லி பேரைமா கதவல்லியே,

---

## 13 — திருப்பேரூர்ப் பட்டீசுவரக் கோவை

[இதனை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது அச்சியற்றப் பெறவில்லை. கிடைத்த ஒரு ஏட்டுப் பிரதியும் மிகக்கிலமாயும் சிதைந்தும் பாட்டுக்கள் செவ்வனே தெரியாமலும் இருக்கின்றது.]

(தெய்வத்திறம் பேசற்குச் செய்யுள்)

கூடிடுங் காந்தமும் வல்லிரும் புந்தனைக் கூட்டிவைக்க
நாடிடுந் தெய்வம் நமதுபட் டீசர்நன் னாட்டுவெற்பின்
வாடிடு மின்னுயிர் மின்னே வருந்தல் வருவிதிதான்
தேடிடு நம்வினை கூட்டவுங் காதல் சிறப்புளதே, 22

(பாங்கிக்குத் தலைமகன் மடலேற்றினை யுலகின்மேல்
வைத்துணர்த்தற்குச் செய்யுள்)

அரும்பனை வாழ்ந்திடும் பேரைப்பட் டீச ரணிவரையின்
சுரும்பனை யார்தருங் காமத்திற் காளையர் சூழ்ந்தவரை
யிரும்பனை யங்கொஞ் சிரங்கா மதனம்பி னெய்வனந்தக்
கரும்பனை வெல்லக் கரும்பனை யின்மடல் காட்டுவரே. 118

(தலைவன் றன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்தற்குச் செய்யுள்)

துன்றுங் குழன்மட வாய்சீ றடிதுன்பந் தோற்றநென்னல்
இன்றும் நடந்த வருத்தமுன் னேயெழிற் பேரையினில்
மன்றுங்கண் வெள்ளி மலையரு கேநிற்கு மாகனகக்
குன்றிங்கு தோன்றுதல் பட்டீசர் கோயிற் கோபுரமே. 360

---

## 14 — பேரூர் மாலை

[ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஏட்டுப்பிரதி மிகச் சிதைந்துள்ளது.]

அரிவையர்க ளேமனமும் ஆடவர்க ணன்கரமும்
பெருமைசெறி கற்பகமாம் பேரூர் — உருவு
கறுத்த விடங்கத்தான் காணுமுயி ரெல்லாம்
ஒறுத்த விடங்களத்தான் ஊர். 18



வாரேறு கொங்கையரு மாதவத்தோர் பூசையும்
பேரோதி யேமுடிப்பர் பேரூரே — நாரி
யிடமாக மத்த னெழிறருவே தத்தி
னிடமாக மத்த னிருப்பு. 27

---

## 15 — திருப்பேரூர்ப் பச்சைநாயகி யம்மன் பந்தடி

[கோயமுத்தூருக்கடுத்த ஓராட்டுக் குப்பை செட்டிபாளையம் மகாவித்துவானாகிய ஸ்ரீ வாசுதேவ முதலியார் இயற்றியது. 64 ஆண்டுகளுக்கு முன்னர் பிரபவ-ஸு பங்குனி-மீ த்தில் இது கோயமுத்தூர் வித்துவான் ஸ்ரீ கந்தசாமி முதலியார் அவர்களாற் பரிசோதிக்கப்பெற்று அச்சாயுள்ளது. ஒன்று முதல் பத்துப் பந்துகள் வரை அம்மையார் விளையாடியதாக உட்கொண்டு கலிப்பாவும் சந்த ஆசிரியப்பாவுமாக 20 பாட்டுகளடங்கியது. இவ்வாசுதேவ முதலியார் சற்றேறக்குறைய 120 ஆண்டுகளின் முன்னர் வாழ்ந்தனர் எனவும், அவர் தொண்டைமண்டலங் கொண்டை கட்டி வேளாளர் மரபினர் எனவும், தொண்டைமண்டலத்துக் குன்றத்தூரைச் சார்ந்தவர் எனவும் தெரிகிறது. இந்தப் பிரபந்தப் பதிப்பிற்குச் சிறப்புப்பாயிரமாக ஷை செட்டிபாளையம் குட்டியானை முதலியார் இயற்றிய பாட்டுக் குறிக்கத்தக்கது.

“ திருமருவு கொங்குநன் னாட்டினிற் காஞ்சிநதி தீரத்தின் மாலயன்முதல்
தேவர்தொழ அருள்செயும் பேரையம்
பதியில்வாழ் சிவபரஞ் சுடரிடப்பான்
மருவுமர கதவல்லி யிருபதாம் புயமலரை வாழ்த்துபந் தடியெனும்பா
வளர்கங்கை குலதிலகன் குன்றைநக ராதிபன் வாசுதே வக்கவிவலன்
பருகுசுவை மிகுதமிழி னூற்புனைந் திடவதைப் பண்ணைசூழ் மணவூரில்வாழ்
பாவலன் கந்தசா மிக்குரிசில் வழுவறப் பார்த்தளித் திடவதனையே
கருணைமிகு மாவைநகர் வித்துளார் கோத்திரன் கலைபல வுணர்ந்தசீலன்
கற்றவர்க் கருள்கொண்டை யப்பவே ளச்சிற் கவின்பெற
வியற்றினனே ”

[இவர் பேரூரைப்பற்றி இயற்றிய ஏனைப்பிரபந்தங்களின் பாடல்கள் சில மேலே காட்டினோம்.]

### காப்பு

தேமேவும் பேரைநகர்ச் செல்விபச்சை நாயகிமேற்
பாமேவும் பந்தடியாம் பாடுதற்கு - நாமேவும்
பைந்தமிழைத் தந்தருளும் பட்டிக் கணபதிதன்
கந்தமலர்ச் செஞ்சரணங் காப்பு.

## நூல்

செயச வுந்தர - விடையினன் - மதி
  யயமி ருந்தொளிர் - சடையினன்
  தேவர் சிந்தைசெய் - சோதியான் - சிவ
  காம சுந்தரி - ...பாதியான்
வயமு றும்பர - சார்கையான் - செழுங்
  கயலு றும்பிரை - யாகையான்
  வரங்கொள் பேரை - நகரினன் - உயர்
  திரங்கொள் சீர்கள் - தழைக்கவே -
பயிலு மோதிம - நடையினள் - மயில்
  இயலுஞ் சாயன்மின் - இடையினள்
  பங்கே ருகப்பொற் - கழலினள் - மிகுங்
  கொங்கே யிருக்கும் - குழலினள்
கயல ணிவளை - சிலம்பவே - குழல்
  வயில றுபதம் - புலம்பவே
  கதிக்கு மரக - தாம்பிகை - யன்பர்
  துதிக்க வொருபந் தாடினள். (க)

### கலிப்பா

சீர்மேவு காஞ்சிநதி தீரமுள்ள பேரைவளர்
தார்மேவு பட்டிலிங்க சங்கரனார் பங்கிலுறை
கார்மேவு பைங்கூந்தற் கன்னிபச்சை நாயகியாள்
ஏர்மேவு பெண்களுட னிசைந்தொருபந் தாடினளே. (க)

[இந்த ஆசிரியப் பாட்டுக்களின் சந்தம் பந்தடிக்கும் விளையாட்டிற்கு ஏற்றதாக எதுகைத் தொடையாக அமைந்து, ஒவ்வொரு பாட்டிலும் முன்னிரண்டடிகள் பெருமானது வருணனையும் பின் இரண்டடிகள் அம்பிகை வருணனையுமாகவும் உள்ளது கவனிக்கத் தக்கது.]

மாறனுக்கழ - லூட்டினன் - தமிழ்க்
  கீரனுக் கருள் - காட்டினன்
  மருத்த நேமிக் - குழலினன் - ஒருழ
  வெடுத்த ஞானக் - கழலினன்
மேருவைச் சிலை - யாக்கினன் - வடி
  யாரகத்துயர் - போக்கினன்
  விளங்கும் பேரை - நகரினன் - திரு
  வளங்கொள் சீர்கள் தழைக்கவே



யாரணத்துறு - நிலையினள் - வளர்
  பூரணச்செழுங் - கலையினள்
  அணிகொள் ஞானச் - சிரத்தினள் - அன்பர்
  பணியும் மேன்மை - வரத்தினள்
வாரணைத்தருள் முலைமின் மேன்மணி
  யார முத்துக - ளலையவே
  வாலசுந்தரி - மரகதாம்பிகை
  மகிழ்வோ டாறுபந் தாடினள். (க)

### கலிப்பா

வலிமுகத்துச் சோழனுக்கு மனிதர் முகங்கொடுத்த
தலைவர்பட்டி நாதரிடத் தையல்பச்சை நாயகியாள்
பலகலனுஞ் சோதிமின்னப் பன்னூ லிடையொசிய
வலர்மகளுங் கொண்டாட வாரும்பந் தாடினளே, (உ)

---

## *16 — திருப்பேரூர் உலா*

[இது சமீப காலத்தில் கோவன் புதூருக்கடுத்த வட வழியில் உபசுப்பிரமணிய மரபினரும் மருதாசலக் கடவுள் பிள்ளைத் தமிழ் முதலிய சில நூற்களின் ஆசிரியருமாயிருந்த மு. அருணசலக் கவிராயரால் ஏறக்குறைய 9 ஆண்டுகளின் முன் இயற்றப் பெற்றது. 915 கண்ணிகள் கொண்ட கலிவெண்பாவில் இயன்றது. 1921-வது ஆண்டில் அச்சானது. இவ்வாசிரியர் தமிழ் இலக்கியத்திலும் சோதிடத்திலும் வல்லவராயிருந்தனர். யவனகாவியம் என்ற அரிய சோதிட நூலைத் தமிழிலியற்றினர். இவர் 2 ஆண்டுகளின் முன் காலஞ் சென்றனர்.]

வீழி மிழலையான் மெய்யருளைப் பாடக்
காழி யவதாரக் கண்ணியனு — மாழிவாய்க்
கன் [1]மதலை யூரக் கடந்தானும் வன்மீனுண்
நன்மதலை மீள நவின்றானும் — தன்மைபெறக்
[2]கோமாயுவை மதுரைக் கோமான் வியப்பாக
மாமாவெனக் காணும் வாசகனும் — தாமேறும்
புத்திநர வாகனத்திற் போதரவு மாதவரு
மெத்திசையுஞ் சூழவிரைந் தேகினர் — சத்தியசந்
தான குரவர் சமய குரவருமுண்
டான குரவ ரணியணியாய்த் — தானுலவத்

---

1 மரக்கலம். 2 நரி.

தென்னவர் பெருமானுஞ் செம்பியனுஞ் சேரலனு
மன்னர் திரளும் வருதினியுந்—தன்னவே
டம்மார மொட்டகையிற் றூக்க முழுப்பேரி
கைம்மா முதுகிற் கரங்கவே—யைமா
வருண னிடக்கை யகற்றுவா னேகி
விருதுடா லண்ட மிடையவே—சுருதிச்
சிகரத் துவசன் திருக்கணுதற் காற்று
மகரத் துவசன் வரவுமே—நுகர்தற்கே
கற்போ னகமாஞன் காதலன்றன் கைச்சுரிகை
நிற்பாருக் கங்கே நெருப்பகற்றப்—பொற்பாரு
மின்னலென வேதிரிப்ப மெய்யடிமை காட்டத்
துன்னி யுவகையொடு தோத்திரிப்ப—முன்னவர்மேற்
சொந்தமாய்க் கிள்ளைவிடு தூதுரைத்த நாவலர்க்குச்
சந்ததியாய் வந்தசிவத் தன்மையான்—செந்தமிழின்
மிக்கபுகழ்ச் சுப்பிரமண் யக்குரிசி லுட்கருதி
நெக்குருகி முற்கனிவின் நிற்கவே—மிக்கமநுப்
பத்தியோகம் ஞானம் பாரிலிவை மூன்றும்
நித்தியமாய் நிற்கு நிலைமையாஞ்—சத்தியத்திற்
கூறவரும் வேதங் குறித்தவழி ஞானந்
தேறவருண் முத்தீக்கை செய்தோராய்.................

---

## 17—திருப்பேரூர் மரகத மாலை.

[இத 60 ஆண்டுகளின் முன்னர் எழுதப்பெற்றதாகத் தெரிகிற "பலகதம் பத்து ஏடு" என்ற பெயர் பூண்ட ஒரு ஏட்டில் அடங்கிய அநேக பிரபந்தங்களில் ஒன்றாகக் கண்டது. மேலும் கீழே குறிக்கப்பெறும் "பச்சை நாயகியம்மன் பேரில் வருகை", "பச்சை நாயகி பேரில் திருவூஞ்சல்", "பச்சை நாயகியம்மை பேரில் தென் பாங்கு" என்ற பிரபந்தங்களும் அவ்வாறே அவ்வேட்டிற் காணப் பெற்றன. இவைகளின் ஆக்கியோர் பெயர் முதலிய எவ்விவரமும் தெரியக்கூடவில்லை. ஏறக்குறைய நூறு ஆண்டுகளின்முன் வசித்த புலவர் அல்லது புலவர்களால் இவை ஆக்கப்பெற்றிருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது. இவை யாவும் பாட்டுகள் செம்பாக மாகவும் எளிதிற் பொருள் விளங்குபவையாகவும் உள்ளன.]

திருவி ருக்குஞ் செழுங்கொடித் தாமரைச் செங்கண் மாலும் பிரமனுந்
[தேடிய
கருவி ருக்குங் கனைகழற் சேவடி காட்டி என்னையுங் கைக்கொள
[வேண்டுமே



குருவி ருக்குங் குறியறி வித்திடாய் கொன்றை தாதகி தும்பை குராமலர்
மருவி ருக்குஞ் சடாடவிக் குன்றிலே வளரும் பேரை மரகத வல்லியே. 1

[இது 50 பாட்டுகள் கொண்டது. 51-வது பாட்டில் வாழியுடன் நிறைவேறி யுள்ளது. இதுவும் பின்வரும் "ஊஞ்சலு"ம் மேலே வித்துவான் கந்தசாமி முதலியார் பாடியவையான (4) "மரகதவல்லியம்மன் மாலை" (3) "பச்சை நாயகியார் ஊசல்" என்பவைகளி னின்றும் வேறாகவுள்ளன.]

---

## 18—பச்சை நாயகி யம்மன் பேரில் வருகை.

[இது பத்துப்பாடல்கள் கொண்டது. பிள்ளைத்தமிழில் ஒரு பருவமாகிய வருகைப் பருவத்தின் பாடல்கள் வேறு; இவை வேறு. இவை தனிப்பாடல்கள்.]

அருணவொளி பெறுகிரண சோதியொரு பாதிநின் றண்டமூ தண்ட
மேலும்
அப்பாலு முள்ளும் புறம்புமா யெங்கெங்கும் அருவுருவ மாகிநின்று
துரியவா தீதங் கடந்தபர மானந்த சுந்தரத் தொளியுமாகித்
துக்கசுக பேதமற் றுளநெக்கு நெக்குருகு தூயதண் ணளிப ழுத்த
தருணமோ னியரிதய கமலா சனத்திலகு தருணபரு வதவர்த்தினீ
தயவா றலைக்குள்நிறை பரிபூ ரணத்துதைய சந்திரவா கினிமோகினீ
பருமணிக் கிரணநூ புரசரணி தரணிதரு பைந்தொடியெ னம்மைவருக
பதுமமணி மண்டபச் செல்வியெம் பேரைவளர் பச்சை நாயகி
வருகவே. 1

## 19—பச்சை நாயகி பேரில் ஊஞ்சல்.

[இது 10 பாட்டுக் கொண்டது.]

சீர்கொண்ட நதியணிசெஞ் சடையு மாடத் திகழ்மகர குண்டலமுந் திங்க
[ளாடப்
போர்கொண்ட திரிசூல மழுமா னுடப் புகலரிய வெம்புலியின் போர்வை
[யாட
ஏர்கொண்ட பாதகிண் கிணியு மாட இயம்பரிய விதழிமலர் மாலை யாடக்
கார்கொண்ட கண்டர்பட்டி நாதர் பங்கிற் கருணைபச்சை நாயகியா ராடி
[ரூஞ்சல். 7

## 20—பச்சை நாயகி யம்மன் பேரில் தென்பாங்கு

[இதுவும் 10 பாடல்கள் கொண்டது.]

தேனே பசுங்கிளியே தெள்ளமிர்தே யுள்ளனமே
ஊனே யுயிரேயென் னுட்கலந்த நாயகமே
வானோ ரறியா மலரடிதந் தாளவந்த
மானே திருவேயென் மரகதப்பெண் மாமயிலே.

நாலவட்டம் ஊஞ்சல் நடுச்சிறந்த தேனேயான்
ஓலமிட்ட சத்தம் உனதுசெவி கேட்கிலையோ
ஆலமிட்ட கண்டத் தரசர்பட்டி நாதருக்கு
மாலையிட்ட மாதே வளர்பச்சை நாயகியே. 4
எட்டி லெழுத அடங்காதே யென் துயரம்
நாட்டி லெவருடனே நவிலுவது நாரணியே
பாட்டினிசை கேட்டருளும் பரமர்பட்டி லிங்கருடன்
மாட்டில்நீ ஏறி வரும்பச்சை நாயகியே. 6

---

## 21—மருதாசல மூர்த்தி சதகம்

[இது 100 பாடல்கள் கொண்டது. ஆக்கியோன் பெயர் முதலிய விவரங்கள் தெரியவில்லை. 63 ஆண்டுகளின் முன்னர் பிரபவ ஆண்டில் எழுதிய ஒரு ஏட்டுப்பிரதியிலிருந்து இது எடுத்து எழுதப் பெற்றுள்ளது. ஏறக்குறைய 100 ஆண்டுகளின் முன் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது. இதில் ஒவ்வொரு பாட்டும் "மாத னகர் மேவு நஞ்சப்பன்மன மகலாத மருதாசலக் குமரனே" என்ற மகுடத்துடன் முடிகின்றது. மாத நகர் என்பது கோவன் புத்தூருக்கு மேற்கில் எழு நாழிகையளவில் இப்போது மாதன்பட்டி என்று வழங்கும் ஒரு கிராமம் என்று தோன்றுகிறது. எனவே அவ்வூரில் மருதாசலக் குமரன் பேரில் பத்தி செய்யும் நஞ்சப்பன் என்ற பேருடைய ஒரு பிரபு இருந்தார் என்றும், அவரது வேண்டுகோளின்படி இச்சதகம் அவராற் பரிசில் பெற்ற ஒரு புலவரால் இயற்றப் பெற்ற தென்றும் ஊகிக்க இடமிருக்கிறது. இது அக்கால வழக்குப் போலும். அவிநாசி கருணாம்பிகை சதகம் இயற்றிய செட்டி பாளையம் மகா வித்துவான் வாசுதேவ முதலியார் "கங்காகுலன் சுப்பிரமணியன் மனமகலாத கருணாலயச் செல்வியே" என்ற மகுடத்துடன் இயற்றியதும் காண்க. இப்பிரபந்தத்தின் பாடல்கள் மிகச் செம்பாக மாகவும் சிறுவர்களும் எளிதின் உணரும்படி வெண்மையாகவும் அமைந்துள்ளன. மருதமலையானது பேரூரின் எல்லையாகிய ஐம்பெருமலைகளில் ஒன்றாய் இத்தல புராணத்திற் சேர்ந்து மான்மியம் பேசப் பெற்றிருத்தலால் இதன் மீதுள்ள பிரபந்தத்திரட்டும் அது போலவே உள்ள வெள்ளி மலையினைப்பற்றிய பாடல்களும் இதிற் சேர்க்கப் பெற்றன.



சகல மாகியசுய சனங்களுக் கதிகமாந் தனையீன் றெடுத்த தந்தை
தனையீன் றெடுத்ததந் தைக்கதிக மனதிற் சலியாம லேபெற்றதாய்
மகிழ்வுடன் பெற்றதாய் தனிலுமே யதிகமா மருவிலாத் தன்கைப்
[பொருள்
வரிசையுள தனதுகைப் பொருளினுக் கதிகமாம் வாலையிற்
[கற்றவித்தை
தொகையாக வேகற்ற வித்தையிலு மதிகமாம் துணையான தன்மதானம்
துணையான தன்மதா னத்தினுக் கதிகமாஞ் சொலுநின்
[பதத்தியானம்
மகிதலம் புகழ்கின்ற பெரியநா யகியுதவு மாலையம் புயவேலனே
மாதனகர் மேவுநஞ் சப்பன்மன மகலாத மருதா சலக் குமரனே. 3

---

## 22—மருதாசலபதி தாய்மகளேசல்.

[இது 12 பாடல்கள் கொண்டது. மருதாசல மூர்த்தியை நாயகனாகக் களவியற்றுறையில் கலந்த மகளை நோக்கி நற்றாய் வினவியது போலவும் மகள் விடை சொல்வது போலவும் அகப்பொருட்டுறையிலே வினாவிடையாக வைத்துப் பாடப்பெற்றது. பாட்டுகள் மிகச் சந்த வின்பமும் பொருளின்பமும் விரவியியன்றுள்ளன. இதுவும் 100 ஆண்டுகளின் முன்னர் இயற்றப் பெற்றது போலும். ஆக்கியோன் பெயர் முதலிய விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை.]

தாய் } காரலர்கூந் தற்சிகழி கைகலைத்து முடித்ததென்ன மகளே-நெடுங்
வினா } கரியொடரி திரிமருத கிரிமுருகர் மருவியணை தாரோ-அதுகேள்
மகள் } பாரதன மாதருடன் பாந்துதும்பி சுழன்றாடும் போது-சுரும்
விடை } பாருமலர்க் குழல்சரிந்து சோரவதை முடித்ததடி தாயே 1

தாய் } காவிவிழி மலர்முருக்கின் பூவின்மிகச் சிவந்ததென்ன மகளே-
வினா } கந்தரனுர் தந்ததிரு மைந்தாடற் கந்தரணைந் தாரோ- [விடக்
அதுகேள்
மகள் } சேவிலுறும் பட்டீசர் கோவிலினில் இராவின்விலை மாதர்-நடஞ்
விடை } செய்ததனைப் பார்த்திருந்த செய்கையினாற் சிவந்ததடி-தாயே 2

தாய் } எள்ளளவா கிலுமனதிற் கள்ளம்வையா மற்சொலுவாய்-தினமும்
வினா } எத்துடனே நீபடித்த வித்தையெல்லா மறிவனடி மக [உலகில்
ளே-அதுகேள்
[போ-தெனக்குக்
மகள் } கள்ளமெல்லாம் வெளியில்விட்டே உள்ளபடிஉனக்குரைத்தேனிப்
விடை } காதல்தந்த மருதமலை நாதன்மண வாளனடி-தாயே. 12

---

## 23—மருதாசலபதி உயிர் வருக்கமாலை

[இஃது கோயமுத்தூர் வித்வான் கந்தசாமி முதலியார் அவர்களால் இயற்றப்பெற்றது. உயிர் எழுத்துக்கள் ஒவ்வொன்றினை

யும் வரிசையாய் ஒவ்வோர் பாட்டின் முதலெழுத்தாக வரும்படி அமைத்து 12 பாடல்களால் இயன்றது. 1873-ம் ஆண்டில் அச்சாயுள்ளது.]

அகரமா முயிரே யெழுத்தெலா மான வாறுபோல் யாவுமா னவனே
சகரமா தியவாஞ் சடாக்கர மனுவுட் டமைத்தொளிர் சோதியே
தனக்கோர்
நிகரறு முதலே நெஞ்சிலெந் நாளு நினைக்குமா றருடால் வேண்டும்
மகரயாழ் முனிவன் றுதிசெயும் பெருமை மருதமா மலைமுரு கோனே. 1

ஔவிய மழுக்கா றுதிய மனத்தேன் அமலநற் குணஞ்சிறி தில்லேன்
கௌவிய பாசத் தவலனேன் எனினும் கைவிடல் நீதியோ கண்டாய்
பௌவநே ரசுரர் குடிமுடித் தமரர் பதிகுடி யேற்றிய முதல்வா
மௌவலங் கானில் வண்டுபாண் மிழற்று மருதமா மலைமுரு கோனே. 12

---

## 24 — வெள்ளிமலை யாண்டவர் தோத்திரம்

[இது கோவை வழக்கறிஞர் சைவத்திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் B.A.,F.M.U. இப்புராணப் பதிப்பாசிரியர்: 1930-ம் ஆண்டிற் பாடியது. இவர் இயற்றிய வேறு நூல்கள் - ஸ்ரீமாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை - (வசனம்) அவிநாசிக் கருணாம்பிகை பிள்ளைத்தமிழ் - அர்த்தநாரீசர் அல்லது மாதிருக்கும் பாதியன் (வசனம்) - கருவூர்த் தேவர் (ஆராய்ச்சியுரை நூல்) முதலியன. இவர் 1878-ம் ஆண்டிற் பிறந்தவர்.]

நீர்கொண்ட பிறைமௌலி நெடுங்கொண்டல் தலைமுடித்தே
ஏர்கொண்ட பணிபோல எழிலருவி மணிமாலைத்
தார்கொண்ட நெடுங்கிரியாந் தனியுருவந் தனைத்தாங்கிப்
பேர்கொண்ட வெள்ளிமலைப் பெருந்தெய்வப் பதம்போற்றி. 1

பெருந்தேவே தனித்தேவே பேசுகின்ற ஐந்தேவாய்
வருந்தேவே வளர்பேரூர் வாழ்தேவே உலகுழன்று
பொருந்தாத பவம்புரியும் எளியனையும் புரிந்தருளைத்
தருந்தேவே வெள்ளிமலைத் தனித்தேவே சரணுனக்கே. 2

தனிவெள்ளி மலைபோற்றி தான்றோன்றுந் தளிபோற்றி
இனிமைபெற முளைத்தெழுந்த இறைவர்திரு வடிபோற்றி
கனிதருநல் மருதமலைக் கந்தனடி யிணைபோற்றி
நனியருள்சேர் பட்டீசர் நளினமலர்த் தாள் போற்றி. 3



## 25 — திருபேரூர்ப் பட்டிவிநாயகர்

### ஆனந்தக் களிப்பு

[இதுவும் ஷை ஆசிரியர் (1911-ம் ஆண்டில்) இயற்றியது.]

சங்கர சங்கர சம்பு — சங்கர சங்கர சங்கர — சம்பு

ஆனந்தம் ஆனந்தம் தோழி — பட்டி
ஆனை முகத்தன் அடியிணை வாழ்த்தின்
ஊனந்தம் ஆக்கிடும் பேரூர் — உறையும்
உத்தமன் கீர்த்திகள் உரைத்திடு — வோமேல் — (ஆனந்) 1

கும்பிடு வோர்செயல் கூடும் அல்லாற்
கும்பிடார் செய்வினை கூறுகெட் டழியும்
நம்பெரு மானருள் ஈதால் — பட்டி
நாயகன் பேர்நிதம் நாந்துதித் துய்வோம் — (ஆனந்) 2

ஆகுவின் மீதே யிருப்பான் — அங்கே
ஆயிர மெல்லிதழ்த் தாமரை மீதே
ஆகிய பதமலர் சேர்த்தி — ஐயன்
அடியார் அகமலர் தன்னில் நடிப்பான் — (ஆனந்) 3

வடிவினிற் கேற்ற வயிறு — அதை
வளைத்து முடித்தது மாநாக பந்தம்
மடிவில் வகைவகை யாக — நிவேத்யம்
வைத்துத் தியானித்து வந்தனை செய்தால் — (ஆனந்) 4

வலக்கரம் அங்குசம் தாங்கும் — மற்றோர்
வலக்கையில் வெண்கொம்பும் ஒன்றுண்டு காணீர்
நலமுறும் பாசந்தினோடு — நல்ல
நாலுகை மோதகம் தானிடக் கைகள் — (ஆனந்) 5

மிக்க கருணைமுக் கண்கள் — நால்வாய்
வெண்கொம்பு மொன்று விளங்கிடு மாங்கே
தொக்கமத் தகங்களு மிரண்டு — மேலே
துலங்கி மிளிர்வதோர் மணிமுடி சொலிக்கும் — (ஆனந்) 6

தேவர்கள் மூவர்கள் யாரும் — தங்கள்
தேவை முடிக்கவித் தேவை முடிப்பார்
யாவருந் துதிக்கையி னாலே — இவர்
துதிக்கை யுளாரெனத் தோன்றின ரென்போம் — (ஆனந்) 7

அஞ்சுகை யுடையானென் றறைவர்—ஆனல்
　　அடியவர்க் கஞ்சுகை எல்லா முடைப்பான்
வஞ்சனை யின்றியே நீதான்—பட்டி
　　யானை மலர்ப்பதம் வாழ்த்துவை யானல்—(ஆனந்) 8

நாலுகை நாலுகை கூட்டின்—எண்கை
　　நண்ணிய ஐங்கர மானதோர் விந்தை
ஏலவே பட்டிவிக் னேசன்—றன்னில்
　　இருக்குமோர் அற்புதம் இயம்பவ தென்றல்—(ஆனந்) 9

எட்டுமைந் தாகுமிவ் விந்தை—யின்னும்
　　இவ்வைந்து மூன்றி லடங்குமோர் விந்தை
முற்றுமம் மூன்றமொன் ருகி—முன்னே
　　முளைத்தவிப் பட்டியெம் முன்னவன் விந்தை—(ஆனந்) 10

உலக முதிக்குமோர் நாதம்—அந்த
　　ஒரெழுத் தேயுரு வாகுமிந் நாதன்
பலவும் பயிலுதல் வேண்டா—இவன்
　　பாத மனுதினம் பகருவோமானல்—(ஆனந்) 11

வாழியெம் பேரூரிற் பச்சை—வல்லி
　　வளர்பட்டி நாதன் மலர்ப்பதம் வாழி
வாழியெம் பட்டிக் கணேசன்—அவன்ருள்
　　வாழ்த்திடு மன்பரும் நீடுழி வாழி—(ஆனந்) 12

---

## 26—திருப்பேரூர்ப் பலவகைக் கண்ணிகள்

[இவைகளும் ஷை ஆசிரியர் 1917-ம் ஆண்டில் இயற்றியன.]

### 1. வெண்ணிலாக் கண்ணி

பேரைநகர்ப் பட்டிவளர் வெண்ணிலாவே—எங்கள்
பெருமானைப் பாடுவம்வா வெண்ணிலாவே. 1

ஐயர்பதம் அபயமென வெண்ணிலாவே—நீதான்
அடைந்தபெரும் பயனறிந்தோம் வெண்ணிலாவே. 2

எவரபய மடைந்தாலும் வெண்ணிலாவே—அவர்க்
கின்பமளித் தருள்சுரப்பா வெண்ணிலாவே. 3

அப்பெருமை உலகறிய வெண்ணிலாவே—உனை
அண்ணல்சடை வைத்துவந்தார் வெண்ணிலாவே. 4



வளர்பட்டி நாதர்பதம் வெண்ணிலாவே—நாமும்
வாழ்த்தியவ ரருள்பெறுவோம் வெண்ணிலாவே. 5

உலகுக்கெல்லா மீசனென வெண்ணிலாவே—பட்டி
உறைவாரை ஏத்துவம்வா வெண்ணிலாவே. 6

பழமையுள பவங்கெடுத்து வெண்ணிலாவே—எமைப்
பரமளித்தார் பட்டீசர் வெண்ணிலாவே. 7

காலனையோர் காலுதைத்தார் வெண்ணிலாவே—அதுவும்
காவல்புரிந் தன்பருக்காய் வெண்ணிலாவே. 8

பச்சைவல்லி பாகரவர் வெண்ணிலாவே—எனது
இச்சையெல்லா மெய்துவிப்பர் வெண்ணிலாவே. 9

அனைத்துயிரும் இன்பமுற வெண்ணிலாவே—ஆடும்
ஐயர்பதம் ஏத்திடுவோம் வெண்ணிலாவே. 10

### 2. தோழிமார் கண்ணி

கண்களொரு மூன்றுடையார் தோழிமாரே—யவர்
காலுளத்திற் கொண்டுறுவோம் தோழிமாரே. 1

காவலுறும் மூன்றுபுரம் தோழிமாரே—நகை
காட்டியெரித் தன்றழித்தார் தோழிமாரே. 2

எரித்திடினும் அன்பர்மூவர் தோழிமாரே—உயிர்
ஏமமுற அங்களித்தார் தோழிமாரே. 3

விழிப்புநகைப் பும்மெரியாம் தோழிமாரே—ஆயின்
மெய்யடியா ருள்ளிருப்பர் தோழிமாரே. 4

மேலைச்சிதம் பரநகராம் தோழிமாரே—யங்கு
மேவிநாமுய் யுய்ந்திடுவோந் தோழிமாரே. 5

### 3. கும்மி

[கும்மியடி பெண்கள் கும்மியடி—சிவ
நாமங்கள் பாடியே கும்மியடி.]

பேரை வளர்கின்ற சாமியடி—யவன்
　　பேரை நினைப்பவர் காமியடி

நீரை யுமதலை யாதிட்டடி—யுடல்
　　நேர்மை யணிவது பூதியடி.—(கும்பி) 1

மாமலை மங்கையின் நேயனடி—மணி
  மன்று பணிவர் சகாயனடி
எமுறு சுந்தரர் தூதனடி—யவன்
  எல்லா வுலகிற்கு நாதனடி.—(கும்மி) 2

ஆதிபுரி யென்னும் ஊரனடி—திசை
  யாடையவ னெனும் பேரனடி
கோதை யகற்றும்நால் வேதனடி—முனம்
  கூற்றை யுதைத்தருள் பாதனடி.—(கும்மி) 3

சூலையும் பாலையும் ஈந்தானடி—யவர்
  சொல்லுந் தமிழ்செவித் தீந்தேனடி
மேலைச் சிதம்பர நாதனடி—யியல்
  மூத்தனடி வல சித்தனடி.—(கும்மி) 4

கல்லடி யேற்றிடும் எற்றனடி—மதன்
  காட்டிய பூவிற்குச் சீற்றனடி
சொல்லடி யார்க்கருள் தேவனடி—செக
  சோதியடி யுமை பாதியடி.—(கும்மி) 5

திருப்பேரூர்ப் பிரபந்தச் செய்யுட்டிரட்டு முற்றும்.

---

குறிப்பு:—மேலே கண்ட நூல்களிலே அச்சிடப் பெறாத ஏட்டுப் பிரதிகள் மிக முயன்று என்னாற் சேகரிக்கப் பெற்றன. இவற்றுள் பேரூர் மரகதமாலை, அரசம்பல விருத்தம், பல கதம்பத்தேடு, மருதாசலபதி சதகம் என்ற ஏட்டுப்பிரதிகள் எனது நண்பர் திரு, C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்களால் உதவப் பெற்றன. இவர்க்கு என் நன்றியுரியது. ஏட்டுப்பிரதியில் உள்ள இந்நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு அன்பர்கள் உதவிபுரிவார்களாயின் அது பெருஞ் சிவ புண்ணியமாகும். தமிழ்த்தாயின் பணிவிடையுமாகும்.

C. K. S.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மேலைச்சிதம்பரமாகிய

# திருப்பேரூர்ப் புராண

## வசனச் சுருக்கம்

---

### காப்பு

கங்கையும் பனிவெண் டிங்களும் விரைத்த கடுக்கையந் தொங்கலுமரவுந்
தங்குபொற் சடையு முக்கணுந் தாதை தாணுவென் றுணர்த்தமென்
                                        மலர்க்கை
அங்குச பாச மணிந்துவெற் புயிர்த்த வாரணங் கண்ணையென் றுணர்த்தி
வெங்கலி முழுதுந் துமித்தருள் பட்டி விநாயகன் சேவடி பணிவாம்.

---

### 1—நாட்டுப் படலம், 2—நகரப் படலம்

கொங்குநாடு வளத்தினாலும் புகழினாலும் நிறைந்தது. கொடையிலே சிறந்த சேரமரபின் அரசர்மரபிலே கொங்கர் என்ற பேருடன் கோதையரசர்கள் ஆண்ட பெருமையுடையது கொங்குநாடு. இந்நாட்டிலே கடற்கரை கூடிய நெய்தல் தவிரக் குறிஞ்சி, முல்லை, மருதம் என்ற நிலப் பகுதிகளும் அவற்றின் பெரு வளங்களும் நிரம்ப உள்ளன. இந்தக் கொங்கு வளநாட்டிலே காவிரி, பவானி, அம்பராவதி போன்ற நதிகளும், கங்கை போலப் புனிதமாய் உபகரிக்கும் காஞ்சிமா நதியும் பரந்து பாய்ந்து மேலும் வளப்படுத்துகின்றன. இவற்றின் வளப்பத்தால் நெல், கரும்பு, கமுகு, வாழை, தென்னை, மா முதலிய செழும் பலன்களும், உயிர்களுக்கு உயிர் கொடுக்கும் ஊதியமாக எங்கும் மிகுதியாக உள்ளன.

இந்த வளநாட்டிலே சிறந்து விளங்குவது திருப்பேரூர் என்ற திருநகரமாகும். உலகநிலை, ஆன்மநிலை என்ற இரு நிலையிலேயும்

உயிர்களுக்குச் செய்யும் எல்லா வுபகாரங்களினும் பெரிதாயிருப்பதால் இது பேரூர் எனப் பேர் பெற்றதென்று புலவர்கள் சொல்வார்கள். இது பெரிய நகராகப் புடைநகர், இடைநகர், உண்நகர் என்ற பகுதிகளோடு மிக அழகாக அமைந்துள்ளது; அகழி மதில் ஆகிய அங்கங்களோடு சிறந்து விளங்குவதாய் அழகிய கடைவீதி முதலிய எல்லாப் பொலிவும் பெற்றுள்ளது. பற்பல மரபினரும் குடியிருப்பனவாகிய பற்பல தெருக்களும் வரிசையாக அழகின் அமைந்துள்ளன. இவ் வீதிகளின் நடுவிலே ஆதி தேவனுகிய பட்டீச்சுரர் எழுந்தருளிய திருக்கோயிலானது கண்டோர் மனம் மகிழ்ந்து உய்யும் வண்ணம் இயல்பாய் வாய்ந்துள்ளதாகும்.

---


## 3—நைமிசப் படலம்

நைமிசவனத்திலே யாகங்கள் செய்து சித்த சுத்தி பெற்றிருந்த சௌனகர் முதலிய முனிவர்களிடத்தே சூத முனிவர் வர, அவரை அம்முனிவர் குழாங்கள் வணங்கி, "முன்னொரு காலத்திலே பிரமாண்ட புராணத்துள் கௌமார சங்கிதையில், குமாரகண்டத்தில் திருப்பேரூர் மான்மியத்தை அருளிச் செய்தீர். அம்மான்மியத்தை மீண்டுங் கேட்க விரும்புகின்றோம்" என்று விண்ணப்பஞ் செய்யச் சூத முனிவர் சொல்லத் தொடங்கினர்.


---

## 4—புராண வரலாற்றுப் படலம், 5—பதிகப் படலம்

திருக்கைலாச மலையிலே உமாதேவி சமேதராக எழுந்தருளியிருக்கும் சிவபெருமானிடத்திலே, துவிதீய சம்புவென்று பேசப் பெறுவாராகிய திருநந்திதேவர் பண்டைக்காலத்தே, பதினெண் புராணங்களுங் கேட்டு வருங்கால், ஒரு தினத்திலே, அச் சிவபிரான் திருவடிக் கமலங்களைப் பேரன்போடு வணங்கிச் "சுவாமீ, தேவரீர் எழுந்தருளியிருக்குந் தலங்களில், இத் திருக் கைலாசத்துக்கு ஒப்பாகிய மகிமையுடையது எது" என்று விண்ணப்பஞ் செய்ய,



அக்கினிவீரபத்திர சுவாமி



பிச்சாடன மூர்த்தி

அதற்குச் சிவபிரான், "உத்தர கைலாசம், தக்ஷிண கைலாசம், மத்திய கைலாசம் என்னு மூன்றும் ஒத்த சிறப்பினையுடையனவாயினும், சுத்த நீர்ச் சமுத்திர தீரத்திலுள்ள உத்தர கைலாசமும், இம் மத்திய கைலாசமுந் தேவர் முனிவர்கட்கன்றி மற்றையோர்க்கு எளிதில் அடைவதற்கு அரியன வாதலால், திருப் பேரூரென்னுந் தக்ஷிண கைலாசமே யாவருஞ் சென்று எளிதில் போக மோக்ஷங்களை அடையத் தக்கது" என்று அதன் மகிமையைத் திருநந்திதேவருக்குத் திருவாய் மலர்ந்தருளினர். அவர் முகமாக உணர்ந்த முருகக் கடவுள் நாரத முனிவருக்குத் திருவாய் மலர்ந்தருள, அவர் வியாச முனிவருக்குக் கூற, அவர் எனக்கு அம்மகிமையை நாரதன் வழிபடுவதுமுதல் விசேட பூசை முறை வரைப் பல பகுதிகளாக முழுதும் அருளிச் செய்தார். அவற்றை அம்முறையிலே கீழே கண்ட வரிசைப்படி சொல்கின்றேன்.

## 6 – நாரதன் வழிபடு படலம்

குமாரக் கடவுளிடம் கேட்டுணர்ந்த நாரத முனிவர் கொங்கு நாட்டிலே உள்ளதாகிய திருப்பேரூரிற்சென்று, வெள்ளியங்கிரியில் ஏறிச் சிவலிங்கப் பெருமானையும், உமா தேவியாரையும், விநாயகக் கடவுளையும், முருகக்கடவுளையுந் தரிசித்து, நேசித்துப் பூசித்துக் கீழே இறங்கி, அம்மலைச் சாரலின் மேலைத் திசையில் இருக்கின்ற ஆலயத்தையும், மற்றை ஆலயத்தையும் அடுத்துச் சுவாமி தரிசனஞ் செய்து, பின்பு அரசம்பலவாணரையுந் தரிசித்தார். அதன்மேல், காஞ்சிநதி தீரத்திற் சிவலிங்கந் தாபித்து ஒரு தீர்த்தம் உண்டாக்கி, அந்நீரை அபிஷேகித்து ஆராதனஞ் செய்தனர். நாரதர் ஆலயத்திற்கு நாரதேச்சுரமென்றும், தீர்த்தத்திற்கு நாரத தீர்த்தமென்றும் பெயர்.

## 7—காலவன் வழிபடு படலம்

காசிப முனிவர் புத்திரராகிய காலவ முனிவர் சிவ புண்ணிய மேலீட்டினல், இருவினை யொப்பும் மலபரிபாகமும், சத்திநிபாதமும் உற்று, பாசத்தையும், பாசத்தையுடைய பசுவையும், பசுவுக்குப் பதி

யாகிய சிவபிரானையுந் தமது மதிநுட்பத்தினாலே ஆராய்ந்து பதியை அடைதற்குரிய நெறி சிவலிங்கோபாசனையே என்றும், அவ்வுபாசனை எளிதிற் கைகூடுதற்குரிய தலம் திருப்பேரூரே என்றும் உணர்ந்தார். அத்திருப்பதியை அடைந்து, காஞ்சிநதியில் மூழ்கி சுவாமிதரிசனஞ் செய்து, அவ்வாற்றங்கரையிலே சிவலிங்கப்பிரதிட்டை செய்து, ஒரு தீர்த்தம் அகழ்ந்து, அந்தச்சலத்தை அபிஷேகித்து அருச்சனை புரிந்து, தினந்தோறும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைப் பதினையாயிரம் உரு ஜபித்து வந்தார். இங்ஙனம் பதினாயிர வருஷந் தவஞ் செய்யுமளவில், அவ்வருட்குறியினின்றுஞ் சிவபிரான் தோன்ற, அவரைக் காலவமுனிவர் வழிபட்டு வரங்கள் பெற்றுத் தீக்ஷையுற்று, சித்தாந்தமகா வாக்கியோபதேசங் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து, நிட்டைகூடி வெள்ளியம்பலத் திருக்கூத்தையுந் தரிசிக்க விரும்பி இருந்தனர். காலவ முனிவர் ஆலயத்திற்குக் காலவேச்சுரமென்றுந் தீர்த்தத்திற்குக் காலவ தீர்த்தமென்றும் பெயர். இவ்வாலயம் பட்டீசராலயத்திற்கு ஈசான திக்கில் இருக்கின்றது.

---

## 8—காமதேனு வழிபடு படலம்

சுவாயம்பு மனுப்படத்தில், சகரன் எனும் அரசன் அரசாட்சி புரியுங்கால், பிரமதேவர் பிரஜைகளைப் படைக்கும்வண்ணம் எண்ணிச் சிவயோகத்தில் இருந்தபொழுது தீய ஊழினால் நித்திரை செய்தனர். அதனை இந்திராதி தேவர்கள் முகமாக உணர்ந்த விஷ்ணுமூர்த்தி காமதேனுவை நோக்கி, "நீ தவம் புரிந்து சிவபிரான் திருவருள் பெற்றுச் சிருட்டித் தொழில் செய்வாயாக" என்றபோது காமதேனு இமய மலையை எய்தி ஆயிரந் தேவவருடம் அருந்தவம் புரிந்துஞ் சிவபெருமான் அருளாமைபற்றிக் கவலையுற்றிருக்குங் காலத்து நேர்பட்ட நாரத முனிவர் ஏவுதலால், அதி யிரகசிய தலமாகிய ஆதிபுரியை அடுத்துக் காஞ்சிநதியில் வாஞ்சையொடு முழுகி, அசரீரி வாக்கின்படியே ஆதிலிங்க மூர்த்திமீது தனது பாலைப் பொழிந்து பூசித்துக்கொண்டிருந்தது.

---



## 9—குழகன் *குளப்புச் சுவடுற்ற படலம்

அங்ஙனம் *பட்டியிட்டு வழிபட்டு வரும்போது ஒரு நாள், காமதேனு முற்பகலிலே சிவபூசை செய்து சிவயோகத்திலிருந்தது. அப்பொழுது சூரியன் அத்தமனமாகிச் சந்திரன் உதயமான காலத்தில், அக் காமதேனுவின் கன்றானது விளையாட்டினால் அண்டங்கள் குலையும்படி அலைத்து, அண்ட நாயகராகிய ஆதிலிங்கமூர்த்தி அருமைத் திருமேனியை மறைத்திருந்த மேருமலையாகிய புற்றினை ஓரடியினால் மிதித்தது. அவ்வடி திருமுடியிலே அழுந்திப் பெயர்க்கக் கூடாமையினால், கொம்புகளாற் குத்தி அப்புற்றை உடைத்தது. கொம்புகளே யன்றிக் காற்குளம்பும் ஆதிலிங்கேசர் திருமுடியில் உதிரம்பெருக அழுந்தியதனால், அக்குழகர் அக்குளம்புச் சுவட்டினை உடையவரானார். பின்பு காமதேனு சூரியோதய காலத்தில், அவ்விடத்தே வந்து, நிகழ்ந்தவைகளை உணர்ந்து கவலைகொண்டு, எனதிளங் கன்றினால், நான் பேரபராதியாயினேன் என்று வருந்துகையில், சிவபிரான் இடபாரூடராய் எழுந்தருளி, "உனதிளங்கன்றின் விளையாட்டினால் உற்றதைக் குற்றமாக உள்ளத்திற் சற்றும் பற்றிலோம். உமாதேவி முலைத்தழும்பையும் வளைத்தழும்பையும் மார்பினிற் கொண்டதுபோல முடியின் கண்ணே, குளப்படிச் சுவடையுங் கோட்டின் சுவடையுங் குதூகலத்தோடு கொண்டருளினோம்; உனது கருத்துப்படி இப்போது பத்தியும், பின்னர் நடன தரிசனமும், முடிவில் முத்தியுந் தந்தருளுவோம்; நீ வழிபட்டுத் தங்கியபடியால் இத் திருப்பேரூர் காமதேனுபுரம் பட்டிபுரி என்னும் பெயர்கள்பெற பட்டிநாதர் என்னும் நாமதேயத்தை நாமும் பெற்றோமென்று திருவாய் மலர்ந்து, இது முத்தித்தலமாதலால், நீ கருதிய சிருட்டித் தொழிலைப்பற்றி வஞ்சி என்கிற திருக் கருவூரிலே அநுக்கிரகிப்போமென்றனர். அவ்வாறே காமதேனு வஞ்சித்தலத்திற் சென்று வரம் பெற்றுச் சிருட்டித் தொழிலைச் செய்தது. பட்டிப் பெருமானது திருமுடியிலே பசுக்கன்றின் காற்குளம்புகளின் சுவடுகளும் கொம்பு குத்திய சுவடும் இன்றைக்கும் நாம் காண உள்ளன.

---

* குளப்பு=பசுக் கன்றின் காற்குளம்பு. * பட்டி=தொழு.

## 10—தென்கைலாயப் படலம்

கீழைச் சிதம்பரம் என்னும் க்ஷேத்திரத்தில், சிவபெருமான் தமது அருட்சத்தியாகிய உமாதேவியார் காண, மேலைச்சிதம்பரத்திற் போல ஆனந்த தாண்டவஞ் செய்தருளுவர். அத்திருநடனத்தைத் தரிசிக்கும்படி சிவபிரானது கட்டளையினால், வியாக்கிரபாத முனிவர் கீழைச்சிதம்பரத்திற் சென்று, பத்தியினால் வழிபட்டுப் பல காலந் தவம் பயின்று வதிந்தார். அப்பொழுது கர்மமே கர்த்தா என்னும் கொள்கையுடைய தேவதாருவனத்து முனிவர்களைத் தடுத்தாட் கொள்ளும் வண்ணஞ் சிவபிரான் பிட்சாடன மூர்த்தியாகி அம் முனிவர்களுடைய பத்தினிகளிடத்தே சென்று, கற்புநிலையைக் கலக்கியும், அவராஞ்ஞைப்படி விட்டுணு மூர்த்தி மோகினியாகி, அம் முனிவர்கள் தவநிலையை அவநிலையாக்கியும், அவ்விருடிகள் கர்வ பங்கமானபின்பு அவ்வனத்தின் கண்ணே சிவபிரான் திருநடனஞ் செய்தருளினார். அந்நிருத்தத்தைத் தரிசித்த திருமால், ஆதிசேடன் மீது சயனித்து, ஒருதினம் விழிக்குங் காலையில், கண்களினின்றும் ஆனந்த நீர் பொழியவும் உடல் முழுதும் உரோமாஞ்சிதங் கொள்ளவும் பேரன்போடு 'சங்கர சங்கர' என்று ஆரவாரித்தனர். அப்பொழுது ஆதிசேடன் அடுத்து வினவியதற்கு, விட்டுணு தேவதாருவனத்தில் நிகழ்ந்த நிருத்த தரிசனத்தைக் குறிப்பித்தவளவில், அத்திருக்கூத்தைத் தரிசிக்கும்பொருட்டு ஆதிசேடன் ஆசை மிகுந்து விடைபெற்று மேருமலையைச் சார்ந்து தவஞ்செய்ய, அதற்கு எதிர் வந்து தில்லையம்பலத்தைச் சேரும்வண்ணஞ் சிவபெருமான் அருள் புரிந்தார். அவ்வாறே அத்திரி முனிவர் பத்தினியாகிய அனசூயையிடத்திற் பதஞ்சலி முனிவராக அவதரித்துத் தில்லைப் பகுதியில் வியாக்கிரபாத முனிவரோடு தாமும் பஞ்சகிருத்தியத் திருக்கூத்தைத் தரிசித்திருந்தனர். அச்செய்தியை அறிந்த திருமால் திருக்கைலாச மலையைச் சேர்ந்து சிவபெருமானைத் திரிகரணங்களாலுஞ் சேவித்து தில்லைச்சிற்றம்பலத் திருநடன தரிசனத்தின் பேரவாவைப் பெரிதும் விண்ணப்பஞ் செய்தனர். அதற்குத் திருக்கைலாசபதி "விராட் புருடனுக்கு இதயஸ்தானமாகிய கீழைச்சிதம்பர நடனதரிசனத்தைப் பதஞ்சலி வியாக்கிரபாதர் பொருட்டுச் சுதந்திரமாக்கினோம்.



ஆகையால் தக்ஷிண கைலாசமாய், விராட்புருடனுக்கு விந்துஸ்தானமாயுள்ள மேலைச்சிதம்பர நடன தரிசனத்தைக் காலவமுனியுங் காமதேனுவுங் கருதியிருத்தலானும், நீயுங் கோமுனியாய்த் திருப்பேரூரைச் சார்ந்திருப்பாயாயின் அங்கே வெள்ளியம்பலத்தில் திருநடனஞ் செய்து காட்டுவோம்" என்று விட்டுணுவுக்கு விடைகொடுத்தருளினார். உடனே விட்டுணு, கோமுனியாய் மரவுரியுடுத்துச் சடைமுடி தரித்துத் திருநீறுங் கண்டிகையும் அணிந்து திருவைந்தெழுத்தைச் சிந்தித்துக்கொண்டு, ஆதிபுரியை அடுத்துக் காஞ்சிநதியில் விதிப்படி குளித்து, வெள்ளிமலைமீது சென்று சுவாமியையும் அம்மையையுந் தரிசித்து, பின்னர்ச் சிவபெருமான் திருக்கோயிலுக்குத் தென் திசையிலே தென் கைலாசமென்று திருநாமமிட்டு ஓராலயம் நிருமித்துச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து, சக்கரதீர்த்தம் என்ற பெயரால் ஒரு தீர்த்தம் அகழ்ந்து, அந்நீரை அபிடேகித்துச் சிவாகம விதிப்படி சிவபூசை செய்து காலவ முனிவரோடு சிவயோகத்திலிருந்தனர்.

---

## 11—வடகைலாயப் படலம்

அங்ஙனந் திருமால் தவம்புரியும்போது பிரமதேவர் நித்திரை நீங்கி நித்திய கருமங்களை நிறைவேற்றி உலகத்தைப் படைக்கத் தொடங்கிய வளவில், வேதங்களின் முறையை மறந்தமையால் அத்தொழில் கைகூடப் பெற்றிலர். 'ஐயையோ இதற்காகவோ சிவயோகம் பயிலும்போது துயில் உண்டாகியது' என்று வருந்தி பத்திய கைலாச மலையைச் சார்ந்து தேவதேவரை வணங்கிச் 'சிறியேன் பிழையைப் பொறுத்தருளவேண்டு'மென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்கு மகாதேவர், "தென் கைலாசமாகிய திருப்பேரூரிலே அரசமர மூலத்தின் கண்ணதாகிய வெள்ளியம்பலத்திலே நமது தாண்டவத்தை வேண்டி விட்டுணு கோமுனிவனாகிக் காலவ முனிவனோடு தவஞ் செய்கின்றான். காமதேனு வழிபட்டமையால் நமக்குப் பட்டிநாதரென்னும் நாமதேயமுமுண்டு. ஆகையால் நீ பட்டி முனியாய் அத்தலத்தே சென்று பத்தி செய்வாயாகில் நமது நடனத்தையுங் கண்ணுற்று எண்ணாற்ற வரம் பெறலாம்" என்று

திருவாய் மலர்ந்தனர். பிரமதேவர் உடனே விடைபெற்றுத் திருவெந்தெழுத்தைச் சிந்தித்துப் பட்டிமுனியாகித் தண்டங் கமண்டலங்களைத் தாங்கி, விபூதி உருத்திராக்கங்களைத் தரித்துக் குழைந்த உள்ளத்தோடு தவசித்திபுரத்தைச் சார்ந்தார். காஞ்சி நதியில் மூழ்கிச் சிவபெருமானை வணங்கிப் பன்னீர் மரத்தடியிலே குடிகொண்டருளும் மூலலிங்க மூர்த்திக்கு உத்தரதிக்கிலே தமது கமண்டலத்தைத் தீர்த்தமாக இருத்திச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து நீராட்டி, அருச்சித்து வெள்ளியம்பலத்தையுந் தரிசித்தார். இவ்வாறு செய்து காலவ முனிவர் கோமுனிவர் இருவருடன் மருவியிருக்குங்கால், காஞ்சி நதியின் வடதிசையில் முத்தியைத் தரத்தக்க ஒரு யாகம் வளர்த்துச் சிவபெருமான் திருவுளங் களிகூரும்படி முற்றுவித்தார். பிரமதேவர் செய்த ஆலயத்திற்கு வடகயிலை என்னுந் தீர்த்தத்திற்குப் பிரமதீர்த்தம், குண்டிகை தீர்த்தம் என்றும், யாக குண்டத்திற்குத் திருநீற்றுமேடு என்றும் பெயர் வழங்குகிறது.

## 12—நிருத்தப் படலம்


திருப்பேரூரிலே காலவமுனிவர் முதலியோர் சிவபிரான் திருநடனத்திற்காகக் குறித்த காலத்தையே நாடிக்கொண்டிருந்தனர். இருக்கும்பொழுது, காலவேச்சுரத்தில், அரசடியில், வெள்ளியம்பலம் உள்ளதாகச் சிவபெருமான் அருளியபடி அதனைக் காணப்பெற்றிலேனென்று கோமுனிவர் தியானித்தார். அக்காலையில், "பழைய அம்பலத்தைப் பரமசிவன் மறைத்தபடியால், அவ்விடத்தே ஒரு சபையும் அதிலே நடராஜர் திருவுருவும் அமைந்து வழிபடுவாயாக" என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. உடனே கோமுனிவர் விசுவகம்மியனை வருவித்துச் சபை நிருமிக்கும் இடம் புலப்படாது திகைத்திருக்கும்போது, சிவபிரான் சித்தராகத் திருவுருக்கொண்டு பற்பல அற்புதங்களைச் செய்தருளினர். அவரைக் கோமுனிவர் முதலிய மூவரும் அடுத்து வினவிச் 'சிவபெருமான் திருநடனஞ் செய்கின்ற திருச்சபையைத் தெளிவிக்க வல்லீராயின் நீவிரே முற்றுமுணர்ந்த பெற்றிய'ரெனச் சொல்லியவளவில், சித்தேசர் ஆதிலிங்க




மூர்த்திக்கு வடகிழக்கில், திரிமூர்த்தி யுருவான அரசடி நீழலில் வந்து, "வெள்ளியம்பலம் எழுக" என்று திருவாய் மலர்ந்தருளினர். உடனே வெள்ளியம்பலம் பொள்ளென எழுந்தது. அப்பொழுது தேவர்கள் கற்பகப் பூமாரி பொழிந்தனர். பொழிந்தபோது கோமுனிவர் முதலியோர் சித்தமூர்த்தியை வணங்கித், "தேவரீர் செய்தருளிய தெய்வ சபைக்கேற்பத் தேவர் பிரான் திருவுருவஞ் செய்தருளிவீராக" என்ற காலையில், சித்தேசர் திருவுளமகிழ்ந்து திருச்சபையைச் சூழத் திரைகோலச் செய்து, அதனுள்ளே ஒரு முகூர்த்தமளவும் அமர்ந்து, இரண்டா முகூர்த்தத்திலே திரையோடும் சித்தேசர் மறைந்தருளினர். பின்பு திருநடராசர் திருவுருவோடு சிவகாமியம்மை திருவுருவையும் அத் திருச் சபையிலே கோமுனிவர் முதலிய மூவருந் தேவர்கள் யாவருந் தரிசித்தார்கள். பின்னர் அம் முனிவர்கள் மூவருஞ் சிவாகம விதிப்படி உள்ள தூய்மைகள் செய்து, ஸ்ரீ ஞான நடராசரோடு சிவகாமி யம்மையையுந் தினந்தோறும் ஆறு காலமும் வழிபாடு செய்து வந்தனர்.

இங்ஙன நிகழுங்கால், விசுவகம்மியனால் ஆலயங்கள் அமைத்துப் பஞ்சமூர்த்திகளையும் பரிவார தேவதைகளையும் பிரதிட்டை பண்ணித் திருவிழாச் செய்யத் தொடங்கி, பங்குனி மாதத்து வளர்பிறைச் சஷ்டி திதியோடு கூடிய கார்த்திகை நக்ஷத்திரத்திற் கொடியேற்றி, ஒன்பது நாள் தேர்விழா நடாத்தினார்கள். பத்தாநாள் உத்திரத்தன்று வெள்ளியம்பலத்துக்கு எதிரிலுள்ள மண்டபத்திலே அனைவரும் நிற்க, கோமுனிவர் முதலிய மூவரும் அருகே நிற்ப, நாரதமுனிவருந் தும்புரு முனிவரும் வீணைகானஞ் செய்யவும், அகத்திய மகாமுனிவரும் ஆனந்தி முனிவருந் தாளம் ஒத்தவும், மந்து நாதரும் நந்தி பெருமானும் மத்தள முழக்கவும், திருத் தொண்டர்கள் சிரமீது திருக் கைகளைக் கூப்பி அரகர முழக்கஞ் செய்யவும், தமது திருமேனியின் ஒரு பாகத்திலே உமா தேவியார் அமர்ந்திருக்கவும், ஒரு கையில் உடுக்கை ஒலிக்க, மற்றொரு கையில் அக்கினி விளங்க, வேறொரு கை வரதமாக, பிறிதொரு கை அபயமாக, திரோதானத் திருவடியை முயலகன் முதுகிற்பதித்து, அருட்டிருவடியைக் குஞ்சிதமுற வீசி, திருக்கண்களாற் காளி தேவியின் முகத்தை நோக்கி ஸ்ரீ ஞான நடராசர் வெள்ளியம்பலத்திலே திருநிருத்தஞ் செய்தருளினர்.

செய்தருளியுந் திருவடிக் கண்ணதாகிய மறைச் சிலம்பொலியும், வாத்தியங்களின் ஒலியுஞ் செவிப் புலப்பட்டனவன்றி, திருநடனக் காட்சி கண்ணுக்குப் புலப்படாமையால், ஆங்கு நின்ற அனைவரும் ஏங்கி இரந்து துதித்தனர். துதித்த மாத்திரையில், ஊன நடனஞ் செய்து எவ்வகையுயிர்கட்கும் ஆணவமல வலியை மாற்றி ஞான நடனஞ் செய்தருளும் நடராசர் ஞான நோக்கத்தைத் தந்தருளலும், அஞ்ஞான நீங்கி, மூன்று முனிவரர் முதலிய யாவருந் தாண்டவத்தின் ஆனந்தத்தைக் கண்களாற் கண்டு, மொண்டு மொண்டு உண்டு, கழி பேருவகையுற்று ஆனந்தக் கூத்தாடினார்கள். சிவ பெருமான் செய் தருளிய நாடக வேகத்தினால், ஆபரணமாக அணிந்த பாம்புகள் விடத்தை உமிழ, அது புலித்தோல் போர்த்தாற்போலத் திருமேனி முழுவதும் வரிவரியாக ஒழுகியது. அவ்விட வெப்பத்தினால், தேவர் கள் முதலிய யாவரும் அஞ்சி பசியோடு தாக சோகங்கள் அடைந் தனர். அடைந்தபோது உமா தேவியார் அன்னபூரணியை உண் டாக்கிப் பசியைத் தணித்தனர். முருகக் கடவுள் நீர்வேட்கையை ஒழித்தனர். விநாயகக் கடவுள் உடம்பினுற்ற வெப்பத்தைத் துதிக் கையினால் நீர் துளிக்கும் வண்ணங் காற்றினை வீசித் தைவந்து ஆற்றியருளினர். பின்பு கூத்தப்பிரானார் கருணை கூர்ந்து காலவ முனிவருக்கு அன்னார் விரும்பிய வண்ணம் விதேக முத்தியை யளித் தனர். பிரமாவை நோக்கி, "நீ பழைய வடிவொடு படைப்பினைச் செய்து பட்டிமுனி யம்சத்தால் நமது நிருத்தத்தைத் தரிசிப்பாயாக" என்றும், விட்டுணுவை நோக்கி, "நீயும் பண்டையுருக்கொடு பாற் கடலிற் பள்ளிகொண்டு காத்தற் றொழில் செய்து, கோமுனி யம்சத் தால், நிருத்த தரிசனஞ் செய்வாயாக" என்றும், மற்றையோரை நோக்கி, "இத் திருப்பேரூரிலே வசிப்போர்க்கும், இத்தலத்தைத் தரிசித்தோர்க்கும், நமது திருக்கூத்தைக் கண்டோர்க்கும் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நால்வகை உறுதிப் பொருள்களுஞ் சித்திக்கக் கடவன" என்றுந் திருவாய் மலர்ந்தருளினர். பின்பு வெள்ளியங்கிரிமீதுள்ள வெள்ளியம்பலத்திலும், உமா தேவியார் வேணவாவோடு காணும்வண்ணம் சிவபெருமான் திருநடஞ் செய் தருளினர்.



ஊர்த்துவதாண்டவ மூர்த்தி



ஆலங்காட்டு காளியம்மன்

## 13—அபயப் படலம்

சிவபெருமான் தன்னைத் தக்கன் வேற்றுமை செய்து தேவர்களோடு யாகம் புரிந்தமைபற்றி, வீரபத்திரக் கடவுளைக்கொண்டு அவர்களைத் தண்டித்து, யாகத்தை அழித்து, எஞ்சிய பாதகத்தையும் நுகர்வித்துப் போக்கும்படி திருவுளங் கொண்டார். அக்காரணத்தினால், மாயையிடத்தே காசிப முனிவர் கலந்து, சூரன், சிங்கமுகன், தாரகன் என்னு மூவரைப் பெற்றார். அம்மூவரும் ஆபிசார வேள்வி இயற்றிச் சிவபிரானிடத்திலே வரம்பெற்றுத் திருமால் முதலான தேவர்களின் ஆற்றலை அகற்றி, ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் ஆணை செலுத்தினர். அப்போது இந்திரன் முதலியோர் திருக்கைலாச பதியைச் சேர்ந்து சூரன் முதலியோரைப் போக்கித் தங்களைக் காக்கும்வண்ணம் விண்ணப்பம் பண்ணினார். அதற்குச் சிவபிரான் "சூரன் முதலியோரை வெல்லும்படி நமது நெற்றிக் கண்ணிற்றோன்றும், ஆறுமுகன் வருமளவும், ஆதிபுரியை அடைந்து நீவிர் வதிந்தால் அசுரர் பயம், பிணி, துன்பங்கள் அணுகமாட்டா. பாவமும் அகலும். முருகனதுருவமாகிய மருதவரையும் அங்கேயுள்ளது; செல்லுங்கள்" என்று விடை கொடுத்தார். அவ்வாறே திருமாலாதி தேவர்கள் திருப்பேரூரைச் சார்ந்து பயம் ஒழிந்து காஞ்சி நதியில் மூழ்கிக் காலைக் கடன்களை முடித்து, ஆதிலிங்கேசரையும் வெள்ளியம்பலத்தையும் பணிந்து, சிவமயமாகிய வெள்ளிமலை, உமாதேவிமலை, பிரமமலை, விட்டுணுமலை, மருதமலை ஆகிய ஐந்து மலைகளிலுமுள்ள தீர்த்தங்களில் மூழ்கி, அக்கிரிகளைத் தரிசித்துச் சிவலிங்க பூசை செய்து, மருதமலையில் முருகக் கடவுளை நோக்கித் தவம் புரிந்துகொண்டிருந்தார்கள். இப்பஞ்ச கிரிகளும் திருப்பேரூரின் மேற்றிசை மலைத் தொடரில் உள்ளன.

---

## 14—மருதவரைப் படலம்

முருகக் கடவுளின் உருவமாகிய மருதமலையிலே எல்லாத் தேவர்களுஞ் சார்ந்து பகைவரை ஒழிக்கும் வண்ணம் எண்ணித் தவம் புரியுமிடத்தே முருகக் கடவுள் திருவடிக்கண் பேரன்புள்ள நாரத முனிவர் வந்து விட்டுணுவை வணங்க, அவர் அம்முனிவரைத்

தழுவி உபசரித்து முருகக் கடவுள் விரைந்து கருணை புரியுமுறைமையைச் சொல்லும்படி கேட்க, அதற்கு நாரத முனிவர் சொல்லத் தொடங்கினர்:

"சிவதருமங்கள் பலவற்றுள் பூசை சிறந்தது. அப் பூசையின் உபசாரங்கள் பலவற்றுள், அபிஷேகம், விரை, தீபம், அருச்சனை, நைவேத்தியம் என்னும் ஐந்துஞ் சிறந்தன. இவற்றைப் பன்னிரண்டு மண்டலம் இயற்றினல் எண்ணிய பயனை எளிதில் இம்மையின் எய்தலாம். அவற்றுள் அபிஷேகமாவது, சூரியோதயத்திற்கு முன்னே பன்னிரண்டு புதுச்சால்களில் புதிய நீரை வஸ்திரத்தால் வடித்தெடுத்து, மணல் பரப்பி, அதிலே வைத்து, ஒவ்வொரு சாலினும் ஏல முதலிய திரவியங்களை நறுமலரோடு பெய்து, மந்திரத்தால் அபிமந்திரித்து, ஆயிரம் வாழைக்கனியும், ஆறுபடி பசும்பாலுந் தேன், நறுநெய், சர்க்கரை இவைகள் இவ்விரண்டு படியுமாகச் சேர்த்துப் பஞ்சாமிர்தம் ஒரு பாத்திரத்தில் அமைத்துப் பால் தேன் மூவகை இளநீர், பஞ்சாமிர்தம், சந்தனக் குழம்பு என்னும் இவைகளை முருகக்கடவுள் திருமேனியில் திருமுழுக்கிட்டு, இடையிடையே சால்களிலுள்ள சலத்தை சங்கினல் ஆட்டுவதாம். விரையாவது, இலேபனமுஞ் சுகந்தமு மென்று இருவகைப்படும். அவற்றுள் இலேபனமாவது பச்சைக் கற்பூரமுங் குங்குமப்பூவுங் கோரோசனையும் புழுகுங் கத்தூரியுங் கலந்த மலாக்காச் சந்தனத்தைத் திருமேனி முழுவதுஞ் செறிவாகச் சாத்துதலாம். சுகந்தமாவது, முல்லை இருவாட்சி, பிச்சி, மல்லிகை, பன்னீர், மருக்கொழுந்து, வெட்டிவேர் என்னும் ஏழினையுந் தொடுத்துத் திருவுருத் தெரியாவண்ணம் அலங்கரித்தலாம். தீபமாவது, முருகக் கடவுள் திருக்கண் அளவினதாகிய உயரமுள்ள ஒரு படி நெய் கொள்ளத்தக்க தகழி பொருந்திய தீபத்தை வெள்ளி, அல்லது வெண்கலத்தினற் செய்வித்து, இரண்டு பக்கங்களிலாதல் அன்றி ஒரு பக்கத்திலாதல் வைத்துக் கபிலை காரா முதலிய பசுநெய் நிறைய வார்த்துத் தாமரை நூல், அல்லது செம்பருத்தி வெண்பஞ்சி நூலினல் விரற் பருமையதாகிய திரி அமைத்து பச்சைக் கர்ப்பூரம் அல்லது ஆலத்திக் கர்ப்பூரஞ் சேர்த்து அத்திரி நுனியிற் பொருத்திய சுடர்க்கொழுந்து பன்னிரண்டு விரலளவும் எழுந்து விளங்க எரித்தலாம். அருச்சனையாவது, முருகக்கடவுளுக்



குரிய பேராயிரத்தால் செந்தாமரை மலர் அல்லது வெண்டுளசியோடு வில்வமுஞ் சேர்த்துத் திருவடிகளிலே தூவுதலாம். நைவேத்தியமாவது வெண்மையாகிய ஒருபடி அரிசிக்கு மூன்றுபடி பசும்பாலும், கால்படி பசுநெய்யும், நூற்றறுபது கழஞ்சு சர்க்கரையும் இடித்த ஏலஞ் சுக்கு வீசம்படியும், ஒரு தேங்காய்த் திருகலுஞ் சேர்த்துப் பக்குவமாகச் சமைத்தபின், உரித்த பதினைந்து வாழைக்கனி கலந்து அப்பரமான்னத்தை அருச்சித்தவுடன் நிவேதித்தலாம். இவ்வாறு இரண்டு வருடமாதல் பொருளில்லார் பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் இம் மூன்று பருவங்களினுதல் செய்தல் வேண்டும். அம் மூன்று பருவத்தினும் அபிஷேக முதலிய ஐந்தினையுஞ் செய்ய அசக்தராயின், அகத்தே சற்பாவனையாற்செய்து, பரிசுத்தமான இடத்தில் வதிந்து, தினந்தோறும் பதினுறுயிரமுறை முருகக் கடவுளின் ஆறெழுத்தை உச்சரித்தால் எண்ணிய பொருள்களெல்லாஞ் சித்திக்கும். இடர்கள் அனைத்துந் தொடராது நீங்கும்" என்று நாரத முனிவர் சொல்லியவளவில் திருமால் மனமகிழ்ந்து, பிரமாதி தேவர்கள் சூழ மருதவரையில் ஏறி, வேற்படை வடிவாகிய மருத மரத்தடியிலிருந்து எழுந்து செல்லும் அர்ச்சுன தீர்த்தத்தில் ஆடி, நித்திய நியமங்களை முடித்து முருகக் கடவுள் திருவடிகளில் நாரத முனிவர் கூறியவாறு பூசித்திருந்தார். அப்பொழுது முருகக் கடவுள் எதிர்தோன்றி நீவிர் விரும்பிய வரம் யாதென வினவியவளவில், விட்டுணு "சூரன் முதலியோர் செய்யுங் கொடுங்கோன்மையை மாற்றியருளவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்ய, அதற்கு முருகக் கடவுள் திருப் புன்முறுவல் செய்து, நால்வகைப் படைக் கடலும் புடைசூழ்ந்துவர எழுந்தருளி, தாரகனையுஞ் சிங்கமுகனையுங் கொன்று சூரனை வென்று, தேவர்களை விண்ணுலகிற் குடியேற்றி, மீண்டு மண்ணுலகில் திருப்பேரூரை அடுத்து, கந்த தீர்த்தமென்ற பெயரால் தீர்த்தம் அகழ்ந்து, அமிர்தலிங்கேசுரை நீராட்டி அருச்சனை செய்து, அம்மருதமலையிலே அமர்ந்து அனைவர்க்கும் அருள் புரிந்து வருகின்றுர். அம்மலையிலே கன்னிகை தீர்த்தம், அநுமதீர்த்தம், சரவணப் பொய்கை என்பவைகளும் உண்டு. சரவணப் பொய்கையைப் புற்றின் கட்சுனை யென்பர்.

## 15—சுமதி கதிபெறு படலம்

மகாராட்டிர தேசத்தில் எச்சதேவன் என்னும் பிராமணன் அரிய தவங்களும் வேள்விகளுஞ் செய்து சிவபெருமான் திருவருளினால் ஒரு மைந்தனைப் பெற்று, அவனுக்குச் சுமதி யென்று பெயர் வைத்தனன். அப் புதல்வன் அப் பெயருக்கேற்ப வேத முதலிய கலைகளை ஓதி உணர்ந்து, அதன் பயனாகிய ஒழுக்கத்தோடு வளர்ந்து, பதினாறு பிராயம் உற்றனன். அவன் சிவதாமா என்னும் மறையவன் மகளை மணந்து வாழுங்கால், யாத்திரை செய்யக் கருதித் திருப்பருப்பதத்தை அடைந்து, அங்கே சிவபெருமான் கொண்டருளும் மகோற்சவத்தைத் தரிசித்து வசிக்குநாளில் ஒருநாள், திருவீதியின் வளத்தை நோக்கும்படி புறப்பட்டுத் தீவினைப் பயனால் பொதுமாதர் வீதி வளத்தைக் கண்டு செல்லுமிடத்தே, சூரியனது கதிர் வெப்பத்தினால் அயர்வுற்று, ஆகாயத்தை அளாவிய பந்தர் பொருந்திய மூன்றிலையுடைய இந்திர லோகம் போன்ற சுந்தரமுள்ள ஒரு மாளிகையைக் கண்ணுற்று, அப்பந்தரிடையே தங்கிச் செந்தமிழ்ப் பொதியச் சந்தன முதலிய நறுமணத்தையுங் குளிர்ச்சியையுங் கொண்டு, வந்துலாவு மந்த மாருதத்தினால் சிரம பரிகாரமாகி அம் மாளிகையிற் செல்வார் செயல்களை வினவத் தொடங்கினான். அதற்கு அருகே நின்ற ஒருவன் "இத் திருப்பருப் பதத்திலே, வேதியர் வீதியின் மத்தியிலுள்ள ஒரு பிராமணன் பத்தினியாகிய ஏமாங்கி என்பவள் காமத்தினாற் கற்புநிலை குலைந்து, கணவனையுங் கொன்று, பெரும் பொருளுங் கைக்கொண்டு, பரத்தையர் வாழும் இவ் வீதியில் வந்து, இந்த மாளிகையைக் கட்டுவித்து, இளையளாயிருந்தும் பொதுமகளிர் தொழிற் பழகிய முதுமகளாய், இளைய ஆடவர் வரவைத் தேடி உறைகின்றாள்" என்றனன். அப்போது அம் மனையின் அகத்திருந்த ஏமாங்கி புறத்தேபோந்து, சுமதி நல்வரவை வினவி கையைப்பற்றித் தழுவி உள்ளே அழைத்துக் கொண்டுபோய் இன்பத்தை நுகர்வித்தனள். நுகர்ந்த சுமதி சில தினத்திலே பல பொருளையும் இழந்து ஏமாங்கியினால் இகழப்பட்டும் பின்னும் பெரு மோகியாய்த் தனது தந்தை புரோகிதமாகவிருந்த காச்மீரகண்டத்து அரசனை அடுத்து, இரத்தினாபரணங்களும், பெரும் பொருளும் பெற்று, மீட்டும் ஏமாங்



கியை எய்தி, இன்பத்துறையின் மூழ்கிச் சில நாளில் எல்லாவற்றையும் இழந்து, மற்றுங் கொடைக்குண முடையாரை அடைந்து பொருள் பெற்றும், உற்கலதேயத்திற் பர்க்க தேவன் என்னும் பார்ப்பானைக் கொன்று பொருள் கவர்ந்து துராசாரனென்னும் பெயர் பெற்றும் ஏமாங்கியிடத்தே வந்தனன். அவன் பெருங் கொடுஞ் செய்கைகளைக் கேள்வியுற்ற ஏமாங்கி, "வருணமும் ஒழுக்கமும் கற்பும் வழுவிக் கொழுநனையுங் கொன்று பழிபூண்டு அளவில்லாத தீமைகளைச்செய்திருக்கின்றோம். இன்னமும் எம்மிடத்துள்ளாராலும் பழிபாவங்கள் உளவாதல் முறையோ" என்று வருந்தி, அச் சுமதியை விலக்கவும் விலகாது மாளவதேசத்தை எய்தி, அங்கும் ஒரு பிராமணனை வதைத்துப் பொருள்கொண்டு திரும்பி ஏமாங்கியை அடைந்தனன். உடனே ஏமாங்கி, "இப் பாவியைப் பார்ப்பதும் பாவம் பாவம்" என்று அவ்விடத்தை விட்டு அகலவும், சுமதி அவளைத் தேடிச் செல்லுமிடத்தே, தென் கைலாயமாகிய திருப்பேரூர் எல்லையில் உள்ள காட்டில் வீழ்ந்து மாண்டனன். திருப்பருப்பதமாகிய மல்லிகார்சுனத்தை வழிபட்டுத் திருப்பேரூர் வெள்ளியங்கிரியின் அருகே இறந்த சுமதியின் உடம்பை நாய் நரிகள் உண்ண எண்ணி இழுத்து காஞ்சி நதியில் இட்டன. அவ்வளவிலே ஆதிபுரியில் உடலம் வீழ்ந்ததும், ஸ்ரீ காஞ்சி தீர்த்தத்தில் பொருந்தியதும் ஆகிய புண்ணியங்களினால் சுமதி சிவலோகத்தைச் சேர்ந்தனன்.

---

## 16—முசுகுந்தன் முகம்பெறு படலம்

கலிங்க தேசத்திலே, சிவபூசை செய்யும் மெய்யன்பினையுடைய ஓர் அந்தணன் அருந்தவஞ் செய்ய, அவன் மனைவியிடத்தே, ஒரு புத்திரி அவதரித்துச் சுகுமாரி யென்னும் பெயர் பெற்றனள். அவள் பிதாவை வணங்கிச் சிவார்ச்சனை புரியும் விருப்பம் இருப்பதை விண்ணப்பஞ் செய்தனள். அதற்குப் பிதா மகிழ்ந்து, சமய தீக்கை செய்து, மந்திராதிகாரங் கொடுத்து, அது மனதிற்கு இனித்த பின் விசேட தீக்கைசெய்து அர்ச்சனாதிகாரங் கொடுத்தனன். கொடுத்த பின் சுகுமாரி அச் சிவபூசையில் நேசமுற்றுச் சூரியன் உதிக்க ஐந்து

நாழிகைக்கு முன் நித்திரை நீங்கிச் சதாசிவமூர்த்தியைத் தியானித்து சௌசம், தந்தசுத்தி, நீராடல், அநுட்டானங்கள் முடித்துத் தோழியரோடு திரு நந்தனவனஞ் சேர்ந்து, திருப்பள்ளித்தாமங் கொய்து, சிவபூசை செய்துவரு நாளில் ஒரு நாள், பூக் கொய்வதற்கு நந்தனவனத்திற் சார்ந்தனள். அவளை விதூமனென்னுங் காந்தருவன் கண்டு மையலுற்றுத் "தையலே, நீ எனக்கு மனைவியாவை எனில், உனக்கு வேண்டும் பொருள் கொடுத்துப் பணியும் புரிவேன்" என்றனன். அதற்குச் சுகுமாரி "போகத்திற் சிறிதுங் கருத்தின்றிச் சிவார்ச்சனையிற் பெரிதும் கருத்துடையேன்; ஆதலால், நீ உனதிடத்தை அடைவாயாக" என்று சொல்லியும் பிடி விடாது வருந்தி இரந்த விதூமனை நோக்கி "நீ முசுவாகக் கடவாய்" என்று சபித்தனள். உடனே அவன் முசுவாய் மலைகடோறும் உழன்று இமய மலையை எய்தி, வில்வ மரத்திலே தாவும்போது, உதிர்ந்த சருகுகள் அவ் வில்வ மூலத்திலே அமருஞ் சிவலிங்கப் பெருமான் திருமேனியை மறைத்தன. அப்போது இடப்பாகத் திருந்த உமாதேவியார் முசுவை நோக்கி, "எம்பெருமான் திருவுரு மறையச் சருகுகளை உதிர்த்தபடியால், சுகுமாரி இட்ட சாபந் தீரும்போதும் உனக்கு முசுமுகம் அமைக" என்று சபித்தனர். இதனைத் திருச்செவி சாத்தியருளிய சிவபிரான் "அளவில்லாத தீங்கையும் நீங்கச் செய்யும் வில்வத்தை நமதுருவில் வீழ்த்திய புண்ணியத்தினால், இம் முசுவுக்கு உலக முழுவதும் ஆளும் அரசினைக் கொடுப்போம். தேவீ! நீ கோபியாதே" என்று அமைத்து அம் முசுவுக்கு எதிரிலே தோன்றி, பேரரசை ஈந்து உமாதேவியோடு மறைந்தருளினார். அவ்வரத்தினால் அக்காந்தருவன் முசுமுகத்தோடு அரசகுலத்திலே உதித்து, முசுகுந்தனென்னும் பெயர் பெற்று உலகத்தை ஆளுங்கால், அகிதவுட்டிரனென்னும் அவுணன் அமரர்களைக் கலக்கி, இந்திரனை வென்று, விண்ணாட்டைத் தன்னுடாக்கி ஆளுமிடத்து, இந்திரன் இமைய மலையில் மறைந்திருந்தான். இருக்கும்போது பிருகு முனிவர் மகளைக் கண்டு மயங்கி, வலிந்து கைப்பற்றிய வழி, அம் முனிவர் சாபத்தினால் அரக்கனாகி உழன்றான். அங்ஙன நிகழுங்கால் வியாழ பகவானோடு தேவர்கள் பூமியில்வந்து முசுகுந்தச் சக்கரவர்த்தியைச் சார்ந்து நிகழ்ந்தவைகளைச்சொல்லித் தேவலோகத்தைக் காக்கும்படி



வேண்டினர். அவ்வாறு முசுகுந்தன் விண்ணுலகை அடுத்து, அகிதவுட்டிரனை வென்று அவ்வுலகைக் காத்தவழி அதனை ஆளும்படிக்கும் அமரர்கள் விரும்பினர். அவ்வாறு மூவுலகிலுஞ் செங்கோல் செலுத்தி வருநாளில் ஒருநாள் சிங்காதனத்தில் இருக்கும்போது, நாடகஞ் செய்த அரம்பை அவன் முசுமுகத்தை நோக்கி நகைத்தனள். அதனால் நாணமுற்று அவ்வரசாட்சியை அகற்றிய முசுகுந்தன் அருந்தவஞ் செய்து, சூரியன் அனுமதியினால் சிவத்தல யாத்திரை புரிந்து, நாரதமுனிவர் ஏவுதலால் திருப்பேரூரைச் சார்ந்து கலிகன்ம நாசினி யென்னுங் காஞ்சிநதியில் மூழ்கிச் சுவாமி தரிசனஞ் செய்து, அந் நதிதீரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை பண்ணி, இரண்டு தினம் அந் நதியிற் படிந்து மூன்றா நாள் மூழ்கும்போது முசுமுகம் நீங்கி நன்முகம் பெற்றுத் தானங்கள் செய்து தென் கைலாய, வடகைலாயங்களை அருச்சித்து, மருதவரையில் முருகக் கடவுளைத் தரிசித்துத் தன் பதியை அடைந்து அரசாட்சி செய்து கொண்டிருந்தான்.

---

## 17—இந்திரன் சாபந்தீர்ந்த படலம்


இமயமலைச்சாரலில் மேற்சொல்லியவாறு இந்திரன் அரக்கனாய் உழன்றமையாலும், முசுகுந்தன் நாணமுற்றுச் சென்றமையாலுந் தேவலோகம் பாழாய், தேவர்கள் வருந்தி யிருந்தபோது நாரத முனிவர் வந்து, "இமயமலையை எய்தி அரக்கவுருவை அகற்றி, இந்திரனைக் கொண்டுவருவேன்" என்று அமரர்கட்கு அறிவித்து, இமய மலையில் அவ்வரக்கனைக் கண்டு, தமது கமண்டலத்திலுள்ள நீரைத் திருவைந்தெழுத்தை உச்சரித்து முகத்திலே தெளித்தவளவில் அவன் மயக்கம் நீங்கினான். அவனை அழைத்துக்கொண்டு ஆதிபுரியிற் சென்று காஞ்சிநதியில் அமிழ்த்தினார். உடனே அரக்கவுரு நீங்கி, உறங்கி விழித்தவனைப்போலப் பழைய வுருவமும் அறிவும் பெற்றான் இந்திரனானன். அவனுக்கு முனிவார் முன்பு நிகழ்ந்த செய்திகளை உணர்த்தினர். அதற்கு இந்திரன், முசுகுந்த வேந்தனையும் முனிவரையும் வியந்து துதித்துக் காஞ்சி நதியில் மீண்டும் மூழ்கி முனிவரோடு சென்று அரசம்பலவாணரையும் பன்னீர் நிழலில் எழுந்தருளி

யிருக்குஞ் சிவலிங்கப் பெருமானையும், உமாதேவியாரையும் வணங்கினான். பின்பு தேவதச்சனை அழைத்துத் திருப்பணி செய்வித்து, பிரமகுண்டத்தில் யாகஞ்செய்து சிவபிரானிடத்து வரங்கள் பெற்று துறக்கவுலகத்தில் அரசியற்றி வாழ்ந்திருந்தான்.

---

## 18—கரிகாற்சோழன் கொலைப்பழிதீர்ந்த படலம்

காஞ்சிபுரத்தில் அரசாட்சி செய்துகொண்டிருந்த விக்கிரமசிங்க சோழன் புத்திரனாகிய கரிகாற் சோழன் வேட்டமாடும்பொருட்டுக் காட்டிற்சென்று, பல மிருகங்களையும் வேட்டையாடி அவ்விடத்தை விட்டு நீங்கி ஒரு செந்தாமரை யோடையைக்கண்டு அதில் தண்ணீர் குடிக்க வந்த ஒரு பன்றிமீது பாணந் தொடுத்தான். அவ்வளவில், அது பதைபதைத்து வீழ, அதினின்றும் ஒரு பூதம் எழுந்து அரசனைப் பார்த்து "நான் பன்றியல்ல சுவிர்த்தி யென்னும் பிராமணன்; முன்பு இல்லறத்தைவிட்டு வனத்திற் செல்லும் அறநிலையை அடைந்தும், மனைவி முதலியோர் உடன் வந்து தொடர்ந்தமையால் அவர்கள் தொடராவண்ணம் பன்றியுருவாய் வசித்தேன். பின்பு அப் பன்றியுருவை அகற்றுவதற்கு அறியாமல் நீர்வேட்கையினால் இவ்விடத்து வந்தேன். அப்படிப்பட்ட என்னை நீ கொன்றதினால், உன்னை நான் விடமாட்டேன்" என்று கொலைச்சாயையாகிய அப் பூதம் அரசனைப் பற்றியது. அரசன் அஞ்சி அந்தணரை அழைத்து, "தன்னைப் பற்றிய பூதத்தைப் பேதித்தற்கு வழி யாது?" என்று கேட்க, அதற்கு அந்தணர், "சிவத்தலயாத்திரை செய்தால் நீங்கும்" என்றனர். அவ்வாறு அரசன் சிதம்பரம், திருக்குடந்தை, திருவாரூர், காஞ்சி, காசி, சேது முதலிய திருத்தலங்களிற் சென்று வழிபடப் போயினான். அந்தச் சமயத்தில், கன்னகுலனென்னுந் தானவன் அப் பொன்னிநாட்டைக் கைப்பற்றினான். இங்ஙன நிகழுங்கால், இமயமலையில் உமையம்மை திருவவதாரஞ் செய்த போது, சிவபூசைக்குத் திருப்பள்ளித்தாமங் கொண்டுவரக் காம நோக்கினாலே தாழ்ந்த சேடியர் எழுவரும் மானுடமகளிராகும்படி சாபம்பெற்றுத் திருவரங்கத்திலே சார்ங்கமுனிவர் மனைவி சந்திரவதி



இறவாப்பனை



பிறவாப்புளியமரம்

வயிற்றில் தங்கிப் பிறந்து நிறைந்த போகங்களை அநுபவித்து உமா தேவியார் ஆணைப்படி திருப்பேரூருக்குச் செல்லும்பொருட்டுக் கரிகாற்சோழன் வரவை எதிர்பார்த்திருந்தனர். இருக்குங்காற் கரிகாற் சோழன் பல தலங்களைப் பணிந்தும் பூதம் விலகாமைபற்றி வருந்தியபோழ்து, நேர்பட்ட நாரதமுனிவர் அருளியபடி அத்திருப் பேரூருக்குச் செல்லக் கருதி, திருவானைக்காவிற் சேர்ந்து சுவாமி தரிசனஞ் செய்தான். அதனைக் கேள்வியுற்ற அம் மாதர்கள் எழுவரும் அம் மன்னவனைச் சந்தித்து, தாங்கள் வந்த வரலாற்றைத் தெரிவித்தனர். அதற்கு அரசன் மகிழ்ந்து, உமாதேவியார் திருவடிகளைச் சிந்தித்து அவ்வெழுவரையுஞ் சிவிகையில் ஏற்றுவித்து அழைத்துக்கொண்டு, பிப்பிலவனமாகிய திருப்பேரூரைச் சார்ந்து "கொலைச் சாயை கழியக் கடவது" என்று சங்கற்பஞ் செய்து காஞ்சி நதியில் மூழ்கினான். அம் மாதர்கள் எழுவரும் "சாபங் கழிக" என்று நீரில் மூழ்கினர். அரசனுக்குக் கொலைச்சாயை அகன்றது. மாதர்கள் எழுவருஞ் சாபநீங்கித் தேவமகளிரானார். ஆக இவ்வெண்மரும் வேள்வி வளர்த்து, சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்தார்கள். அவ் வெண்மருக்குஞ் சிவபிரான் எதிர் தோன்றி அவர் விரும்பிய வண்ணம் பிறவா நெறியைத் தந்தருளினார். அக்காரணத்தினால், திருப்பேரூருக்கும், காஞ்சி நதிக்கும் பிறவாநெறி என்னும் நாமம் உண்டு. அரசன் மூழ்கிய காஞ்சி நதித் துறைக்குக் கரிகாற் சோழன் துறையென்று பெயர்.

---

## 19—பள்ளுப் படலம்

திருக்கைலாச மலையிலே சிவபெருமான் தனது திருவுருவைக் கண்ணாடியிற் பார்த்து அழைத்தலும், அதினின்று ஒருவர் சுந்தரர் என்னும் நாமத்தோடு தோன்றி, ஆலகால விஷத்தை அமுது செய்யும்படி அச் சிவபிரானுக்குத் திரட்டிக் கொடுத்தமையால் ஆலால சுந்தரர் என்னுந் திருநாமம் பெற்றுத் திருத்தொண்டுகள் செய்து வந்தனர். வரும்போது, ஒருதினஞ் சிவபிரானுக்குத் திருப்பள்ளித் தாமங்கொய்யச் சென்றனர். அப்பொழுது, உமாதேவியாருக்கு

மலர்கள் கொய்யும்படி, அநிந்திதை, கமலினி என்னும் இரண்டு மாதருந் திருநந்தனவனஞ் சேர்ந்தனர். அங்கே அவ்விருவர் அழகையும் ஒருவராகிய சுந்தரர் நோக்க, அவ்வொருவர் அழகை இரண்டு மகளிரும் பார்த்தனர். பின்பு மந்தகாசத்தோடு சுந்தரர் சிவபிரானிடத்தும், நெகிழ்ந்த மனத்தோடு இரு பெண்களும் உமாதேவியாரிடத்துஞ் சென்றனர். சிவபிரான் சுந்தரரை நோக்கி மாநுடப் பிறவியிற் சேர்த்தனர். சுந்தரர், திருநாவலூர் ஆதி சைவ வேதியராகிய சடையனாரிடத்தே அவதரித்து ஆரூரனென்னும் திருப்பேர் பூண்டனர். அவ்விரண்டு மாதருட் கமலினியார் திருவாரூரில், உருத்திரகணிகையர் மரபிலே அவதரித்துப் பரவையாரென்னும் பெயர் பெற்றனர். அநிந்திதையார், ஞாயிறு என்னுந்தலத்திலே, வேளாளர் குலத்தில் அவதரித்து, சங்கிலியாரென்னும் நாமம் அடைந்தனர். பின்னர்ச் சுந்தரமூர்த்தி வேத முதலிய கலைகளை ஓதியுணர்ந்து, திருமணப் பருவம் உற்றுப் பிதாவினாலே திருமணம் நிகழுமிடையில் சிவபெருமான் ஒரு அந்தண வடிவுகொண்டு, அம் மணப் பந்தரில் வந்து சுந்தரமூர்த்தியைத் தடுத்தாட்கொண்டு திருவெண்ணெய் நல்லூரில் உள்ள அருட்டுறையென்னும் ஆலயத்தை அடைந்தனர். அடைந்த சிவபிரானைச் சுந்தரமூர்த்தி நாயனார் தொடர்ந்து, "பித்தா பிறைசூடி" என்னும் திருப் பதிகம் பாடினார். பின்பு திருநாவலூரைத் தரிசித்துத் திருத்துறையூரில் தவநெறியைத் தரும்படி திருப்பதிகம் பாடி, இரவிலே திருவதிகையில் சிவபெருமான் திருவடி சூட்டப்பெற்று, திருமாணிகுழி, திருத்தினைநகர், திருத்தில்லை என்னுந் தலங்களிற் சென்று பாடிச் சீர்காழி அடைந்து, அங்கே திருக்கைலாச மலையிலுள்ள காட்சியைக் கண்டு திருக்கோலக்கா முதலாகிய தலங்களை வணங்கித் திருவாரூர் சென்று சிவபிரானுக்குத் தோழராம்படி திருவருள் பெற்றனர். பின்பு பரவையாரை மணந்து அத் திருக்கோலத்தோடு வன்மீக நாதரை வழிபட்டு வருநாளில் ஒருநாள் விறன்மிண்ட நாயனார் கோபங்கொண்டமையால், திருத்தொண்டத் தொகை பாடிப் பணிந்தார். அதன் பின் குண்டையூர்க் கிழவர் தந்த நென்மலையைப் பரவையார் வீட்டிற் சேர்க்கும்படி கோளிலியிற் சென்று பதிகம்பாடி, நாட்டியத்தான் குடியிற் சேர்ந்து, கோட்புலி நாயனார் தம் புத்திரிகளை மணந்துகொள்ளும் வண்ணம்



வேண்ட, அவ்விருவரையுந் தம் புத்திரிகளாக வைத்துத் திருப்பதிகம் பாடி வலிவலஞ் சென்று, பின் திருப்புகலூரில் செங்கல் செழும் பொன்னாகப் பெற்றுத் திருப்பனையூரில் சிவபிரான் திருநடனக் காட்சியைத் தரிசித்து, மற்றுந்தலங்களைப் பணிந்து, திருப்பாச்சிலாச் சிரமத்தில் பொன்தரும்படி பாடி, ஏனைய திருப்பதிகளைச் சேர்ந்து வணங்கித் திருப்பேரூரிற் சென்று காஞ்சிநதியிற் படிந்து ஆலயத்தை அடைந்தனர். சுந்தரமூர்த்தி நாயனார் வருமுன்னரே உயர்திணைப் பொருளும், அஃறிணைப் பொருளுந் தாமேயென்று வேதங்கள் எடுத்தோதுதற்கேற்ப, முன்பு வேதியராய்த் தம்மைக் காட்டிப் பயனைக் கொடுத்த சிவபிரான் இழிந்தவராயுங் காட்டத் திருவுளங்கொண்டு, பள்ளனாகித் திருவிளையாட்டினால் வயலிற் சென்றனர். உமா தேவியாரும் பள்ளியாகி கழனியிலே தொழில் செய்யத் தொடங்கினார். விநாயகக்கடவுளும், முருகக்கடவுளும் பள்ளச்சிறாராய் வயலின்கண் விளையாடினர். அரிபிரமேந்திராதி தேவர்கள் நுகமும் கலப்பையும் மேழியும், கொழுவும், வாரும், கயிறும், கோலும், கடாவும், வித்தும், நாறும் ஆகிய எல்லாமாகி வந்தார்கள். சிவகணநாதர்கள் ஏவல் செய்கின்ற பள்ளர்களாய்ச் சிவபிரானாகிய பட்டிப்பள்ளர் ஏவல்வழி உழுகின்றவரும், நீர்பாய்ச்சுகின்றவரும், வரப்பின் அருகு சீக்கின்றவரும், பரம்படிக்கின்றவரும், நாற்று நடுகின்றவரும் விதைக்கின்றவரும் ஆனார்கள். இலக்குமி, சரசுவதி, இந்திராணி முதலாயினோர் பள்ளிகளாய், உமாதேவியாகிய பச்சைப் பள்ளியோடு நாற்றுநட்டார்கள். இங்ஙனம் இவர்கள் கழனியில் தொழில் செய்துகொண்டிருந்தபோது ஆலயத்திற் சென்ற சுந்தரமூர்த்தி நாயனார் சிவபிரானை அங்கே தரிசிக்கப் பெறாமல் இடபதேவரை வினவினார். அதற்கு இடபதேவர் வன்றொண்டனுக்கு ஒன்றுஞ் சொல்லவேண்டாமென்று சிவபிரான் ஆணையிட்டபடியால் கண்ணினாற் காட்ட, அக் குறிப்பின் வழியே நாயனார் வயலிடத்தே ஆராய்ந்துவந்து, சுவாமியையும் அம்மையையுங் கண்டு வணங்கினார். நாயனாரோடு சிவபெருமான் கரையேறிக் காஞ்சிநதியில் ஸ்நானஞ்செய்து ஆலயத்தை அடைந்து இடபதேவர் முகத்தை மண்டொடு கருவியாற் சேதிக்க, அதற்கு இடபதேவர் அஞ்சி வணங்கிக் கொம்பினாலே ஒரு தீர்த்தம் அகழ்ந்து சிவலிங்கந் தாபித்துப் பூசித்துக் குற்றத்தினின்று நீங்கினார்.

பின்னர்ச் சிவபிரான் வெள்ளியம்பலத்திலே திருநடனஞ் செய்தார். அதனைத் தரிசித்து நாயனார் பொன் தரும்படி பாடியுங் கொடாமல் உனது பாட்டுக்குப் பரிசில் நமதாட்டே என்றும், இது முத்தித் தலமாதலால் மற்றைய தலங்களில் பொன்தருவோம் சேரமானுக்கும் உன் செய்தி தெரிவித்தோம் என்றுஞ் சிவபிரான் அருளிச் செய்தனர். நாயனார் விடைபெற்றுப் பல தலங்களையும் பணிந்து, திருமுதுகுன்றில் சென்று பொன் பெற்று, ஆற்றிலிட்டுக் கடம்பூர் வணங்கி, ஸ்ரீ சிதம்பரஞ் சேர்ந்து பொன்னம்பலத்திலே ஸ்ரீ ஞான நடராஜர் திருப்பேரூரின் கண்ணதாகிய வெள்ளியம்பல நடனத்தைக் காட்ட தரிசித்து, "மடித்தாடு மடிமைக்கண்" எனத் திருப்பதிகம் எடுத்து, அதில் "பேரூரர்ப் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே" என்று சிறப்பித்துப் பாடியருளித் திருவாரூர் சேர்ந்து, ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்திலெடுத்துப் பரவையாருக்குக் கொடுத்துச் சோணாட்டுத் திருப்பதிகளையும், நடுநாட்டுத் திருத்தலங்களையும் தொண்டைநாட்டுத் திருத்தலங்களையுந் தொழுது, ஸ்ரீ காஞ்சியில், திருவேகம்ப முதலிய தலங்களைத் தரிசித்துத் திருவோண காந்தன்றளியிற் பொன்பெற்றுத் திருவொற்றியூர் உற்று, சங்கிலியாரை மணந்து வாழ்ந்து திருவாரூர் சேர்ந்து, பரவையார் ஊடல் தீர்க்கும்படி தூதுசெல்லும் வண்ணம் பாடி, நாகைக் காரோணத்திற் பல பொருள் பெற்றுத் திருவாரூரிற் சேரர்பிரான்வர, அவரோடு கலந்து, மலைநாட்டுக்குச் செல்லும்போது, மத்தியிலே, திருவையாற்றிற் காவேரிநதியைத் தடுத்துத் தரிசித்துத் திருவஞ்சைக் களஞ்சேர்ந்து, சேரமான் பெருமானாயனாரிடத்தே பெரும்பொருள் பெற்றுத் திரும்புங்கால் வழியிலே பறிகொடுத்து திருமுருகன் பூண்டியில் அதைத் திரும்பப் பெற்றுத் திருவாரூருக்குச் சென்று, மீட்டும் மலைநாட்டுக்குச் செல்லும் மார்க்கத்திலே, திருப்புக் கொளியூரிலே, முதலைவாய்ப் பிள்ளைதரும் வண்ணம்பாடி, திருவஞ்சைக் களஞ்சேர்ந்து, வெள்ளை யானைமீது திருமாலாதி தேவர்சூழத் திருக்கைலாச மலையைச் சேர்ந்து, சிவபெருமானுக்குப் பழைய திருத்தொண்டு செய்துகொண்டிருந்தனர். பரவையாரும், சங்கிலியாரும் முறையே கமலினியாரும், அநிந்திதையாருமாகித் திருக்கைலாசத்தை அடைந்து, உமாதேவியாருக்குத் திருப்பணி செய்துகொண்டிருந்தனர்.



## 20—அழகிய திருச்சிற்றம்பலப் படலம்

சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பேரூரை அடுத்து வணங்கிச் சென்று, தில்லைச்சிற்றம்பலத்திலே திரு நடராசரைப்பாடுந் திருப்பதிகத்தில் "பேரூர்ப் பெருமானைப் பெற்றோம்" என்று அருளிச் செய்த தேவாரத்தைத் தில்லைவாழந்தணர் கேட்டு நாயனாரைநோக்கி இத் தில்லைத் தலம்போல் இவ் வுலகத்திலே ஒரு தலம் உண்டோவென்று வினவியதற்கு, "இக் கனகசபையிலே, தாண்டவஞ் செய்வதுபோலத் திருப்பேரூர் வெள்ளியம்பலத்திலே சிவபிரான் திருநடனஞ் செய்தருளுகின்றார். அத்தலத்தில், முத்தி தருவதன்றி, தருமார்த்த காமங்களைத் தருதலில்லை" என்று நாயனார் நவின்றனர். உடனே தில்லைவாழந்தணர் திருப்பேரூரைச் சேர்ந்து, ஸ்ரீ காஞ்சிநதியில் குளித்துத் திருமேனியிலே, சிவசின்னங்களாகிய திருநீறும் கண்டிகையும் பூண்டு, சுவாமியையும் அம்மையையுந் தரிசித்து, அரசம்பலவாணரை வணங்கி, மற்றைநாள், காலவனீச்சரத்திற்கு அக்கினி திக்கிலே சிவலிங்கந் தாபித்துப் பூசித்து அங்கே வசித்தார்கள். அப்பொழுது வெள்ளியம்பலத்திலே, சிவபிரான் திருநடனஞ்செய்ய அதனை தில்லைவாழந்தணர் தரிசித்து, ஆன்மாவுஞ் சிவமும் அத்துவிதமாய், மனம் அழிந்து அவசமாய் நின்று துதித்து விடைபெற்றுக் கீழைச் சிதம்பரஞ் சேர்ந்து பண்டைக்காலம்போல் வாழ்ந்திருந்தனர். அவ்வந்தணர் பூசித்த ஆலயத்திற்கு அழகிய திருச்சிற்றம்பலமென்றும், சுவாமிக்கு அழகிய திருச்சிற்றம்பலமுடையாரென்றும் பெயர். இக் கோயில் காலவேசுவரத்திற்குத் தென் கீழ்த்திசையில் உள்ளது. இக் கோயிலில் எழுந்தருளிய பெருமானுக்கு இடங்கை நாயகேசுவர முடையார் என்ற பேரும் உண்டென்று தெரிகிறது.

## 21—தீர்த்தப் படலம்

திருப்பேரூர் எல்லை பட்டீச்சுரத்தைச் சூழ மூன்று யோசனை அளவினையுடையது. அவ்வெல்லையில், தேவர், அசுரர், முனிவர் முதலாயினோர் தாபித்த சிவலிங்கங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் அள

வில்லை. பூருவ பரார்த்தத்திலே, பிரமதேவர் சிருட்டித் தொழிலைக் குறித்துச் சிவபிரானை நோக்கித் தவஞ் செய்தனர். அப்பொழுது, முன்னர் அதிகாரஞ் செய்த பிரமர்கள், நாரணர்கள், இருடிகள், யோகிகள், தேவர்கள் அனைவருங்கூடி வீடுபேற்றை நாடிப் பல வகைத் தவங்களைப் புரிந்தனர். அவர்களுக்குத் திருவருள்செய்யக் கருதிச் சிவபெருமான் உமாதேவியார் காண அத் திருப்பேரூர் வெள்ளியங்கிரியிலே திருநடனஞ் செய்தருளினர். அந்நிருத்தத்தை அனைவருந் தரிசித்து, ஆனந்தத்தில் மூழ்கியிருக்கும்போது, எம்பெருமான் திருவுருவிலே தரித்த சர்ப்பங்கள் ஆடல் வேகத்தைச் சகிக்க மாட்டாமல் விஷத்தை உமிழ, அவ்வெம்மை தாக்க, எல்லாருங் காத்தருளவேண்டுமென்று முறையிட்டு வருந்தினர். அதற்குத் திருநடராசர் இரக்கமுற்று, கங்கையை நோக்கி, விஷவெம்மை தணியும் வண்ணம் நதியாக ஒழுகும்படி ஆஞ்ஞாபித்தவளவில், அவ்விரசதகிரியின் செவியடியுரோமமான வன்னிமரமூலத்தினின்றுங் கங்கையானது பெருவெள்ளமாக எழுந்து சென்றது. அனைவரும் விடவெப்பத்தாலாகிய தாகசோகங்கள் நீங்கும்படி அந் நீரையுண்டு, அதில் மூழ்கி, முத்தியுஞ் சித்திக்கப் பெற்றார்கள். அந் நதிக்குச் சிவநதி, அமிர்தவுந்தி, தட்சிணகங்கை, ஆதிகங்கை, ஞானதோயை, பிப்பிலநதி, பிறவாநெறி, கலிகன்மநாசினி, விருத்தகங்கை, பிரயாகை காஞ்சிநதி என்று பல காரணப் பெயர்களுண்டு. அத் தீர்த்தத்தைத் தீண்டிய கீழானவருஞ் சிவசரியை முதலியவைகளாற் சித்திக்குஞ் சிவசாலோகாதி முத்திகளைப்பெறுவர். அதிபாதக மகாபாதக உபபாதகங்களின்று நீங்குவர். அந் நதிதீரத்தில் தபஞ் செபந் தியானம் யோகம் வேள்வி முதலியவற்றைச் செய்தால் ஒன்று அனந்தமாய்ப் பெருகும். வடகைலாசத்திலுள்ள பிரமதீர்த்தத்தில் ஒரு மண்டலம் மூழ்கி அதனைப் பருகினோர்க்கு மலடுகளும், பேய் முதலியவும் நோய்களும் நீங்கும். வேண்டிய காரியங்கள் எளிதில் கைகூடும். இறுதியிற் பிரமபதங் கிடைக்கும். அப் பிரம தீர்த்தத்திற்குக் கிழக்கேயுள்ள காலவதீர்த்தத்தில் மூழ்கினாற் பிறவி நீங்கும். பட்டிநாயகருக்குக் கீழைத் திசையிலுள்ள சூரிய தீர்த்தம் கண்ணொளிதந்து, இறுதியில் ஆதித்திய வுலகிற் சேர்க்கும். இந்திர தீர்த்தம் இட்ட காமியங்களை ஈந்து, முடிவில் இந்திர லோகத்தில் இருத்தும். பட்டீச்சரத்துக்கு



ஈசாநதிக்கிலுள்ள கந்த தீர்த்தத்தின் மூழ்கினோர் பேய் பூத முதலியவற்றி னீங்கிச் செல்வம், வீரம், ஞானம், முத்தி என்பவைகளை எய்துவர். அகத்திய மகாமுனிவர் மலைக்கு கீழ்பாலுள்ள அகத்திய தீர்த்தம், யோகி தீர்த்தம், சித்த தீர்த்தம் என்பவை வேண்டியவைகளைக் கூட்டுவிக்கும். பட்டீச்சரத்தின் உத்திரதிக்கிலுள்ள நச்சுப் பொய்கை நீரை அருந்தினோர் இறந்து முத்தி சேர்வர். சித்தர்கள் கைப்படில், தாமிர முதலியவற்றைப் பொன்னாக்கி அற்புதங்கள் செய்வர். காஞ்சி நதியின் வடகரையிலுள்ள வசிட்ட தீர்த்தம், வாமதேவ தீர்த்தம், பார்க்கவ தீர்த்தம், வியாழ தீர்த்தம் நான்கும் பெரும் பயனைத் தரும். வயிரவக் கடவுள் திருமுன்பு சிருங்கக்கிணறாகிய சிருங்க தீர்த்தமும், உமாதேவி சந்நதியில் துர்க்கைத் தீர்த்தமும், க்ஷேத்திரபால தீர்த்தமும், அமுதலிங்கேசர் ஆலயத்திற்குத் தென்றிசையில் காளி தீர்த்தமும், சக்கர தீர்த்தமும், தென்கிழக்கெல்லையில் குலசேகர தீர்த்தமும், நந்தி தீர்த்தமும், அக்கினி தீர்த்தமும், ஏம தீர்த்தமும், இயக்க தீர்த்தமும், சண்டேசர் ஆலயத்திற்கு வாயுதிசையில் சண்டேசுர தீர்த்தமும், சோம தீர்த்தமும், மரகதவல்லியம்மை யாலயத்திற்கு வாயுதிக்கில் பிரமதகண தீர்த்தமும், பட்டீச்சரத்திற்கு வாயுதிசையில் சப்தமாதர்கள் தீர்த்தமும் விளங்கும். மேல்பாலுள்ள பாலதீர்த்தத்தில் மூழ்கினால், நரை, திரை, மூப்புகள் அகலும். முசுகுந்த தீர்த்தமும், அங்கிர தீர்த்தமும், இந்திர தீர்த்தமும், சோழ தீர்த்தமும், காமதேனு தீர்த்தமும், கன்னிகை தீர்த்தமும், ஸ்ரீ காஞ்சிநதியின் மேற்றிசை முதற் கீழ்த்திசை யளவும் உள்ளன. இத் தீர்த்தங்களின் மூழ்குவார் மண்ணுலகிற் செல்வமும், விண்ணுலகிற் போகமும், பின்பு வீடுங் கூடுவர்.


## 22—விம்மிதப் படலம்

திருப்பேரூரிலே, சிவமயமாகிய வெள்ளியங்கிரியில், அநேக விம்மிதங்கள் உள்ளன. யாவை எனில்? தன்னை யடுத்தவரை அயலோர்கண்ணுக்குக் காட்டாத திவ்வியாஞ்சனமரம், காலிற் பாதுகையாகத் தரித்தால் ஆகாயத்திற் கொண்டுசெல்லும் மரம், பசிதாகந் தீர்க்கும் மரம், காயசித்தி தரும் மரம், யோகசித்தி மரம் முதலிய

மரங்களும், மாங்கிசபேதி முதலியவும், வசியாதிகளைத் தருவனவுமாகிய கொடிகளும், செடிகளும், அயக்காந்த முதலியவும், நாற்கோட்டு யானைகளும், நவரத்தினங்களும், அவைகள் விளைநிலங்களும், சலத் தம்பஞ் செய்தல் முதலிய மணிகளும், ரசமணிக்கிணறு முதலியவும், அற்புதக் குகைகளும், அற்புதமான சரசுகளுமாம். அவ்வெள்ளிமலைக்குத் தென்பால், எமகிரியில், எமபுரம் ஒன்றுண்டு. அதில் விரிந்த ஒரு குகையும், அதில் ஒரு தாமரையோடையும் உள்ளன. அது சருவ சித்தியையுந் தரும். அம்மலைக்குத் தெற்கேயுள்ள பாற்கிணற்றுநீரை அள்ளியுண்டால் ஆறு மாதம் பசிதாகமில்லையாகும். அதற்குக் கீழ்த் திசையில் மூன்று யோசனை ஒளிவிடுஞ் சோதிமரம் உண்டு. அதில், சர்க்கரை நதி முதலிய நதிகள் உண்டு. அந் நதிக்கரையில் சித்தர் சாத்தியர் தங்குவர். அந்நதிக்கு மேல் பால், அத்திமரச் சோலையில், தேவர் முனிவர் முதலியோர் தவஞ் செய்வர். அதன் பக்கத்தைச் சேர்ந்த பொருளைக் கல்லாக்குஞ் சிலாநதி தீரத்தில், கருதியவுடன் மரணமும் முத்தியுஞ் சித்திக்கும். அங்கே ஔடதங்கள் அநேகமுள்ளன. அதன் வடக்கேயுள்ள குங்கிலிய மரப்பாலினால் அநந்த சித்திகளாகும். அதன் ஈசானத் திக்கிலிருக்கும் பளிங்குமலைச் சிலையினாற் சிவலிங்கம் இயற்றிப் பூசித்தால் விரைவிலே சிவபிரான் கருணை புரிவர். அப்படிகவரையின் வடபால் ஒரு பெரிய குகை உண்டு. அதற்கடுக்கப் பாரதசரசின் கரையில், கோடி தூணுடைய கனகமண்டபம் உளது. அதிலே சிவலிங்கப் பெருமான், விநாயகக் கடவுள், முருகக் கடவுள், அரிபிரமேந்திராதி தேவர்கள் வழிபடும் வண்ணம் எழுந்தருளியிருப்பார். அங்கே காலந்தோறும் முழங்கும் பஞ்சதுந்துபியின் ஒலி முத்திகாமிகள் செவிக்குப் புலப்படும். அம் மண்டபத்தின் வடமேற்குத் தென் மேற்கிலுள்ள ஓடைக் கரையில், சந்தானகரணி முதலிய பல மருந்துகள் உண்டு. அங்குள்ள சந்தன மரச் செறிவில் ஐந்தலை நாகம், ஏழுதலை நாகங்கள் இயங்கும். பிரமகிரியில் சிலாநதி முதலியனவுண்டு. விட்டுணு மலையில், விட்டுணு தீர்த்தம் ஏல முதலியன அதிசயமாகவுள்ளன. மருதவரையில், காமதேனு உலாவும் வடகயிலைச் சாரலிலே, இறவாப்பனையும், பிறவாப் புளியும் உறையும். பன்னீர்மரமாகிய சித்தேசமரம் ஆதிலிங்க மூர்த்திக்கு அருகேயுள்ளது. அங்கே காஞ்சிமரமு முளது. அதன் மூலத்தினின்று செல்லு நதிக்கு காஞ்சிநதி யென்று பெயர். இன்னும் பல அதிசயங்களு முண்டு.



அகோர வீரபத்திரர்



யானையுரி போர்த்த மூர்த்தி

## 23—வியாதன் கழுவாய்ப் படலம்

ஸ்ரீ காசித் தலத்திலே, சிவபிரானைத் தொழுது பல முனிவருந் தவஞ் செய்யுங்கால் ஒரு தினம் விட்டுணுவே பரம்பொருளென்றும், உருத்திரனே பரம்பொருளென்றும் தம்முளே கலாஞ்செய்து, வியாச முனிவரை வினவினர். அதற்கு வியாச முனிவர், "வேதங்களெல்லாம் விளக்கும் பரம்பொருள் விட்டுணுவே" என்றபோது, விட்டுணு பக்கமாகிய முனிவர்கள் மகிழ்ந்தனர். உருத்திரமூர்த்தியே பரப்பிரமமென்னும் முனிவர் குழாங்கள் வியாச முனிவரை நோக்கி, "உயர்ந்தோர் அனைவருஞ் சிவபிரானே பரமென்று தெளிந்திருக்கவும், அதற்கு விரோதமாக நீவிர் கூறினமையால், ஸ்ரீ விசுவேசர் சந்நிதானத்தில் விட்டுணுவே பரமென்று கூறுவீராயின் அதனை உறுதியாக் கொள்வோம்" என்றனர். அதனைக் கேட்ட வியாச முனிவர் தீயூழினாற் சற்றும் அஞ்சாது கங்காநதியில் மூழ்கி, ஸ்ரீ விசுவேசர் திருமுன்னர்ச் சென்று சிரசின்மீது இரண்டு கைகளையும் மேலுயர்த்திக்கொண்டு, "விட்டுணுவே பரம்" என்று சொன்னார். அதனையுணர்ந்த திருநந்தி தேவர் வியாச முனிவரை நோக்கிக் கோபித்துச் சாபமிட்டவளவில், மேலே உயர்த்திய கையோடு நாவுந் தம்பிக்க, ஸ்ரீ விசுவேசர் சந்நிதியில் நாட்டிய வெற்றித் தம்பம்போல வியாச முனிவர் நின்றார். விட்டுணுவைப் பரமென்று கருதும் மதத்தாரன்றி மற்றைய பல மதத்தினரும் ஸ்ரீ விசுவநாதரே பரப்பிரமமென்று மெய்ம்மையாக வுணர்ந்து உய்ந்தார்கள். அப்பொழுது வியாச முனிவர் விட்டுணுவைத் தியானிக்க அவர் அங்கே வந்து வியாசரை நோக்கி "ஏ வியாசனே, நீ என்னையுங் கெடுக்க, இங்கே எத்தனைப் பெருங் கொடுஞ் செய்கை புரிந்தாய்? சிவபெருமான் அருட்சத்தி எங்கும் வியாபித்திருத்தலால் என்போன்ற தேவர்களாகிய பசுக்களையும் பதியென்று வேதங்கள் உபசரித்து ஓதியதாம். ஆதலால், தகழிணாமூர்த்தியாக எழுந்தருளியிருக்குஞ் சிவபிரான் திருவடிகளைத் தியானித்து உய்யக் கடவாய்" என்று சொல்லி மறைந்தனர். வியாச முனிவர் அதனைக் கேட்டுச் சிவபெருமானைச் சிந்தித்துக் காத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கவே, பிரமாவும், விட்டுணுவும் இரு பக்கத்தும் பாதுகைகளைத் தாங்கும்வண்ணம் இடபாரூடராய் விசுவநாதர் எழுந்தருளி வியாசரைநோக்கி "நின்னுடைய முதல் வஞ்சகர்

சுட்டப்பட்ட விட்டுணு நமது அகத்தொண்டின் கண்ணே நிற்பதைக் காண்பாய். நமது தன்மையிற் சிறிதும் அறியாய். நீ புரிந்த குற்றம் பெரிதாயினும் நம்மைத் தியானித்தபடியால் திருப்பேரூரைச் சார்வாயாகிற்றீரும்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். உடனே வியாச முனிவர் திருப்பேரூர் சேர்ந்து ஸ்ரீ காஞ்சி நதியில் மூழ்கி, வெள்ளியங்கிரியை அடுத்து சுவாமியைத் தரிசித்துத் துதித்தவளவில் கைகளுந் தாழ்ந்து நாவும் அசைவுற்றது. அப்பொழுது கைகளாற் சிவபூசை செய்து நாவினாற் புகழ்ந்து மகிழ்ந்து வாழ்ந்தனர்.

---

## 24—விசுவாமித்திரன் வரம்பெறு படலம்

பிரமாவும், விஷ்ணுவும் யான் பரம் யான் பரம் என்று அளவில் காலம் கலகஞ்செய்தவழி அதனை அகற்றும்படித் திருவுளங்கொண்டு சிவபெருமான் எதிர் தோன்றினார். அப்போது திருமால் அஞ்சி ஓடினர். பிரமா அஞ்சாது நின்று இகழ்ந்தவழி சிவபிரான் கோபங் கொள்ள, அதிலே வயிரவக்கடவுள் தோன்றி, இகழ்ந்த பிரமன் சிரத்தைக் கொய்து செருக்கினைக் களைந்தனர். பின்பு மாயோனாதி தேவர்கள் உதிரத்தையும் வாங்கி மனத்தருக்கைக் கெடுத்து, ஸ்ரீ காசி க்ஷேத்திரஞ் சேர்ந்து காவற்றொழிலைக் கைக்கொண்டு, அங்கே தங்கும் ஆன்மாக்கள் புரியும் பாவத்தைத் தமது புயத்திற் பொருந்துஞ் சூலப் படையிற் சேர்த்துச் சுழற்றிப் போக்கும் அற்புதத் தொழிலும் பூண்டனர். இங்ஙனம் இயமனது ஆணை செல்லாத ஸ்ரீ காசி மான்மியத்தை நோக்கி, விசுவாமித்திர முனிவர் வந்து அத்திருப்பதியில் வதிந்து சிவயோகஞ் செய்யுங்கால் ஒரு தினத்திலே, சிவபிரான் திருப்பேரூரின் கண்ணதாகிய வெள்ளியம்பலத்திலே திருநடனஞ் செய்துகாட்டி, அத் திருப்பேரூர் எல்லையில் உள்ள உயிர்கள் இயற்றும் பாவங்களைத் தண்டஞ் செய்யாது போக்கி, வீட்டிற் கூட்டும் விதத்தையும் விளக்கியருளினார். அங்ஙனம் திருப்பேரூரின் பெருமையை யோகக் காட்சியிற் கண்ட முனிவர் அத் திருப்பதியை அடுத்துக் காஞ்சி நதியில் முழுகிச் சுவாமியையும் அம்மையையும் வழிபட்டு வெள்ளியம்பலத்தையுந் தரிசித்தார். மற்றைநாட் காலை



யில் காஞ்சியாற்றில் மூழ்கி நித்திய நியமங்களை முடித்துச் சிவலிங்கந் தாபித்துப் பூசித்துச் சிவயோகத்தில் வசிக்குங்கால் ஒரு நாள், சிவபிரான் இடபாரூடராய் எழுந்தருளினர். அப்பொழுது முனிவர் வணங்கித் துதித்து எம்பெருமானிடத்தே "அடியேனுக்குப் பத்தியைத் தந்தருளுக. முத்தியைத் தரும் இத்திருப்பதியில் யாவருக்கும் ஏனைத் தர்மார்த்த காமங்களையும் அருளுக. இத்தலம் குருக்ஷேத்திரமென்னுந் திருநாமம் பெறுக" என்பது முதலாகிய வரங்களை வேண்டிப் பெற்று அப்பதியிலே சிவயோகத்திற் பயின்று வசித்தனர்.

---

## 25 –அந்தகனரசுபெறு படலம்

சிவபிரான் விசுவாமித்திர முனிவருக்கு அருளிய வரத்தினால் தவத்தினராகிய ஆன்றோரேயன்றி பாவிகளும் ஆதிபுரியை அடைந்து வழிபட்டு முத்தியைப் பெறுதலால், நிரயத்தில் அழுந்துவாரின்றி இயமலோகம் பாழாயிற்று. உடனே இயமன் அப்பதியை அடுத்து தக்கிண கங்கையாகிய ஸ்ரீ காஞ்சி நதியிற் குளித்துச் சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்கங்களை அணிந்து, பட்டீசரையும், மரகதவல்லி யம்மையையும் பணிந்து இரசதசபையையுந் தரிசித்து, ஓரிடத்தே வசித்துத் திருவைந்தெழுத்தைச் செபித்தான். மற்றைநாட் காலையில் நித்தியகர்மங்களை முடித்துச் சிவலிங்கப் பிரதிட்டைசெய்து பத்தியோடு பூசித்து வரும்போது ஒருநாள் பரம கருணாநிதியாகிய சிவபெருமான் இடபாரூடராய் எழிந்தருளி வினவியதற்கு இயமன் "பாவிகளும் திருப்பேரூரைச் சேவித்து வீடு கூடுதலால் அடியேன் அரசாட்சி நீங்கினமைபற்றி இங்கே வந்தனன்" என்று விண்ணப்பஞ் செய்ய, அதனைக் கேட்டருளிய மகாதேவர் "எவ்விடத்தே புண்ணியஞ் செய்தாலும் அவ்வுயிர்களிடத்து நினதாணை செல்லாதல்லவா? அன்னோரே நம்மிடத்து அன்புடையவராய் முத்தி பெறுவர். ஏனையோர் நினதாணைக்குட்படுவர். உனதரசினைச் செலுத்துவாய்" என்று திருவாய் மலர்ந்து அவ்வருட்குறியில் மறைந்தருளினார். இயமன் தனது நகரைச் சார்ந்து செங்கோல் செலுத்தி அரசுபுரிந்தான். திருப்பேரூரில் எழுந்தருளியிருக்குஞ் சிவபிரான் கிரேதா

யுகத்தில் விசுவநாதர், திரேதாயுகத்தில் அமிர்தலிங்கேசர், துவாபர யுகத்தில் தருமநாதர், கலியுகத்திற் பட்டீச்சுரர் என்னுந் திருநாமங் களைப் பெறுவர்.

---

## 26—தல விசேடப் படலம்

பிரமா ஒரு கற்பத்திலே சிவபெருமான் திருவருளினுல், உலகத் தையும், உயிர்களையும் படைத்துப் பல சிவாலயங்களையும், தீர்த்தங் களையும் நிருமித்து, அற்ப உணர்வினுலே இறுமாந்திருக்கும்போது 'திருப்பேரூரும், ஸ்ரீ காஞ்சி நதியும் நின்னுற் படைக்கப்பட்ட னவோ'' என்று ஆகாயத்தினின்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அக்கணமே பிரமா, தேவர், முனிவர் சூழச் சென்று இமயமலைக் கண்ணதாகிய ஸ்ரீ கைலாய மலையிலே தேவதேவரைப் பணிந்து திருப்பேரூர் மான்மியத்தைக் கேட்க, அதற்குப் பரமசிவன் அருளிச் செய்வாராயினர்: "பிரமனே நீ பூர்வ பரார்த்தத்திலே சிருட்டித் தொழில் கைகூடும்படி எமதடியிற் பூசித்திருந்த காலையில் நாமே திருப்பேரூரைப் படைத்து நடனமுஞ் செய்தோம். அற்றைத் தினமுதல் ஆன்மாக்கள் நமதடியிற் கலக்கும் வண்ணம் அனவரத மும் ஆனந்த தாண்டவம் புரிகின்றோம். இரசத மலையும் ஆனோம். நமது முடியிலுள்ள கங்கையே காஞ்சிநதியாகத் தவழும். அத்த லத்தை அத்தாணித் தானமாகக் கொண்டு வீற்றிருக்கின்றோம். அத்தலம் நித்தியமென்பதற்கு இறவாப்பனையிருத்தல் முதலாயினவே சான்றும். நித்தராயிருக்கக் கருதினவர் அங்கே நம்மை வழிபட்டுச் சிரஞ்சீவியா யிருக்கின்றார். முத்தி பெற்றவர் அளவில்லாதவர். விசுவாமித்திரன் அங்கே தவம்புரிந்து வரங்கள் பெற்று வசிட்ட னோடு விரோதித்து, பிராமண முனிவனுக நினைந்து மீட்டுந் தவஞ் செய்யுங்கால், அயோத்தி நகரின் அரசனுகிய திரிசங்கு தன் குலகுரு வாகிய வசிட்டனையும், அவன் புத்திரரையும் அடுத்து, உடலோடு சுவர்க்கத்தில் வசிக்க விரும்பியவழி, இப்போது அத்துணைப் பக்கு வம் உனக்கு அமையாமையாற் சில காலஞ் சென்று யோசிப்போம் என்றதற்கு 'மற்றொரு குருவைச் சரணம் புகுந்து பெறுவா'மெனச் சொல்லிய திரிசங்கு, அவ்வசிட்டனுதியாரால், 'நீசனுகக் கடவாய்'



என்னுஞ் சாபம்பெற்று விசுவாமித்திரனைச் சேர்ந்து நிகழ்ந்தவை களைக் கூறினன். கூறவும் விசுவாமித்திரன் ஒரு வேள்வி செய்து திரிசங்குவை இந்திரன் சபை நடுவே இருத்தினுன். இருத்திய வளவில், இந்திரன் கோபித்து, நீசனுகிய திரிசங்குவைப் பூமியின் விழும்படி தள்ள, அத் திரிசங்கு விசுவாமித்திரனை அழைத்துக் காத்த ருளுக என முறையிட்டு விழும்போது, விசுவாமித்திரன் மெய்வார்க் குஞ் கருக்கை வீசி அந்தரத்திலே திரிசங்குவை நிறுத்தி சில நக்ஷத் திரங்களைப் பெயர்த்துப் புவனம் படைக்கத் தொடங்கினன். அப்போது அமரர்கள் வணங்கியவளவில், அந்தர சுவர்க்கம் இயற்றி திரிசங்குவை அதிலிருந்து போகம் அனுபவிக்கும்படி செய்து, தவ வலிமையினுல் பிராமண முனியெனும் பெயர்பெற்றனன். இங்ஙனந் தவமுற்றுதலால், தவசித்திபுரமெனவும், நாம் ஆனந்த தாண்டவஞ் செய்தலால் மேலைச்சிதம்பரமெனவும், நமதுருவாகிய வெள்ளி மலையைத் தன்னிடத்துக்கொண்டு பாவத்தைப் போக்கி முத்தியைத் தருதலால் திருப்பேரூரெனவும், பத்திபுரி, பரம்புரம், ககனபுரி, போதபுரம், நாட்டியபுரம், ஆதிபுரி, வன்மீக நகரம், மேருநகரம், ஞானபுரம், பிரமநகரம், குருக்ஷேத்திரம், பசுபதிபுரம், இரசதசபை, குச்தகானம், சிற்சபை, கலியாணபுரம், போதிக்கானம், தேனுபுரம், பிறவாநெறி ஆதியாகவும் அத் திருப்பேரூர் காரணப் பெயர்கள் பூண்டது என்று திருவாய் மலர்ந்தருளினர். பின்னர்ப் பிரமா விடைபெற்றுத் திருப்பேரூர் சேர்ந்து காஞ்சிநதியில் மூழ்கி, சுவாமி யையும், அம்மையையும் வணங்கி, வெள்ளியம்பலத்தையுந் தரிசித்து, சிலதினம் வதிந்து, பின்பு சத்தியலோகஞ் சார்ந்து வாழ்ந்திருந்தார்.

---

## 27—அங்கிரன் கதிபெறு படலம்

வங்கதேசத்திலுள்ள வனத்தில் அங்கிரனென்னும் வேடன் மனைவி, மக்கள், சுற்றங்கள் சூழப் பெருஞ் செல்வமுற்றுப் படைக் கலங்களோடு பலருந்தன்னைப் போற்றும்படி, வழிச் செல்வோர் பொருள்களை அபகரித்து வாழுங்கால், மாமக தீர்த்த ஸ்நானஞ்செய் யவும், மணங்கள் செய்யவுஞ் சுற்றத்தவர்களோடு பிராமணர்கள்

அக் காட்டின்வழியே செல்வாராயினர். சென்று முடுக்கரை அடுத்தவுடனே அனைவரையுங் கொன்று இரத்தினாபரணங்களையும், பொன்னணிகளையும், பீதாம்பராதி துணிமூட்டைகளையும், எருத்துகளின்மீது ஏற்றிய திரவிய மூட்டைகளையுங் கொள்ளைகொண்டு தனதிடத்தை அடைந்தான். அப்பொழுது மக்கள் முதலாயினார் ஒருங்குகூடி "பொருள்களை மாத்திரம் அபகரியாமல் அனைவரையுங் கொலைசெய்தமையால் அரசர் அறிந்து குலத்தோடு எங்களை ஒழிப்பார்" என்று தம்முள்ளே துணிந்து, அவ்வங்கிரனை விலக்கினர். விலக்கிய அற்றைநாள் அர்த்தராத்திரியில், மக்களையும், சுற்றத்தாரையும் கொன்று, அவ்விடத்தைவிட்டு தட்சிண கைலாசத்தின் புறத்திற் சேர்ந்து, பல மிருகங்களையும், பட்சிகளையுங் கொன்று பட்சித்துவரும்போது ஒருநாள், ஓரந்தணன் பத்தினியோடு வர அவ்வேதியனைக் கொலைசெய்து அவன் பத்தினியைக் கைப்பற்றி இன்பம் நுகர்ந்தனன். பின்பு வேட்டமாட விரும்பி வில்லோடு காட்டில் உழன்றமையால், பசியும் தாகமுமுற்றுத் திரும்பும்போது காஞ்சிநதியைக் கண்டு சமீபித்து அந்நீரையுண்டு கரையிலேறுங்கால், ஒரு பாம்பு தீண்டி மாண்டனன். அவனை யமதூதர் கொண்டுபோகின்ற மார்க்கத்தில் சிவகணங்கள் அத் தூதர்களைத் தண்டித்து அங்கிரனை விமானத்தில் ஏற்றி திருக்கைலாசத்திற் சேர்த்தனர். இதனையுணர்ந்த இயமன் திருக்கைலாசபதியை அடுத்து வணங்கி நிகழ்ந்தவைகளை விண்ணப்பஞ் செய்ய, அதற்குச் சிவபிரான் "அங்கிரன் சிறிதும் புண்ணியம் புரியாத பெரும் பாதகனேயாயினும், திருப்பேரூரின் கண்ணதாகிய நமதுருவான வெள்ளியங்கிரியை அடுத்து நித்தமுந் தரிசித்தமையாலும், காஞ்சிநதி நீரைப் பருகிக் கரையில் இறந்த அவனுருவம் அந்நதிநீரில் உருண்டு விழ, அதனை நரிகள் திருநீற்று மேட்டில் இட்டமையாலும் பாவங்களெல்லாம் போய்ப் புண்ணியவானாய் நமது கயிலை மலையை அடைந்தான். ஆதலால், திருப்பேரூர் எல்லையினன்றி மற்றைய எல்லையில் மரித்தோர் மாட்டு உனது அதிகாரத்தைச் செலுத்துவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே இயமன் வணங்கி விடைபெற்றுத் தன் பதியை எய்தி அதிகாரஞ் செலுத்துவானாயினன்.

---



## 28—கௌரி தவம்புரி படலம்

பிரமாவின் புத்திரனாகிய தக்கன் பரமசிவனைப் பணிந்து திரிலோகாதிபதியாய் வாழுங்கால், தவத்தினாலே உமாதேவியைப் புத்திரியாகப் பெற்றுச் சதிதேவியென்னும் நாமகரணமிட்டுச் சிவபிரானுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான். பின்பு வேள்வி புரிய விரும்பித் தன்னுடைய மருகராகிய சிவபெருமானுக்கும் புத்திரியாகிய உமாதேவிக்குந் தெரிவிக்கும்பொருட்டுத் திருக்கைலாச மலையைச் சேர்ந்தான். அப்போது சிவபிரான் ஒருத்தரமும் அருளாதிருந்தமை நோக்கித் தக்கன் அந் நிருமலமூர்த்தியை இகழ்ந்து கொண்டு திரும்பி "சுடுகாட்டாடிக்கு விவாகஞ்செய்து கொடுத்தவன்றே புத்திரியை இழந்தாம். இனி அவனுக்கு யாகத்திற் கொடுக்கும் அவிர்ப்பாகத்தை விலக்கி, ஏனையோர்க்கு ஈந்து, அவ்விரந்துண்பவனுக்குக் கொடுக்கும் பாகத்தையுங் காத்தற்கடவுளாகிய விட்டுணுமூர்த்திக்குக் கொடுப்பேன்" என்று வேள்வி செய்யத் தொடங்கினான். அப்போது உமாதேவியார் சிவபிரான் தடையையுங் கடந்து தக்கன் யாகத்துக்குச் சென்றபொழுது அத் தக்கனும் அவன் மனைவியும் மக்களும் ஒன்றும் பேசாதிருந்தனர். பின்பு தக்கன் சிவபெருமானுக்குக் கொடுக்கும் அவிர்ப்பாகத்தையும், விட்டுணுவுக்குக் கொடுத்தனன். அது கண்ட உமாதேவியார் "தாட்சாயணியென்னும் நாமத்தைத் தள்ளுவதே முறை" என்று அக்கினியில் மூழ்கினார். அப்போது தேவர்கள் முனிவர்களோடு தக்கனும் வருந்தினான். உமாதேவி அழலின்கண் முழுகியதை யுணர்ந்த சிவபிரான் கோபித்து ஒரு சடையை பூமியில் வீசவும், அதினின்று வீரபத்திரக்கடவுள் தோன்றி வணங்க, அவரைச் சிவபிரான் நோக்கித் தக்கன் யாகத்தை அழித்து, அங்குள்ளாரையுந் தண்டித்து வரும்படி ஆஞ்ஞாபித்தனர். அவ்வாறே வீரபத்திரக் கடவுள் சென்று, தக்கன் முடியையும், எச்சன் முடியையும் வெட்டி வேள்விக் குண்டத்தில் இட்டு, வேள்வியை அழித்து, மற்றவர்களையுந் தக்கபடி தண்டித்து, வேள்விச் சாலையில் அக்கினியை வைத்து, எதிர்த்த திருமாலின் சக்கரப் படையின் வலிமையைப் போக்கிப் புறங்கண்டு திரும்பினர். அக்கினியில் மூழ்கித் தாக்ஷாயணி யென்னும் பெயரை

மாற்றிய உமாதேவியார் இமையமலையரையன் புத்திரியாராய்ச் சிவபெருமான் தம்மைத் திருமணஞ் செய்யும்வண்ணம் கருதித் தவம் புரியத் தொடங்கினார். அப்போது நாரத முனிவர் சமீபித்துத் "திருப்பேரூரிலே தவஞ் செய்தால் விரைவிலே சிவபிரான் எழுந்தருளி மணந்தருளுவார்" என்று விண்ணப்பஞ் செய்ய, அங்ஙனமே திருப்பேரூர் சார்ந்து உமாதேவியார் தவஞ் செய்தருளினார். அக்காலையில் சிவபெருமான், வயோதிகப் பிராமணராய் வந்தருளினார். அவரை உமாதேவியார் அடியவரில் ஒருவராகக்கொண்டு வணங்க, வேற்றுருவங் கொண்ட சிவபிரானும் பற்பல விநோதமாக வினவ, அதற்கு உமாதேவியாரும் விடை கொடுத்து, இரந்துண்டல் முதலியவாகச் சிவபிரானை இகழ்ந்து கூறியவைகளின் பொருட்டு உத்தரஞ் சொல்லத் தொடங்கினார்: "கர்மமே கர்த்தாவென்னுந் தேவதாருவனத்து முனிவரை ஆளுதற்பொருட்டு, பிக்ஷாடனரானதேயன்றி, வயிரவ அம்சத்தானும் இழந்த பிரமன் சிரத்தைக் கிள்ளி, மாயோன் முதலிய தேவர் முனிவர் மாட்டும், தருக்கழியும்படி உதிரப் பிச்சை ஏற்றனர். பாவக் கடலினின்றும் உயிரை அருட்கரை ஏற்றுதலால் உருத்திர நாமம் உற்றனர். அடைக்கலமாக வைத்த பொருளைக் கொடாமைபற்றி அமரர் வருத்தினமையால், அக்கினிதேவன் அழுது உருத்திரப் பெயரும் அடைந்தான். உயிர்களின் பருவபேதம் பற்றி சிவபிரான் பலவுருக் கொண்டருளினர். தேவதாருவனத்து முனிவர் வேள்வியினின்றும் வந்த புலியின் தோலையுடுத்து மற்ற மான், மழு, பாம்பு, தீ, நகுதலை இவைகளைத் தரித்து, முயலகனை மிதித்து நடித்து, பூதங்களைப் படைகளாக்கினர். அண்டங்களை வயிற்றில் அடக்கத் தொடங்கிய பகாசுரனைக் கொன்று, இறகினை அணிந்தனர். பகீரதன் பொருட்டுக் கொடுத்த கங்கை உலகத்தை அழிக்கச் சென்ற தருக்கை அடக்கி முடியிற் றரித்தனர். சாபந் தீரும்படி, சரணடைந்த சந்திரனைச் சடையில் முடித்தனர். அரி பிரமேந்திராதி தேவரை நெற்றிக் கண்ணால் நீற்றி அப் பொடியையும், என்பு முதலியவற்றையுந் தாம் நித்தியரென்பது தோன்ற திருமேனியிற் றரித்தலாதிகளைப் புரிந்தனர். இத்துணைப் பெருமையுடையார் பேரழகரல்லரோ" என்று உமாதேவியார் விடையளித்தபோது, விருத்த வேதிய வுருவை மறைத்து, இடபாரூடராய்ச் சிவபிரான் எதிர்



நின்றனர். உமாதேவியாரும் வணங்கி நின்றார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். பின்பு சிவபெருமான் உமாதேவியார் திருக்கரத்தைப் பற்றி அந்தப்புரத்திற் சென்று அனைவரும் வணங்க எழுந்தருளியிருந்தார்.

---

## 29—கௌரி திருமணப் படலம்

பார்வதி தேவியைத் திருமணஞ் செய்யும்படி சிவபிரான் திருவுளங்கொண்டு, நாரத முனிவர் முகமாகச் சமஸ்த லோகத்தாருக்கும் அறிவித்தருளினர். பின்பு திருப்பேரூரின் கண்ணே திருக்கலியாண மண்டப முதலியவற்றைத் தாமே சங்கற்ப மாத்திரையால் நிருமித்தனர். நாரத முனிவர் எவ்விடத்துஞ் சென்று "திருப்பேரூரிலே பர்வதராஜன் பெற்ற பார்ப்பதி தேவியாரைத் திருமணஞ் செய்யச் சிவபிரான் திருவுளம் பற்றினார். அங்கே அனைவருஞ் செல்லக் கடவீர்" என்று சொல்லி மீண்டனர். பின்பு வயிரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், அரிகரபுத்திரர், கூர்மாண்டர், காலாக்கினி ருத்திரர், ஆடகேசர், ஏகாதச ருத்திரர் ஆகிய எல்லாரும் அளவில்லாத சிவகணங்கள் சூழ்ந்துவரச் சென்றார்கள். விட்டுணுமூர்த்தி, பிரமதேவர், அஷ்டதிக்குப்பாலர், ஆதித்தியர், உருத்திரர், வசுக்கள், மருத்துவரென்னு முப்பத்து முக்கோடி தேவர், வித்தியாதரர், கருடர், காந்தருவர், உரகர், நாற்பத்தெண்ணாயிர முனிவர் ஆகிய அனைவரும் தத்தம் பத்தினிகளுடன் போயினார். பரிசனங்களும் வரிசைகளும் உடன்கொண்டு, மலைகள் பலவுஞ் சூழ்ந்துவர, மேனையாகிய பத்தினியுடன் பர்வதராஜன் சென்றனன். சப்த சாகரங்களும், கங்கையாதி தீர்த்தங்களும், காலங்களும், திக்குகளும், எட்டு யானைகளும் உடன் போந்தன. நால்வகைப் படைக்கடலும் புடையே நடக்கப் பூலோக வேந்தர்களுஞ் சார்ந்தனர். சார்ந்த சமஸ்தர்களும் பரமசிவனது ஸ்ரீ பாதாரவிந்தங்களைப் பணிந்தனர். பின்னர்ச் சிவபெருமானும், உமாதேவியாருந் திருமணக்கோலங்கொண்டு, மங்கல வாத்தியங்கள் முழங்க, அரம்பையர் ஆட, கின்னரர் பாட, நாரதர் முதலியோர் வீணாகானஞ் செய்ய, அமரர்கள் பூமழைபெய்ய திருமால் இட்டபாதுகை மீது,

சிவபெருமான் திருவடிசாத்தி, பக்கத்தே உமாதேவியார் வர, யர் வாடைமீது சென்று, தேவமகளிர் எட்டு மங்கலங்களையும் ஏந்தி வாழ்த்த, அவர்களுக்குத் திருவருளேக்கஞ் செய்து, வேத சிவாக மங்களில் விதித்தவண்ணம் பிரமதேவர் முளைப்பாலிகை முதலிய வற்றை முன்னரே அமைத்துள்ள திருக்கலியாண மண்டபத்தில் உமாதேவியாரோடும் ஆசனத்தில் வீற்றிருந்தருளினர். அமரர்கள் அனைவரும் ஆணைப்படி ஆசனத்தில் இருந்தனர். அப்பொழுது, பர்வதராஜன் சமீபித்து, மேனை வணங்கிப் பசுப்பால் வார்க்க, மெய்யன் பினுல் சிவபெருமான் திருவடிகளை விளக்கித் தன் சிரமீது தெளித்து, உள்ளும்பருகி, உமாதேவியாராகிய புத்திரியாரைத் தத்தஞ்செய்தான். உடனே தேவர்கள் பூமாரி பொழிய, தேவதேவர் திருக்கையில் ஏற்றருளி, பிரமதேவர் அக்கினி வளர்க்க, மங்கலசூத்திரத்தை உமாதேவியார் கழுத்திலே தாரணஞ்செய்து, ஆன்மகோடிகள் அனைத்தும் இன்பம் நுகர்ந்து உய்யும்வண்ணம் செய்யத்தக்க சடங்குகளெல்லாம் நடத்தியருளினுர். பின்பு மணமண்டபத்தினின்றுஞ் சிவபெருமான் இடபாரூடராய், உமாதேவியோடுந் திருவீதியில் எழுந்தருளி, திருக்காட்சி கொடுத்துத் திருக்கோயிலிற் புகுந்து சிங்காசனத்தில் வீற்றிருந்து, திருமணவாளக் கோலந் தரிசிக்க வந்தவர்கட்கெல்லாம் விரும்பிய வரங்களை அருளி, எல்லாவுயிரும் வாழும் வண்ணம் உமாதேவியாரோடுந் திருப்பேரூரில் வாழ்ந்திருந்தார். இத்திருமணச் சரிதங் கேட்டோர் இம்மையில் மணம்பெற்று இறுதியில் முத்தி மணமும் பெறுவர்.

---

## 30—தெய்வயானை திருமணப்படலம்.

இமயமலைச் சாரலில், நரநாராயணரது ஆச்சிரமத்திலே, முருகக்கடவுளைத் திருமணம் புரியக்கருதி, தெய்வயானையம்மை தவஞ்செய்தாள். அப்போது, நாரதமுனிவர் அடுத்து, மானசிகமாக வணங்கி, "திருப்பேரூரைச்சார்ந்து, தவம்புரிவாயாகில் விரைவிலே முருகக்கடவுள் மணந்தருளுவார்" என்றவளவில், உடனே தெய்வயானையம்மை திருப்பேரூர் சேர்ந்து, திருவுள்ளமானது முருகக் கடவுள் திருமேனியை மருவவும், கண்கள் அரும்பவும், முகங்குவியவும்,



திருவுருவாடவும், பஞ்சப் பொறிகள் மறையவும் சித்திர தீபம்போல் அசைவற்றிருந்து தவஞ்செய்தாள். அக்காலையில், முருகக்கடவுள் எதிர் நிற்க, அவரை வணங்கிய தெய்வயானையம்மை திருநோக்கமும், முருகக்கடவுள் திருநோக்கமும் இசைய, இருவரும் பெருங் காதலுடையராயினர். இதனைச் சிவபெருமான் திருவுளத்துக் கொண்டருளி, இந்திரனை அழைத்து, "தெய்வயானைக்கும் முருகனுக்கும் இத்திருப்பேரூரில் மணஞ்செய்வதற்கு வேண்டியவைகளை விரைந்து செய்வாய்" என்று திருவாய் மலர்ந்தனர். அப்பொழுது, இந்திரன் எவ்விடத்துக்கும் மணவோலை அனுப்பி, நகரத்தைப் புதுக்கி, மண மண்டபம் நிருமித்துச் சிவபெருமானிடத்து விண்ணப்பஞ் செய்தான். பின்பு அம்மண மண்டபத்திலே, சிங்காசனத்தின் மீது சிவபிரான் வீற்றிருந்தருளி, முருகக்கடவுளைத் திருமணக் கோலத்தோடு வெள்ளை யானை மீது வீதிவலம் வரச்செய்து, மணமண்டபத்தில் இருக்கும்படி ஆக்ஞாபித்தருள, அங்ஙனம் ஆசனத்தில் முருகக்கடவுள் இருந்த பின்பு தெய்வயானை யம்மையும் அருகே வந்திருந்தனள். உருத்திரர் முதலாயினோர் பக்கத்தே இருந்தார்கள். மங்கல வாத்தியமும் வாழ்த்தும் முழங்கின. அப்போது இந்திரன், இந்திராணி பசுப்பால் வார்க்க, முருகக்கடவுள் திருவடிகளை விளக்கி, அதனை உள்ளும் பருகி, சிரமீது தெளித்துக்கொண்டு தெய்வயானை யம்மையைத் தத்தஞ்செய்ய, முருகக்கடவுள் ஏற்றருளி, வியாழபகவான் அக்கினி காரியஞ்செய்து, மதுபருக்கம் அமுதுகளை ஏந்த, அதற்கு முகமலர்ந்தருளி, கன்றோடு காமதேனுச் செல்லுதலை நோக்கி, தெய்வயானையம்மை வலத்திருக்கைபற்றி, ஏழடியிட்டு, அம்மியில் அச்சு வயானையம்மை வலத்திருக்கைபற்றி, ஏழடியிட்டு, அம்மியில் அத்தேவி பாதமலரைத் தூக்கிவைத்து, சிவபிரானைத் தெளித்து, அத்தேவி பாதமலரைத் தூக்கிவைத்து, சிவபிரான் அஷ்டமூர்த்தத்தில் ஒன்றான அக்கினியை வலஞ்செய்து, தெய்வயானையம்மை திருக்கையினின்றும் பொரியை ஏற்று, அக்குண்டத்திற் சொரிந்து, பின்னர்த் திருமங்கிலிய தாரணஞ் செய்தருளினுர். அப்போது தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள். சிவபெருமான் ஆணைப்படி குபேரன் அனைவர்க்கும் பொருளும், இரத்தினபரணங்களும் பீதாம்பர முதலியனவும் கொடுத்தான். பின்பு திருவீதியிலே, தெய்வயானை யம்மையோடு முருகக்கடவுள் திருவுலாக்கொண்டு, திருக்கோயிலின்கண் ஆசனத்தில் இருந்தருளினுர். மற்றைய நாள்

னுஞ் செய்யுஞ் சடங்குகளை முடித்தபின்னர்ச் சிவபிரான் எல்லாருக்கும் வேண்டும் வரங்களை அருளினர். முருகக்கடவுள் தெய்வயானையம்மையுடன் சிவபிரானும் உமாதேவியாருமாகிய இரு முதுகுரவரிடத்தே இருந்தருளினர். இத்திருமணச் சரிதத்தைக் கேட்டோர் கந்தலோகத்தில் ஆனந்தம் அனுபவிப்பர்.

---

## 31—குசத்துவசன் வரம்பெறு படலம்.

குசத்துவசராசன் உலகத்தை ஆளுங்கால், புத்திரப்பேறில்லாமையினல், மனங் கவன்று, அமைச்சர்களிடத்தே, உலகாட்சியை ஒப்பித்து, பலமலையும், பலவனமும், பலசுரமுங் கடந்து, திருப்பேரூர் எல்லையில்வந்து தூரத்திலே வெள்ளியங்கிரியை வணங்கி, கண்களினின்று மார்பின்கண்ணே ஆனந்தவருவி ஒழுக, உழுவலன்பின் முழுகி மனம் முன்னேசெல்ல ஸ்ரீகாஞ்சி நதியைப் பணிந்து, அதில் விதிப்படி படிந்து, பத்தியோடு உத்தம வேதியர்க்குத் தானங்கொடுத்து, ஆலயத்தை அடுத்துத் தூலலிங்கமாகிய திருக் கோபுரத்தைச் சேவித்து, இடபதேவருக்குச் சமீபத்திலுள்ள பத்திரலிங்கத்தின் அருகே பணிந்து எழுந்து, மனங் குழைந்து உருகி, வலம் வந்து, பன்னீர் நிழலின்கண் எழுந்தருளியிருக்கும் முழு முதலாகிய ஆதிலிங்கேசர் பாதாரவிந்தங்களைத் தரிசித்து, மரகதவல்லியம்மை திருவடிகளையும் வணங்கி, பின்பு வெள்ளியம்பலத்தைத் தரிசித்தான். தரிசித்த அற்றை நாள் உபவாசமாய், இரவிலே நித்திரையின்றி மற்றைநாட் காலையில், நித்திய கர்மானுட்டானங்களை முடித்துச் சிவபெருமான் திருவடிகளைத் தியானித்துத் தவஞ் செய்தான். அங்ஙனம் ஆயிரந் தேவவருடம் ஆகும்போது, சிவபிரான் உமாதேவி சமேதராக இடபாரூடராய் எழுந்தருளினர். அப்பொழுது குசத்துவசன் வணங்கித் துதித்துக் கூத்தாடினன். அவனுக்குச் சிவபெருமான் "நம்மை வழிபட்டமையால் இரண்டு பெண்மக்களைப் பெறுவாய். மருதவரையில் முருகனை வழிபடுவாயாயின் ஒரு புத்திரனைப் பெறுவாய்" என்று வரங்கொடுத்து மறைந்தருளினர். பின்பு அரசன் மருதவரையில், முருகக்கடவுளை வழிபட்டு வரம்பெற்று முரு



கக்கடவுளுக்கும், சிவபெருமானுக்கும் நித்திய நைமித்திகங்களை நடாத்தி விடைபெற்றுச் சென்று, தன் பதியில் வதிந்து, அறிவறிந்த மக்களைப் பெற்று மனமகிழ்ந்து வாழ்ந்திருந்தனன்.

---

## 32—குலசேகரன் குட்டநோய் தீர்ந்த படலம்.

மலைநாட்டிலே, சேரர்குலத்திலே, குலசேகரனென்னு மன்னவன் உதித்து, அரசாட்சி புரியுங்கால், அவன் உடலின்கண்ணே குட்டநோய் பொருந்தியது. அதனோடு அரசாளுதலில், வெறுப்புக்கொண்டு, வைத்தியரை வருவித்து "என்னை வருத்துகின்ற நோயை வருத்தக்கடவீர்" என்று சொன்னன். அதனைக் கேட்ட வைத்தியருக்கு வாகட நூல்வழியே சூரணம், இலேகியம், நெய், குளிகை, குழம்பு, நீறு, சிந்தூரம் முதலிய மருந்துகள் அமைத்துக் கொடுப்பதே கடனும், அரசனுக்கு அம்மருந்தை அருந்துவதே கடனும், நோய்க்கு வருத்துவதே கடனுமாயினவன்றி நோய் நீங்காமையால் மருந்தினைக் கைவிட்டு அரசன் அறங்கள் பலவற்றையுஞ் செய்துவந்தான். அதனாலும் நோய் நீங்காமையால் சிவத்தல யாத்திரையை விரும்பிச் செய்துவருங்கால் வியாதி அதிகமுங் குறைவுமின்றிச் சமமாயிருக்கக்கண்டு அரசன் களிப்புற்று ஆண்டுகள் தோறுஞ் சிவத்தல சேவைசெய்து ஒரு வருடத்தில் தனது பதியை விட்டுப் பல தலங்களையும் பணிந்து, இராமன் வழிபட்ட இராமேச்சுரத்தை வணங்கித் திரும்பும்போது நேர்பட்ட நாரதமுனிவர் அருளிய வண்ணம் திருப்பேரூர் சேர்ந்து ஸ்ரீ காஞ்சிநதியில் மூழ்கி, சுவாமியையும் அம்மையையுந் தரிசித்த மாத்திரத்தே குட்டநோய் விட்டொழிந்து அழகிய வடிவத்தினை யுடையவனாய் விளங்கினன். பின்பு அரசன் "நேசஞ் சிறிதுமில்லாத பாசம் பெரிதுமுடைய நீசனேனிடத்தும் ஈசனார்செய்த பெருங்கருணை யிருந்தபடி என்னை" என்று நைந்து நைந் துருகிப் பட்டிநாயகருக்கு முட்டில்லாத பல திருப்பணிகள் செய்வித்து அப்பட்டி நகரை விட்டுநீங்காது வதிந்து பத்திசெய்து பெத்த நிலைகுலைந்து முத்திநிலை சித்திக்கப் பெற்றனன்.

---

## 33—திரிலோகசோழன் செயிர்தீர்ந்த படலம்.

தெய்வப்பொன்னித் திருநதியாற் சூழப்பெற்ற சோழநாட்டிலே திரிலோகத்திலுமுள்ளாரும் துன்பம் அடையாதபடி காத்தமையால், திரிலோக சோழராசன் என்னும் பெயர் பூண்டவன் அரசுபுரியுங்கால் அனைவருந் திருநீறுங் கண்டிகையும் பூண்டு சித்தாந்த சைவக்கேள்வியுடையராய்ச் செல்வராய் வாழ்ந்தனர். அங்ஙனம் வாழும்போது நேபாள தேயத்தினின்றும் கல்வியில்வல்ல காபால மதத்தவர் சிலர்வந்து கலந்தனர். அப்பொழுது சிவநிசி அடுத்தது. அந்நாளில் பிராமணரும் அடியவருந் திருவிடைமருதூரிற் சிவபிரானைத் தரிசிக்கப் போந்தனர். அச்சோழனும் அத்தலத்தை அடைந்தான். அதனையுணர்ந்த காபாலமத வேதியரும் அங்கே வந்து ஆலயத்திலே அரசனை எளிதிற் சந்தித்து ஆசீர்வாதஞ் செய்ய, அரசன் அவ்வேதியர் புறவேடப்பொலிவையும், தேககாந்தியையும் மதித்து அகத்தை மதியாதவனாய் அஞ்சலிசெய்து யாரென்றுவினவ, அதற்கு "இவ்வரசன் நமது வழிப்படுவன்" என்று கருதி அவருள்ளே ஒரு விருவிருத்தன் "மகாராசாவே! நாங்கள் வாழ்வது நேபாள தேசம். உமது தேசவளப்பமும் புகழுங்கேள்வியுற்று நோக்குதற் பொருட்டு இங்கே வந்தோம். அதியிரகசியமாக உமக்கு உபதேசிக்கத்தக்கது ஒன்றுண்டு" என்ற மாத்திரையில் அரசன் அதற்கு உடம்பட்டுத் தனித்தவனாய் வணங்கினான். அப்போது அவ்விருத்தன், "ஆராயும் வழி மகளிரைப்புணர்தலே இன்பமாகும். அதனாலே உயிர்கள் அபிவிருத்தியாகின்றன. இதனையன்றி, உலகத்தைச் சிருட்டிப்பதற்கு ஒரு கடவுள் இருப்பதாக அறிவிலார் கூறுவர். கடவுளைக் கண்டவர் யாவர்! கண்ணாற் காண்பதே மெய். காணாதது பொய். ஆதலால் உலகத்துக்கு வேறான கடவுள் ஒருவனில்லை. மரத்துடன் மரம் உராயும்போதும், சூரியகாந்தக்கல்லில் சூரியகிரணந் தொடும்போதும் அக்கினி தோன்றுதல்போலப் புணர்ச்சிக்கண்ணே உலகந் தோன்றும். அங்ஙனமாகலிற் புணர்ச்சியே பொருளாம். அதற்கு மகிமைதருவது சுராபானமே. இதனையும் பொருளாகக் கொள்ளக் கடவீர்" என்று பொய்யை மெய்யாகக் கூறினான். அக்காபால மதத்தின் ஆபாசமார்க்கத்தை அரசன் விரும்பி அறிவழிந்து, மறைமுறை பிறழ்ந்து, மதுநுகர்ந்து வருணாச்சிரமங்கடந்து மடவாரோடு



கூடி இன்பம் அநுபவித்து ஒழுக்கமுடையாரை வருத்திக் காபால மதத்தவரே களிப்படையும்படி கொடுங்கோல் செலுத்தினான். "மன்னவனெப்படி மன்னுயிரப்படி" என்றபடி குடிகளும் விதிவிலக்கின்றி ஒழுகினார்கள். இங்ஙனஞ் சோணாடு முறை திறம்பிய செய்கையைப் பிரமதேவர் நோக்கி, நாரதமுனிவரை அழைத்து அவ்வரசனைத் திருத்தும்படி ஏவ, அப்போதே முனிவர் அரசன் சபையை அடுத்துக் கமண்டலத்தின் ஜலத்தை ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்து, அவன் முகத்திலே தெளித்தனர். உடனே அரசன் தான் மதமோகம் ஒழிந்து, முனிவரை வணங்க, அக்காலையில் முனிவர் திருவருணோக்கஞ் செய்து, திருநீறு கொடுக்க, அதனை ஏற்று அரசன் அணிந்து பணிந்தவளவில், "உனது தீவினை நோய்க்கு மருந்து; மேலைச் சிதம்பரத்திற் சிவபெருமான் திருவடிகளை வழிபடுதலே" என்று முனிவர் சொல்லி மறைந்தனர். அரசனை முனிவரர் திருத்திய முறையை அறிந்த காபால மதத்தினர் அந்நாட்டைவிட்டு ஓட்டெடுத்தனர். அரசனும் திருப்பேரூர் சார்ந்து காஞ்சி நதியிற் படிந்து சுவாமியையும் அம்மையையுந் தொழுது, துதித்துப் பிழைகள் ஒழிந்து, சிலநாள் அங்கே தங்கிப் பல திருப்பணிகள் செய்து விடைபெற்று சோழநாட்டை உற்று மனுநூல் வழியே செங்கோல் செலுத்தி, சைவ சமயந் தழைத்தோங்கும்படி அரசாண்டான்.

---

## 34—உபதேசப் படலம்

திருப்பேரூரிலே சிவபெருமான் பெருங் கருணையினால் மகிழ்ந்து எழுந்தருளியிருக்குஞ் சமயத்தில் உமாதேவியார் எழுந்து வணங்கி, "சுவாமி, பெத்த நிலை நீங்கி முத்தியின்பத்தில் அழுந்துகின்றவர்க்குக் காட்டும் ஆனந்த தாண்டவத்தைக் கோமுனி முதலியோர்க்குக் காட்டிய காரணம் என்னை" என்று வினவ, அதற்குச் சிவபிரான், "தேவி! கோமுனியும், பட்டிமுனியும் பேரன்போடு சடைமுடியுடன் விபூதி, உருத்திராக்கங்களைத் தரித்து, வில்வத் தளிர்களைக்கொண்டு உபசாரங்களினால் நம்மைச் சிவலிங்கத்தினிடத்தே நெடுங்காலம் பூசித்ததேயன்றி; வெள்ளிச் சபையிலே நடிக்கும் நமது வடிவத்தும்

அருச்சித்து, மகோற்சவம் நடாத்தி வணங்கிப் பஞ்ச மலங்களையும் வென்று, விரும்பியபடியால், அப்பொழுது நமது நாடகத்தைக் காட்டினும்" என்று திருவாய் மலர்ந்தனர். அதனைக் கேட்ட உமா தேவியார், அம்முனிவர் இருவருஞ் சடை முதலியவற்றைத் தரித்துப் பூசித்தபடியால், அச்சடை முதலியவற்றின் மகிமைகளைச் சாற்றி யருள வேண்டும்" என்று கேட்க, அதற்குச் சிவபெருமான் அருளிச் செய்யத் தொடங்கி, "உமையே, நமது வேடங்கள் பலவற்றுள்ளுஞ் சடை முடியே சிறந்ததாம். சடைமுடி தரித்தவரை யாமாகக்கருதி தேவர் முதலாயினர் வழிபடுவர். ஒவ்வொரு சடையும் ஒவ்வொரு சிவ லிங்கமாம். சடையை முடித்தவனுக்கு ஆயிரம் பிறவியின் முன்னுள் ளாரும் பின்னுள்ளாரும் நமது சிவலோகத்தைச் சேர்வர். அவனை வணங்கினோன் பாவியாயினும், புண்ணியமும் செல்வமும் பெறுவன். சடையிற் பொருந்திய ஒரு நீர்த்துளி ஒருவன்மேற் றெறித்தால், பேய், பூத மாதியால் வருந் துன்பமும், நோயும், பாவமும் போம். விபூதியாவது, வைதிக விபூதியென்றும், இலௌகிக விபூதியென்றும் இரண்டாகும். அவற்றுள் வைதிக விபூதி ஓமகுண்டத்தில் விளங்கு வதாம். இலௌகிக விபூதி கோமயத்தினால் ஆவதாம். வைதிக விபூதி, பிரமன் ஓமகுண்டத்திலே தோன்றுவதாகிய புராதனி யென்றும், பிராமணர் ஓமகுண்டத்திலே தோன்றுவதாகிய சத்தி யோசாதை யென்றும் இரண்டாம். இலௌகிக விபூதி தீட்சிதர்க் குரிய (தீக்கை பெற்றோர்) சைவ விபூதி யென்றும், அதீட்சிதர்க் குரிய (தீக்கை பெறாதவர்) அசைவ விபூதி யென்றும் இரண்டாம். தீட்சிதராகிய சைவர் தரிக்கும் விபூதி, கற்பம், அநு கற்பம், உப கற்பம் என மூன்றும். அவற்றுள், கற்பமாவது கன்றீனாத பசு, இளங்கன்றுப் பசு, கன்றிழந்த பசு, மலட்டுப் பசு, குறைந்த செவி, கொம்பு, வால்களையுடைய பசு, பவ்வீயுண்ணும் பசு, நோயுள்ள பசு என்னும் இவைகளை விட்டுப் பங்குனி மாதத்தில், நெல்லரிந்த கழனி களிலுள்ள தாளை மேய்ந்த நல்ல பசுக்கள் விட்ட மயத்தை எட்டாந் திதி, பதினான்காந்திதி, பசனைந்தாந்திதிகளிலே, சித்தியோ சாதத் தினாற் பூமியில் விழுமுன்னே தாமரை யிலையில் ஏற்று மேல்வழும்பு நீக்கி, வாமதேவத்தினாற் பஞ்சகவ்வியம் பெய்து, அகோரத்தினாற் பிசைந்து, தற்புடத்தினாலே திரட்டி, ஓமாக்கினியில் இட்டு ஈசானத்



தால் எடுத்து, புதிய வஸ்திரத்தினால் வடிகட்டி, புதிய குடத்தில் நிறைத்துக் காயத்திரி மந்திரம் உச்சரித்து, பரிசுத்தமான இடத்தில் வைத்து, நறுமலர் சாத்தி, சுத்த வஸ்திரத்தால் வாய்கட்டுவதாம். உடனே ஓமகுண்டத்திலிடாது உலர்த்தி விளைவித்தலும் விதியாம். அநுகற்பமாவது வனத்தில் உலர்ந்த மயத்தைச் சித்திரை மாதத்தில் கொண்டுவந்து பொடித்து, அதில் கோசலம்பெய்து, முன்கூறிய விதிப்படி விளைவித்தலாம். உபகற்பமாவது இயல்பாக அக்கினி யினாலே தகிக்கப்பட்ட வனத்தினுள்ள பொடியில், பஞ்சகவ்வியம் பெய்து, முற்கூறிய விதிப்படி அக்கினியிலிட்டு எடுத்தலாம். நீலநிற விபூதி நோயை ஆக்கும். தாமிரநிற விபூதி ஆயுளை நீக்கும். செந்நிற விபூதி புகழைப் போக்கும். பொன்னிற விபூதி தரித்திரத்தைச் சேர்க்கும். வெண்ணிற விபூதி புண்ணியத்தை விளைக்கும். ஆதலால், வெள்ளிய விபூதியே தரித்தற் குரிமையுடையதாம். அவ்விபூதியை மான்றோல், புலித்தோல், வஸ்திரம் இவைகளாற் பன்னிரு விரலளவு உயரமும், எண்விரலளவு அகலமும், வாய் வட்டமுமாக அமைத்த ஆலயத்தில் வைத்து, சைவரும், வைதிகரும் அவரவர்க்குரிய விதிப் படி மூவிரலாலும், சிரமுதலிய தானங்களில் அணியக்கடவர். பிரா மணர், க்ஷத்திரியர், வைசியர் இம் மூவருக்கும் வைதிக விபூதியே உரியது. அதீக்ஷிதராகிய சூத்திரர்க்கு அசைவ விபூதியும், திருக் கோயின் மடைப்பள்ளி விபூதியும், திருவடியார் மடாலயத்தின் மடைப்பள்ளி விபூதியும், வனத்தில் வெந்த விபூதியும் உரிமையாம். சங்கராசாரியார்க்கு மடைப்பள்ளி விபூதியும், வனத்தில் வெந்த விபூதியும் ஆகும். அக்கினி, தேவர், குரவர் இவர் மூன்றும் வழி, அசுத்த நிலம், இழிஞர் இவற்றிடத்தும் விபூதி தரிக்கப்படாது. ஒரு கையால் ஏற்ற விபூதி, விதிப்படி இயற்றா விபூதி, விலைவிபூதி, அதீக்ஷிதர் கொடுத்த விபூதி ஆகிய இவைகள் தரிக்கலாகா. பூமியில் வீழ்த்தலும், அங்காத்தலும், தலைநடுக்கலும், கவிழ்தலுஞ் செய்யாது திருநீறு தரிக்கக்கடவர். பிராமணர் உருவ முழுவதும் மற்றையோர் நாபிக்கு மேலும் உத்தூளனஞ் செய்க. விபூதி தரித்தே அறமாதிகள் புரிக. திருநீறு தரியாதவர் முகஞ் சுடுகாடாகும். அதனைப் பார்த் தவர் பஞ்சாக்கரத்தில், நூறுரு ஜபிக்கக் கடவர். விபூதி தரியாது தவமுதலியன நிரம்பச் செய்தாலும் பயனில்லை. தரித்தவர் சூழ்வா

விருந்தாலும் பயன்பெறுவர். திருநீறு தரித்தே சிராத்தஞ் செய்க. பாவத்தை நீற்றலால் நீறு, செல்வந்தரலால் விபூதி, உயிர்களின் மலக்குற்றத்தைக் கழுவுதலாற் சாரம், அறியாமை நீங்க விளக்குதலாற் பசிதம், பூதாதிகளைப் போக்கிக் காத்தலாற் காப்பு என்னுங் காரணப்பெயர்களும் அவ் விபூதிக்கு உண்டு.

உருத்திராக்கமாவது, முப்புரத்தவர் வருத்தலினாலே அமரர்கள் தவஞ் செய்ய, அதற்கு இரங்கி, நாம் போய் இமையாது நோக்கினமைபற்றி மூன்று கண்களினும் நீர் துளித்தன. அவற்றுள், வலக் கண்ணீரிலே பன்னிரண்டு மரங்களும், இடக்கண்ணீரிலே பதினான்கு மரங்களும், நடுக் கண்ணீரிலே பத்து மரங்களும் உண்டாயின. இவைகளுக்கு உருத்திராக்க மரங்களென்று பெயர். வெண்ணிற மணி பிராமணர்க்கும், பொன்னிறமணி க்ஷத்திரியர்க்கும், வெண்மை பொன்மை கலந்த மணி வைசியர்க்கும், கருநிறமணி சதுர்த்தருக்கும் உரிமையாம். ஒருமுக மணி சிவரூபமாய் பிரமகத்தி நீக்கும். இரு முக மணி சிவசத்தி ரூபமாய் கோகத்திநீக்கும். மும்முகமணி அக்கினிரூபமாய் ஸ்திரீகத்தி நீக்கும். நான்முக மணிபிரமனுருவாய் மாநுடக் கொலை தொலைக்கும். ஐம்முகம்மணி காலாக்கினி உருத்திர ரூபமாய் உணவினாலாகுங் குற்றங்களை ஒழிக்கும். ஆறுமுகமணி ஆறுமுகனுருவாய் வலக்கையிலே தரித்தால் பிரம கத்திச் சாயையைப் போக்கும். ஏழுமுகமணி ஆதிசேடனுருவாய் கொலை, பொருட்களவுகளைத் தீர்க்கும். எண்முகமணி விநாயகனுருவாய் குருதாரகமனம், தானக் கிரகணம், பிறரன்னம் புசித்தல் ஆகிய பாவங்களைக் கெடுக்கும். ஒன்பதுமுகமணி வயிரவனுருவாய் பூதாதிகளின் தீங்கும், பாம்புகளின் தீங்கும் நீங்கச்செய்து, செல்வத்தையும் முத்தியையுங் கொடுக்கும். பத்துமுகமணி விட்டுணுரூபமாய் தீயநாள், கோள் முதலிய தீங்குகளைத் தீர்க்கும். பதினொருமுகம்மணி ஏகாதசருத்திர ரூபமாய் ஆயிரம் வேள்வியின் பயனும், ஒரு லக்ஷம் பசுக்களோடு பெரும் பொருளுந் தானஞ்செய்த பயனும் உண்டாக்கும். பன்னிருமுகமணி துவாதசாதித்த ரூபமாய், அசுவமேதப் பயனும் மேருதானப் பயனுங் கொடுக்கும். பதின்மூன்று முகம்மணி முருகனுருவாய் இஷ்டகாமிய முதலியவற்றைக் கொடுத்து, தந்தை



முதலியோர் கொலைப் பாவத்தைத் தொலைக்கும். பதினான்முகமணி எமதுருவும், நினதுருவுமாய் வசியத்தை ஆக்கிச் சிவபுரத்தில் இருத்தும். அதனைக் கழுத்தில் அணிந்தால் மந்திரங்கள் பலிக்கும், வெற்றியுண்டாம். உருத்திராக்கந் தரித்துச் சற்கிரியைகள் இயற்றினால் ஒன்று அனந்தமாம். தரியாதவர்க்குப் பயனில்லை. கீழ் மக்களாயினும், பெண்களாயினும், மது மாமிச பக்ஷிணிகளாயினும் உருத்திராக்கத்தை முடிமீது தரித்தாராயின் அவர் பாவம் நீங்கி, இறுதியிலே நமது வடிவத்தைப்பெறுவர். சிகையில் ஒன்றும், சிரசில் முப்பத்தாறும், கழுத்தில் முப்பத்திரண்டும், மார்பில் ஐம்பதும், கரத்திற் பதினாறும், மணிக்கட்டிற் பன்னிரண்டும், முகமுகமுஞ்சேர இடையே முடித்து மேரு அமைத்து முறையே கொள்ளக் கடவர். செபவடம் நூற்றெட்டு, ஐம்பத்தி நான்கு, இருபத்தேழு மணிகளாகக் கொள்க. அநாமிக விரலிற் செபித்தால் நோய் நீங்கும். மத்திமை விரலிற் செபித்தாற் பகை நீங்கும். தர்ச்சனி விரலிற் செபித்தாற் முத்தி சித்திக்கும். முத்திகாமிகள் மேல் நோக்கியும், புத்திகாமிகள் கீழ்நோக்கியும், ஒலியாமலும், பிறர் விழிக்குப் படாமலும் செபிக்கக்கடவர். மேருவினைத் தொடுத்துச் செபித்து, மீட்டும் மேரு வரும்போது அதனைக்கடவாது திருப்புதல் வேண்டும். ஜபவடந்தவறுதல் முதலியவற்றிற்கு நமது அருட்குறிக்குச் செய்யும் பிராயச்சித்தத்திலே, அரை வரிசை இயற்றுக. விரல், இறை, புத்திர சீவகமணி, சங்குமணி, படிகமணி, முத்து, தாமரைமணி, பொன் மணி, குசைமுடி, உருத்திராக்கம் இவை ஒன்றுக்கொன்று உயர்வாம். கிருகத்திலும், பசுக்கோட்டம் பத்து மடங்கு, நதிக்கரை நூறு மடங்கு, ஆலயம் ஆயிரம் மடங்கு, வனம் இலக்ஷமடங்கு, மலை கோடிமடங்கு, நமது சந்நிதி அளவில்லாமல் செபிப்பவர்க்குப் பயன் உண்டாக்கும். முத்திகாமிகள் இருபத்தைந்து மணியும், சுபகாமிகள் இருபத்தேழு மணியும், திரவியகாமிகள் முப்பது மணியும், ஆபிசாரத்துக்குப் பதினைந்து மணியுமாகச் செபவடங்கொள்க. உருத்திராக்கத்தைத் தரிசித்தவர்க்கு லக்ஷம், பரிசித்தவர்க்குக் கோடி, தரித்தவர்க்கு ஆயிரங்கோடி, செபித்தவர்க்கு அநந்தம் மடங்கு பயன் உண்டாம். அவர் இம்மையில் வெற்றியும், மறுமையில் நமதுருவும் பெறுவர்.

உபசாரமாவது, தேவர்கள் பாற்கடல் கடையும்போது, வில்வமும் துளவமும் உண்டாயின. அவை நமக்கு மகிழ்ச்சி செய்வனவாம். துளவத்தினும் வில்வஞ் சிறந்ததாம். முற்றியதாயினும், சருகாயினும், ஈரிலை அல்லது ஓரிலை பொருந்தியதாயினும் விலக்கப்படாது. செல்வத்தைச் செய்யுந் திருமகள் வாழ்தலால் ஸ்ரீபலமாம். நோய் நீக்க முதலிய இம்மைப் பயனும், முத்திப் பயனுந் தரும். நூற்றெட்டு, ஆயிரம் பெயர்களால் வில்வங்கொண்டு, நமதடியில் அர்ச்சித்தவர்க்கு அளவற்ற பயனும். இங்ஙனம் வில்வமாதிகளால் நம்மைப் பூசிப்பதே உபசாரமாம். பின்னும் அவ்வுபசாரம் காலையிற் செய்யுங் கடன்களை முடித்துத் திருப்பள்ளித் தாமங்கொண்டுவந்து, பின்பு குளித்துச் சந்திபண்ணி, இடஞ் செய்து, சூரியனிடத்தும் நம்மைப் பூசித்துப் பின்னர் ஐவகைச் சுத்தியுமமைத்து அருட்குறியின் கண், ஆசனமும் மூர்த்தியும் அர்ச்சித்து, மூர்த்திமானாகிய நம்மையுந் தியானித்து, புட்பாஞ்சலியினால் ஆவாகித்து, பாத்தியாசமனார்க்கியங் கொடுத்து, பூசை முடியுங்காறும் இருந்தருளவேண்டி, எண்ணெய்க்காப்பு முதலியன அபிஷேகித்து அலங்கரித்து நிவேதித்து தீபாராதனை செய்து கண்ணாடி முதலியன காட்டி, திருவைந்தெழுத்தைச் செபித்து அதனோடு உடல், பொருள், ஆவி மூன்றுந் தத்தஞ் செய்து துதித்தலாம். இவ்வுபசாரத்தை இயற்றினோர் புத்தி முத்திகளைப் பெறுவர்" என்று அருளிச்செய்தனர்.

---

## 35—திருநீற்றுமேட்டுப் படலம்

செந்தமிழ் விளங்கும் பாண்டிவள நாட்டிலே, கசேந்திரமோக்க நகரத்திலே, தான்மிக பாண்டிய ராசன் செங்கோல் செலுத்தி, வித்துருலதையென்னும் பெயருடைய கற்பினிற் சிறந்த மாதேவியோடுகூடி வாழ்ந்திருந்தான். அம் மாதேவி முத்தமிழ்க் கல்வியும் முற்றக் கற்று, அழகினிற் சிறந்துள்ளவளாதலால் செந்தமிழ்க் கல்வியிற் பயின்ற மகளிர் குழாஞ் சூழச் சபையில் வதிந்தும், அக்குழாத்தொடு பூக் கொய்தல், புனல்விளையாடல், பொழில் விளையாடல் முதலாகியவற்றைப் புறநகரிற் புகுந்து, மகிழ்ந்து செய்தும்



வருவாள். அக்காலையில், கொங்கண தேசத்தில் நான்கு வேதங்களினும் வல்ல ஓர் அந்தணன், மகாராட்டிர நாட்டை யாளும் பிரதாப மகுடராஜன் கங்காநதி தீரத்திலே, துலாபாரந் தூங்கச் செல்லுஞ் செய்தி தெரிந்து, அங்கே போய் வேதசோதனை கொடுத்து துலாபாரப் பொருளைத் தானம் வாங்கிய பின், "வேதங்களை ஓதி உணர்ந்தும், அதன் பயனாகிய அறிவொழுக்கங்களிலே செல்லாது தானம் ஏற்றுப் பாவவழியில் ஒழுகுதல் முறையல்ல" என்று நைந்துருகிச் சிந்தனை செய்து தன்னகர் சேர்ந்து, தானம் ஏற்ற பொருளையெல்லாம் அறவழியிற் செலவிட்டுத் தாமிரபருணி நதியிற் குளித்துப் பாவத்தைப் போக்கக் கருதி, மனைவியோடு புறப்பட்டுக் கசேந்திர மோக்க நகரத்திற் சேர்ந்து, தாமிரபருணி நதித்துறையிலேயுள்ள அரசமர நிழலிலே தங்கிச் சிரம பரிகாரமாகும்போதே இறுதிக்காலம் வந்து மரணம் அடைந்து அரக்கனாய், அவ்வரசமரத்தில் வசித்தான். மனைவியும் வருந்தி, அப்பொருள் முழுவதையும் அம் மரத்தின் பொந்திலே சேமித்துவைத்துப் பின்பு நாயகன் உடம்பை அக்கினியினாலே தகித்து, அன்று முழுதும் அழுதழுது மயங்கி, மற்றைநாள் நிலத்தில் விழுந்து இறந்தாள். தவத்தொடர்பு இல்லாமையால், பொருளிருந்தும் புண்ணியம் கைகூடப் பெறாது அப் பொந்தின் பொருளையுங் காத்து, அம்மரத்தில் அரக்கன் இருந்தான். இருக்கும்போது ஒருநாள், வித்துருலதையும், தாமிரபருணி நதியிற் குளித்துவர எண்ணி அவ்வரசடியிலே வந்து தங்கிக் கல்லுங் கசிந்துருக வீணைகானஞ் செய்தனள். உடனே அரக்கன் மாதேவியழகையும், தருக்கையும், யாழ்பாடும், வல்லமையையும் நோக்கி, இவளை அடைவோம் என்று கருதி, அரசின் கொம்பினை விட்டு அப் பெண் கொம்பினைப் பற்றினான். அப்பொழுது வித்துருலதை மயங்கி உணர்விழந்து பிதற்றினள். 'அதனையறிந்த அரசன் மணிமந்திர ஔடதங்கள் இயற்றியுந் தீராது வருந்துங்கால், நாரதமுனிவர் வந்து அரக்கன் பற்றிய வியல்பை அரசனுக்கு விரித்துரைத்துத் "திருப்பேரூர் சேர்ந்து, உன் மனைவி காஞ்சி நதியில் மூழ்கிப் பிரமகுண்ட நீற்றை அணிந்து, பிரமதீர்த்தம் தெளிக்கப் படுவாளாயின் அரக்கன் விலகுவான்" என்று அருளிச்செய்து மறைந்தனர். அங்ஙனமே தான்மிகபாண்டியன் மாதேவியை அழைத்துக்கொண்டு மேலைச்

ஒதம்பரஞ் சேர்ந்து, காஞ்சி நதியில் மூழ்கி, மனைவியையும் மூழ்குவித்துப் பிரமதீர்த்தத்தையும் ஆட்டி, பிரமகுண்டமாகிய திருநீற்றுமேட்டின் விபூதியை அள்ளிக் காஞ்சிநதித் தீர்த்தமும் பிரம தீர்த்தமும் செய்து குழைத்து, மனைவி வடிவமுழுதிலும் பூசிய மாத்திரையில், அவளைப் பற்றிய அரக்கன் வெளிப்பட்டு, அரக்கவுரு நீங்கி, தேவவுருப் பெற்று, விமானம் ஏறி, அரசனை நோக்கி, "நீயேனையுந் தூயனாக்கினை" என்று கூறிச் சுவர்க்கலோகஞ் சேர்ந்தான். வித்துருலதையும் பண்டையுணர்வு பெற்றனள். அப்பொழுது அரசன் மகிழ்ந்து, திரும்பவுங் காஞ்சி நதியில் விதிப்படி மாதேவியோடு குளித்துப் பல தானங்கள் கொடுத்து சுவாமி தரிசனஞ் செய்து, விடைபெற்று, மாதேவியுடன் பாண்டிநாடு சேர்ந்து வாழ்ந்திருந்தான். திருநீற்றுமேட்டு விபூதி தரித்தவர்க்குப் பிரமராக்ஷசமின்றி, மலடும், நோயும், பாவ முதலியவுந் தீரும். பல பொருளும் சுவர்க்கமும் முத்தியுஞ் சித்திக்கும்.

---

## 36—விசேட பூசைப் படலம்

சித்திரை மாசத்திலே சித்திரை நக்ஷத்திரஞ் சேர்ந்த பூரணைதிதியிலே பட்டீசருக்கு எண்ணெய் முதலியன அபிஷேகித்து ஆபரணங்கள் அணிந்து, பலவகை அன்ன முதலியவற்றை நிவேதிப்பவர், தீவினை யனைத்தும் நீங்கிச் சிவபுண்ணியங்களைச் சேருவர். வைகாசி மாதத்திலே விசாக நக்ஷத்திரஞ் சேர்ந்த பூரணையிலே, முப்பழமும் அபிஷேகித்துப் பால்மாங்காய் நிவேதிப்பவர் பாவங்கள் நீங்கிப் பரமன் உலகத்திலிருப்பர். பின்னும் அம்மாதத்தில், நறிய நீரைச்சூழநிறைத்து, நாற்கால் மண்டபத்திலே, சிவபெருமானை எழுந்தருளச் செய்து வசந்தோற்சவம் நடத்துவோர் நோய்கள் பலவும் ஒழிந்து போகம் அநுபவித்துப் பேரின்பம் பெறுவர். ஆனி மாதத்திலே கேட்டை நக்ஷத்திரஞ் சேர்ந்த பூரணையில், விருத்தவடிவாக மண்டபம் அமைத்து அதிலே சிவபெருமானை எழுந்தருளப் பண்ணிப் பலவகைப் பழமும் அபிஷேகித்து நிவேதிப்போர் சிவலோகஞ் சேர்வர். ஆனி மாதம் உத்திர நக்ஷத்திரத்திலே அபிஷேகித்து, அலங்கரித்து,



பலவற்றையும் நைவேத்தியம் புரிவோர் சிவகதி அடைவர். ஆடி மாதம் பூர நக்ஷத்திரத்திலே, உமாதேவியாரைப் பூசிப்பவர் இம்மையிலே செல்வம் பெற்று, மறுமையிலே சத்தியுலகஞ் சார்வர். ஆவணி மாதம் மூல நக்ஷத்திரத்திலே சிவபிரானைப் பூசித்துப் பிட்டு நிவேதிப்பவர் வினைகள் நீங்கி விண்ணுலகம் நண்ணிப் போகம் அநுபவிப்பர். புரட்டாதி மாதம் நவராத்திரியிலே உமாதேவியாரைப் பூசிப்பவர் இம்மையிலே செல்வமும், மறுமையிலே இன்பமும் அநுபவிப்பர். ஐப்பசி மாதம் பௌர்ணமியிலே, சிவபிரானுக்கு அன்னாபிஷேகஞ் செய்து வழிபடுவோர், ஒவ்வொரன்னத்திற்கு ஒவ்வொரு கற்பஞ் சிவலோகத்தில் ஆனந்தம் அநுபவிப்பர். கார்த்திகை மாதங் கார்த்திகை நக்ஷத்திரத்திலே, சிவபெருமானை ஆராதித்துத் தீபம் இடுவோர் சோதிவுருவினராய்ச் சுகம் அநுபவிப்பர். மார்கழி மாதத்திலே தினந்தோறும் வைகறையிலே சிவபிரானைப் பூசிப்பவரும், திருவாதிரையில் நெய் அபிஷேகித்துக் கலவைச் சாந்தணிபவரும் மலங்கள் நீங்கி, அருட்டுறையில் மூழ்குவர். தை மாதத்திலே, சிவபிரானைக் குதிரை வாகனத்தில் எழுந்தருளிவரத் தரிசிப்போரும், பூச நக்ஷத்திரத்திலே பூசிப்பவரும் நற்கதி பெறுவர். மாசி மாதம் மக நக்ஷத்திரத்திலும், சிவநிசியிலுஞ் சிவபிரானைப் பூசிப்பவர் எல்லாப் போகங்களையும் அநுபவிப்பர். பங்குனி மாதம் உத்திர நக்ஷத்திரத்திலே, பரமசிவன் கொண்டருளும் மகோற்சவத்தைத் தரிசிப்போர் முத்தி அடைவர். வருடப்பிறப்பு, மாதப்பிறப்பு, உத்தராயணம், தக்ஷிணாயனம், அமாவாசியை, சதுர்த்தசி, திரயோதசி, அட்டமி, சோமவாரம் இவைகளிலே சிவபிரானைப் பூசிப்பவர் அருளிற் கலப்பர். இத் தினங்களிற் பூசியாதவரும், பங்குனி யுற்சவத்திலே பணிந்து தரிசிப்பரேல் அப் பயன் பெறுவர். கோமுனிவர் முதலாயினோர் நடாத்திய கால முதல் இதுகாறும் பங்குனித் திருவிழாவைச் சேவித்து முத்தியடைந்தவர் அளவில்லாதவர். பட்டிநாதர் எழுந்தருளும் இரதத்திற் பூட்டிய வடங்களைத் தேவர்களும், அவுணர்களும் மக்கள் வடிவுகொண்டு இருபுறமும் இழுப்பாராயின் அவ்வுற்சவ மகிமையை யாவர் உரைப்பவர்.

---

## நூற்பயன் கூறியனை:

மரகதவல்லி பாகராம் பட்டீச்சுரரின் மான்மியத்தை விரித்துரைக்கின்ற இத் திருப்பேரூர்ப் புராணத்தை மெய்யன்புடன் பூசனை புரிபவர், கற்பவர், கேட்பவர், பொருள் தேர்பவர், கேட்டார்ப் பிணிக்குந் தகையவாகக் கேளாதோரும், விழைய விரித்துரைப்பவர் முதலானோரும், இவர்கட்கு உண்டியும், உடையும், உறையுளும் பொன்மணி முதலாம் பொருள்களும், கரி, பரி, சிவிகை முதலாம் ஊர்திகளும், வேண்டுவன பிறவும் கொடுப்போரும் இம்மைப் பயனும் புகழையும், மறுமையிற் சிவலோகத்திற் பெறலரும்பேறாய ஆனந்த மயமாம் பெரும் போகங்களையும் பெறுவார்கள். திருப்பேரூரை யும், பட்டிப்பெருமானார்க்கு உள்ளன்புடன் சிறப்புச் செய்வோர்க்கு எத்துணைப் பெரும் பயன்களுளவாகுமோ அத்துணைப் பயன்கள் இப் புராணத்தைச் சிறப்பிப்போர்க்கும் உளவாகும் என்று சூத புராணிகர் சொல்லக்கேட்ட நைமிச முனிவரெல்லோரும் நெஞ்சங் கனிந்தவராய் வணங்கிப் பட்டிநாதரின் பரங் கருணைத் திறத்தைக் கருதி ஆனந்தந் திளைத்து வாழ்ந்திருந்தனர்.

மாமறை முனிவர் வாழ்க மரகத வல்லி யோடும்
பாமலி புலவர் போற்றும் பட்டிநா யகனார் வாழ்க
காமரு வெள்ளி மன்றிற் கண்ணுத னடனம் வாழ்க
கோமனு நீதி வாழ்க குவலய முழுதும் வாழ்க.

**திருப்பேரூர்ப் புராண வசனச் சுருக்கம் முற்றிற்று.**

திருச்சிற்றம்பலம்

---

Q23:38 N63 169957

உ

கடவுள் துணை

# திருப்பேரூரின் பண்டைய சரித வரலாறு

[கோவை, திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A., B. L. அவர்களால் எழுதப்பெற்றது]

## 1. இட அமைதி

தற்காலத்தில் பேரூர் என்பது கோவை நகர்க்கு 3 மைல் மேற்கே நொய்யல் என்கிற காஞ்சிமா நதிக்கரையில் பண்டைய ஓர் ஆலயத்தையுடைய ஒரு சிறு கிராமமாகக் காண்கிறோம். கொங்கு நாட்டாரும், மலையாள தேசத்தாரும் மிகுதியாக, தை, ஆடி அமா வாசைகளிலும், மார்கழி திருவாதிரை, பங்குனி உத்திரம் நாட் களிலும் திருவிழாக் காண வருவதுண்டு. மேலைச் சிதம்பரம் என்ற சிறப்புப் பெயர் வாய்ந்த இந்தப் புண்ணிய தலத்தினுடைய பண் டைய வரலாறு மிகவும் அருமை வாய்ந்தது. அதைப்பற்றி தற்காலம் தெரிந்தவற்றை மட்டும் குறிப்பிடுவோம்.

தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையோரமாகக் காவேரி யின் மேல்பாகத்தில் அதன் இருபுறமும் இருப்பது கொங்கு நாடு.

**பேரூர் நாடு**

இந்நாடு சங்கத்தார் காலமுதலே தனி நாடாக இருந்த தற்குப் புறநானூறே சான்றாகும். பிற்காலத்தில் இக் கொங்கு நாடானது, வடகொங்கு, தென் கொங்கு என்ற பெயரால் இரு பெரும் பிரிவுகளாக இருந்ததாக சோழர் ஆதிக்கத்துக் கல்வெட் டுக்களால் தெரிகிறோம். ஆனால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பேரூர்க்கு விசயம் செய்த காலத்தில் அப்பாகத்தை "மீகொங்கு"* அதாவது, மேல்கொங்கு என்று கூறியிருக்கிறார். ஆகவே மேல்கொங்கு ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அதுபோலவே கீழ்கொங்கு என ஒன்று இருந்ததாக எந்த ஆதாரத்திலும் காணோம். இவ்விதமான

* "மீகொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூரர் பெருமானை"

## நூற்பயன் கூறியன.

மரகதவல்லி பாகராம் பட்டீச்சுரரின் மான்மியத்தை விரித்துரைக்கின்ற இத் திருப்பேரூர்ப் புராணத்தை மெய்யன்புடன் பூசனை புரிபவர், கற்பவர், கேட்பவர், பொருள் தேர்பவர், கேட்டார்ப் பிணிக்குந் தகையவாகக் கேளாதோரும், விழைய விரித்துரைப்பவர் முதலானோரும், இவர்கட்கு உண்டியும், உடையும், உறையுளும் பொன்மணி முதலாம் பொருள்களும், கரி, பரி, சிவிகை முதலாம் ஊர்திகளும், வேண்டுவன பிறவும் கொடுப்போரும் இம்மைப் பயனும் புகழையும், மறுமையிற் சிவலோகத்திற் பெறலரும்பேறாய ஆனந்த மயமாம் பெரும் போகங்களையும் பெறுவார்கள். திருப்பேரூருறையும், பட்டிப்பெருமானார்க்கு உள்ளன்புடன் சிறப்புச் செய்வோர்க்கு எத்துணைப் பெரும் பயன்களுளவாகுமோ அத்துணைப் பயன்கள் இப் புராணத்தைச் சிறப்பிப்போர்க்கும் உளவாகும் என்று சூத புராணிகர் சொல்லக்கேட்ட நைமிச முனிவரெல்லோரும் நெஞ்சங் கனிந்தவராய் வணங்கிப் பட்டிநாதரின் பரங் கருணைத் திறத்தைக் கருதி ஆனந்தந் திளைத்து வாழ்ந்திருந்தனர்.

மாமறை முனிவர் வாழ்க மரகத வல்லி யோடும்
பாமலி புலவர் போற்றும் பட்டிநா யகனார் வாழ்க
காமரு வெள்ளி மன்றிற் கண்ணுத னடனம் வாழ்க
கோமனு நீதி வாழ்க குவலய முழுதும் வாழ்க.

திருப்பேரூர்ப் புராண வசனச் சுருக்கம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

N63 169957

உ
கடவுள் துணை

# திருப்பேரூரின் பண்டைய சரித வரலாறு

[கோவை, திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A., B. L. அவர்களால் எழுதப்பெற்றது]

## 1. இட அமைதி

தற்காலத்தில் பேரூர் என்பது கோவை நகர்க்கு 3 மைல் மேற்கே நொய்யல் என்கிற காஞ்சிமா நதிக்கரையில் பண்டைய ஓர் ஆலயத்தையுடைய ஒரு சிறு கிராமமாகக் காண்கிறோம். கொங்கு நாட்டாரும், மலையாள தேசத்தாரும் மிகுதியாக, தை, ஆடி அமாவாசைகளிலும், மார்கழி திருவாதிரை, பங்குனி உத்திரம் நாட்களிலும் திருவிழாக் காண வருவதுண்டு. மேலைச் சிதம்பரம் என்ற சிறப்புப் பெயர் வாய்ந்த இந்தப் புண்ணிய தலத்தினுடைய பண்டைய வரலாறு மிகவும் அருமை வாய்ந்தது. அதைப்பற்றி தற்காலம் தெரிந்தவற்றை மட்டும் குறிப்பிடுவோம்.

**பேரூர் நாடு**

தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையோரமாகக் காவேரியின் மேல்பாகத்தில் அதன் இருபுறமும் இருப்பது கொங்கு நாடு. இந்நாடு சங்கத்தார் காலமுதலே தனி நாடாக இருந்ததற்குப் புறநானூறே சான்றாகும். பிற்காலத்தில் இக் கொங்கு நாடானது, வடகொங்கு, தென் கொங்கு என்ற பெயரால் இரு பெரும் பிரிவுகளாக இருந்ததாக சோழர் ஆதிக்கத்துக் கல்வெட்டுக்களால் தெரிகிறோம். ஆனால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பேரூர்க்கு விசயம் செய்த காலத்தில் அப்பாகத்தை "மீகொங்கு"* அதாவது, மேல்கொங்கு என்று கூறியிருக்கிறார். ஆகவே மேல்கொங்கு ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அதுபோலவே கீழ்கொங்கு என ஒன்று இருந்ததாக எந்த ஆதாரத்திலும் காணோம். இவ்விதமான

* "மீகொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூரர் பெருமானை"

பிரிவுகளிருக்க, கர்ணபரம்பரையினாலும், கொங்குமண்டல சதகத்தினாலும் கொங்குநாடு 24 நாடுகளைக் கொண்டிருந்ததென அறிகிறோம். இந்நாட்டுப் பெயர்களில் குறும்புநாடு என்பதைக் "கொங்கிற் குறும்பிற் குரக்குத்தளியாய்" என்பது முதலிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்திலும், வடபாரிசார நாடு முதலான ஏனைய பேர்களைக் கல்வெட்டுகளிலும் காண்கிறபடியாலும் இப் பிரிவுகளும் பழமையானவை என்றே கூறலாம்.

இது நிற்க, கொங்குநாட்டில் உட்பிரிவுகளில் ஒன்று ஆறைநாடு ஆகும். இது வெள்ளிமலை முதல் அவிநாசி மட்டும் எட்டினதாம். தற்காலத்துக் கோவை, அவிநாசி 'இந்த இரண்டு தாலூகாக்களும் சேர்ந்ததாகும். இதில் கிழக்குப்பாகத்தை வடபாரிசார நாடு எனத் தனியாகவும் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆறை நாட்டில் மேல் பாகத்தைப் பேரூர் நாடு என்ற தனிப் பெயராலே கல்வெட்டுகளில் வழங்கி வந்திருக்கிறார்கள். இந்தப் பேரூர் நாடு மூன்று யோசனை நீளம் இருந்ததாம். கல்வெட்டுகளும் இதை நிரூபிக்கின்றன. பேரூர்ப் புராணமும் இதைக் காட்டுகிறது. பேரூர் நாட்டில் வெள்ளலூர்* (கோவைக்குத் தென் கிழக்கு 5 மைல்) கோவை, குறிச்சி (கோவைக்குத் தெற்கு 3 மைல்) முட்டத்து நாகேசுவரர் கோயில் (கோவைக்கு மேற்கு 15 மைல்) ஆகிய இவைகள் சேர்ந்திருந்ததாகக் கல்வெட்டுகள் சொல்லுகின்றன. "பேரூர் நாட்டு கோவன்புத்தூர் என்ற வீரகேரளநல்லூர்" என்ற சொல் தொடர் அக்காலத்தில் பேரூர் முக்கியமான பெரிய தலைநகரமாகவும், கோயமுத்தூர் அதை ஒட்டின ஒரு சிறு கிராமமாகவும் இருந்ததென்றும் தெரிவிக்கிறது. பெருநகரத்தை ஒட்டிப் புதிதாய் அமைத்த சிற்றூர்களுக்குப் "புதூர்" என வழங்கும் வழக்கம் இந்நாளிலும் இந்நாட்டிற் காணலாம். கோவன் என்ற பேருடைய ஒரு தலைவனால் புதிதாய் அமைத்த ஊர் என்பது இதன் பொருளாம். இந் நகரே இப்போது நாம் கோயம்புத்தூர் என்ற பெயரால் அறிகின்ற

* வெள்ளலூர் 141/1910. பேரூர் நாட்டு வெள்ளலூர். ஒரு செப்புச் சாசனம் வெள்ளலூர் அர்ச்சகரிடம் உண்டு. அதில் பேரூர் நாட்டு வெள்ளலூர், குறிச்சி என்று கண்டிருக்கிறது.



பெரு நகரமாகும். பேரூர்ப் புராணம் பேரூரைச்சுற்றி வில்லைப்
போல வளைந்து நிற்கும் பஞ்சகிரிகளாகிய விட்டுணுகிரி, பிரமகிரி,
உமாகிரி, மருதகிரி, வெள்ளியங்கிரி, என்பவைகள் பேரூருக்குச்
சேர்ந்ததெனக் கூறுகிறதனால் இந்தப் பேரூர் நாட்டு இடவமைதி
அக்காலத்தில் போளுமாம்பட்டிக் கணவாய் முழுதும் சேர்ந்து
கிழக்கே வெள்ளலூர் மட்டும் எட்டி இருந்ததெனக் கூறலாம்.


இச் சிறந்த நாட்டின் மத்தியில் பஞ்சகிரிகளாகிய வில்லுக்கு
ஓர் அம்பு தொடுத்தாற்போலக் காஞ்சிமா நதி என்ற நொய்யலாறு
ஓடுகிறது. இதன் கரையில் திவ்வியமான பண்டைய
**பேரூர் நகரம்** மேன்மைகளுடன் விளங்குவது பேரூர் ஊராகும்.
இதன் சரிதத்தைப் புலவர் பெருமானார் கச்சியப்ப முனிவர்
இற்றைக்கு 172 ஆண்டுகளின் முன், சகம் 1712-ம் ஆண்டில் அக்
காலத்தில் வழங்கிவந்த சரிதங்களைத் திரட்டி ஓர் அழகிய இலக்கிய
மாகப் பேரூர்ப் புராணம் என்ற பெயரால் இயற்றியுள்ளார்.
அதனைச் சிறிது ஆராய்ச்சி செய்தால் இந்தத் தலமானது அரசமரங்
களடர்ந்த ஒரு காடாக இருந்ததெனவும், அதனால் அதற்கு பிப்பிலா
ரணியம் எனப் பெயர் ஏற்பட்டதெனவும் தெரியவரும். அந்த
ஆரணியத்தில் ஆதிகாலத்தில் ஓரிடையன் தான் ஓட்டும் பசு தானா
கவே ஒரு இடத்திற் சென்று பால் கரக்கும் அதிசயத்தைக் கண்டு
அடித்த காலத்தில் அதன் குளம்பு பட்டு வடு ஏற்பட்ட ஓர் இலிங்
கத்தைக் கண்டு அதை ஊரார் தெரிந்து அதன்மூலமாக ஒரு கோயி
லும் பிரபலமாக ஏற்பட்டதென்று ஒரு வரலாறு வழங்கப்பெறு
கிறது. இதுதான் இக் கோயிலின் புராதன ஆதாரம்.

## 2. சரித்திரம்

பண்டைத் தமிழ் மக்கள் தங்கள் வாழ்நாளில் வழங்கிவந்த
பண்டங்கள் முதலியவைகளை அங்கங்கே வைத்துவிட்டிருப்பதைக்
கொண்டு அக்காலத்துப் பழக்க வழக்கங்களை நாம்
**1. பண்டைய** அறிய முடியும். மண் பாத்திரங்கள், தட்டுமுட்டுச்
**வரலாறு** சாமான்கள், இடுகாட்டுக் குழிகள் முதலியவைகள்
சிலவிடங்களில் நிலமட்டத்திற்குக்கீழ் அகப்படுகின்றன. இவைகள்

பழமையான இடங்களில்தான் அகப்படும். அப்படிப்பட்டவைகளில் பேரூர் நாடும் ஒன்று.

பேரூரிலிருந்து சித்திரச் சாவடிக்குப் போகும் வழியில் சில குழிகள் இருக்கின்றன. அவைகளின் உருவம் அடியிற் குறித்த படத்தைப் போலிருக்கும்.




பேரூர் பாண்டவர் குழிகள்

பூமி மட்டத்திற்குக் கீழே புழுதி மண்ணில் இவை கிடைத்தன.

[*A* பலகைக் கற்களால் மூடின அறைகள் 4 புறங்களிலும், மேலும் கீழும் பலகைக் கற்களால் மூடிக்கிடக்கும். கல் ஒன்று 3 அடி அகலமும் 3 அங்குல கனமும் உண்டு. *B*. மண் தாழிகள். இத் தாழிகளில் மாண்டவர் பிணங்களை வைத்திருந்தார்கள். எலும்புகள் மாத்திரம் கிடைத்தன. இறந்தவர்களின் பிரியமான வஸ்துக்களும் கிடந்தன. *C*. தாழிகளின் வாய்]

பலகைக் கற்களாலாக்கின மூன்று அல்லது நான்கு சிறு அறைகளும், அவைகளின் கீழ் பெரிய பானைகளும் வைத்திருக்கிறார்கள். அப் பானைகளில் இறந்தவன் பிணத்தை வைத்து, அவனுக்கு அருமையாக இருந்த பண்டங்களையும் வைத்திருந்தார்கள். இப்படிப்பட்ட பானைகளை வெள்ளளூரிலும், நொய்யலாற்றங்கரையிலும் கண்டெடுத்தார்கள். இக்குழிகளை இக்காலத்தில் "பாண்டவர் குழிகள்" என்கிறார்கள். ஆனால் அவைகள் "மாண்டவர் குழிகள்" ஆகும்.



மணிமேகலையில்,

"தாழ்வயி னடைப்போர்
தாழியிற் கவிப்போர்" —(6—67)

என்று இருத்தலும் புறநானூற்றுச் செய்யுள் —228 ல் *

"தேவர் உலகம் எய்தினன் ஆதலின்,
அன்னோற் கவிக்கும் கண்ணகன் தாழி"

என்று இருத்தலும் இவ் வழக்கத்தையே குறிக்கும். இத்தன்மைய வழக்கத்தைக் குறிக்கும் சின்னங்களால் இந்நாடு மிகப் புராதன நாகரிகத்தைப் பெற்றிருந்த நாடு என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். பேரூர் பெரிய நகரமாகவும், கோவன்புத்தூர் அதை அடுத்த மஜரா என்னும் சிற்றூர் ஆகவும் அந்நாள் இருந்த நிலை காலாந்தரத்தில் தலைமாறிப் பேரூர் சிற்றூராகியும், புத்தூர் பேரூராகியும் இந்நாள் காணும் காட்சியைக் கூர்ந்து நோக்கினால் இந்த மாறுதல் ஆவதற்கு உள்ள காலம் எத்தனை ஆண்டுகளாயிருக்கக்கூடும் என்பதும் ஒருவாறு ஊகிக்கலாம்.

**2. உரோமானியர் காலம்**

சில ஆண்டுகளுக்கு முன் பேரூர் நாட்டைச் சேர்ந்த பேரூரின் கண்ணும், வெள்ளளூரின் கண்ணும் நூற்றுக்கணக்கான உரோமானிய நாணயங்களைக் கண்டுபிடித்தார்கள். அங்கு அப்படிப்பட்ட புதையல்களிற் கண்டெடுத்த நாணயங்கள் கி. மு. 44 முதல் கி. பி. 54 வரை ஆண்ட உரோமானிய அரசர்களின் நாணயங்கள் ஆகும். அக்காலந்தான் உரோமானியர் உச்ச நிலைமையில் இருந்த காலம். தங்கள் அரசாங்கத்தையும், வாணிபத்தையும் பல தூர தேயங்களிலும் செலுத்திச் சிறந்து வாழ்ந்தனர். அங்கு ஆண்ட †அகஸ்டஸ் அரசன் முதல் நீரோ அரசன் வரை 68 நாணயங்களும், நீரோ (Nero) முதல் கோகல்லா (Caracula) வரை 217 நாணயங்களும் இந்தப் பிரதேசத்தில் கண்டெடுத்தார்கள். மேலும் பிற்காலத்து பைசேண்டியன் (Byzantian) வம்சத்து அரசர்கள் நாணயங்களும் சில கிடைத்தன.

* புறநானூறு செ. 238, 256, 364-லும் காண்க.

† K. V. Subramanya Iyer's Ancient Dekhan.

இவ்வளவு அதிகமான நாணயங்கள் ஒரே இடத்தில் கிடைத்ததை நோக்கினால் இந்நாட்டு மாந்தர் அக்காலத்தில் நாகரிகத்தில் முதிர்ச்சி அடைந்தும், வாணிபத்தில் சிறந்தும் விளங்கி அக்காலத்தில் நாகரிகத்தில் முதிர்ச்சி பெற்றவரான உரோமானியருடன் மிக்க செல்வாக்குடன் வாணிபமும், போக்குவரத்தும் கொண்டிருந்தார்கள் என எண்ண இடம் இருக்கிறது. மேலும் இந் நாணயங்களைப் பார்த்தால் அவைகள் சிறிதும் தேயாமல் புதிதாகத் தோன்றுகிறபடியால், அக்காலத்திலேயே புதைக்கப்பட்டுப் பின் வெகு காலம் எடுக்கப்படாமல் இருந்திருக்கவேண்டும் எனத் தெரிகிறது. மேலும் வேறு நூல்களிலிருந்தும் முத்து, மிளகு, இரத்தினங்கள் இவைகளும் தென்னிந்தியாவிலிருந்து உரோமானியர் ஏற்றுமதி செய்ததாக நாம் தெரிகிறோம். ஆகவே இப் பிரதேசம் கிறிஸ்து உயிருடன் இருந்த காலத்திலேயே மிகுந்த பிரபலம் பெற்றதாக இருந்திருக்கவேண்டும். ஆனால் வாணிகத் தொழிலில் இவ்வாறு அபிவிருத்தி அடைந்த அக்காலத்தில் அரசாங்க நிலைமை எவ்வாறு இருந்ததென்பதும், எந்த அரசர்கள் ஆண்டார்கள் என்பதும் அறிய ஓர் ஆதாரமும் கிடைக்கவில்லை. பண்டைத் தமிழ் நூல்களின் வாயிலாக அக்காலத்தில் சேரமன்னர் தம் ஆளுகைக்குள் சேர்த்திருக்கலாமென்றும், சிற்றரசர்களான அதிகமான் போன்ற வேளிர்கள் இந்நாட்டை ஆண்டிருக்கவேண்டும் என்றும் ஊகிக்க இடம் உண்டு.

### 3. பல்லவர் காலம்

தமிழ்நாட்டில் பல்லவர்கள் 3-வது நூற்றாண்டு முதல் 7-வது நூற்றாண்டு வரையில் மிகுந்த பராக்கிரமத்தோடு ஆண்டுவந்தார்கள். அவர்கள் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு தமிழ்நாடு முழுவதும் கைக்கொண்டு, கன்னட தேசத்தையும் செயித்தார்கள். அக்காலத்தில் பிரசித்தி பெற்ற அப்பர் சுவாமிகள் கொங்குநாட்டை அடைந்திருக்கிறார்கள். அன்னார் கி. பி. 650-ல் இருந்தார்கள். தன் க்ஷேத்திரக் கோவையில் "பேரூர் பிரமபுரம் பேராவூரும்", "ஆரூரார் பேரூரமூந்தையுள்ளார்" என்றும் நம் பேரூரைக் குறித்திருக்கின்றனர். இதைப் பற்றிய தனித்தேவாரம் மறைந்து போய்விட்டதுபோலும். ஆகவே ஒரு சைவ ஆசிரியர் விசயம் செய்து சமயப்பிரசாரம் செய்யும்படி



யான தேச அமைதி கொங்கு நாட்டில் அக்காலத்தில் இருந்தால் இந்த நாடு பல்லவர் வசத்தில் இருந்திருக்கலாம் என்று ஊகிக்க முடியும்.

சுமார் 8 அல்லது 9-வது நூற்றாண்டில் சேரர்களோ அல்லது ஒரு சேர வம்சமோ இந்நாட்டை வெற்றி கொண்டது. பேரூரில்

### 4. சேரர் மரபு

பண்டைத் தமிழ் எழுத்தில் உள்ள ஒரு கல்வெட்டில் கோக்கண்டன் ரவி என்றும், இரவி கண்டன் என்றும் அரசர் பெயர்களைக் காண்கிறோம்.* இச்சாசனம் தான் பேரூரில் உள்ள எல்லாச் சாசனங்களிலும் பழையது. வெள்ளலூர் சாசனங்களிலும் † பண்டைய தமிழ் லிபியான அக்காலத்து எழுத்தில் சில எழுதப்பட்டிருக்கின்றன. அவைகள் கோக்கண்டன் வீர நாராயணன், கோக்கண்டன் ரவி என்ற இரு சேர அரசர் பெயர்களைக் குறிக்கின்றன. தில்லை ஸ்தானம் செப்புத் தகடுகள் 9-ம் நூற்றாண்டில் இருந்த முதலாம் ஆதித்திய சோழன் காலத்தில் ஒரு கோக்கண்டன் தாணு ரவி என்ற ஓர் அரசன் இருந்ததாகக் கூறுகின்றன. அரசாங்கத்துச் சாசன ஆராய்ச்சிச் சாலைத் தலைவர் இவ்விரு அரசர் பேர்களும் ஒன்றே என்று அபிப்பிராயப்படுகிறார். ஆனால் அதன் உண்மை ஒன்றும் தெரியவில்லை. மேற்கூறிய சாசனங்களில் வெள்ளலூரை அன்னதான சிவபுரி அல்லது வள்ளலூர் என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. கோயமுத்தூருக்கு‡ வீரகேரளநல்லூர் எனப் பெயர் கொடுத்திருப்பதனால் அக்காலத்தில் ஒரு வீர கேரளன் என்ற சேர அரசன் இவ்வூரைச் செயித்துத் தன் பெயரை இங்கு நிலைநாட்டி இருக்கவேண்டும். வீரகேரளம் என்ற பேருடன் ஒரு கிராமம் இப்போது கோயமுத்தூருக்கு மேற்கே இருப்பது இங்கே கவனிக்கத்தக்கதாகும். மற்றும் பேரூர் நாட்டைச் சேர்ந்த நாகேசுரத்தில் அமர புஜங்க சதுர்வேதி மங்கலம் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. இப் பெயர்களாலே கேரள தேசத்து மன்னர் இந்நாட்டை உட்படுத்தி ஆண்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

---

* S. I. I. Vol. 5. 223.
† Ep. Reports 147/1910 and 148/1910.
‡ கோயமுத்தூர் alias வீரகேரள நல்லூர் 129/1990 Ep. Reports.

தென் இந்தியாவில் 8, 9-ம் நூற்றுண்டுகளில் பாண்டியர்கள் சிறிது மேம்பட்டு வந்து கொங்குநாட்டைக் கவர்ந்து ஆண்டார்கள் என்று சொல்லலாம். அக்காலம் மாறன் சடையன் என்ற பாண்டியன் கொங்குநாட்டை வென்று பேரூர் அடைந்து அங்குத் திருமாலுக்குக் குன்றம் அன்னதோர் பெருங் கோயில் கட்டினதாக ஜடாவர்வன்* சாசனத்தால் தெரிகிறது. இப் பாண்டியன் ஒரு பரம வைணவ பக்தன். மதுரகவியாழ்வார் அவன் மந்திரியாக இருந்தனராம். இதை மேற்கூறிய சாசனத்தில்,

**5. முதற் பாண்டிய ஆதிக்கம்**

† "காஞ்சிவாய்ப் பேரூர்புக்குத்
திருமாலுக் கமர்ந்துறையக்
குன்றமன்னதோர் கோயிலாக்கியும்
ஆழிமுன்னீர் அகழாக
அகல்வானத் தகடுரிஞ்சும்
பாழிநீண்மதில் பரந்தோங்கும்
பகலவனும் அகலவோடும்"

என்று கண்டிருக்கிறது.

ஆனல் அக்குன்றம் அன்னதோர் கோயில் இப்போது எங்கு போயிற்றே தெரியவில்லை. சமீப காலத்தில் விசாரித்ததில் பேரூர் கோயிலுக்குத் தென்கிழக்கில் உள்ள குளப்பகுதியில் முற்காலத்தில் ஒரு பெரிய விஷ்ணு கோயில் இருந்ததாகவும் அது அழிந்துபோக அதன் மூல விக்கிரகம்தான் இப்போது கோயில் முதற்சுற்றின் தென்பக்கத்தில் வெளியில் வைத்திருக்கும் இலக்குமி நாராயணர் விக்கிரகம் என்றுங் தெரிகிறது. இவ் விக்கிரகம் பண்டையகாலத்து விக்கிரகம் என்று அதைப் பார்த்தாலே தெரியவரும். அதைத் தட்டிப் பார்த்தால் வெண்கலம்போல சப்திக்கும். 1292-ல் ஆண்ட ஹொய்சள வீரவல்லாளன் காலத்தில் இவ்வாலயம் இருந்ததாக அவன் சாசனம் கூறுகிறது. இதைப் பற்றிய விவரங்கள் அதிகம் தெரியவில்லை.

---

* Museum plates of Jatavarman.
† 453/1906. 770-A. D.



பிறகு கொங்குநாட்டைக் கைப்பற்றி யாண்ட மன்னர்கள் தலைக்காட்டுச் கங்க வம்சத்தார்கள். இத் தலைக்காடு என்பது கொள்ளேகாலத் தருகில் காவேரியின் வடகரையில் உள்ளது. அக்காலத்தில் இரணவிக்கிரமன் என்பான் தலைக்காட்டில் அரசாண்டான். அமோகவர்ஷன் சளுக்கிய தேசத்திலும், வரகுணன் மதுரையிலும் ஆண்டார்கள். தேசம் அமைதி பெற்றுக் கல்வியும் சமயப் பிரசாரமும் பெருகியிருந்தது. அப்போது தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கொங்கு நாட்டிற்கு மும்முறை விசயம் செய்து பேரூருக்கும் வந்தார். அதை அவரே தம் கோயிற் றிருப்பதிகத்தில், 'மீ கொங்கி லணிகாஞ்சிவாய்ப் பேரூரர்ப் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்ரும் அன்றே' என்று வியந்துள்ளார். அந்தச் செய்தியைக் குறித்துச் சரித்திர உண்மைகள் கூறும் பெரிய புராணமும், பேரூர்ப் புராணம் முதலிய தல புராணங்களும் கூறுகின்றன. என் சிறு நூலாகிய "கொங்கு நாடும் சுந்தரரும்" என்ற நூலின்கண் இதை விவரமாகக் கூறியுள்ளேன். அக்காலம் கி. பி. 850 ஆகும். அக்காலத்தில் பின்னுளில் ஒதுக்கப்பட்ட வகுப்பார்களாகிய பள்ளர்களும் கோயில் விழாக்களில் கலந்து கொண்டிருப்பார்கள் என்ற கருத்தைப் பள்ளுப்படலத் திருவிளையாடல் என்ற ஐதீகத்திலிருந்து நாம் ஊகிக்க முடியும். இந்த நாளிலும் அத் திருவிழாவைக் கொண்டாடுவதற்காக அமைத்த நாற்று நடவு *உற்சவத்திலே அவர்கள் கலந்துகொள்வதுபோல வேறு தலங்களிலே நாம் பார்க்க முடியாது. வகுப்பு உரிமைகள் பல காலங்களில் பலவாறு மாறுபடுதல் சகசம் என்பதைத் தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சியினுல் நாம் தெரியலாம்.

**6. கங்கர்கள்**

தமிழ்நாட்டில் 9-ம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து 12-வது நூற்றுண்டின் இறுதி வரைக்கும் சோழர்கள் ஆதிக்கம் பலப்பட்டிருந்தது. அவர்கள் தெக்காணம், பர்மா, சாவகம் முதலிய நாடுகளையும் செயித்துத் தமிழர் நாகரிகத்தை தீவாந்தரங்களிலும் பரவச்செய்தனர். 900-ம் வருஷத்தில் தலைக்காட்டு மன்னர் க்ஷீணதசையடையச் சோழர் கொங்கு

**7. சோழ ஆதிக்கம்**

---

* இவ்வுற்சவமானது காலவேசுவரர் கோயிலைப் புதுப்பித்த மீனும்பாள் அம்மாள் அவர்களால் நியமிக்கப்பெற்று, சுமார் 80 ஆண்டுகளாக ஆனி மாதத்தில் நடைபெறுகிறது.

நாட்டைக் கைப்பற்றினர். அப்போது கொங்குநாட்டை அன்னார் ஒரு மாகாணம் ஆக்கி அதற்கு 'அதிராஜ ராஜமண்டலம் அல்லது சோழ கேரள மண்டலம்' என்று பேர் இட்டார்கள். விவரமாகக் கூறின் கொங்குநாட்டிற்கு இராஜேந்திரன் I காலத்தில் அதிராஜ ராஜமண்டலம் என்றும், குலோத்துங்கன் காலத்தில் சோழ கேரள மண்டலம் என்றும், விக்கிரம சோழன் காலத்தில் வீர சோழ மண்டலம் என்றும் பேர் இடப்பட்டது. அக்காலத்தில் இந்நாட்டில் வைக்கப்பட்ட அவரது பிரதிநிதி மன்னர்கள் பரம்பரையாக ஆளத் தொடங்கிவிட்டார்கள். அன்னார்களைக் 'கொங்கு சோழர்' என்று இப்போது ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள்.

கொங்குநாட்டில் முக்கியமாய்க் கொங்கு சோழரின் கல்வெட்டுகளே கிடைக்கின்றன. ஆனால் இப் பிரதிநிதிகள் ஆதிக்கம் அடைவதற்கு முந்தின காலத்தில் சோழநாட்டுச் சோழர் கல்வெட்டுகளும் கிடைக்கின்றன. உதாரணமாகப் பேரூர் ஆலயத்தின் அர்த்த மண்டபமும், மகா மண்டபமும் கட்டினது கொங்கு சோழர்கள் அல்ல. சோழநாட்டுச் சோழர்கள் காலத்திலேயே அவைகள் கட்டப்பெற்றன என்று கூறமுடியும். மகா மண்டபத்து ஆறு தூண்களிலும், ஒரு உத்திரத்திலும் கல்வெட்டுகள் உண்டு. அவைகள் இராஜேந்திர தேவனுடைய 26-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 29-வது ஆண்டில் முடிவடைந்திருக்கின்றன. ஆகவே அக் கட்டிடம் கட்ட மூன்று ஆண்டுகள் பிடித்திருக்கின்றன என்னலாம். தூண்கள் 26-ம் ஆண்டிலும், உத்திரம் 29-ம் ஆண்டிலும் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு தூண் * முட்டத்து வியாபாரி விழுமி பட்டியான் தனபாலனாலும், கெனபாட்டி அசாண்டானாலும், ஒன்று வீரசேகர தேவன் அகமுடையாள் தேவியாராலும், மற்றொன்று ஆயத்தாரில் சோலை பிச்சனான அழகமானாலும், தாம் தாம் தனிமையில் செய்துவிட்ட தருமங்களாகக் கூறியிருக்கிறது. உத்தரத்தைக் கொடுத்தது பேரூர் மன்றாடி திருவெண்காவுடையனான வீரகங்கன் என்பான்

* இப்போது பாழாகி மலைச்சுரம் வரும் முட்டம் என்பது அக்காலத்தில் அமரபுஜங்க சதுர்வேதி மங்கலம் என்ற பெரிய அக்கிரகாரமாக இருந்தது நாகேசுவரன் கோயில், வெள்ளலூர்ச் சாசனங்களால் அறியலாம்.



என்று கண்டிருக்கிறது. ஆகவே ஆலயத்தின் முக்கிய பாகங்கள் இராஜேந்திர தேவன் காலத்தில் ஏற்பட்டன வெனத் தெரிகிறது. இராஜேந்திர தேவன் என்ற கொங்கு சோழன் கிடையாது. ஆனால் சோழநாட்டுச் சோழரில் இரண்டு பேர் உண்டு. ஒருவர் கங்கை கொண்ட சோழன் (1013–1045 கி. பி.) அவரை இராஜேந்திர சோழன் I என்று கூறுவார்கள். அவர் மகனான மற்றவர் (1052–1062 கி. பி.) யில் ஆண்டவர். அவரை இராஜேந்திர தேவன் என்று மாத்திரம் கூறுவார்கள். ஆண்டுகளை நோக்கினால் 1013–1045 ஆண்டவரையும் பெயரை நோக்கினால் 1055–1062 ஆண்டவரையும் குறிக்கும். எவ்விதம் கொண்ட போதிலும் இக் கட்டிடம் சுமார் பதினொன்றாம் நூற்றாண்டின் முதலில் கட்டப்பட்டிருக்கலாம்.

மேலும் கொங்கு சோழரில் முக்கியமான அரசர்கள் இருவர். அவர்கள் முறையே விக்கிரம சோழர் 1004 முதல் 1065 வரைக்கும் வீரராஜேந்திர சோழர் 1207 முதல் 1252 வரைக்கும் ஆண்டார்கள். பேரூரிலே விக்கிரமனைக் குறித்து 4 சாசனங்களும், வீரராஜேந்திரனைக் குறித்து ஒரு சாசனமும் உண்டு. மற்றைய கொங்கு சோழர்கள் கரிகாலன், வீரசோழன், அதிராஜன், வீரநாராயணன் என்பவர்களும் சாசனம் பதிப்பித்திருக்கிறார்கள். ஒரு வீரபாண்டியன் என்பவரும் அவ்விதமே செய்திருக்கிறார்.

(a) விக்கிரம சோழன் :— மேற்கூறிய கொங்கு சோழரில் 1004–1045 ஆண்ட விக்கிரம சோழரைப்பற்றி * (இவன் வேறு, சோழநாட்டு விக்கிரமன் வேறு) கொங்குநாட்டில் இப்போதுவரை கிடைத்த 68 கல்வெட்டுகளில் கூறப்பட்டிருக்கின்றது. வெள்ளலூரில் 4-ம், போளுமாம்பட்டி நாகேசுரத்தில் 2-ம், இவன் காலத்தில் ஏற்பட்டவை. இவனுக்கு 'கோனாட்டான் கலிமூர்க்கன், பரகேசரிவர்மன், திருச்சிற்றம்பலமுடையான், கோக்கலிமூர்க்கன்' என்ற பட்டப் பெயர்கள் உண்டு. இவன்தான் கொங்கு சோழரில் சாசனங்களில் கூறப்பட்ட முதல் மன்னன். ஆனால் இவன் எந்த

* விக்கிரம சோழன்.

S. I. I. Vol. V. நெ. 225—(549/93) நெ. 227—(551/93)
,, 226—(550/93) ,, 236—(560/93)

ஊரைத் தலைநகராக்கிக்கொண்டு ஆண்டான் என்பதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை. அதைப்போலவே மற்ற கொங்கு சோழரின் தலைநகரும் தெரியவில்லை. பேரூரில் இவனுடைய 12 ஆண்டு முதல் 27 ஆண்டு வரையிலும், வெள்ளலூரில் 3 ஆண்டு முதல் 18 ஆண்டு வரையிலும் சாசனங்கள் கிடைத்திருக்கின்றன. இவன் சுமார் 40 வருடகாலம் ஆண்டதினுல் தேசம் மிகவும் அமைதியுடன் இருந்திருக்க வேண்டும். இவனுடைய கல்வெட்டுகளால் பேரூர் பட்டீசருக்கு அக்காலத்தில் "திருவான்பட்டி யுடையார்" என்று பேர் வழங்கி வந்ததாகத் தெரிகிறது. மற்ற ஆலயங்களிலே கோரப்பாடி என்ற ஆம்மடி சதுர்வேதி மங்கலம் கருணீசுர உடையார் கோயில் கூறப்பட்டுள்ளது. சிவப் பிராமணர்களில் ஆண்டான் மாமுனி தில்லைநாயகபட்டன், உய்யக்கொண்டான் விக்கிரம சோழ பட்டன், ராசபட்டன், சோமநாத தேவன், மருதவனப் பெருமாள் என்ற பேர்கள் காணப்படுகின்றன. கைக்கோளர்களில் குலையன் பொத்தியன் செல்வஞான சம்பந்தன் என்பவன் பெயரும், வாணியக் குடியில் செட்டியரசன், செட்டிகறுத்தான், செட்டி சிறுவரன் என்பவர்கள் பெயர்களும் காணப்படுகின்றன.* விக்கிரமன் 24-ம் வருஷம் மாசி மாதம் முதல் தேதி முதல் நெல்வேலி உடையான் ஆளவந்த பிள்ளையான பல்லவராயன் தான் வைத்த நந்தாவிளக்கைத் திருவான் பட்டீசுரமுடையார்க்கு இடுவதற்காக எண்ணெய் தருமம் செய்தான். அதற்காக மேற்படியானுக்கு மேற்கூறிய வாணியக்குடி மக்கள் ஒரு நந்தா விளக்குக்காக அச்சு ஏழுக்கு எள் எண்ணெய் சூலக்காலாலே 7 நாழி அளப்பதாக ஒப்பந்தம் ஒன்று 1028-ம் வருஷம் மாசி மாதம் 1-ம் தேதியில் செய்ததாகக் கண்டிருக்கிறது. ஆகவே அக்காலத்தில் வாணியர் செட்டிப் பட்டம் கொண்டதும், எண்ணெய் முதலிய பண்ட மாற்றுதலுக்கு ஒப்பந்தங்கள் செய்வதும் வழக்கமாக இருந்தன என்று அறிகிறோம்

1031 கி. பி. யில் கோரப்பாடி கருணீசுரமுடையார் கோயில் சிவபிராமணன் தில்லை நாயகபட்டன் பேரூர் கைக்கோளரில் செல்வ ஞானசம்பந்தன் பால் பணம் பெற்றுக்கொண்டு அக் கோயிலுக்கு இருநாழி அரிசி, சோறு இரண்டு சட்டி இடுவன் ஆகவும் அதைக் கோயில் குடத்தால் அளப்பானுகவும் எள் ஒப்பந்தம் செய்தான். மற்றும் மேற்சொன்ன தில்லைநாயகபட்டனும், உய்யக்கொண்டானும், அதே ஞானசம்பந்தன் பால் கொண்ட பணத்திற்காகப் பங்குனித் திருநாள் தீர்த்தம், தெப்பம் முதலியவைகளுக்காக 5 கலம் நெல் கொடுப்பதாகவும், இன்னமும் பல கணக்குகளுடன் ஒப்பந்தம் செய்தான். மேலும் திருவான்பட்டி உடையான் கோயில் சிவ பிராமணன் விக்கிரம சோழபட்டன், இராசபட்டன், சோமதேவன், மருதவனப் பெருமாள் இந் நால்வரும் திருஞான சம்பந்தன் பால் பணம் பெற்றுக்கொண்டு சந்தியா தீபம் இடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள். ஆகவே செல்வ ஞான சம்பந்தன் அக்காலத்தில் ஒரு பெரிய தர்மப் பிரபுவாக இருக்கவேண்டுமென்பது அறியக் கிடக்கிறது. அவன் விக்கிரம சோழன் 12 முதல் 27 ஆண்டு வரை 15 வருடகாலம் பேரூரில் தர்மிஷ்டனுக வாழ்ந்ததும் நோக்கத் தக்கது.

---

* 225/S 11 Vol. 5.



பேரூர் பட்டீசுரமுடையார் கோயிலுக்கு வட கிழக்கில் தெப்பக் குளத்திலிருந்து அரசம்பலவாணர் சந்நிதிக்குச் செல்லும் ஒரு சந்துத் தடத்தில் ஓர் இடிந்த பழைய கோயில் இருக்கிறது. அதை 'அழகிய சிற்றம்பலம்' என்கிறுர்கள். அதன் அடிப்பாகத்தில் 8 கல்வெட்டுகள் இருக்கின்றன. இவைகளை அண்மையில் தான் அரசாங்கத்தார் பிரதி எடுத்திருக்கிறுர்கள். அக்கோயிலின் சுவாமி பெயர் 'இடங்கை நாயக ஈசுரமுடையார்' என்று காணப்படுகிறது. பட்டீசருக்கு இடது கைப்பாகத்தில் உள்ளதால் இப் பெயர் ஏற்பட்டது போலும். அவைகளில் எல்லாம் தானங்கள் கொடுத்த விஷயங்களே காணப்படுகின்றன. ராஜாதித்தமல செம்பியன் கிழானடிவதி, திருவானடை வாய்க்கால், கண்ணுற்று, சிவபாத சேகர சதுர்வேதி மங்கலத்துச்சபை, வீரகோள விலாடகுல மாணிக்கவதி, அதிராஜராஜ வாய்க்கால் முதலிய எல்லைப் பெயர்களும், குடிமைப் பாடு, கடமை, எலவை, அகவை, திருக்கொற்ற வாசலால் போன குடிமைப் பாடுகள், வீரசமக்கள், அம்மனங்காரர், சேனுபதிகள் முதலிய பெயர்களும் காணப்படுகின்றன. இராஜைஷ சொல்லும்

போது "பன்மாகேசுர ரக்ஷை; ஆறு சமக்கட்டார் ரக்ஷை" என்று கூறியிருக்கிறது. இதன் பொருள் விளங்கவில்லை. இக் கல்வெட்டுக்களைத் தவிர 3 கல்வெட்டுகள் மழுங்கிக் கிடக்கின்றன. ஒன்று அரைகுறையாக இருக்கிறது. இக்கோயில் மிகப் பழைய கோயில் என்பது இவைகளால் தெரியவருகிறது.

(b) வீரசோழன் 1183—1206 :— இவனைப்பற்றிய ஒரே சாசனம் பேரூரில் இருக்கிறது. வெள்ளலூரிலும் ஒன்று உண்டு. கொங்கு நாட்டில் சுமார் 20 சாசனங்கள் உண்டு. இவனுக்குப் பரகேசரி, இரு கொங்கும் ஆண்டவன், கலிமூர்க்கன் என்ற பட்டங்கள் உண்டு. ஒருவேளை முதல் முதலாகத் தென் கொங்கு, வட கொங்கு என்ற இரண்டு நாடுகளையும் தன்வசப்படுத்திய முதல் அரசன் இவனாக இருக்கலாம். இவன்தான் உடுமலைப்பேட்டை தாலுக்கா ஆம்பிராவதி நதிதீரத்தில் சங்கிராம நல்லூரில் உள்ள வீர சோளீசுரமுடையார் ஆலயம் கட்டினவன். இவனுடைய காலம் சரியாகத் தெரியவில்லை. உத்தேசமாகப் போடப்பட்டிருக்கிறது. இவன் காலத்து 15 ஆண்டில் ஏற்பட்ட பேரூர்ச்* சாசனத்தில் பெருமான் அதிகாரம் செய்வார்களில் 'சாத்தில்லை நாயகம் மூவேந்த வேளான்' என்பான் திருவான் பட்டீசுரம் உடையார்க்கு உத்திராயனத்துக்குக் கலசம் 108-ம் ஆடியருள அரிசி அமுது செய்யவும், திருவீதியிலே எழுந்தருளித் திருவோலக்கம் செய்து அரிசி அமுது செய்ய அரிசியும், 100 பிராமணர்களும், 100 தபசிகளும் அமுது செய்யவும், தேவரடியார்க்கு நெல்லும் கோயில் அதிகாரிகளிடம் கொடுத்துத் தானம் செய்தது கண்டிருக்கிறது. அக்காலத்தில் இவ் வகுப்பார்கள் பெற்ற சிறப்பு எத்தன்மையது என்று இதனால் தெரிகிறது.

(c) வீர ராஜேந்திர சோழன் 1207—1252 :— இவன்தான் கொங்கு சோழரில் மிகவும் பிரக்கியாதி பெற்றவன். இவனைப்பற்றி 141 சாசனங்கள் கிடைத்திருக்கின்றன. அவைகளில் பேரூரில் 1-ம் அவிநாசியில் 9-ம் இருக்கின்றன. இவனுக்கு உலகுடைய பெருமாள், கோனேரின்மை கொண்டான், இரு கொங்கும் ஆண்டான்

* S. I. I. Vol. 5. 231—555/93.



என்ற பட்டங்கள் உண்டு. இவன் காலத்து ஒரு சாசனத்தில் முட்டம் என்ற அமரபுஜங்க சதுர்வேதி மங்கலத்தில் முற்காலத்து சேர மன்னர்களான அதிராஜராஜன், ராஜராஜ தேவன் முதலானோர் கொடுத்திருந்த தானங்களை மறுபடியும் புதுப்பித்ததாகக் கண்டிருக்கிறது. ஆகவே இப்போதைக்குச் சில காலத்திற்கு முன் பாழாகக் கிடந்த முட்டத்து நிலங்கள் 700 வருஷத்திற்கு முன் செழிப்பான நாடாக இருந்திருக்கவேண்டும். இவன் ஒரு காலத்தில் படையெடுத்து ஒரு கோயிலை இடித்து மறுபடியும் புதுக்கினதாகத் தெரிகிறது. இவன் அரசியின் பெயர் உலகுடைய பிராட்டி. இவன் காலத்தில் ஆணையச்சு, சீயக்கி என்ற நாணயங்கள் வழங்கிவந்தன. இவன் காலத்துப்* பேரூர் சாசனத்தில் பாண்டிநாட்டு ஒரு வியாபாரி பாம்புணி கிழவன் அப்பன் அகத்தீசுர முடையானான இருநிதிக் குபேரன் என்பான், பேரூர் திருவான் பட்டியுடையார்க்குச் சந்திரா தீபம் இரண்டு தானம் செய்ததும், அதற்கு வேண்டிய பொருள் கோயிலில் சேர்த்ததும் கண்டிருக்கிறது.

(d) கோனேரின்மை கொண்டான் :—இப்பெயர் ஒரு பட்டப் பெயரேயன்றி ஓர் அரசனின் சிறப்புப் பெயர் அல்ல. என்றாலும் கொங்கு நாட்டில் இப் பெயராலே 55 கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன.† அவைகளில் பேரூரில் மூன்று. பெரும்பான்மையாக இப்பெயரால் கல்வெட்டுகள் இருப்பதாலும் அப்பெயரை வீர ராஜேந்திரனே கொண்டுள்ளதாலும் இக் கல்வெட்டுகள் எல்லாம் அவ்வரசனுடையதாகவே கொள்ள இடம் உண்டு. வேறு இரண்டு அரசர்களும் இப் பெயரைக் கொண்டிருந்தார்கள். இவ்வரசன் காலத்துக் குமரலிங்கத்து ஒரு சாசனத்தினால் தான் கோயமுத்தூரின் ஆதிப் பெயரும், அதன் உற்பத்தியும் ஒருவாறு அறியலாம். கோவன் என்ற இருளர் தலைவனால் ஆக்கப்பெற்ற ஒரு புதூர் என்றது அதன் காரணம் என்று அறிகிறோம். இவன் காலத்துப்‡ பேரூர் சாசனத்

* S. I. I. Vol. 5. 237—561/93.

† S. I. I. Vol. 5, 232, 238, 241
556/93 562/93 565/93

‡ ஷெ. 232.

தால் இராசத் துரோகிகள் அந்நாளில் எவ்வாறு தண்டிக்கப்பெற்றார்கள் என்று அறிகிறோம். ஒரு திரிபுவன சிங்க தேவன் என்பான் இராஜத்துரோகி யானதால் அவன் சொத்துக்கள் எல்லாம் அரசன் கைப்பற்றிக்கொண்டு பேரூர் திருஆன் பட்டீசுர முடையார்க்கு இராஜராஜ சந்தி என்ற திருவிழாவாக உச்சிச் சந்தி அமுதுக்காக மேற்படியானுக்குச் சேர்ந்திருந்த புத்தூர், கோளூர், குறிச்சி முதலான பேரூர்நாட்டு விளை நிலங்களை யெல்லாம் மார்கழி மாதம் 4-ந் தேதியில் கொடுத்ததாகக் கண்டிருக்கிறது. இக்காலத்திலும் இராஜத் துரோகிகளுடைய சொத்துக்களை அரசாங்கத்தார் கைப்பற்றும் செய்தியை ஒத்திட்டுப் பார்க்கலாம்.

மற்றோர் சாசனத்தில்* கோவன்புத்தூர் என்ற வீரகேரள நல்லூரில் ஒரு நிலத்தின் எல்லையைச் சொல்லும்போது சிவபாத சேகர மன்னரை, அதிராஜராஜவாய்க்கால், கொங்குகுல வல்லிவதி என்ற பெயர்கள் காணப்படுகின்றன. இதனாலே இப்போது பேரூர் அணையிலிருந்து வரும் ராஜவாய்க்கால் அக்காலத்திலேயே அதே பெயருடன் ஏற்பட்டதென்று அறியலாகும். மேலும் பங்குனித் திருநாளில் திருப்பதிகம் (திருப்பதியம்) பாடுவார்க்கும், நட்டுவர்க்கும் நெல் தானியம் அளிக்க அந்நிலத்தைத் தானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. சோழநாட்டில் இராஜராஜசோழன் ஆலயங்களில் திருப்பதிகம் பாடும்படி உத்தரவு செய்ததுபோலவே கொங்கு நாட்டிலும் செய்யப்பட்டது காணலாம். இவ்வரசன் 15-ம் ஆண்டில் ஆடி மாதத்தில் கம்மாளர்க்குச் சில உரிமைகள் தந்ததாகவும், அதை மற்ற இடங்களில் எழுதி வைக்க உத்தரவு இட்டதாகவும் ஒரு சாசனம்† பேரூரிலும், அதைப்போன்ற சாசனங்கள் கரூர், பாரியூர், மொடக்கூர், குடிமங்கலம் என்ற ஊர்களிலும் செதுக்கப்பட்டிருக்கின்றன. அச் சாசனங்களின்படி அந்த நாள் முதல் கம்மாளர்கள் "நன்மை தீமைகளுக்கு இரட்டைச் சங்கு ஊதுதல், பேரிகை அடித்தல், போகும்போது பாதரட்சை அணிதல், வீட்டுக்கு

---

* 129/1909
143/1910 which mentions கோவன் அரசன்.

† 562/1893



சாந்து பூசுதல் செய்யலாம்" என்று கண்டிருக்கிறது. இவ்வுரிமைகள் சாதாரணமாக ஒவ்வொருவனுக்கும் இருக்கத்தக்கனவாக இருந்தாலும் அதுகாறும் கம்மாளர்க்கு இருக்கவில்லைபோலும். அவை அவ்வரசனால் புதிதாய் அவர்களுக்கு அளிக்கப்பட்டன போலும் என அறியக்கிடக்கிறது.

மேலும் கோனேரின்மை கொண்டான் காலத்துத் தாம்பிரப் பட்டயம் ஒன்று பேரூர் கோயில் அருச்சகர் வசம் இருக்கிறது. இரண்டு செப்புத் தகடுகளாக இருக்கின்றது. அவைகளில் ஒன்றில் முதலும், மற்றொன்றில் கடைசியும் இல்லை. எழுத்தோ புராதனமானது. கோனேரின்மை கொண்டான் என்ற அரசன் பேரூர் நாட்டு வெள்ளலூர் தேனுருடையார் கோயிலில் காணியுடைய சிவப்பிராமணன் பாரத்துவாஜ கோத்திரத்து இராசராசபட்டன் அவ்வரசனுக்குச் செய்த பணிக்காகத் தானம் கொடுத்ததாம். அனுத்திர பல்லவராயன் உத்தம சோழன் காரைத்தொழுவில் உத்தம சோழர் இட்ட கோட்டையை எறியலான விஷயங்கள் கண்டிருக்கின்றன. ஆனால் விஷயம் பூர்த்தியாக இல்லை. மற்றொன்றில் அக்காலத்துச் சாசனம் (தஸ்தாவேஜ்) எழுதும் விதம் தெரிகிறது. "விலை, ஒற்றி, தர்மம், தானம், ஸ்ரீதனம் இவைகளுக்கு உரித்தாகி" என்பன நோக்கத்தக்கன. மேலும் "இவனுக்குக் கொடுத்த வரிசை ஆண் வழிக்கு மரணச் சங்கு ஊதிவருவதாயும், பெண் வழிக்கு இரட்டைச் சங்கு ஊதி வருவதாயும், வளையல் வைப்பானாகவும், காலுக்குச் சந்தனம் பூசி வருவதாகவும், பச்சை பிடாம் போற்பானாகவும், அகம் இரண்டாம் நிலையெடுத்துச் சாந்து இட்டுக்கொள்ளப் பெறுவானாகவும், இவன் மக்கள், மருமக்கள் செய்துகொள்ளப் பெறுவதாகவும், நம் ஓலை செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ளக் கொடுத்தோம்" என்று கண்டிருக்கிறது. இதைப் பார்த்தால் கம்மாளர்க்குக் கொடுத்த உரிமைகளைப் போன்று இருக்கிறது. அக்காலத்தில் ஜன சமூக உரிமைகளும் அரசர்களால் கொடுக்கப்பட வேண்டியிருத்தல் காண வியப்பாக இருக்கிறது. இதனால் சுலபத்தில் சில வகுப்பார் உரிமைகள் பெறவும் இழக்கவும் ஏற்படும் என்பது ஆராயத்தக்கது.* இக்காலத்தில் முடியுமா?

---

* Note Sarada Act and agitation on it.

(e) கரிகாற் சோழன்:— இப்பெயர் கொண்ட ஓர் அரசனின் சாஜனங்கள் ஆறு* பேரூரில் உண்டு. இவனுக்கு ராஜராஜன் என்ற பெயரும் உண்டு. இப் பெயரும் பட்டப் பெயராக இருக்கலாம். பேரூர்ப் புராணத்திலும் இவன் பெயரைக் காண்கிறோம். இவன் காலத்தில் அற்பிசியிலும், உத்திராடத்திலும் திருவிழாக்கள் கொண்டாடப் பெற்றதும், கறியமுது, உப்பமுது, மிளகமுது, பருப்பமுது, நெய்யமுது, தயிரமுது, சர்க்கரை யமுது, திருவிளக்கெண்ணெய், அடைக்காயமுது, இலையமுது, இவைகள் கோயிலுக்கு அளிக்கப் பட்டனவென்றும், திருப்பதிகம் பாடுவார்க்கு நிலம் விட்டதும் குறிக்கப்பட்டிருக்கிறது. நெல் அக்காலத்தில் கலத்தால் அளக்கப் பட்டதும் தெரிவிக்கிறது. அக்காலத்து அர்ச்சகர் பேர்களில் சந்திர சேகர பட்டர், திருமகன்பாடி திருவாலந்துறை குமரங்க வீம பட்டன் என்ற பேர்களும், கைக்கோளரில் ராமன், பொன்னன் ஆன காடவராயன் பெயரும், ஏனையோரில் உய்யவந்தான், அருளாளன், வில்லவன், சோழ பிரமராயன் என்ற பேர்களும் காண்கிறோம். இதனால் அக்காலத்தில் பெயரிடும் தன்மை அறிகிறோம்.

மேலும் நடராஜப் பெருமானுக்குக் "கூத்தாடு தேவர்" என்ற சிறந்த பெயரும், அவர் பங்குனித் திருநாளில் திருச்சாந்து சாத்திப் பிச்சவேடம் கொண்டருளினதும் குறிக்கிறது. மற்றோர் சாசனம் திருவான் பட்டீசுரம் உடையார்க்குச் செங்கழுநீர் மலர் சாத்தினதும் சொல்லுகிறது. அக்காலத்து ஒரு கல்சிற்பியும் எழுத்தாளனுமான விழுபாதராயன் கலிங்கராயன் என்பவன் பல கல்வெட்டுகளையும் எழுதின ஆசிரியனாய் இருந்தான்.

கொங்கு நாட்டில் உள்ள சாசனங்களை ஆராய்ச்சி செய்தால் பலவித காரணங்களைக் கொண்டு ஒரு இராஜவம்சமே இங்கு அரசாண்டதென்று கூறமுடியும். அதை அடியிற்கண்ட விதமாகக் கணிக்கக் கூடியதாயிருக்கிறது.

* S. I. I. Vol. 5. 228—552/93 230—554/93 239—563/93
229—553/93 233—557/93 240—564/93



விக்கிரம சோழன் (1004—45)
|
அபிமான சோழ இராஜாதி ராஜன் (1080—1110)
|
இராஜாதிராஜ உத்தமன் 1110—1117 — இராஜாதிராஜ வீரசோழன் 1117—1135
|
உத்தம சோழ வீர நாராயணன் 1135—1149
|
குலோத்துங்கன் 1149—1183
|
வீரசோழன் 1183—1206
|
வீர இராஜேந்திரன் 1207—1255
|
விக்கிரமன் II 1155—1263
|
(ஒரு இராஜசேசரி) 1263—1273
|
விக்கிரமன் III 1273—1303

**8. கொங்கு பாண்டியர்**

சோழ ராச்சியம் 13-ம் நூற்றுண்டில் சீர்குலைந்த காலத்தில் பாண்டிய மன்னர் முன்னுக்கு வந்தார்கள் என்று சரித்திரத்தால் அறிகிறோம். அக்காலத்தில் கொங்கு நாடும் அன்னார் கையில் அகப்பட்டது. அப்போது இங்கு ஆண்ட பிரதிநிதிகள் கொங்கு பாண்டியர் என்ற பேராலே கூறப்படுகின்றனர். அவர்களில் முக்கியமானவன் 1265-1285 ஆண்ட வீரபாண்டியன். இவனைப்பற்றி 51, சாசனங்கள் உண்டு.

அவைகளில் 2 பேரூரில்* உண்டு. இவன் காலத்தில்தான் அவிநாசி சுந்தர நாயனார் கோயில் ஏற்பட்டது. இவனது பேரூர்ச் சாசனம் ஒன்றில் ஒரு வெண்பா காணப்படுகிறது. கொங்கு நாட்டிலே செய்யுள் வடிவானது இது ஒன்றுதான். ஆனாலும் இதே வெண்பா மூவலூரில் சிறிது மாற்றிச் செதுக்கப்பட்டுள்ளது. அது,

“தண்டலஸ் வான்ஓலை சாகரம்சூழ் வையகத்துக்
கண்டுஷ் வான்கரும மாராய்க—பண்டே
அறம்செய்தான் செய்தான் அறங்காத்தார் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து”

என்றது. இதனைத் தானங்களில் காணும்போது வெண்பா என்பர். இவ்வெண்பாவின்கீழ்க் கோவன்புத்தூரில் ஒரு நிலம் தானம் செய்த விஷயம் கண்டிருக்கிறது.

### 9. ஹொய்சளர் ஆதிக்கம்

12-ம் நூற்றாண்டில் சோழர்களும், பாண்டியர்களும் க்ஷீண திசையடைய மைசூர் நாட்டு துவார சமுத்திரத்தில் ஆண்ட ஹொய்சள அரசன் விஷ்ணு வர்த்தனன் கொங்கு நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். பேரூர் சாசனங்களினால் வீர வல்லாள தேவன் III என்பவன் இந்நாட்டை ஆண்டது தெரியவரும். அவன் சாசனங்கள் 1292 முதல் 1341 வரை கிடைக்கின்றன. அவன் காலத்து சாசனங்களினாலே பல தானங்கள் பேரூர் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைக் கண்டால் தேசம் அப்போது மிகவும் செழிப்பாக இருந்திருக்க வேண்டும் என்று எண்ணலாம். பேரூரில் இவ்வரசன் சாசனம்† ஒன்றில் சக வருஷம் 1245-ம் வருஷம் ருதிரோத்காரி மின்னுயிற்று பூர்வபக்ஷம் பிரதிமை உத்திரட்டாதி நாளில் வீரமார்த்தாண்ட நாய்க்கர் மகன் வீரசிக்க நாய்க்கர் ஒடுவங்க நாட்டு நீலகிரி சாதாரணன் கோட்டையில் மாதவப் பெருமாளுக்கு 13 ஊர்களின் தர்மம் செய்தது குறிக்கப்பட்டிருக்கிறது. மேலும் மற்றோர் ‡சாசனத்தில் உச்சிச் சந்தி,

* S. I. I. Vol. 1. 5. 243—567/93
,, 244—568/93
† S. I. I. Vol. 5. 224—548/93
‡ S. I, I. Vol. 5. 242—566/93
245—569/93



தென்னவதரையன் சந்தி, தோப்பில் மண்டபத்தே தைப்பூசத் திருநாள், பங்குனித் திருநாள் ஆகிய திருவிழாக்களும், பிறவாநெறிக் காணியில் அளப்பதும், கண்டிருக்கிறது. ஆகவே பிறவாநெறி என்ற க்ஷேத்திரப் பேர் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்தது எனத் தெரிகிறது. “பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே” என்ற சுந்தரமூர்த்திகள் தேவாரம் இங்கே கவனிக்கத் தக்கது.

### 10. விஜயநகர் அரசியல்

1295 கி. பி. யில் அலாவுதீன் என்ற முகம்மதிய அரசன் தக்ஷிண தேசத்து அரசரைத் தோற்கடித்துக் கைப்பற்றினபோது பழைய அரசியல்களெல்லாம் போய் விஜயநகரம் என்ற இந்து சாம்ராஜ்ஜியம் தாபிக்கப்பட்டது. அக்காலத்தில் கொங்குநாடும் அதன் பாற்பட்டது. சிறு மன்னர்களான பாளையக்காரர்கள் எங்கும் இராணுவ விஷயத்திற்காக வெளிப்பட்டனர். சுற்றுப்பக்கத்துச் சாசனங்களில் விஜயநகரத்து மன்னர்கள் பெயர்கள் குறிக்கப்பட்டிருப்பதால் பேரூரும் அவர்கள்பால் சென்றது. இக்காலம் அதாவது 1450 வருஷ காலத்தில் திருவண்ணாமலையில் அவதரித்த அருணகிரிநாதர் கொங்கு நாடு விஜயம் செய்து பல தலங்களுக்கும் திருப்புகழ் பாடி வந்து பேரூருக்கும் வந்து அதற்கும் திருப்புகழ்* அருளியிருக்கிறார். இத்தலத்துக்குச் சேர்ந்த மருதகிரி, அனுமக்குமரர் மலை, குருடிமலை (குருவிருடிமலை) முதலான தலங்களுக்கும் அருளியிருக்கிறார். ஆதலின் இவ்வூரில் சிறிது காலம் அப்புலவர் பெருமான் அமர்ந்திருத்தல் வேண்டும் என்று ஊகிக்கலாம்.

இக்காலத்தில் தான் தெற்கநாம்பி அரசர்கள் முன்னேற்றம் அடைந்து கொங்கில் சில பாகங்களைக் கைப்பற்றினார்கள். அவர்களில் வீரநஞ்சராய உடையார், சிக்கராய உடையார் முதலியவர்களின் சாசனங்கள் அவிநாசி, திருமுருகன் பூண்டி முதலிய இடங்களில் இருக்கின்றன. அவர்கள் காலம் 1489—1517 வரையில்.

* போற் பெரியோனே பேரூர்ப் பெருமானே. —திருப்புகழ் 953.
பட்டி யாள்பவர் கொட்டி யாடினர்
பாரூரா சூழ் பேரூராள்வார் பெருமானே. —திருப்புகழ் 954.

அக்காலத்தில் தெற்காம்பிக்குச் சேர்ந்த சங்கரையன் மகன் மாதையன் என்ற மந்திரி திருப்பேரூர் திருக்குளத்தைக் கட்டித் தன் பெயரைக் கன்னடத்திலும், தமிழிலும் செதுக்கியிருக்கிறான். அதில் அவன் தன் செயலை "திருக்கணம்பி சங்கரையனவர்கள் குமாரன் மாதையன் சேவை" என்று செதுக்கியிருக்கிறான். இது 16 இடங்களில் முதற்படியிலும், 6-ம் படியிலும் 8 புறங்களில் செதுக்கப்பட்டிருக்கிறது. கர்ண பரம்பரையாக முற்காலத்து, "குன்ற மன்னதோர் திருமால் கோயிலின்" இடிந்த கற்களைக் கொண்டு தான் இந்தக் குளத்துப் படிகளை இவன் கட்டினதாகச் சொல்வார்கள். குளத்தின் தென் கரையில் லட்சுமி நாராயண மூர்த்தியை* வெட்ட வெளியில் வெகுகாலம் வைத்திருந்தார்கள். இந்த மூர்த்திதான் அக்கோவிலினுடைய மூர்த்தியாகும் என்பார்கள். மேலும் அக்குளத்துக் கிழக்குக் கரையில் அந்த மாதையனால் கட்டப்பட்ட மாதேசுவரன் கோயிலும் ஒன்று இருக்கிறது.

### 11. மதுரை வமிசம்

கி. பி. 1565-ல் விஜய நகரம் தொலையவே 1600-ல் மைசூரார் கொங்கு நாட்டைக் கைப்பற்றினர். ஆனால் சில வருஷங்களுக்குள்ளாக மதுரை அரசர்களான நாய்க்கர்கள் கொங்கு நாட்டில் படையெடுத்து அதைப் பிடித்துக் கொண்டனர். பேரூரின் கண் அமைந்துள்ள சிறந்த சிற்ப வேலை கொண்ட கனகசபையானது அக்காலத்தில் ஆண்ட திருமலை நாய்க்கர் (1625—1659) சகோதரனான அளகாத்திரி நாய்க்கனால்† கட்டப்பட்டதென்பர். கனகசபையின் முன்னுள்ள ஒரு தூணில் ஆங்கிலேய உடுப்புடன் உள்ள ஒரு போர் வீரன் ஒரு துப்பாக்கியைக் கையில் கொண்டிருக்கும் சிறப்பு நோக்கத்தக்கது. இதுவே இச்சபை சமீப காலத்ததென்று காட்டும். கோயில் கட்டின

* S. I. I. Vol. 5. 242. சாசனத்தில் "இலக்ஷுமி நாராயணம் பெருமாள் திருவிடையாட்டத்துக்குத் தெற்கு" என்று ஒரு நிலத்தின் எல்லையைக் குறித்திருக்கிறதினால் அச்சாசன காலமாகிய வீரவல்லான் III காலத்தில் அக் கோயில் இருந்ததென அறியலாம்.

† அளகாத்திரி நாய்க்கனை திருமலை நாய்க்கரின் மைத்துனன் என்பாரும் உண்டு. (See Rangachariar's inscriptions of Madras Presidency page 528)



அளகாத்திரி நாய்க்கரின் உருவமும் ஒரு தூணில் உண்டு. அதைத் தற்காலம் புதுப்பித்த செல்வமான்கள் கட்டிடத்திலிருந்து விலக்கி வெளியில் வைத்து விட்டார்கள். இந்த கனகசபையின் அழகைப் பற்றி நாம் வருணிக்க முடியாது. அதை அனுபவிப்பதானால் ஒவ்வொருவரும் பார்த்தே தீரவேண்டும். ஒரே கல்லால் செதுக்கப்பட்ட நுட்பமான பெரிய உருவங்களும், சங்கிலிகளும், சுழல்கிற தாமரையும், நடன மாதர் சிலைகளும் ஒவ்வொருவரும் நோக்கத்தக்கன. கனகசபையின் சிற்ப விசேஷத்தைப் பார்த்த பெர்க்குஸன் என்ற ஆங்கில சிற்ப நிபுணர் அதன் சிற்பங்கள் வேலூர் சிற்பங்களைப் பார்த்து அதன்படி ஏற்படுத்தியதென்றும், தேர்ந்த சிறப்பின் நிபுணத்துவம் யாதொன்றும் கிடையாதென்றும் இழிவாக எழுதியிருக்கிறார்.* ஆனால் வேலூர் சிற்பங்களையும், பேரூர் சிற்பங்களையும் ஒத்திட்டுப் பார்த்தவர்கள் வேலூரையொட்டிப் பேரூர் ஆக்கப்பட்டதென்று ஒருகாலும் சொல்ல மாட்டார்கள். வேலூர் சிற்பங்கள் மிகக் குறைவாகவும், நுட்பத்தில் திறமையற்றும் சிறியவைகளாகவும் இருக்கின்றன. பேரூரிலோ மகத்தாகவும், நுட்பவேலைகளைக் கொண்டதாகவும், மானிட இயற்கையைக் கவனித்தும் செய்யப்பட்டுள்ளன. அக்காலத்தில் ஆடவர்கள், பெண்கள் அணிந்திருந்த நகைகள், துணிகள், தலைமயிர் புனைதல், கட்டில், வாத்திய வகைகள், விலைமாதர் நடனவகைகள், கோமாளி வேடம் முதலிய பழக்க வழக்கங்களை எளிதில் அறியக்கூடிய சிற்பங்கள் பேரூர் சபையில் அமைந்துள்ளன. மானிட உருவ அமைப்பும், மிருக உருவ அமைப்பும் இயற்கையின்படி ஆக்கப்பட்டிருப்பதோடு, "கிராதார்ஜ்ஜுனியம்" என்ற சிவபெருமான் வேடனாகி வந்து அர்ஜ்ஜுனனோடு போர் புரிந்த கதை, பிக்ஷாடன மோகினி கதை, ஊர்த்தவ தாண்டவ சரிதம், பலவித நர்த்தன விசேஷங்கள் இவைகளெல்லாம் வரிசையாக செதுக்கப்பட்டிருப்பதும் ஆராயத்தக்கது. பெர்க்குஸன் சொல்லுகிறாற்போல இவை சிற்பம் க்ஷீண திசையடைந்த காலத்தன என்று கூறக் காரணமில்லை. ஏனெனில் வேலூர் சிற்பங்கள் இதைவிட மிகப் பழக்கமானவை யென்று கூறவும் ஆதாரம் இல்லை. அவையும் இதன் காலத்திலேயோ, அல்லது இதற்குப் பிந்தியோ ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

* கோவை ஜில்லா கெஜடியார்.

மதுரைத் திருமலை நாய்க்கனுக்கு முந்தியிருந்தே இந்தப் பேரூர் கிராமம் முழுதும் அக்கோயிலுக்குச் சர்வமானியமாகக் கொடுக்கப்பட்டதாக அரசாங்கத்து அறிக்கையினால் தெரிகிறது. இந்தக் காலத்தில்தான் வீர சைவ சமய ஆசிரியரான சாந்தலிங்க சுவாமிகள் பேரூரில் வந்து ஒரு மடத்தை ஸ்தாபித்து, அங்கேயே சமாதியடைந்தார். இன்றைக்கும் அவர் மடம் சிறந்து விளங்குகிறது.

இந்தக்காலத்தில் ஏற்பட்ட மற்றோர் சாசனம்* வாயிரக்காநாட்டு களந்தைக் காணிப்பூலுவர் பெரும்பற்றூர் சந்திர குமார கோப்பன மன்றாடியார் கந்தசாமிக் கவுண்டர் கலி 4734 (=1633 கி. பி.) சித்தாத்திரியில் கர்ப்பக் கிரகம் கட்டி முடித்ததாகக் கூறுகிறது. அக்காலம் அவர் கர்ப்பக் கிருகம் புதுப்பித்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

**12. மைசூர் ஆதிக்கம்**

மைசூரார் 1672-ல் மறுபடியும் கொங்குநாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். ஹைதரும், திப்புவும் பேரூரைத் தம் வசத்தில் வைத்திருந்தனர். 1783 வரையில் முழுதும் சர்வமானியமாக இருந்த இந்த கிராமத்தை திப்புசுல்தான் ஜப்தி செய்து அதில் கிடைத்த வருவாயில் அரை வரிசை வரியை மாத்திரம் கோயிலுக்குக் கொடுத்துவந்தான். 1790, 1791-வது வருஷங்களில் ஆங்கிலேயர் இக்கிராமத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டு அதன் வரவு முழுதும் கோயிலுக்குக் கொடுத்து வந்தார்கள். ஆனால் மறுபடியும் 1792-ல் திப்பு சுல்தான் பிடித்துக் கொண்டு ½ வரிசைதான் கொடுத்து வந்தான். 1799-ல் ஆங்கிலேயர் திப்புவை ஜெயித்துப் பேரூரைத் தம் வசப்படுத்திக்கொண்டு கிராமம் முழுதும் கோயிலுக்குக் கொடுத்து ஜாரி பட்டா கொடுத்துவிட்டார்கள்.†

இந்தக் காலத்தில்தான் திருவாவடு துறை ஆதீனத்துக் கச்சியப்ப முனிவர் பேரூருக்கு வந்திருந்து பேரூர்ப் புராணத்தை இயற்றினார். அதை தேவஸ்தான சபையார் வசனத்தோடு முதற்

* S. I. I. Vol. 5, 235=99 C. B. E.

† Order No. 1907 dated 25—9—1893 and G. O. 1790 dated 5—9—1893.



பதிப்பு அச்சிட்டுள்ளதன்றி, பின்னரும் பல திருத்தப்பாடுகளுடன் இரண்டாம் பதிப்பும் அச்சிட்டுள்ளார்கள். இந்த முனிவரின் ஆசிரியரின் ஆசிரியரான பின் வேலப்ப தேசிகர் என்ற மூர்த்திகள் அவ்வாதீனம் சின்னப் பட்டத்தில் எழுந்தருளியிருந்து பேரூரில் இருந்து சமாதியாயினர். அந்த சமாதி இப்போதும் பேரூரில் மேற்படி ஆதீன மடாலயத்தின் பின்புறம் ஷை மடாலயத்தின் சொந்த நிலத்தில் ஒரு சிறு தனிக் கோயிலாகக் காணப்படுகிறது.

---

## 3

இதுவரையில் 1893-ம் ஆண்டில் பேரூர்க் கோயிலில் எடுக்கப்பெற்ற 24 கல்வெட்டுக்களில் அடங்கிய வரலாற்றுப் பகுதி வேறு சில ஆதாரவுகளுடன் ஆராய்ந்து எழுதப்பட்டது. அப்போது எடுக்க விட்டுப்போன கல்வெட்டுக்களில் 1958–60-ல் எடுத்த 31 கல்வெட்டுக்களில் காணும் செய்திகளைப் பற்றிக் கூறுவோம். இக்கல்வெட்டுக்களில், கொங்கு சோழர் வம்சத்தில் விக்கிரமன், வீரராஜேந்திரன், இராசராசக் கரிகாலன், கோனேரின்மை கொண்டான் (பட்டம்) கல்வெட்டுக்களும், கொங்கு பாண்டியரில் வீர பாண்டியன் கல்வெட்டும், ஹொய்சளரில் வீரவல்லாள தேவன் III கல்வெட்டுக்களும் இருக்கின்றன. எல்லாம் 12, 13, 14 நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக்களே. இவைகளில் தெய்வங்களில் திருஆன்பட்டி யுடையார், ஆதிபுராணீசுரம் உடையார் என்ற மூர்த்திகளின் பெயர்களும் நாயன்மார்களில் ஆலாலசுந்தரர், பரவை நாச்சியார் என்ற சிவனடியார்கள் பெயர்களும் காணப்படுகின்றன.

மேலும் பொதுமக்களில் 19 பெயர்களும், ஊர்களில் 14 பெயர்களும், நாடுகளில் 6 பெயர்களும் கூறப்பட்டுள்ளன. நாடுகளில் பேரூர் நாடு புகழ் பெற்றது. மற்றொன்று வாயிரக்கா நாடு. அது கோன்வக்குத் தென்கிழக்கே கிணற்றுக்கடவும், மேற்குப் பல்லடமும் சேர்ந்த ஒரு பகுதி. இந்நாட்டில் பலகைப்பளை (வீரராஜேந்திர சோழ நல்லூர்), கீழ்மலையூர் (விக்கிரம சோழ நல்லூர்), குயிலை என்ற ஊர்கள் கூறப்பட்டுள்ளன.

அந்தணக் குடியிருப்புக்களில் புகலிடம் கொடுத்த சதுர்வேதி மங்கலம், கோப்பாடி என்ற அம்மையம்மை சதுர்வேதி மங்கலம் என்பன காண்கிறோம். குணியன்புத்தூர் என்ற ஒரு ஊர் அமர பயங்கர நல்லூர் என்ற பெயரில் விளங்கிற்று. கொங்கு சோழர் நாளில் அரசர்கள் தங்கள் பெயரால் ஊர்களைக் கட்டுவதும், புதிதாகப் பெயரிடுவதும் வழக்கம். போர் செய்து வென்ற நாடுகளுக்கும் ஊர்களுக்கும் தம் பெயர் இட்டுத் தானம் செய்வதுண்டு. வாயிர்க்கா நாட்டில் கீழ்மலையூருக்கு விக்கிரம சோழ நல்லூர் என்ற பெயர் அவ்வாறு ஏற்பட்டது. மலை ராச்சியத்தில் பாளையம் இறங்கி நடத்தின போரில் வெற்றியடைந்ததற்காக அரசன் (விக்கிரம சோழன்) அவ்வூருக்குத் தன் பெயரிட்டுத் தானம் செய்தானாம். (440/59) மற்ற நாடுகளில் கணபதிகுன்ற நாடு, நித்தவினோத நாடு, இரணியமுட்ட நாடு என்ற பெயர்கள் குறிக்கத்தக்கவை. ஊர்களில் குயிலை தற்போதும் உண்டு. நெடுவாயில் ஒரு சிறந்த பெயர். மக்களில் காடுவெட்டி என்ற பெயர் பல்லவர் தொடர்பு கொண்டது. மக்கள் கொண்ட பட்டப் பெயர்களில் மண்டல முதலி, சேனாபதி, காடுவெட்டி, வில்லவராயர் ஆதிசைவ சக்கிரவர்த்தி, செம்பியன் உத்தா மந்திரி முதலிய பெயர்கள் அக்காலத்தில் வழங்கி வந்தன.

கோயில் விழாக்களில், கோயிலிலே புஷ்ப யாகம் செய்தல், அரசன், ஆள்வி முதலியோர் திருநாட்களில் (உத்திராடம்) விழா வயர்தல், மன்னர் பெயர்களில் (சுந்தரபாண்டியன்) சந்தி நடத்துதல், பங்குனி முதல் ஆனி வரை விழா தொடருதல் முதலியன செய்யப்பட்டன.

புதிதாக மடம் கட்டினதும் காண்கிறோம். நெடுவாயில் ஆளவந்த நாயனார் ஒரு மடப்புறம் கட்டி அதற்குத் தன் தகப்பன் சூதமல்லி வில்லவராயன் பெயரால் வில்லவராயன் திருமடம் என்று பெயரிட்டு அதனை நடத்த நிலதானம் செய்தான். அதனைக் கூறும் கல்வெட்டில் குணியன்புத்தூர் என்ற அமரபுயங்கர நல்லூரின் ஊரார் நிலங்களை இறையிலியாகச் செய்தனர் என்றும் காண்கிறோம்.



ஆகவே இந்த மடம் தற்காலக் குணியமுத்தூருக்கு அருகிலோ, அல்லது பேரூரிலோ இருக்க வேண்டும். குணியமுத்தூர் பேரூருக்குத் தென் கிழக்கே இரண்டு கல் தொலைவு.

இனி இக்கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ள நோக்கங்கள் அடியிற் கண்டவாறு இருக்கின்றன.

1. ஊருக்கு எல்லை அளத்தல்—முன்னாளில் எல்லை குறிக்காமல் இருந்தால் அதனைக் குறிக்கும்படி அரசன் ஆணையிட்டுக் குறிப்பது.

2. அணை கட்ட ஒப்பந்தம் செய்தல்—பேரூர் ஊராருக்கும், புகலிடம் கொடுத்த சதுர்வேதி மங்கலத்துச் சபையாருக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு அதன்படி இவ்விரு கிராமங்களுக்கும் இடையே எல்லையில் "தேவி சிறை" என்ற அணை கட்டி, புதிதாக ஊரும் கட்டி குடியேற்றம் செய்யப்பட்டது. அப்போது முந்தியிருந்த கோளூர் அணையைப் பாதிக்காமல் நீர் கொண்டுபோக ஒப்புக் கொண்டனராம் (422) இக்கல்வெட்டு முக்கியமானது.

3. தானங்களில் நோக்கங்கள்—கோயிலுக்கு நகை செய்தல், கோயில் பூசை, விளக்கு இடுதல், நில தானம், பணம் தரல், நெல் தானம், வரி வசூல் தரல் முதலியவைகள் கூறப்பட்டுள்ளன.

4. புதிதாக மடம் நிறுவல்—வில்லவராயன் திருமடம் நிறுவப் பட்டு நில தானம் செய்யப்பட்டது.

5. மூர்த்தி தாபனம்— பேரூரில் சுந்தரமூர்த்தி நாயனார் நங்கை பரவை நாய்ச்சியார் திருவுருவங்களைத் தாபித்து ஆராதனைக்கு வேண்டிய ஏற்பாடு ஒன்று விக்கிரம சோழன் 11-ம் ஆண்டில் செய்யப்பட்டது.

6. வெற்றிச் சின்னம் அமைத்தல்— அரசன் போரில் வெற்றி யடைந்தால் கோயிலுக்குத் தானம் செய்து நன்றி செலுத்துவது வழக்கம். அந்த முறையில் மலை ராச்சியத்தில் படைவீடு ஏற்படுத்தி வெற்றியடைந்து கோயிலுக்கு விஜயம் செய்தபோது கீழ்மலையூர் என்ற ஊரைத் தானம் செய்து அதற்குத் தன் பெயரால் விக்கிரம சோழ நல்லூர் என்ற பெயரிட்டான் (440)

7. ஆலயத் திருப்பணி— பேரூர் கோயிலில் வீர ராஜேந்திரன் காலத்தில் கதவு, நிலவு, தூண்கள் ஐந்தும் ஆறு அன்பர்களால் தரப் பட்டன. அவர்கள் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன—26 ஆண்டு அதாவது கி. பி. 1233.

8. நாணயங்கள்— பேரூரில் கண்ட காசுகள், சியக்கி, அச்சு, பழஞ்சலாகை என்பன.

9. அவைகள்— ஜயகேசரி, பரகேசரி என்ற பெயர்கள் இடப்பட்டன.

10. சுந்தர பாண்டியன் காலத்தில் கோயிலில் மதில் ஒன்று கட்டப்பட்டது. அம்மதில் சுந்தர பாண்டியன் திருமதில் என்று வழங்கப்பட்டது. அரசனுடைய நன்மையின் பொருட்டு அவன் பெயரால் ஒரு திருவிழா நடத்த பூதானம் செய்தான். திருமதிலுக் காக இறைவரி, மன்றுபாடல், தண்டக் குற்றம் என்ற வரிகள் தரப்பட்டன.

---

## 4

இனி, மூன்றும் தடவையாகப் பேரூரிலே 1962 ஆண்டிலே 18 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டன. அடியிற் கண்ட கோயில் கள் நான்கில் அவைகள் இருந்தன. 1) பட்டீசுவரர் கோயில், 2) சுப்பிரமணியர் கோயில், 3) அழகிய சிற்றம்பலம், 4) தென் கயிலாயம் என்பன. அவைகள் எல்லாம் 10-முதல் 13-நூற்றுண்டு வரை கொங்கு சோழ வம்சத்து மன்னர்கள் காலத்தவை. ஆகவே அக்கோயில்கள் எல்லாம் 600-முதல் 900-ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப்பட்டிருக்க வேண்டும். அவைகளில் 15 கல்வெட்டுகள் தமிழிலும், 3 கல்வெட்டுகள் வட்டெழுத்திலும் காணப்படுகின்றன. அக்காலத்தரசர்கள் :—

1. வீரராஜேந்திரன், 2. விக்கிரமன்,
3. கோனேரின்மை கொண்டான்
4. இராசகேசரி வர்மன் திரிபுவன சக்கிரவர்த்திகள்

(இப்பெயர்களில் 1, 2 சொந்தப் பெயர்கள். 3, 4 பட்டப் பெயர்கள் ஆகும்)



இவர்களில் சிறந்தவன் வீரராஜேந்திரன். இவனுக்குக் கோனே ரின்மை கொண்டான் என்ற பட்டம் உண்டு. இவன் இராசகேசரி வர்மன் முதலிய மற்ற பட்டங்களையும் வைத்திருந்தான். கோனே ரின்மை கொண்டான் என்று மட்டும் குறித்திருந்தால் அக்கல் வெட்டு அரசனுடைய ஆணை குறிப்பிடுவது என்பது கருத்து. அது இல்லாமல் அரசனுடைய பெயர் மட்டும் குறித்திருந்தால் அதில் கண்ட தானம் வேறொரு ஆளினுடையதென்றும், அவ்வரசன் காலத்தில் அது செய்யப்பட்டது என்றும் பொருள்.

இனி, விக்கிரமன் என்ற பெயரில் நான்கு கொங்கு சோழர்கள் இருந்தார்கள். முதல் விக்கிரமன் 1004 கி. பி. யில் பட்டத்துக்கு வந்தவன். மற்றவர்கள் வீரராஜேந்திரனைப் பின்பற்றினவர்கள். ஆகவே தற்போது எடுத்த கல்வெட்டுக்கள் 1000 கி. பி. முதல் 1250 வரை அதாவது இரண்டரை நூற்றுண்டளவில் பொறிக்கப் பட்டவை எனலாம். எழுத்துக்களின் வடிவங்களும் அந்தச் செய்தி யையே வற்புறுத்துகின்றன.

இனி, கல்வெட்டுக்களில் காணும் கடவுட் பெயர்களைக் குறிப்போம்.

1. திரு ஆன் பட்டி உடையார் (பட்டீசுவரர்)
2. இடங்கை நாயகம் ஈசுவரம் உடையார்
(இவர் அழகிய சிற்றம்பலத்து மூர்த்தி)
3. தென் கயிலாலயம் உடையார்
(இது தெற்கே ஊர் நடுவில் உள்ள கோயில்)
4. ஆண்டார் வேத நாயகர்
(தென் கயிலைக் கோயிலில் காணும் ஒரு பெயர்)

இனி, கல்வெட்டுக்களில் காணும் மக்கட் பெயர்கள் :—

1. திருவெண்காடுடையான் வீர கங்கன்
2. அதிசய சோழ தேவன்
3. அரியப்ப உடையார்
4. சடையன் நக்கன் உமை பாகன்

5. நங்கன் பள்ளி—பரிபாலன்
6. அப்பணி எடையன்
7. தேவன் சுந்தன் தொண்டைமான்

(இவர்கள் தானதருமங்களைச் செய்தவர்கள்.)

இனிக் கல்வெட்டுக்களில் காணும் பட்டங்கள் :—

1. மன்றுடி. 2. ஊரார். 3. சபையார்.
4. வீரசமக்கட்டார். 5. அம்மங்ககாரர் சேனுபதிகள்.

இப்பட்டங்களில் மன்றுடி என்பது இக்காலத்திலும் வழக்கத்தில் இருக்கிறது. கொங்கு நாட்டில் பழைய கோட்டையிலும், கேரளத்தில் வடச்சேரி, அங்கராத்து தரைவாடுகளிலும் காணலாம். அப்பட்டம் பெற்றவர்கள் ஊர்ச்சபைகளில் தலைமை வகிக்கும் பெருமை வாய்ந்தவர்கள். ஊரார், சபையார் என்ற பெயர்கள் ஆட்சி புரியும் ஜனநாயக சபைகள். வீரசமக்கட்டார், அம்மங்ககாரர் என்ற பெயர்கள் பொறுப்பு வாய்ந்த சில தொகுதியார்களின் பெயர்கள். சேனுபதி என்ற பெயர் அத்தொகுதியின் தலைவர் பட்டம். இவர்கள் போர்க்காலங்களில் அரசனுக்கு உதவி புரியும் படையாளராக இருக்கலாம்.

கோயில் விழாக்களிலே இரண்டைக் காண்கிறோம். 1) அமுது படிபுறம். 2) நாட்டுக் கோயில் விழா என்பன.

ஊர்ப் பெயர்களில், 1) சிவபாத சதுர்வேதிமங்கலம். 2) குறிச்சி அல்லது வீரநாராயண நல்லூர் என்பவை. முதற்பெயர் ஒரு அந்தணர் இருப்பு, இரண்டாவது பொதுமக்கள் வாழும் ஊர். இவைகளில் குறிச்சி என்பது இப்போது இருக்கிறது. பேரூருக்கு 5 கல் தொலைவில் உள்ளது.

மடங்கள் :— இரண்டு மடங்கள் இருந்தன. 1) பெருமாள் மடம். 2) சமக்கட்டார் மடம். தற்போதோ ஒவ்வொரு குலத்தாரும் ஒவ்வொரு மடம் கட்டியுள்ளார்கள்.



நோக்கம் :— (தானம் செய்த நோக்கங்கள்)

1. நந்தா விளக்கு வைத்தல்
2. படித்தரத்திற்கு நிலதானம்
3. கிரயம், வரிக்காகச் செய்தல்
4. நெல் கோயிலுக்குத் தருவது
5. நிலம் கோயிலுக்குத் தருவது

இந்த நோக்கங்கள் பொதுவாக எல்லாக் கோயில்களிலும் இருப்பவையே.

**அரிய செய்திகள் :**

ஒரு கோயிலைக் கட்டுகையில் கட்டிடத்தின் முழுப் பொறுப்பையும் ஒரே ஆள் எடுத்துக்கொள்ளாமல் பல பேர் ஒத்துழைத்துச் செய்து முடித்திருக்கக் காண்கிறோம். ஒவ்வொரு பகுதியை ஒவ்வொரு தனி ஆள் எடுத்துக்கொண்டு செய்து வைத்து அதில் தன் பெயரைப் பொறித்துக்கொள்வது வழக்கம். உதாரணமாக, பட்டீசுவரர் கோயிலில் ஒரு விட்டத்தை ஒரு திருவெண்காடுடையான் வீரகங்கன் அமைத்திருக்கிறான். முற்பகுதியில் கதவும் தூண்களும் கூட வெவ்வேறு ஆட்களால் கொடுக்கப்பட்டன என்று கூறியிருக்கிறோம். மேலும் தென் கயிலாயம் உடையார் கோயிலில் வாயிலின் நிலையையும், மண்டபத்து வாயிலையும் தேவன் சுந்தன் தொண்டைமான் என்றவன் செய்துவைத்திருக்கிறான். மற்றும் பெரும்பான்மையான கல்வெட்டுக்களில் ஆராதனைக்கு வேண்டிய நெல்லைத் தானம் செய்ததும், நந்தா விளக்கு ஏற்றப் பணம் ஒதுக்கி வைத்ததும், நிலமும் வரியும் தந்து தானம் செய்ததும் காண்கிறோம்.

இனி விக்கிரம சோழன் காலத்தில் இடங்கை நாயகமுடையார் கோயிலும் (அழகிய சிற்றம்பலம்), தென் கயிலை உடையார் கோயிலும் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில், கதவு நிலைவுகள் ஒருவன் செய்திருக்கின் அவற்றைக் கட்டிடம் நடக்கும்போதே செய்திருத்தல் வேண்டும் அல்லவா. அந்தக் கட்டிடம் கட்டின பிறகே ஆராதனைக்காக நெல்லும் படித்தரமும் கொடுக்க ஏற்பாடு செய்து கல்லில் தீட்டியிருக்கவேண்டும். இந்தச் செய்திகள் விக்கி

ரமன் காலத்தில் பொறிக்கப்பட்டிருத்தலால் அந்தக் கோயில்கள் அப்போதுதான் புதுக்கோயில்களாக எழுப்பப்பட்டிருக்கவேண்டும்.

இக்கோயில்களில் உள்ள மூர்த்திகள் இடங்கை நாயகம் உடையார் என்றும், வேதநாயகர் என்றும் குறிக்கப்பட்டுள்ள செய்தி குறிக்கத்தக்கது. முற்காலத்தில் மக்களில் இடங்கை, வலங்கை பிரிவினைகள் இருந்தன. அவ்விரு கட்சியார்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் நடந்திருக்கின்றன. சமாதானங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இடங்கைக் கட்சியார் வெற்றியுற்றபோது அதனை நினைவு படுத்தும் வகையில் ஒரு கோயில் எழுப்பியிருக்கலாம். அதற்கு இடங்கை நாயகம் உடையார் கோயில் என்று பெயர் இட்டிருக்கலாம். இக்கோயில் பெயர் அழகிய சிற்றம்பலம் என்று அண்மைக் காலத்தில்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். இக்கோயிலில் கனக சபையே இல்லை. ஆகவே சிற்றம்பலம் என்று எப்படி தோன்றியதோ? பேரூர்ப் புராணம் எழுதப்பட்டபோது புதுப் பெயர் தரப் பட்டிருக்கலாம்.

மேலும் இடங்கை நாயகம் உடையார் கோயிற்கு ஆராதனைக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு நாள் செலவை சில தொகுதியார்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். அன்னார் பெயர்கள் வீரசமுக்கட்டார், அம்மங்ககாரர், சேனாபதிகள் என்று காண்கிறோம். மற்றொரு நாட் செலவை வீரபத்திர சமுக்கட்டார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப்படி ஒரு நாளுக்குரிய செலவை ஒரு சமூகத்தார் ஏற்றுக்கொள்ளும் வழக்கம் அக்காலத்திலேயே இருந்தது. தற்போது சினப் போரில் சிலர் ஒருநாள் ஊதியத்தைத் தருவதாக ஏற்றுக்கொள்வதை இக்கல்வெட்டுக்கள் நினைவு படுத்துகின்றன.

இனித் தென் கயிலாயத்தில் அக்காலத்தில் ஆண்டார் வேத நாயகர் கோயில் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. பேரூர் வட கயிலாயம் என்று ஒரு கோயிலும் இருக்கிறது. அதில் கல்வெட்டுக்கள் மறைந்தன. தஞ்சை மாவட்டத்தில் திருவையாற்றில் இவ்வாறு ஏற்பட்டிருப்பதை அறியலாம். அங்கேயும் இரண்டு கயிலைகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று சோழர் நாளில் உலோக



மாதேவிச்சரம் என்ற பெயரில் அதைக் கட்டின அரசியின் பெயரால் தோன்றியது என அறிகிறோம். அதுபோல் பேரூரிலும் ஏற்பட்டிருக்கலாம்.

---

## 5. தற்காலம்

திப்பு சுல்தான் இறந்ததற்குப் பிறகு ஆங்கிலர் வசத்தில் வந்த இந்த கிராமமானது இனாமாக இருந்து 1847-ல் தர்மகர்த்தாக்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. இந்தக் கிராமத்திற்கு ஒரு வாய்க்காலும் இரண்டு சிறு குளங்களும் உண்டு. மற்றொரு குளத்தில் அரை வரிசையும் உரிமை உண்டு. பேரூர், மாவுத்தம்பதி என்ற இரண்டு கிராமங்கள் உண்டு.

அவைகளின் விவரம்:—

| | ஏக்கர் | சர்த்தாயம் |
|---|---|---|
| பேரூர் | 1607—50 | 7858—15—0 |
| மாவுத்தம்பதி | 3005—77 | 1791— 3—7 |
| இவைகளில் இனாம் பூமி | | |
| பேரூர் | 986—88 | 7505— 8—0 |
| மாவுத்தம்பதி | 1944—82 | 1260—15—7 |
| | 2931—70 | 8766— 7—7 |

இந்நிலங்களைத் தவிர இதர பக்தர்கள் விட்டிருக்கும் கட்டளைப் பூமிகள் பலவுண்டு. தற்காலம் தர்மகர்த்தர்களும் அவர்களுக்கு மேல் அறநிலைக்காப்புப் பகுதியாரும் பரிபாலித்து வருகிறார்கள்.

சமீபத்தில் நகரத்தார்களில் முக்யஸ்தரான ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார் அவர்களின் முயற்சியால் ரூ. 3½ லட்சம் செலவழிக்கப்பட்டுப் பல மண்டபங்கள் புதுப்பிக்கப்பட்டன. பல வித்வான்கள் பல பிரபந்தங்கள் சமீபத்தில் இக்கோயிலைப்பற்றிப் பாடியிருக்கிறார்கள்.

## அனுபந்தம் A

இப்போது பேரூரில் இருக்கும்படியான முக்கிய ஆலயங்கள் கீழ் வருமாறு:—

I. (1) பட்டீசுவரர் ஆலயம்— இதில் பட்டீசர்–சந்நிதி–சிருங்க தீர்த்தம் (இதைச் சிங்க தீர்த்தம் என்று தவருய்ச் சொல்வதன்றிச் சிங்கத்தையும் வைத்திருக்கிருர்கள்) பிரகாரத்தில் 63 நாயின்மார்கள், சேரமான், சுந்தரர், விக்கிரகங்கள் உண்டு.

(2) பச்சை நாயகி அம்மன் சந்நிதி.

(3) கனகசபை.

(4) சுப்பிரமணிய சந்நிதி–பழுதுபார்க்கப்படவில்லை.

(5) கல்யாண மண்டபம்.

(6) கனகசபைக்கு முன்புறம் புதுமண்டபம்.

II. திருக்குளம்— இதனுள் 5 தீர்த்தங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

III. மாதேசுவரன் கோயில்.

IV. அழகிய சிற்றம்பலம்— ஆதிபெயர்– இடங்கை நாயக ஈஸ்வரமுடையார்.

---

I. (1) இராஜேந்திர தேவன் காலத்தில் அர்த்த மண்டபம் கட்டப்பட்டது. கோபண்ண மன்ருடியார் கர்ப்ப கிருகத்தைப் புதுப்பித்தது. அண்ணுமலைச் செட்டியார் உள் மதிலும், அறுபத்துமூவர் மண்டபம் முதலியவை கட்டினது.

(2) வித்வான் கந்தசாமி முதலியார் பட்டீசர் கோயில் கர்ப்ப மண்டபம் அர்த்த மண்டபம், மகாமண்டபமும், அம்மையார் கோயிலும் புதுப்பித்தனர்.

(3) அளகாத்திரி நாய்க்கர் கட்டியது.

(5) மத்திபாளையம் தீனம்பாளையத்தார்கள் கட்டுவித்தது.

(6) சோமசுந்தரம் செட்டியார் கட்டினது.

II & III தெற்கணும்பி சங்கரையனுடைய மகன் மாதையன் கட்டினது

IV. விக்கிரம சோழன் தருமம்.



V. அரசம்பலவாணர் சந்நிதி— சின்னக் கோயில் என்பார்கள்.* இதுதான் காலவேசுவரம். இதில் சுவாமியும் அம்மனும் உண்டு. நடராசர் திருநடனம் செய்த புராதனமான பெரிய அரசமரம் இக்கோயிலில் உள்ளது. வாயிலில் பெரிய ரிஷபம்–கோபுரத்துக்குப் பதிலாய் மாடியில் வைத்திருக்கிறது.

VI. பட்டி விநயகர் சந்நிதி— இது புதிதாகப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் கீழ்தான் நக்சுப்பொய்கை இருப்பதாகக் கூறுவர்.

VII. வட கைலாசம்— இதில் பிரம தீர்த்தம் என்ற ஒரு தீர்த்தம் உண்டு. பைத்தியம், நாய்க்கடி முதலியவை தீரும் என்பர். செப்புக்காசு இட்டுவைத்தால் களிம்புபோய்த் தங்கம் பூசியதுபோல மாறுகிறது. இதன் பிரகாரத்தில் இறவாப்பனை உண்டு.

VIII. பட்டி சுற்றும் மேடை— அரசமரம்–பிறவாப்புளி–ஈசன் பள்ளனை உருவக் கோயில்.

IX. தென் கைலாசம் ஊரில் தென் மேற்கில் உள்ளது—கல்வெட்டுக்கள் உண்டு. சமீபத்தில் புதுப்பிக்கப்பட்டது.

X. பாண்டவர் குழிகள்— சித்திர சாவடிக்குப் போகும் வழியில் இருந்தன. சமீபத்தில் தூர்க்கப்பட்டன.

XI. இரண்டு இடிந்த கோயில்கள்– சித்திரச் சாவடி மார்க்கம்

XII. வீரபத்திரர் கோயில்– கோயிலுக்கு மேற்கில் வீர சைவர்களுக்குச் சேர்ந்தது.

XIII. சோழன் துறை—அரசமரம் மிகப் பெரிது. பழைய மரம் விழுந்துவிட்டது. கணபதி—நாகர்கள்—காஞ்சிமா நதிக்கரை.

XIV. திருநீற்று மேடு.

XV. சாந்தலிங்க சுவாமி சந்நிதி—கோயிலுக்கு கிழக்கு.

---

V.* இது சுமார் 45 ஆண்டுகளின் மீனும்பாள் என்ற ஓர் அம்மையாரால் புதுப்பிக்கப் பெற்றது.

## B

சிலாசாசனம் முதலியவைகளிலிருந்தும், பழைய நூல்களிலிருந்தும் காணும் இடங்கள் வகைகள்.

1. பேரூர் நாட்டு வெள்ளலூர் தேனீசுரம் உடையார்.
2. பேரூர் நாட்டு கோவன்புத்தூர் என்ற வீரகேரள நல்லூர்.
3. பேரூர் நாட்டு முட்டம் என்கிற அமர புஜங்க சதுர்வேதி மங்கலம்.
4. பேரூர் நாட்டுக் குறிச்சி என்ற வீரநாராயண நல்லூர்.
5. பேரூர் நாட்டுக் கோரப்பாடி என்கிற ஆம்மடி சதுர்வேதி மங்கலம்.
6. பேரூர் நாட்டுச் சிவபாத சேகர சதுர்வேதி மங்கலம்.
7. பேரூர் நாட்டு முட்டத்து நாகேசுரம் உடையார்.
8. இடங்கை நாயக ஈசுவரம் உடையார்.
9. அதிராஜராஜ வாய்க்கால்.
10. வீரகேரள விலாட மாணிக்கவதி.
11. கொங்குகுல வல்லி வதி.
12. சிவபாத சேகர மண்ணரை.
13. புத்தூர்.
14. கோளூர்.
15. குணியன்புத்தூர் ஆன அமரபயங்கர நல்லூர்.

109957

Q23:38.2118.P
N63